நன்றாகத் தெரிந்திருந்ததால், தந்தை என்ன கேட்பாரோ ஏது கேட்பாரோ என்ற அச்சம் ஓரளவு அவள் இதயத்தைச் சூழ்ந்து கிடந்தது. தவிர தான் விளிந்தைக்கு வந்தும் நேராகத் தனது பாசறைக்கு வராது எதிரியின் மாளிகையில் தங்கவேண்டிய அவசியம் என்னவென்று கேட்டால் என்ன பதில் சொல்வது என்ற எண்ணமும் அவள் மனதிலெழுந்து மனத்தை நிலையற்று அலையவிட்டுக் கொண்டிருந்தது.

இத்தனை நினைப்பிலும் மனப்போராட்டத்திலும் அவள் அக்கம் பக்கத்திலுள்ள நகர நிலையைக் கவனித்துக் கொண்டே சென்றாள். பல்லவர் படை முதல் நாள் மாலை முறியடிக்கப்பட்டும் மறுநாள் மாலைக்குள் நகரத்தை நிதானத்துக்குக் கொண்டு வந்துவிட்டதையும், பல்லவ வீரர் காவலிலும் ஓர் ஒழுங்கும் எச்சரிக்கையும் இருந்ததையும் கண்டாள் கங்கன் மகள். சாளுக்கியர் கொடியையும் சாளுக்கிய வீரர் பாதுகாப்பையும் பெற்ற தனது ரதத்தை யாரும் தடை செய்யாமல் போக விட்டதைக் கவனித்த ரங்கபதாகாதேவி, தான் புறப்படும் செய்தியும் போகுமிடமும் பல்லவ வீரர்களுக்கு முன்பே தெரியப்படுத்தப் பட்டிருப்பதை உணர்ந்து அத்தனை சீக்கிரத்தில் பல்லவர் படைத்தலைவன் செய்தியை எப்படிப் பரப்பினான் என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டதன்றி, 'சந்தர்ப்பமும் சூழ்நிலையும் பல்லவர்களுக்குச் சரியாக ஏற்பட்டால் அவர்களை முறியடிப்பது சுலபமல்ல' என்று வாய்விட்டுச் சொல்லியும் கொண்டாள். பல்லவர் தலைவன் முறியடிக்கப்பட்ட தனது படைகளை ஒரே நாளில் ஓர் ஒழுங்குக்குக் கொண்டு வந்து விட்டதிலிருந்து அந்த ஏற்பாடு பல்லவ இளவலின் ஏற்பாடாகத்தானிருக்குமென்றும், வெகு சீக்கிரம் விளிந்தை நகர் ஒரு கோட்டையாகி விடுமென்றும், தீர்மானித்துக் கொண்டாள் ரங்கபதாகாதேவி. அப்படி விளிந்தை கோட்டையாகி விட்டால் அதுபல்லவ ராஜ்யத்தின் வடமேற்குக் கோடியிலிருப்பதால் அதை வெற்றி கொள்ளத் தனிப் படையொன்றை விக்கிரமாதித்த மகாராஜா அனுப்பும் படியாயிருக்குமென்றும் அப்படி அனுப்புவதாயிருந்தால் சாளுக்கியர் - பல்லவர்கள் போர் காஞ்சிப் பகுதியிலிருந்து விளிந்தைப் பகுதிக்கு மாறுமென்றும் நிர்ணயித்தாள். இத்தகைய ஒரு நிலையில் கங்க நாட்டின் நிலை மிக இக்கட்டான தென்றும் முடிவு செய்து கொண்டாள்.

இத்தகைய பலவித போராட்டங்களுடன் விளிந்தையிலிருந்து காவிரி சமவெளிக்கரையை நோக்கி ரதத்தைச் செலுத்திய ரங்கபதாகாதேவி இரவு துவங்கிய சமயத்திலேயே சமவெளியை அடைந்தாள். காவிரிக்கரைக்கும் பாசன வாய்க்காலுக்கும்



இடையிலிருந்த சமவெளிப் போர்க்களத்தில் பலவிடங்களில் பந்தங்கள் எரிந்தன. எரிந்த பந்தங்கள் அளித்த கோரக் காட்சி ரங்கபதாகாதேவியின் மனத்தையும் எரிக்கவே செய்தது.

நாலா பக்கங்களிலும் சிதறிக் கிடந்த பிணங்கள் பார்ப்பதற்குப் பயங்கரத்தை அளித்தன. மார்பில் வேல் பாய்ச்சப் பட்டுக் குத்தி நின்ற வேலுடன் மல்லாந்து கிடந்த வீரனொருவனின் ஒளியிழந்த கண்கள் வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. மார்பின் மூலம் அம்பொன்று முதுகுக்கும் அப்பால் ஊடுருவி விட்டதால் குப்புறக் கிடந்த ஒரு வீரன் மண்ணைக் கவ்விக் கொண்டிருந்ததும், முதுகிலிருந்த அம்பு அதைச் சுற்றிப் பீரிட்டு உறைந்த ரத்தக் கறையும் பார்க்கச் சகிக்காததாயிருந்தது. வேல் பாய்ந்த காரணத்தினால் விழுந்து விட்ட புரவியொன்று அத்தனை நேரத்துக்குப் பிறகும் மாளாமல் கால்களை உதைத்துக் கொண்டு இம்சைப்பட்டுக் கொண்டு நகர்ந்து பக்கத்தில் மாண்டு கிடந்த ஒரு புரவியின் உடலில் உராய்ந்து அதைத்தள்ள முற்பட்டது மிகப் பரிதாபமாகயிருந்தது. காவிரியின் கரை வரையில் கிடந்த பிணக்குவியல்கள், காயப்பட்டும் மாளாத பல வீரர்களின் முனகல்கள், இத்தனையும் பந்தங்களின் வெளிச்சத்தில் போரின் கோரம் இன்னதென்பதை வலியுறுத்தின.

இப்படிப் பலபடி மாண்டும் மாண்டுகொண்டுமிருந்த வீரர்களையும் புரவிகளையும் ஒரு சீராக ஒதுக்கக் கங்க நாட்டு வீரர்பலர் கைகளில் பந்தங்களை ஏந்தி முயன்றுகொண்டிருந்தனர். அங்கிருந்த கோர நிலையிலிருந்து பல்லவர் சேதம் மிக அதிகமென்பதைப் பொதுப் பார்வையிலிருந்தே புரிந்து கொண்டாள் ரங்கபதாகாதேவி. இருப்பினும் தங்கள் பக்கத்துச் சேதமும் சொற்பமில்லையென்பதையும் புரிந்து கொண்டதால் மிகுந்த வருத்தத்துடனேயே தனது தந்தையின் கூடாரத்தை நேக்கி ரதத்தைச் செலுததினாள். அவள் ரதத்தையும் ரதத்தின் மீதிருந்த கொடியையும் கண்ட கங்க நாட்டு வீரர்கள் அவள் ரதம் செல்லுவதற்காக அவசரமாகப் பிணங்களை ஒதுக்கிப் பாதைக்கு வழி வகுத்தனர். போர்க்களத்தின் ஊடே சென்ற கங்க மன்னன் மகள் மிக நிதானமாகவே ரதத்தைச் செலுத்தித் தனது தந்தையிருந்த கூடாரத்தை நெருங்கினாள்.

கங்கமன்னனான பூவிக்கிரமன் ரதத்திலிருந்து குதித்துத் தன்னை நோக்கி ஓடிவந்த மகளை ஆர்வத்துடன் தழுவி உச்சிமோந்தான். அப்பொழுதும் தந்தை போர்க் கோலத்திலிருந்ததைக் கவனித்த ரங்கபதாகாதேவி, ''இன்னும் போர்க் கவசங்களைக் களைய வில்லையா?'' என்று வினவினாள் அவன் மார்பில் சாய்ந்த வண்ணம்.

''இல்லை மகளே! பல்லவன் படை இன்னும் முழுவதும் முறியடிக்கப்படவில்லை. அவர்கள் இன்னும் விளிந்தையிலிருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டான் பூவிக்கிரமன் அவள் தலைமயிரைக் கோதிவிட்டு.

''அதனால்?'' என்று வினவினாள் ரங்கபதாகாதேவி.

''மீண்டும் அவர்கள் அணிவகுத்துப் போருக்கு வரலாம். வந்தால் நான் அவர்களை வரவேற்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றான் பூவிக்ரமன்.

''அவர்கள் அணி வகுத்து வரப்போவதில்லை. நீங்களும் போரிடப் போவதில்லை'' என்றாள் கங்கன் மகள் தந்தையை நோக்கி.

''என்ன அத்தனை திட்டமாகச் சொல்கிறாய்?'' என்று வினவினான் பூவிக்கிரமன்.

''உள்ளே வாருங்கள் பேசுவோம்'' என்று தந்தையைக் கூடாரத்துக்குள் அழைத்துச் சென்ற ரங்கபதாகாதேவி தனது மடியிலிருந்து ஒரு முத்திரை ஓலையை எடுத்துத் தந்தையிடம் கொடுத்தாள்.

பூவிக்கிரமன் முகத்தில் வியப்பு விரிந்தது. ''இது என்ன ஓலை?'' என்று வினவினான்.

''பிரித்துப் பாருங்கள்'' என்றாள் தேவி.

ஓலையை எடுத்துக் கொண்டு கூடாரத்தின் மூலையில் எரிந்து கொண்டிருந்த பந்தத்திடம் சென்று ஓலையின் மீதிருந்த முத்திரையைக் கூர்ந்து ஒரு முறை கவனித்தான் பூவிக்கிரமன். பிறகு முத்திரையை உடைத்து ஓலையைப் பிரித்துப் பிடித்தான். வியப்பு பெரிதும் நிரம்பிய விழிகளைத் தனது மகளின் மீது திருப்பி, ''இது பரம விசித்திரமாயிருக்கிறது மகளே!'' என்று கூறவும் செய்தான்.

''ஆம்'' என்றாள் தேவி.

''சாளுக்கியர் போர் மந்திரி பல்லவனோடு போரிடும்படி ஓலை அனுப்புகிறார். போரை நிறுத்தும்படி விக்கிரமாதித்த மன்னர் ஓலை அனுப்புகிறார்'' என்றான் பூவிக்ரமன்.

''ஆம். அந்த ஓலையையும் தங்கள் மகளின் மூலம் அனுப்பியிருக்கிறார்'' என்று சுட்டிக் காட்டினாள் தேவி.

''அதைத்தானே கேட்கிறேன். நீ எப்படி இதில் சம்மந்தப் பட்டாய்?'' என்று வினவினான் பூவிக்கிரமன்.



சம்பந்தப்பட்ட விவரங்களைக் கூறினாள் தேவி. அத்துடன் நிற்கவில்லை. மேற்கொண்டு தான் தயாரித்துள்ள திட்டத்தையும் கூறினாள் தந்தையிடம். அவள் கூறிய விவரங்களையும் வகுத்துள்ள திட்டத்தையும் கேட்ட பூவிக்கிரமன் விவரிக்க இயலாத வியப்படைந்து நின்றான் பல வினாடிகள்.

பிரமித்தது அவன் மட்டுமல்ல. காவிரிச் சமவெளியை நோக்கி மறுநாள் புரவியில் வந்த பல்லவ இளவலும் பிரமிப்பை அடைந்தான். தன் திட்டத்திலொன்றை ரங்கபதாகாதேவி தவிடுபொடியாக்கி விட்டதை உணர்ந்தான் பல்லவ இளவல்.

## 65. தந்தையும் மகளும்

**க**ங்க மன்னனான பூவிக்கிரமன் ரங்கபதாகா தேவியின் திட்டத்தை முதல் நாளிரவு தனது கூடாரத்துக்குள் கேட்டுப் பிரமித்தான்; மறுநாள் காலை பல்லவ இளவல் அதே திட்டத்தை விளிந்தைச் சமவெளியில் கண்டு பிரமித்தான். இருவர் பிரமிப்புக்கும் காரணமிருந்தது. கங்கர் - பல்லவர் போர் சம்பந்தமாக இருவரும் தம்தம் உள்ளங்களில் தயாரித்திருந்த திட்டங்கள் ரங்கபதாகாதேவியின் திட்டத்தால் அடியோடு மாறுபட்டுத் தவிடு பொடியாகிவிட்டதை உணர்ந்ததால் இருவரும் மேற்கொண்டு செய்வதறியாமல் திகைத்தார்களென்றாலும், கங்க மன்னன் மட்டும் முதல் நாளிரவே துரிதமான நடிவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

முதல் நாளிரவு கூடாரத்துக்குள் தனது மகளுடன் சென்று அவள் கொடுத்த ஓலையைப் பந்தத்தின் வெளிச்சத்தில் பிரித்துப் பார்த்துப் படித்த பூவிக்ரமன் பிரமிப்பும் வியப்பும் அடைந்து அந்த ஓலைக்குக் காரணத்தை அறியாமல் பல கேள்விகளைத் தன் பெண்ணைக் கேட்கத் துடித்தானானாலும், முன் அத்தியாயத்தில் சொன்ன இரு கேள்விகளையே கேட்டான். ஸ்ரீ ராமபுண்யவல்லபரும் விக்கிரமாதித்த மன்னரும் நேர்மாறான ஓலைகளை அனுப்பக் காரணமென்ன? தவிர, இந்த அரசியல் விவகாரத்தில் தனது மகள் சம்பந்தப்பட்ட காரணமென்ன? இந்த இரண்டு கேள்விகளும் அவன் மனத்தில் திரும்பத் திரும்ப எழுந்து உழன்றன.

அவன் மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்ட ரங்கபதாகாதேவி மெள்ளப் புன்முறுவல் செய்து ''ஏன் அப்பா, ஏன் அப்படி என்னை வெறித்துப் பார்க்கிறீர்கள்? உங்கள் எண்ணங்கள் எனக்கு நன்றாகப் புரிகின்றன. அவற்றுக்கு நான் தகுந்த பதில் கூற

முடியும்'' என்று இன்பமான குரலில் தந்தையை நோக்கிக் கூறவும் செய்தாள்.

மிக உயரத்துடன், கம்பீரத்துடன், போர்க் கவசத்தைக் கழற்றாததால் எப்பொழுதும் பல்லவருடன் போருக்குத் தயாரா யிருந்த முறையில் பந்தத்தின் வெளிச்சத்தில் கூரிய கண்கள் பளபளக்க நின்ற கங்க நாட்ட வேந்தன், ''என்ன எண்ணங்களைப் புரிந்து கொண்டாய் பெண்ணே? என்ன பதில்களைக் கூற உத்தேசித்திருக் கிறாய்?'' என்று வினவினான். அவன் சொற்களில் சற்றுக் கலக்கமிருந்தது. குரலில் சந்தேகமிருந்தது.

இரண்டையும் கவனிக்கவே செய்தாள் ரங்கபதாகாதேவி. ''சாளுக்கிய மன்னரும் அவரது போர்மந்திரியும் நேர்மாறான உத்தரவுகளுள்ள ஓலைகளை அனுப்பியிருந்ததைப்பற்றி ஏற்கெனவே கேட்டீர்கள்'' என்று சர்வ சாதாரணமான குளிர்ந்த குரலில் பேச்சைத் துவங்கினாள் ரங்கபதாகாதேவி.

''ஆம், கேட்டேன்'' என்றான் பூவிக்ரமன் கடுப்புடன்.

ரங்கபதாகாதேவி, நேரடியாக அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. ''உங்கள் குரலில் கோபமிருக்கிறது'' என்று மட்டும் சொன்னாள்.

''ஆம்'' என்றான் பூவிக்ரமன்.

''கோபம் யார்மேல்? என் மேலா, நான் கொண்டுவந்த ஓலையின் மேலா?''

''நீ கொண்டு வந்த ஓலையின்மேல்.''

''அதில் கோபப்பட என்ன இருக்கிறது?''

''என்ன இருக்கிறதா? ஸ்ரீராமபுண்யவல்லபரின் உத்தரவின் மேல் கங்கநாட்டுப் படைகளை அழைத்துக் கொண்டு இங்கு வருகிறேன். படையில் ஒரு பகுதியைப் பலி கொடுத்து வெற்றி கொள்கிறேன். மேற்கொண்டு எப்படி விளிந்தையைத் தாக்கலா மென்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது நீ விக்கிரமாதித்தனிடமிருந்து ஓலை கொண்டு வந்து திரும்பச் சொல்கிறாய். போர் என்ன விளையாட்டா மகளே! மன்னனோர் உத்தரவும், மந்திரியோர் உத்தரவும் இட கங்கநாடு சதுரங்கக் காயா? அல்லது, கங்க மன்னன் களிமண் பொம்மையா அவர்கள் இஷ்டப்படி நகர்த்த?'' என்று படபடப்புடன் சீறினான் பூவிக்ரமன்.

ரங்கபதாகாதேவி மெள்ளத் தலையை உயர்த்தித் தந்தையைக் கூர்ந்து நோக்கி, ''சாளுக்கியர் பல்லவர் போரில் உங்களை யார் தலையிடச் சொன்னது?'' என்று வினவினாள்.



''யாரும் தலையிடச் சொல்லவில்லை. சாளுக்கிய நாடும் கங்க நாடும் அண்டை நாடுகள். விக்கிரமாதித்த மன்னர் நமது உதவியைக் கேட்டார். உதவி செய்தோம், ஆயுதங்கள் செய்து கொடுத்தோம், காஞ்சிமீது படையெடுக்க'' என்றான் கங்க மன்னன்.

''இந்த விளிந்தையில் போரிட விக்கிரமாதித்த மன்னர் உங்களுக்கு ஓலை அனுப்பினாரா?''

''இல்லை.''

''பின் ஏன் போருக்கு வந்தீர்கள்?''

''விக்கிரமாதித்த மன்னர் அனுப்பாவிட்டால் அவர் போர் மந்திரி அனுப்பினார்.''

''இங்கு தானிருக்கிறது ஒரு தவறு'' என்று கூறிய ரங்கபதாகா தேவி அதைப்பற்றி விளக்கவும் முற்பட்டு, ''தந்தையே, இந்தப் போரை விக்கிரமாதித்த மன்னர் விரும்பவில்லை. அவர் கருத்தையும் மீறி ஓலை அனுப்பியிருக்கிறார் ஸ்ரீ ராமபுண்யவல்லபர். விக்கிரமாதித்த மன்னர் பெரும் சாம்ராஜ்யத்தை நிறுவக் கனவு காண்கிறார். ஸ்ரீ ராமபுண்ய வல்லபர் சில்லறை வெற்றிகளில் கவனம் செலுத்துகிறார். சாளுக்கிய மன்னர் வெகு சீக்கிரம் தெற்கு நோக்கிப் படைகளைச் செலுத்தத் திட்டமிட்டிருக்கிறார். வடக்கெல்லைப் போர்களை அவர் விரும்ப வில்லை... வடமேற்கில் சாளுக்கிய நாட்டிலிருந்து தெற்கே சோழநாடு உட்படப் பெரும் சாம்ராஜ்ய சிருஷ்டி விக்கிரமாதித்த மன்னரின் நோக்கம். சில்லறை விஷயங்களில் அவர் கவனம் செலுத்துவ தில்லையென்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். திரையனேரியில் தன்னந்தனியாகச் சென்ற பல்லவ இளவரசரை விக்கிரமாதித்த மன்னர் நேரில் சந்தித்தார். அப்பொழுதே அவரைச் சாளுக்கிய மன்னர் சிறை செய்திருக்கலாம். செய்யவில்லை. பார்த்தும் பாராதது போல் சென்று விட்டார். ஆனால் அவர் விருப்பத்தையும் மீறி ஸ்ரீ ராமபுண்யவல்லபர் இளவரசரைச் சாளுக்கிய வேட்டுவ மன்னர் மாளிகையில் சிறை செய்தார். அவரை விடுவிக்கப் போர் மந்திரிக்கு ஓலை அனுப்பினார் சாளுக்கிய மன்னர். ஏன் தெரியுமா?'' என்று வினவினாள்.

''ஏன்?'' பூவிக்ரமனின் குரலில் குழப்பமாயிருந்தது.

''பல்லவ இளவரசரை, அவரது சிற்பத் திறமையை, வீரத்தை விக்கிரமாதித்தர் பெரிதும் மதிக்கிறார். அவரை நேருக்கு நேர் போரில் சந்திப்பதாக வாக்களித்திருக்கிறார்'' என்றாள் ரங்கபதாகாதேவி உணர்ச்சி நிரம்பிய குரலில்.

''எப்பொழுது?''

''அவ்விருவரும் மாமல்லபுரத்தில் சந்தித்தபோது.''

''அப்படியா!''

''ஆம்! அது மட்டுமல்ல.''

''வேறு விஷயங்களும் இருக்கின்றனவா?''

''இருக்கின்றன. பல்லவ இளவரசர் காவியம் படித்தவர்.''

''பெரிய அறிவாளியோ?''

''இணையற்றவர்.''

''நான் பார்த்ததில்லை. எப்படியிருப்பார்?''

''நல்ல உயரம். நல்ல சிவப்பு, கத்தியினும் கூர்மையான கண்களை உடையவர். வலது கையில் வாட் காயங்கள் உண்டு. நடையில் ஒரு கம்பீரம். விஷமமாகப் பேசுவார்...'' என்று சொல்லிக் கொண்டே போன ரங்கபதாகாதேவி திடீரெனப் பேச்சை நிறுத்தி னாள். அவள் முகம் குங்குமச் சிவப்பாகச் சிவந்தது நாணத்தால்.

''பல்லவ இளவரசனைப்பற்றி நிரம்ப அறிந்திருக்கிறாய்'' என்ற கங்க மன்னனின் சொற்களில் சற்றுச் சினம் துளிர்த்தது விஷமமும் இருந்தது.

தேவி அந்தச் சினத்தைப்பற்றியோ விஷமத்தைப் பற்றியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ''ஆம்'' என்ற பதிலைச் சர்வ சாதாரணமாகவே சொன்னாள்.

''நேரில் பரிச்சயமுண்டோ?'' என்று கேட்டான் கங்க மன்னன்.

''உண்டு.''

''எப்படி?''

''மாமல்லபுரத்திலிருந்து தப்பிய பிறகு தண்டி மகாகவியின் மாளிகையில் இரண்டு நாள் தங்கியிருந்தார்...''

''அப்பொழுது?''

''பூஜைக்குத் தினமும் வருவார்.''

''அப்பொழுது பார்த்ததாக்கும்?''

''ஆம்.''

''பிறகு பார்க்கவில்லை?''

''பார்த்தேன்.''

''எப்பொழுது?''

''நேற்று விளிந்தையில்.''



இதைக் கேட்டதும் கங்கமன்னன் கண்களில் கனல் பறந்தது. ''நேராக நீ ஏன் இங்கு வரவில்லை?'' என்று சீறினான் கங்க மன்னன்.

ரங்கபதாகாதேவி நிதானம் நிரம்பிய விழிகளை அவன்மீது நாட்டினாள். ''நேற்று நான் வந்தபோது விளிந்தைப் போர் முடிந்து நகரத்துக்குள் பல்லவர் படை தாறுமாறாக வந்து கொண்டிருந்தது. குறுக்கே ரதத்தைச் செலுத்த முடியவில்லை. அங்கிருந்த பல்லவர் மாளிகையில் என்னுடன் வந்த சாளுக்கிய வீரர்களுடன் தங்கினேன். சிறிது நேரத்துக்கெல்லாம் மரண காயத்துடன் பல்லவ மன்னர் அந்த மாளிகைக்குக் கொண்டு வரப்பட்டார். அவரை ஓர் அறையில் கிடத்திச் சிகிச்சை செய்தேன்'' என்று சொல்லிக் கொண்டு போன மகளை இடைமறித்த கங்க மன்னன், ''என்ன! பல்லவனுக்குச் சிகிச்சை செய்தாயா?'' என்று வினவினான்.

''ஆம்.''

''பல்லவனிடம் என்ன அக்கறை உனக்கு?''

''உங்களுக்குள்ள அக்கறைதான்.''

''எனக்குள்ள அக்கறையா!''

''ஆம். உங்கள் பெருந்தன்மையைப் பற்றிப் பல்லவ வீரர்கள் பேசிக் கொள்கிறார்கள். நீங்கள் இஷ்டப்பட்டிருந்தால் பல்லவ மன்னனைக் கொன்றிருக்கலாமாம். அவரைத் தொடக் கூடாதென்று உங்கள் வீரர்களை அடக்கிவிட்டீர்களாம். தோல்வி அடைந்த பல்லவர் படையைத் தொடரவும் நீங்கள் உங்கள் படைகளை அனுமதிக்கவில்லையாம், ஏன்?'' என்று கேட்டாள் ரங்கபதாகாதேவி.

''இரண்டு காரணம். ஒன்று யுத்த தர்மம். இன்னொன்று ஸ்ரீ ராமபுண்யவல்லபரின் உத்தரவு, பல்லவ மன்னனைக் கொல்லக் கூடாதென்று திட்டமாக எழுதியிருந்தார் போர் மந்திரி.''

''அந்தத் தர்மம் எனக்கில்லையா?''

''எந்தத் தர்மம்?''

''மனித தர்மம். பல்லவ மன்னர் மரண காயத்துடன் வருகிறார். மருத்துவர் யாரும் கிடையாது. எனக்கு மருத்துவம் தெரியும். அந்த நிலையில் நீங்களாயிருந்தால் என்ன செய்வீர்கள்?''

''மகளே! பல்லவ மன்னனுக்கு நீ உதவி புரிந்ததில் தவறேதும் இல்லை. ஆனால் இன்று காலயிலேயே நீ இங்கு வந்திருக்கலாம். மாலையில் உன்னை வரவிட்டவர்கள் காலையில் வரவிடாதிருக்க மாட்டார்கள். தவிர, பெண்களைச் சிறை செய்வது பல்லவர்களின் வரலாற்றில் கிடையாது. ஆகையால் இத்தனை நேரம் கழித்து நீ வருவானேன்?''

ரங்கபதாகாதேவி நிலை மிகவும் சங்கடத்துக்குள்ளாகியது. ''காலையிலேயே வந்திருப்பேன். ஆனால் பல்லவர் மாளிகைக்குத் திடீரென ஸ்ரீ ராமபுண்யவல்லபர் வந்து விட்டார்'' என்று கூறினாள்.

கங்க மன்னன் அதிர்ச்சியுற்ற கண்களால் அவளை உற்று நோக்கினான். ''என்ன? ஸ்ரீ ராமபுண்யவல்லபர் விளிந்தைக்கு வந்து விட்டாரா?'' என்ற அவன் கேள்வியிலும் அதிர்ச்சியிருந்தது. ''அவரைப் பல்லவர்கள் சிறை செய்து விட்டார்களா?''

''இல்லை'' என்றாள் தேவி.

பூவிக்கிரமனுக்கு அந்தப் பதில் அதிக அதிர்ச்சியை மட்டுமின்றி வியப்பையும் அளித்தது.

''இதில் வியப்புக்கோ அதிர்ச்சிக்கோ இடமில்லை தந்தையே! பாரதநாட்டின் பண்பாடு இதில் பிரதிபலிக்கிறது. ஸ்ரீ ராமபுண்ய வல்லபரைப் பல்லவ மன்னரும், பல்லவ இளவலும் பெரிதும் மதிக்கிறார்கள். அவரைச் சிறை செய்ய இருவரும் சம்மதிக்க மாட்டார்கள்'' என்றாள் தேவி.

''பல்லவ இளவரசன் இப்பொழுது எங்கே இருக்கிறான்?'' என்று வினவினான் சந்தேகம் ஒலிக்க.

''விளிந்தையில்'' என்றாள் தேவி தனது உள்ளத்திலெழுந்த அச்சத்தை வெளிக்குக் காட்டாமல்.

''எப்பொழுது வந்தான் அங்கே?''

''நேற்றிரவு.''

''நீ தங்கிய அதே மாளிகையில் அவனும் தங்கியிருக்கிறான்!''

''ஆம்.'' ரங்கபதாகாதேவியின் குரல் மிகமிக மெதுவாக ஒலித்தது. தந்தையின் உள்ளத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டதால், அவள் கண்கள் நிலத்தில் நிலைத்தன.

எட்ட நின்ற கங்க மன்னன் சங்கடத்தால் பல விநாடிகள் கூடாரத்தில் அங்குமிங்கும் உலாவினான். பிறகு திடீரென்று நின்று, ''நீ இங்கு வர இத்தனை நேரம் பிடித்ததற்குக் காரணம் தெரிறது'' என்ற இடியெனச் சொற்களை உதிர்க்கவும் செய்தான். தன் சொற்களால் ரங்கபதாகாதேவி நிலைகுலைந்து போவாளென்று பூவிக்கிரமன் நினைத்திருந்ததால் அவன் ஏமாந்தே போனான். அவன் இதயத்தைப் பிளக்கக்கூடிய சொல்லம்புகளைப் பிரயோகிக்கலானாள் ரங்கபதாகாதேவி.

# 66. புலிக்குப் பிறந்தது

ரங்கபதாகாதேவி தன் பாசறைக்கு வர ஒரு முழு இரவும் பகலும் பிடித்ததற்குக் காரணம் தனக்குத் தெரிந்துவிட்டதாகக் கங்க மன்னன் கடுங்குரலில் சீறியும் அதைப்பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாத கங்க நாட்டு இளவரசி தனது அழகிய கண்களைத் தந்தையின் முகத்தில் மிகத் துணிவுடன் பதித்ததன்றி வில்லம்பினும் கூரிய சொல்லம்புகளை மன்னன் மீது வீசவும் தொடங்கி, ''நீங்கள் மன்னரா அல்லது ஒற்றரா?'' என்று வினவினாள்.

அவள் கேள்வியில் அதிகத் துணிவும் ஓரளவு இகழ்ச்சியும் ஒலிப்பதைக் காணவே செய்த கங்க மன்னன் சினம் சிறிதும் தணியாத குரலிலேயே கேட்டான், ''நான் யாரென்பதிலும் சந்தேகம் வந்துவிட்டதா உனக்கு?'' என்று.

ரங்கபதாகாதேவி தந்தையைவிடக் கம்பீரமாக நிமிர்ந்து நின்றாள். ''சந்தேகம் எனக்கில்லை. உங்களுக்குத்தான்'' என்று சொன்னாள். குரலின் ஒலியில் உயர்வைச் சிறிதும் தாழ்த்தாமலே.

கங்க மன்னனின் சிங்கக் கண்கள் அவள் கண்களைச் சந்தித்தன சீற்றத்துடன். ''என்னை மன்னனா ஒற்றனா என்று கேட்டது நீதானே?'' என்று வினவினான் சீற்றம் சிறிதும் தணியாத குரலில்.

''ஆம்.''

''அப்படியானால் சந்தேகம் ஏற்பட்டது உனக்குதானே?''

''அது சந்தேகமல்ல, உறுதி.''

''என்ன உறுதி?''

''நீங்கள் ஒற்றர்தானென்பது.''

''எப்படித் தெரிந்து கொண்டாய் அதை?''

''நான் தங்கிய அதே மாளிகையில் பல்லவ இளவரசரும் தங்கியிருந்தாரா என்று வினவினீர்கள். அதைத் தொடர்ந்து, நான் இத்தனை நேரம் கழித்து இங்கு வந்ததற்குக் காரணத்தைப் புரிந்து கொண்டு விட்டதாகக் கூறுகிறீர்கள். ஆகவே விளிந்தை மாளிகையில் நடந்த அனைத்தும் தங்களுக்குத் தெரிந்திருக்கிறது. அப்படியிருக்க நீங்கள் ஒற்றராயிருக்காமல் வேறெப்படியிருக்க முடியும்?''

மகளின் துடுக்கான பதிலைக் கேட்ட கங்கமன்னன் பெரிதும் நிலை குலைந்து நின்றாள். அவன் மனத்தில் ஓடிய எண்ணங்களை விவரித்துச்சொல்ல முடியாதநிலையில் அவன் கலங்கிவிட்டதால்,

அந்தக் கலக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளக் கூடாரத்தின் ஒரு மூலைக்குச் சென்று திரும்பி வந்தான். கூடாரத்தில் எதையோ தேடுவதுபோல் நாலாபுறமும் ஒருமுறை பார்த்தான். பிறகு தலையைக் குனிந்த வண்ணம் சினம் சிதறியோடிவிட்ட குரலில் சொன்னான், ''மகளே! தந்தை என்பவனுக்குக் கடமைகள் சில உண்டு'' என்று.

தந்தையின் சங்கடத்தையும் கலக்கத்தையும் திணறலையும் ரங்கபதாகாதேவி கவனிக்கவே செய்தாளானாலும் அவள் பெண் மனம் தந்தையின் சந்தேகத்தாலும் அவர் சொற்களாலும் கல்லாயிருந்த படியால் பழைய கோபத்துடனேயே பதில் சொல்ல முற்பட்டு, ''அந்தக் கடமைகள் என்னவென்பதை நான் அறியலாமா?'' என்று வினவினாள்.

கங்க மன்னன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது தாமதித்து விட்டுச் சொன்னாள், ''உணரலாம்; உணருவதும் முக்கியம்'' என்று.

''சொல்லுங்கள். கேட்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றாள் ரங்கபதாகாதேவி.

''மன்னர் குலத்தில் தோன்றுபவர்களின் மகளுக்கும் மகனுக்கும் வேறுபாடு உண்டு.''

''உலகத்திலுள்ள சகல மக்களின் பிறப்பிலும் அந்த வேறுபாடு இருக்கிறது.''

''பெண்பால் ஆண்பால் என்ற வேறுபாட்டை நான் சொல்லவில்லை. நடைமுறையில் வேறுபாடுகளிருக்கின்றன.''

''என்ன வேறுபாடுகளோ?''

''சாதாரணக் குடிமகனின் மகளுக்கோ மகனுக்கோ மாசு ஏற்பட்டால் அது அந்தக் குடும்பத்துடன் போய்விடுகிறது. ஆனால் மன்னனின் மக்கள் பெயரில் ஏற்படும் அவதூறு அரசைப் பாதிக்கும். மாசு ஏற்படுவது மகனுக்காயிருந்தால் மகனை அரசு ஏறாதபடி தடுத்துவிடலாம். ஆனால் மகளுக்கு ஏற்படுமானால் அது குலத்துக்கு இழுக்காகிறது. அரசைப் பாதிக்கிறது. அதனால் குடிமக்களும் பாதிக்கப்படுகிறார்கள்'' என்ற கங்க மன்னன் ரங்கபதாகாதேவியை மெள்ள ஏறெடுத்து நோக்கினான்.

ரங்கபதாகாதேவி தன் அழகிய விழிகளை நிலத்தில் ஓட்டவில்லை. நன்றாக ஏறெடுத்துத் தன் தந்தையைப் பார்த்தே, ''இந்த விளக்கம் சரிதான். இதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?'' என்று வினவினாள்.



''மகளே!'' கங்க மன்னன் குரல் தடுமாறியது. பேச்சு மேலே ஓடவில்லை.

''சொல்லுங்கள் தந்தையே'' என்று வலியுறுத்தினாள் ரங்கபதாகாதேவி.

''நீ தண்டி மகாகவியின் மாளிகையிலிருந்த போது...''

''உம்.''

''பல்லவ இளவரசனும் அங்கிருந்திருக்கிறான்...''

''ஆம்.''

''அப்பொழுது நீ அவனைச் சந்திருக்க வேண்டும்.''

''தினம் சந்தித்தேன் பூஜை அறையில்.''

''அதைச் சொல்லவில்லை.''

''வேறு எதை?''

''மகளே! ஒரு தந்தை மகளிடம் சொல்லக்கூடாத விஷயங்களை விவரிக்கச் சொல்கிறாய்.''

''இந்தப் பேச்சை நான் கிளப்பவில்லையே.''

''இல்லை, இல்லை'' திணறினான் பூவிக்ரமன்.

ரங்கபதாகாதேவி தந்தையை நோக்கி மெல்லப் புன்முறுவல் செய்தாள். ''தந்தையே, நான் ஒன்று சொல்லட்டுமா-?'' என்று வினவினாள், அருகில் வந்து.

''சொல் மகளே!'' என்ற கங்க மன்னன் மெள்ள அவள் தோளில் தனது கையொன்றை வைத்தான் அன்புடன்.

''சந்தேகம் என்பது பெரும் பிசாசு தந்தையே! ஒருவரை அது பிடித்துவிட்டால் லேசில் விடுவதில்லை'' என்றாள் தேவி குழந்தைக் குரலில்.

''ஆம் பெண்ணே'' என்றான் கங்க மன்னன் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக.

''தந்தையே, சிற்ப சாஸ்திரத்தில் மிகத் தேர்ச்சியுள்ளவர் பல்லவ இளவரசர். வர்ணங்களைக் கூட்டுவதில் அவர் திறமை யாருக்கும் கிடையாது. அந்த இரண்டையும் அவரிடமிருந்து கற்க விரும்பினேன். அவரிடம் நான் கற்க விரும்பிய இரண்டையும் கற்க முடியவில்லை. காரணம், அவர் அங்கு தங்கிய நாட்களே இரண்டுதான். தவிர அவருக்கு அவகாசமும் இல்லை. காஞ்சியிலிருந்து தப்ப முயன்று கொண்டிருந்தார். அதற்குத் தண்டி மகாகவி எற்பாடுகள் செய்து

கொண்டிருந்தார். அது மட்டுமல்ல, உங்களுக்குச் சாந்தியளிக்கும் விஷயமும் இன்னொன்று உண்டு...''

''என்ன மகளே?'' கங்கன், மகளின் தலையைத் தடவிக் கொடுத்தான்.

''இளவரசர், தண்டி மகாகவியின் மாளிகைக்குத் தனித்து வரவில்லை'' என்றாள் தேவி.

''வேறு யாருடன் வந்தார்?''

''இந்திரவர்மர் தெரியுமா உங்களுக்கு -?''

''தெரியும். சாளுக்கியரின் பிரதான ஒற்றன்.''

''அவர் மகள் மைவிழி செல்வியையும் அழைத்து வந்தார். அவள் மகா அழகி.''

''அவளைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''கேள்விப்படாமலிருக்க முடியாது. இளவரசர் அவளை உயிருக்கு மேலாக நேசிக்கிறார்.''

''ஆம். அப்படியும் கேள்வி'' என்றான் பூவிக்ரமன்.

ரங்கபதாகாதேவி மெல்ல நகைத்தாள்.

''ஏன் நகைக்கிறாய்?''

''உங்களுக்குத் தமிழ் மொழி நன்றாக வந்திருக்கிறது.''

''எப்படித் தெரிந்து கொண்டாய்?''

''அப்படியும் கேள்வி என்று சொல்லவில்லையா சற்று முன்பு?''

''சொன்னேன்.''

''அந்த 'உம்'-மின் அர்த்தம் எனக்குப் புரியாதென்று நினைக்கிறீர்கள்? நான் உங்கள் பெண் அல்லவா? உங்கள் அறிவில் பாதி இருக்காதா எனக்கு?''

கங்க மன்னன் ஒரு விநாடி பேசாதிருந்தான். ''சில வேளைகளில் அறிவு குறைவாயிருப்பது நல்லது மகளே'' என்றான் கடைசியாக.

ஆனால் ரங்கபதாகாதேவி விடவில்லை. ''ஏன் அப்படி?'' என்று வினவினாள்.

''அறிவு குறைந்தால் ஊகம் குறையும். ஊகம் குறைந்தால் பல விஷயங்கள் காதில் பட்டாலும் புரியாதிருக்கும்'' என்று விளக்கினான் மன்னன்.

''உங்களுக்கு என்னைப் பற்றி பல விஷயங்கள் காதில் பட்டிருக் கின்றன. அதைப் புரிந்துகொண்டு விட்டதால் கஷ்டப்படுகிறீர்கள் -''



என்றாள் ரங்கபதாகாதேவி. தந்தை பதில் சொல்லாதிருக்கவே அவரிடமிருந்து விலகிக் கூடாரத்தின் கோடியில் இருந்த பந்தத்துக்கு அருகில் சென்று தன் முகத்தில் வெளிச்சம் நன்றாகப் படியும்படி நின்றுகொண்டு, ''தந்தையே, என்னை நன்றாகப் பாருங்கள்'' என்றாள்.

கங்க மன்னனின் கண்கள் அவளை ஏறெடுத்து நோக்கின. ''என் முகத்தை உற்றுப் பாருங்கள்'' என்றாள் தேவி. ''என் முகத்தில் களங்கம் தெரிகிறதா? முறை தவறியவளின் களங்கம் தெரிகிறதா?'' என்று மிகக் கம்பீரமான குரலில் கேட்டாள். அதற்கு என்ன பதில் சொல்வதென்று மன்னனுக்குப் புரியாததால் அவன் பிரமித்தான் பல விநாடிகள். சங்கடத்தால் நின்ற இடத்தில் சிறிது அசையவும் செய்தான்.

ரங்கபதாகாதேவியே கம்பீரமான குரலில் பேசினாள். ''தந்தையே! மன்னர் குலப் பழக்கம், தர்மம் நீங்கள் அறியாததல்ல. எனக்கு மட்டும் மனமிருந்தால் நான் பல்லவ இளவரசரைக் காந்தருவ மணம் செய்துகொண்டு பல்லவர்களிடமே தங்கியிருக்கலாம். அதை நீங்கள் தடுத்திருக்க முடியாது. ஆனால் உங்கள் மகள் உங்கள் இஷ்ட விரோதமாக, உங்கள் கௌரவத்துக்குக் குறைவேற்படும் முறையில் எதிலும் ஈடுபட இஷ்டப்படவில்லை. தவிர கங்கர் குல கௌரவமும் கங்க நாட்டுக் கௌரவமும் அதன் இளவரசியையும் சேர்ந்ததென்று நீங்கள் ஏன் நினைக்கவில்லை? அது கிடக்கட்டும். இப்பொழுது மட்டும் நான் இங்கு வருவானேன்?'' என்று வினவினாள்.

''ஏன்?'' கங்க மன்னன் பெரிதும் குழம்பிய குரலில் கேட்டான்.

''விக்கிரமாதித்த மன்னர் ஓலையைக் கொடுக்க மாத்திரமல்ல'' என்றாள் தேவி.

''வேறெதற்கு?''

''பல்லவ இளவலின் திட்டத்தை முறியடிக்க.'' இதைத் திடமாகச் சொன்னாள் தேவி.

அவள் சொற்களைக் கேட்ட பூவிக்ரமன் பெரிதும் பிரமித்தான். தான் அவளைப்பற்றியும் பல்லவ இளவசரனைப் பற்றியும் கேள்விப்பட்ட செய்திகள் பொய்யாயிருக்குமோ என்ற சந்தேகமும் அவன் மனத்தில் எழுந்தது. ''பல்லவ இளவலின் திட்டமா?'' என்று வினவினான் மெல்ல மகளை நோக்கி.

''ஆம். பல்லவ இளவல் போர்த் தந்திரங்களை நன்றாக அறிந்தவர். அவர் எந்த விதத் திட்டத்தை வகுத்து எத்தகைய போரில் இறங்குவார் என்பதை என்னால் ஊகிக்க முடியும். அதற்கு மாற்றுத் திட்டம் நான் தயாரித்திருக்கிறேன். நாளை இந்தப் போர்க்களத்தை அவர்

பார்க்கும்போது திகைத்துப் போவார். தமது எண்ணங்கள் தவிடு பொடியாவதை உணர்ந்து கொள்வார். கங்க குலத்து மகள் பல்லவர் குலத்தோன்றலுக்குச் சிறிதும் சளைத்தவளல்லவென்பதைப் புரிந்து கொள்வார்'' என்று வீராவேசத்துடன் கூறினாள் ரங்கபதாகா தேவி. அத்துடன் அந்தத் திட்டத்தை விவரிக்கவும் தொடங்கினாள்.

அவள் திட்டத்தைக் கேட்ட கங்க மன்னன் அசந்து போனான். 'புலிக்குப் பிறந்தது பூனையாகாது' என்று தன்னுள் மகளைச் சிலாகிக்கவும் செய்தான்.

## 67. பெண்புத்தி முன்புத்தி

கூடார மூலைப் பந்தத்தின் வெளிச்சத்தில் நின்ற ரங்கபதாகா தேவியின் முகத்தில் அன்று அழகுடன் வீரக்களையும் மிதமிஞ்சி சொட்டியதால் அவள் கண்கள் நன்றாகத் தீட்டப்பட்ட வேல்களின் முனைகளைவிட அதிகமாகப் பளபளத்தன. சற்றே மடிந்த பவள உதடுகள் அவள் வீர சித்தத்தின் அடிப்படையான உரத்துக்குச் சான்று கூறின. காற்றில் லேசாக அசைந்த முன்னுச்சி மயிர்களும் தந்தையை நோக்கிச் சீறுவன போல் தோன்றின. அவள் குழலிலிருந்து காதுப் பக்கத்தில் தொங்கிய முத்துச் சரங்கூட ஓர் ஒழுங்கில்லாமல் வளைந்து கிடந்ததால் அதுவும் அவள் அலட்சிய பாவத்துக்கு அறிகுறியாக விளங்கியது. நன்றாகத் தோளைச் சுற்றி இழுத்து இடையில் செருகப்பட்டிருந்த மேலாடை கூட அவள் ஏதோ சண்டைக்குச் சன்னத்தம் செய்கிறாளென்பதை வலியுறுத்தியது. இந்த நிலையில், முதல் நாள் பூவிக்கிரமன் அடைந்த ஜெயமே மானிட உருவெடுத்து வந்தது போல் விளங்கினாள் ரங்கபதாகாதேவி.

இத்தகைய தோற்றத்துடன் நின்ற அவள் தந்தையை நோக்கித் தன் திட்டத்தையும் விவரிக்கத் தொடங்கி, ''தந்தையே! ஸ்ரீ ராமபுண்யவல்லபர் பல்லவ இளவரசரைப் பல்லவ மன்னருடன் சேரவிடாதிருக்கப் பெரும்பாடு பட்டார். என்பது உங்களுக்கு தெரியுமா?'' என்று வினவினாள்.

பூவிக்ரமன் மகளை ஏறெடுத்து நோக்கி, ''தெரியாது'' என்றான்.

''பரமேசுவரவர்மர் சிறந்த போர் வீரர் என்பது ஸ்ரீ ராமபுண்யவல்லபருக்குத் தெரியும். ஆனால் போர்த் திட்டங்களை வகுப்பதிலோ போர்த் தந்திரங்களை வகுப்பதிலோ அவருக்கு அத்தனை பரிச்சயமில்லையென்பது அவரது அபிப்பிராயம்'' என்றாள் ரங்கபதாகாதேவி.



''அது தவறு'' என்றான் பூவிக்ரமன் திட்டமாக.

ரங்கபதாகாதேவி தந்தையை உற்று நோக்கினாள் ஒரு விநாடி. ''இங்கு பரமேசுவரவர்மர் அடைந்தது தோல்வியா வெற்றியா?'' என்று வினவினாள் முறுவல் இதழ்களில் விரிந்தோட.

பூவிக்ரமன் மகளை நோக்கிக் கூறினான், ''மகளே! வெற்றி தோல்விகளை வைத்துப் பெரும் மன்னர்களின் திறமையை எடை போட முடியாது. பரமேசுவரவர்மர் நம்மிடம் தோல்வியடைந்து விட்டதால் அவர் திறமையை நாம் குறைத்து மதிப்பிட முடியாது'' என்று.

எதிரியிடம் தந்தைக்கிருந்த மதிப்பை எண்ணி வியந்தாள் ரங்கபதாகாதேவி. ''உங்கள் அபிப்பிராயம் அப்படி இருக்கலாம். ஆனால், ஸ்ரீராமபுண்யவல்லபரின் அபிப்ராயம் அப்படியில்லை. பல்லவ மன்னனைவிடப் பல்லவ இளவல் போர்த் தந்திரங்களை நன்றாக அறிந்தவர் என்று நினைக்கிறார். அதனால்தான் அவரை அவரது தந்தையிடம் சேரவிடாதிருக்க அனைத்தும் செய்தார்'' என்று கூறினாள்.

''அப்படியா!'' என்று வினவிய பூவிக்ரமன் குரலில் ஸ்ரீ ராமபுண்யவல்லபரின் அபிப்பிராயத்தைத்தான் ஒப்புக் கொள்ளவில்லையென்பது நன்றாகப் புலனாயிற்று.

''ஆம். தங்கள் கருத்து எப்படியிருந்தாலும் ஸ்ரீ ராமபுண்ய வல்லபரின் கருத்து நான் கூறியபடிதான். அதற்காக அவரைத் தண்டி மகாகவியின் மாளிகையிலேயே தங்க வைக்க ஏற்பாடு செய்தார். அதையும் இளவரசர் மீறிக் காஞ்சி கடிகைக்குச் சென்று விடவே அதிலிருந்து வெளிக் கிளம்பாதிருப்பதற்கான முயற்சியையும் செய்தார். பிறகு இளவரசரைக் காஞ்சியின் பெரிய கொல்லன் வீட்டில் சிறை செய்ய முயன்றார். அதுவும் முடியாததால் கங்க நாட்டுப் பாதைகளிலுள்ள சத்திரங்களிலும் சிறை செய்ய வீரர்களை ஏவியிருந்தார். அத்தனையையும் மீறி இளவரசர் கங்க நாடு வந்து பெண்ணையாற்றுப் பாலத்தின் மூலம் சாளுக்கிய வேட்டுவ மாளிகைக்குச் சென்றார். அங்கு இருநூறு வீரர்களுடன் ஸ்ரீ ராமபுண்யவல்லபரே காத்திருந்து இளவரசரைச் சிறை செய்தார். இளவரசரை மடக்க எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறார் ஸ்ரீ ராமபுண்யவல்லபர்! ஒரு பெரிய நாட்டின் போர் மந்திரி, அதுவும் காஞ்சியையே வெற்றி கொண்ட ஒரு பேரரசின் போர் மந்திரி, கேவலம் தப்பியோடிய ஓர்இளவரசரைச் சிறை செய்ய இத்தனை முயற்சியெடுக்கிறாரென்றால் அவர் இளவரசருக்கு எத்தனை மதிப்பு வைத்திருக்க வேண்டும்! அவருடைய போர்த் திறனில் எத்தனை நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்!' என்று வினவினாள்

ரங்கபதாகாதேவி. மேலும் சொன்னாள், ''அவர் நம்பிக்கையில் தவறில்லை தந்தையே. இளவரசர் போர்த் திட்டங்களை வகுப்பதில் மிக வல்லவர்'' என்று.

கங்க மன்னன் இதைக் கேட்டதும் சற்றுச் சிந்தனையில் இறங்கினான். மகள் சொல்வதெல்லாம் உண்மையாயிருந்தால், ஸ்ரீ ராமபுண்யவல்லபர் இளவரசரைச் சிறை செய்ய அத்தனை முயற்சியெடுத்திருந்தால், தான் அடுத்துச் செய்ய வேண்டியதை எச்சரிக்கையுடனேயே செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்து கொண்டான். ''பல்லவ இளவரசன் அடுத்து என்ன செய்ய உத்தேசித்திருக்கிறான்?'' என்று மகளை நோக்கி வினவவும் செய்தான்.

''என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார் என்பது ஒரு புறமிருக்க என்ன செய்திருக்கிறார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவர் வந்த ஒரு நாளைக்குள் விளிந்தை கோட்டையாகிவிட்டது. நான் ரதத்தில் வரும்போதே ஒரே நாளில் அவர் அந்த நகரத்துக்குச் செய்யவேண்டிய பாதுகாப்புகளைக் கவனித்து விட்டார். நம்மிடம் படுதோல்வியடைந்த பல்லவர் படை ஒரேநாளில் ஓர் ஒழுங்குக்கு வந்துவிட்டது. நான் வந்த வழியில் அதாவது வடக்கு எல்லையில் பல்லவ புரவி வீரர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். நகரத்தின் வடக்குப் புற எல்லை மட்டுமல்ல, விளிந்தையே கோட்டையாகி விட்டது. அவர்களை நாம் தாக்க முற்பட்டால் அதைச் சமாளிக்கத் தயாராயிருக்கிறார் இளவரசர்'' என்று விளக்கினாள் ரங்கபதாகாதேவி.

''அதுதான் இல்லையே மகளே! பல்லவரைத் தாக்க வேண்டாமென்றும் திரும்பிச் சென்றுவிடுமாறும் சாளுக்கிய மன்னனிடமிருந்து நீயே ஓலை கொண்டு வந்திருக்கிறாயே?'' என்றான் கங்க மன்னன்.

''சாளுக்கிய மன்னர் அப்படி ஓலை கொடுத்திருக்கிறார். பல்லவர்கள் அதை ஒப்புக் கொள்ள வேண்டிய அவசியமில்லையே!'' என்றாள் தேவி.

''இல்லை.''

''நம்மைத் தாக்கப் பல்லவர் முயற்சி செய்யலாமல்லவா?''

''செய்தால் அதற்கு நான் சித்தமாயிருக்கிறேன்.''

''ஒரு போர் இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது. இன்னொரு போர் உடனே துவங்கினால்...?''

''அதைப்பற்றிக் கவலை வேண்டாம். பல்லவர்களுக்கு மீண்டும் படிப்பினை அளிக்க முடியும்'' என்றான் கங்க மன்னன் உறுதியான குரலில்.



''அப்படிச் செய்தால் நீங்கள் விக்கிரமாதித்த மன்னரின் ஓலையை மீறும்படியாயிருக்கும்'' என்று சுட்டிக் காட்டினாள் ரங்கபதாகாதேவி.

''ஆகாது. இந்தச் சண்டையை நாமாக வலுவில் வரவழைத்துக் கொள்ளவில்லை. பல்லவர் தாக்கினால் தற்காப்புப் போர் செய்வது என் கடமை'' என்றான் கங்க மன்னன்.

ரங்கபதாகாதேவி சிறிது சிந்தித்தாள். ''பல்லவர்கள் உடனே தாக்கப் போவதில்லை. நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பும்போது தாக்குவார்கள்'' என்று கூறிய ரங்கபதாகாதேவி, ''தந்தையே! நீங்கள் எப்படித் திரும்பப் போகிறீர்கள்?'' என்றும் வினவினாள்.

''காவேரிக்கு அக்கரை கங்க நாடு'' என்றான் பூவிக்ரமன்.

''காவேரியை இங்கு கடந்து செல்லப் போகிறீர்களா?'' என்றாள் பூவிக்ரமன் மகள்.

''ஆம்.''

''அதைத்தான் பல்லவ இளவரசர் எதிர்பார்க்கிறார்.''

''ஏன்?''

''காவிரி இப்பொழுது மணல் படர்ந்து கிடக்கிறது. நீர் இல்லை.''

''ஆம்.''

''பாதி மணலில் படைகள் போகும்போது கரையில் நின்று பல்லவர் படை அம்பு மாரி பொழிந்தால் நமது நிலைமை என்ன? வேல்களை வீசும் யந்திரங்களைக் கொண்டு வேல்களை வீசினால் நமது கதி என்ன?'' இந்தக் கேள்விகளை நிதானமாகக் கேட்டாள் ரங்கபதாகாதேவி.

இந்தக் கேள்விகளை மனத்தில் வாங்கிக் கொண்டதால் பிரமித்து நின்றான் கங்க மன்னன். தொடர்ந்து கூறினாள் தேவி. ''தந்தையே! ஸ்ரீ ராமபுண்யவல்லபர் முன்னதாகவே உங்களுக்கு ஓலை அனுப்பியதால் பல்லவர் படை விளிந்தையில் கால் வைப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே காவிரி மணலைக் கடந்து சமவெளிக்கு வந்து விட்டீர்கள். பல்லவர்கள் உங்களைச் சமவெளியில் எதிர்பார்க்க வில்லை. ஆகவே உங்கள் வெற்றி சுலபமாயிற்று. இப்பொழுது அது சாத்தியமில்லை. நீங்கள் காவிரி மணலில் படைகளை இறக்குவதைத் தான் எதிர்பார்க்கிறார் பல்லவ இளவரசர்.''

கங்க மன்னன் மீண்டும் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கினான். ''நிலைமை தர்ம சங்கடமாயிருக்கிறது மகளே!'' என்று கூறினான் சிறிது நேரங்கழித்து.

''ஆம். விளிந்தையையும் நாம் தாக்க முடியாது. காவிரி மணலில் இறங்கினால் இளவரசர் தமது படையுடன் முதலில் தரை மீதிருந்தே தாக்குவார். நம் படை உடைந்தால் மணலில் இறங்கியும் வருவார். இதுதான் அவர் திட்டம். எப்படியும் நமது படையை உடைக்க அவர் தயங்கமாட்டார்'' என்றாள் தேவி.

''அப்படியானால் நாம் என்ன செய்யலாம்?'' என்று மகளைக் கேட்டான் பூவிக்ரமன்.

ரங்கபதாகாதேவி பந்தத்தின் வெளிச்சத்திலிருந்து நடுக் கூடாரத்துக்கு வந்தாள். ''இங்குதான் எனது திட்டம் உருவெடுக்கிறது?'' என்று கூறினாள்.

''விளக்கிச் சொல்'' கங்க வேந்தனின் குரலில் குழப்பம் தெரிந்தது. மகளிடம் தான் யோசனை கேட்கவேண்டிய நிலையைப் பற்றிச் சிறிது வியப்பும் தெரிந்தது. அதை நினைத்ததால் அவன் உதடுகளில் மெல்லப் புன்முறுவலும் படர்ந்தது.

அவையனைத்தையும் கவனிக்கவே செய்தாள் ரங்கபதாகா தேவி. ''தந்தையே! தங்கள் மகள் நான் மிகச் சிறியவள். இருப்பினும் பல்லவ காஞ்சியில் இருந்ததாலும் பல்லவ இளவலுடன் சிறிது பழகியதாலும் பல்லவர்கள் மனப்போக்கை ஓரளவு என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆகையால்தான் இளவரசர் திட்டத்தை உடைக்க ஒரு மாற்றுத் திட்டம் தயாரித்தேன். நாம் காவிரிக் கரையை இங்கு தாண்டப் போவதில்லை'' என்று கூறிய தேவி தந்தையை உற்று நோக்கினாள்.

கங்க மன்னன் பதிலேதும் சொல்லவில்லை. மகளின் மனத்திலிருப்பது வெளிப்படட்டும் என்று பேசாமலே இருந்தான். ஆகவே ரங்கபதாகாதேவியே பேசினாள் : ''தந்தையே! பல்லவ ஒற்றர்களின் பார்வை பூராவும் காவிரி மணலில் இருக்கும். விளிந்தையிலிருந்து இந்தச் சமவெளிக்கு வராமலேயே விளிந்தைக்குச் சற்றுத் தெற்கில் சென்று மேற்கில் திரும்பினால் உள்ள காவிரிக் கரையிலிருந்து நமது படைகள் காவிரிக்குள் இறங்குகின்றனவா வென்பதைப் பல்லவ ஒற்றர்க் கவனிப்பார்கள். இன்றிரவு முழுவதும் அவர்கள் பார்வை காவிரிக் கரையிலும் மணலிலும் இருக்கும். நாம் காவிரிக் கரைப் பக்கமும் போகப் போவதில்லை, மணலிலும் இறங்கப் போவதில்லை. இப்பொழுதே நமது பாசறைகளைக் கலைத்துக் கொண்டு கூடாரங்களைப் பிரித்தெடுத்துக் கொண்டு இந்தச் சமவெளியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லப் போகிறோம்...'' வாசகத்தை முடிக்காமல் ரங்கபதாகாதேவி தந்தையை நோக்கினாள்.

''சரி... மேலே சொல்'' என்றான் கங்க மன்னன்.



''நாளைக் காலைக்குள் இந்தச் சமவெளியிலிருந்து அரைக்காத தூரம் நமது படைகள் வடக்கு நோக்கி நகர்ந்துவிடும்'' என்று சுட்டிக் காட்டினாள் தேவி.

''நகர்ந்து விட்டால்?''

''நாளைக் காலை இந்தச் சமவெளி வெறித்துக் கிடக்கும். இரவு முழுவதும் காவிரிக் கரையையும் மணலையும் கவனித்துக் கொண்டிருக்கும் பல்லவ ஒற்றவர்கள் நம்மைக் காணாததால் இளவரசருக்கு அறிவிப்பார்கள். இளவரசர் காலையில் இந்த இடத்தைக் கவனிக்க முன்னோடிகளை அனுப்புவார். பிறகு தானே வருவார். அவர் கண் முன்பு இந்தச் சமவெளிதான் இருக்கும். நமது படை இருக்காது.''

இந்தத் திட்டத்தைக் கேட்ட கங்க மன்னன் பிரமித்தான். மகளின் யுக்தியை மனதுக்குள் மெச்சிக் கொண்டான். ''நாம் அரை காத தூரத்துக்கு அப்பால் காவிரியைக் கடந்தால் பல்லவர் படை நம்மை அணுக முடியாது. அவர் படை பாதி தூரம் வருவதற்கு முன்பு நாம் அக்கரையில் நமது நாட்டு எல்லையில் இருப்போம்'' என்று கூறி மகளை அணுகி, ''மகளே! தமிழர்கள் தங்கள் பழமொழியைச் சிறிது மாற்ற வேண்டியிருக்கிறது. பெண் புத்தி பின் புத்தியல்ல, முன் புத்தி. உன் புத்தி பல்லவ இளவரசன் யுக்தியை முந்திக் கொண்டு விட்டது'' என்று கூறி, திட்டத்தை அப்பொழுதே நிறைவேற்ற முற்பட்டுக் கூடாரத்துக்கு வெளியே சென்று உத்தரவுகளை வேகமாகப் பிறப்பித்தான்.

மறுநாள் அந்தச் சமவெளியைப் பார்வையிட்ட பல்லவ இளவரசன் பிரமித்தான். பெண்புத்தி விஷயமாக கங்கமன்னன் சொன்னதை அவன் கேட்காவிட்டாலும் அவன் புத்தியில் அந்த எண்ணமே உதித்தது. ரங்கபதாகாதேவி தன்னை முறியடித்து விட்டதில், தன் திட்டத்தைக் கலைத்து விட்டதில் அவன் இதயத்தோடு திருப்தி கலந்த இன்பமும் ஊடுருவலாயிற்று.

## 68. ஏமாற்றிய ஏந்திழை

**கா**விரிக் கரையின் பெரும் சோலைக்கும் பாசன வாய்க்காலுக்கும் இடையேயிருந்த விளிந்தையின் சமவெளி பல்லவ இளவலின் கண் முன்பாகப் பெரிதும் வெறிச்சிட்டுக் கிடந்தது. போரில் மாண்ட வீரர்களின் பிணங்களையும் உயிர் நீங்கிய புரவிகளையும் தவிர, அந்தச் சமவெளியிலிருந்த இதர ஜீவராசிகள் பிணங்களைக் கொத்த வந்த கழுகுகளும், தின்ன வந்த நரிகளும் என்பதைக் கண்ட பல்லவ இளவல் மனம் வியப்பின் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருந்தது சில

இடங்களில் பிணக் குவியல்கள் ஒதுக்கப்பட்டு ரதம் ஒன்று ஓடுவதற்கு வழி செய்யப்பட்டிருந்த போதிலும் மற்ற இடங்களில் ஆவியிழந்து வீழ்ந்தவர்கள் வீழ்ந்தபடியே இருந்ததைப் பல்லவ இளவரசன் கண்டு இரவோடு இரவாகக் கங்க நாட்டு மன்னன் தனது படைகளை நகர்த்திச் சென்றிருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அது மட்டுமின்றி, தானிருந்த இடத்திலிருந்து பிணங்களை அகற்றி வழி செய்யப்பட்ட இடத்தில் கண்ட ரதத்தின் சக்கரச் சுவடுகள் ரங்கபதாகாதேவியின் ரதத்தின் சக்கரங்களே என்பதையும், அவள் செல்வதற்கே பாதை சரிசெய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதையும் புரிந்து கொண்டான். சாதாரணமாக, போர் முடிந்தவுடன் போரில் வெற்றி கண்ட படைகள் இரண்டு நாட்கள் தங்கி, வீரர்களின் சடலங்களைப் புதைத்தோ எரித்தோ செல்வது வழக்கமா யிருந்தாலும், அந்த வழக்கத்துக்கு விரோதமாக, கங்க மன்னன் ஏதும் செய்யாமல் பாசறையைச் சுருட்டிக் கொண்டு போய்விட்டபடியால் அந்த விபரீத நடவடிக்கைக்கு ரங்கபதாகா தேவியின் யோசனையே காரணமாயிருக்க வேண்டுமென்பதை அறிந்து கொண்ட பல்லவ இளவரசன், போர்க்களத்தில் மாண்டவர்களை அடக்கம் செய்யும் பணி பல்லவர் படை மீது விழுந்து விட்டதை உணர்ந்ததால், தனது புரவியைத் தட்டிவிட்டு மெல்ல அந்தப் போர்க்களத்தின் ஊடே செலுத்தினான்.

காலை நேரக் கதிரவனின் செங்கதிர்கள் இளவரசன் மேல் பட்டு ஏற்கனவே சிவப்பான அவன் மேனியை அதிகச் சிவப்பாக அடித்தன. காவிரிக் கரைச் சோலையிலிருந்த மைனாக்களும் கிள்ளைகளும் புறாக்களும் இன்பமான நானாவித சப்தங்களைக் கிளப்பிக் கொண்டிருந்தன. பாசன வாய்க்கால் கரை மீதிருந்த சிறுசோலையின் முகப்பிலும் சின்னஞ்சிறு பறவைகள் சில அலங்கார நடை போடத் துவங்கினாலும் இளவரசனின் புரவியரவம் கேட்டதும் ஓடத் துவங்கிய நரிகளுக்குப் பயந்து மீண்டும் பறந்து மரக் கிளைகளில் தொற்றிக் கொண்டன.

இத்தகைய மனோகரக் காட்சிகளுக்கிடையேயிருந்த போர்க்களத்தின் பயங்கரக் காட்சி நல்லது பொல்லாததும், பிறப்பும் இறப்பும் வாழ்க்கையில் சதா அக்கம் பக்கத்திலிருக்கும் தத்துவத்தை வலியுறுத்தியது. அந்தத் தத்துவத்தை மனத்தில் வாங்கிய வண்ணம் போர்க்களத்தின் ஊடே அதாவது ரங்கபதாகாதேவியின் தேர்ச் சக்கரங்கள் பதிந்த பாதையின் வழியே சென்ற பல்லவ இளவரசன் காலை நேரம் வந்ததும் வீரர்களைக் கொத்தக் கழுகுகளும் காக்கைகளும் வந்துவிட்டதைக் கண்டு விசனம் கலந்த புன்முறுவல் கொண்டான். 'இதே வீரர்கள் உயிருடனிருக்கும்போது வாளிகளால் எத்தனை



பறவைகள் மாண்டிருக்கும்? அவர்கள் வேட்டைகளில் எத்தனை மிருகங்கள் துடித்து விழுந்திருக்கும்?' என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்த இளவரசன், 'மனிதன் உயிர் நீங்கியதும் இந்தப் பறவைகளுக்கும் விலங்கினங்களுக்கும் என்னகொண்டாட்டம்!' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். 'மனித சக்தியை எதற்காகப் போர்களில் வீண் அடிக்க வேண்டும்? ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தினால் இவர்களனைவராலும் நாட்டுக்கு எத்தனை நன்மை ஏற்பட்டிருக்கும்?' என்றும் எண்ணிய பல்லவ இளவரசன் மெள்ள மெள்ளக் கங்க மன்னன் கூடாரமிருந்த இடத்துக்கு அருகாமையில் வந்து தனது புரவியை நிறுத்திக் கொண்டு நிலத்தை ஊன்றிக் கவனித்தான்.

கூடாரம் எடுக்கப்பட்டதாலிருந்த முளைகளின் துளைகள் அவன் கண்ணுக்குத் தெரிந்தன. கூடாரத்தருகே நின்றுவிட்டதால் அப்புறம் செல்லாத தேவியின் ரதத்தின் சக்கரச் சுவடுகளையும் அவன் கண்டான். பிறகு, அந்த இடங்களைத் தாண்டிப் புரவியைப் பல அடிகள் நடத்திச் சென்று மீண்டும் நிலத்தை ஆராய்ந்தான். கங்க மன்னன் கூடாரத்துக்கு அப்பால் பல சக்கரங்களின் சுவடுகளும் புரவிகளின் சுவடுகளும் வடக்கு நோக்கி ஓடுவதைக் கண்ட இளவரசன், அந்தச் சுவடுகளைப் பார்த்த வண்ணம் அரை நாழிகை நேரத்துக்குத் தனது புரவியைச் செலுத்தினான். பிறகு காவிரிக் கரையை நோக்கிப் புரவியைத் திருப்பி அங்கிருந்த சோலைக்குள் புகுந்து காவிரியின் மணல் பரப்பை நோக்கினான். அவன் முகத்திலும் இதழ்களிலும் மந்தகாசத்தின் சாயை விரிந்தது. தனது வீரர்கள் காவிரிக் கரையையும் மணலையும் நோட்டம் பார்த்துக் கொண்டிருந்த போது ரங்கபதாகாதேவி தனது தந்தையையும் படைகளையும் அழைத்துக் கொண்டு ஓசைப்படாமல் வடக்கு நோக்கி நகர்ந்து விட்டதை எண்ணி மெல்ல நகைத்தும் கொண்டான். எப்படியும் தன்னை ஏமாற்றியவள் ரங்கபதாகாதேவி என்பதால், அவன் இதயத்தில் கோபத்துக்குப் பதில் அவளைப் பற்றி இன்ப நினைவுகளே ஏற்பட்டன. அந்த நினைப்புடன் திரும்பி விளிந்தைக்கு வந்த அவன் தனது மாளிகைக்குச் சென்றான்.

மாளிகையை அடைந்ததும் புரவியின் கடிவாளத்தை அங்கிருந்த காவலனொருவனின் கையில் திணித்து விட்டு விடுவிடுவென்று மாடிப்படியில் ஏறித் தனது தந்தை இருந்த அறைக்கு வந்த இளவரசன் தந்தையின் தேகநிலை எப்படியிருக்கிறதென்று பக்கத்திலிருந்த சீனனை விசாரித்தான். பதிலைச் சீனன் சொல்லு முன்பு அப்புறம் பார்த்து ஒருக்களித்துப் படுத்துக்கொண்டிருந்த பரமேசுவரர்மனே திரும்பி, ''உடல் நிலை நன்றாகத் தானிருக்கிறது. மனநிலைதான் சரியில்லை'' என்றான்.

இளவரசன் பஞ்சணையின் முகப்பில் அமர்ந்து தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு, ''அப்பா! உடல் நிலை சரியில்லாத போது மனநிலையை அலைத்துக் கொள்வது சரியல்ல'' என்று கூறினான்.

பரமேசுவரவர்மன் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''அதைச் சொல்வது எளிது'' என்று கூறினான் மன்னன் புன்முறுவலின் ஊடே.

''செயலில் கொண்டு வருவதும் அத்தனை கஷ்டமல்ல'' என்ற பல்லவ இளவலின் குரலில் உறுதியிருந்தது.

''எத்தனை நாளாகப் பல்லவ இளவல் வேதாந்தியானான்?'' என்று கேட்டான் பரமேசுவரவர்மன்.

''இதற்கு வேதாந்தம் ஏதும் தேவையில்லை.''

''ஏனோ?''

''புதல்வன் தந்தையின் சுமையை ஏற்க வேண்டியவன்.''

''அரசுச் சுமையை இதற்குள் எப்படி நீ அடைய முடியும்?''

''அரசுச் சுமை வேண்டாம். அதன் கடமைகளால் ஏற்படும் கவலைகளை, துன்பங்களைப் புதல்வன் ஏற்கலாமல்லவா?''

இந்தக் கேள்வியை இளவரசன் கேட்டதும் மைந்தனின் கையை அழுத்திப் பிடித்தான் பரமேசுவரவர்மன். ''ராஜசிம்மா! உன்னைப் போல் கடமையை உணர்ந்த மகன் உலகத்தில் குறைவு. ஆனால் நான் உன்னிடம் எதிர்பார்த்தது அரசாங்கப் பணியல்ல'' என்று மெல்லக் கூறவும் செய்தான்.

இளவரசன் தந்தையின் மனத்தை உணர்ந்திருந்தாலும் அவர் சொல்வதன் பொருளை உணராதவன் போலவே கேட்டான். ''வேறென்ன பணியை என்னிடம் எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று.

பரமேசுவரவர்மன் முகத்தில் சாந்தி படர்ந்தது. சொற்களிலும் சாந்தி நிலவச் சொன்னான் பல்லவ மன்னன், ''ஆலயப் பணி'' என்று.

'இளவரசன் முறுவலோடு கேட்டான், ''ஆலயப் பணியும் அரசாங்கப் பணியல்லவா?'' என்று.

''ஆம் ராஜசிம்மா! அதனால்தான் சாளுக்கியர் படை யெடுப்பைக் கூட நீ அதிகமாக அறியாமல் உன்னை மாமல்லபுரத்தில் தங்க வைத்தேன். காஞ்சியில் கைலாசநாதர் கோயிலையும் கடல் மல்லையில் அரங்கன் கோயிலையும் என் ஆயுட்காலத்தில் பார்க்க விரும்பினேன். அதற்காகவே நீ சிற்பக்கலை பயில ஏற்பாடு செய்தேன். ஆனால் நீ இப்பொழுது போர்களில் ஈடுபட விரும்புகிறாய்'' என்று துயரத்துடன் கூறினான் பரமேசுவரவர்மன்.



''தந்தையே! கைலாசநாதர் கோயிலையும் அரங்கன் கோயிலையும் கட்டுவதற்கான திட்டங்கள் அனைத்தும் சித்தமாயிருக்கின்றன. அஸ்திவாரமும் இரண்டு ஆலயங்களுக்கும் போடப்பட்டு, தரைக்கு மேலும் கட்டிடம் சிறிதளவு ஆரம்பமாயிருக்கிறது. அடுத்தபடி இரண்டையும் பிம்பமயமாக அடிக்கவும் காலத்தால் அழிக்க முடியாத வர்ண ஜாலங்களைத் தீட்டவும், செய்ய வேண்டிய பிரும்மாண்டமான பகுதி மீதியிருக்கிறது. இந்தப் போர்கள் முடிந்ததும் அந்த விஷயத்தைக் கவனிக்கிறேன். ஆனால் அது மன நிம்மதியில் நடக்க வேண்டும். அந்த நிம்மதி இப்பொழுது எனக்கில்லை. நாடு சீர்பட்டால் என் மனமும் சீர்படும்'' என்றான் பல்லவ இளவரசன்.

''இந்தப் போர் எத்தனை நாளோ, மாதங்களோ, வருடங்களோ நடக்குமென்று சொல்ல முடியாது. அதுவரை தெய்வப் பணி காத்திருக்கவேண்டுமா?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.

இளவரசனின் முகத்தில் துன்பத்தின் சாயை படர்ந்தது. ''தந்தையே! இப்பொழுதும் நான் காஞ்சிக்குச் சென்று சாளுக்கிய மன்னன் உத்தரவு பெற்று ஆலயப்பணி தொடங்க முடியும். ஆனால் ஆலயம் சரிவர அமையாது. சிற்பங்கள் உயிருடன் எழா. கலை, சுயேச்சையில், சுதந்திர மனப்பக்குவத்தில்தான் தலையெடுக்கும். ஆகையால், இப்பொழுது என் முதற்பணி இந்தப் போர்களை உங்களுடனிருந்து நடத்தி நாட்டை விடுதலை செய்வது. அடுத்த பணி ஆலயப்பணி. அதற்கும் நாளாகாது. இன்னும் ஆறு மாதங்களில் இந்த யுத்தங்களை முடித்துக் கொள்வோம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இரண்டு ஆலயங்களையும் முடித்துத் தருகிறேன்'' என்று கூறிய இளவரசன், பரமேசுவரவர்மனை உற்று நோக்கினான்.

''சாளுக்கியர்களுடன் போர்களை ஆறு மாதங்களில் முடித்து விடுவாயா?'' பரமேசுவரவர்மன் குரலில் வியப்பிருந்தது.

''முடித்துவிடுவேன்.''

''கங்கனுடன் போர் முடிந்த பிறகு நமது படை பலம் எப்படி?''

''புரவிப் படை காலாட்படை இரண்டுமாகச் சேர்ந்து பதினாயிரம் பேர் இருக்கலாம்.''

''இந்தப் பதினாயிரம் பேரை வைத்துக் கொண்டு நீ ஒரு லட்சம் பேர் கொண்ட சாளுக்கியர் படையை முறியடித்து விடுவாயா?'' இதைக் கேட்ட பரமேசுவரவர்மன் இகழ்ச்சி முறுவலொன்றைத் தனது இதழ்களில் படரவிட்டான்.

இளவரசன் அந்த இகழ்ச்சி முறுவலைக் கவனிக்கவே செய்தான். இருப்பினும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், ''தந்தையே

எண்ணிக்கைகளால் அடையப்படுவதல்ல வெற்றி. போர்த் தந்திரங்களால் அடையப்படுகிறது. உதாரணமாக, விளிந்தைப் போர்க்களத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு இப்பொழுது கங்கன் படை இல்லை...'' என்று கூறினான்.

பரமேசுவரவர்மன் எழுந்திருக்க முயன்று, ''என்ன! கங்கன் படைகள் இல்லையா?'' என்றான்.

''இல்லை. நேற்றிரவே கங்க மன்னன் தனது படைகளை அழைத்துக் கொண்டு போய் விட்டான்.''

''எங்கு?''

''வடக்கே நோக்கி.''

''எதற்கு?''

''நமது படைகள் கண்காணிக்காத இடத்தில் காவிரியைத் தாண்ட'' என்ற இளவரசன், ''நமது ஒற்றர்களும் வீரர்களும் காவிரி மணலைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் இரவு முழுவதும். இரவோடு இரவாகக் காவிரிக் கரை ஓரமே வடக்கே நகர்ந்து விடுகிறான் கங்கன். அவனை அணுக முயன்றாலும் முடியாது. இத்தனை நேரம் அவனது படைகள் வெகு தொலைவில் காவிரியைக் கடந்து கொண்டிருக்கும். பகலுக்குள் கங்க மன்னன் தனது நாட்டு எல்லையில் இருப்பான்'' என்று விளக்கினான்.

பரமேசுவரவர்மன் முகத்தில் மிதமிஞ்சிய பிரமிப்பு பிரதி பலித்தது. ''கங்கன் மிகவும் தந்திரக்காரன்.''

''இது கங்கன் தந்திரமல்ல.''

''வேறு யார் தந்திரம்?''

''ரங்கபதாகாதேவியின் தந்திரம் உங்களிடம்தான் சொன்னாளே தனக்கு ஒரு திட்டமிருப்பதாக.''

''ஆம். ஆம். சொன்னாள். அந்தப் பெண் பெரிய தந்திரசாலி'' என்று ஆமோதித்தான் பரமேசுவரவர்மன்.

''போரில் வெற்றி கொள்வது தந்திரமென்பதை இப்பொழுதா வது ஒப்புக் கொள்வீர்களா?''

பதிலுக்குப் பரமேசுவரவர்மன் தலையை அசைத்தான். ''இந்த விளிந்தையைக் கோட்டையாக அடித்துவிடுவதாக நீ ஒரு திட்டம் சொன்னாயே, அது என்னவாயிற்று?''

''சொன்னபடி செய்தேன். அதற்காக நமது படைத் தலைவருக்கு உத்தரவிட்டேன். விளிந்தையில் நமது படைகள் அணிவகுத்து நிற்கின்றன. இப்பொழுது விளிந்தையை யாரும் தாக்க முடியாது. ஆனால்...''

''அந்தப் பெண் உன்னை ஏமாற்றிவிட்டாள்'' என்று முடித்தான் பரமேசுவரவர்மன்.

''அது மட்டுமல்ல'' என்ற இளவரசன் நகைத்தான்.

''வேறென்ன ராஜசிம்மா?''

''போர்க்களத்தை அப்படியே விட்டுவிட்டுப் போய் விட்டாள். அங்குள்ள வீரர்கள், புரவிகள் சடலங்களைப் புதைக்கும் பொறுப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது'' என்று ராஜசிம்மன் சொன்னதைக் கேட்ட பரமேசுவரவர்மனும் நகைத்தான். ''அதனால் பாதகமில்லை ராஜசிம்மா! சுடலைப் பணி அரசு குலத்தவருக்கும் இருந்திருக்கிறது. அரிச்சந்திரனே சுடலை காத்தான்'' என்று கூறிய பரமேசுவரவர்மன், ''அப்பப்பா? அந்தப் பெண் லேசுப்பட்டவளல்ல'' என்று சிலாகிக்கவும் செய்தான். தங்களை ஏமாற்றிய அந்த ஏந்திழையைப் பற்றியே அவ்விருவரும் நினைத்து நினைத்து வியந்தனர். அதே சமயத்தில் அடுத்துச் செய்ய வேண்டியதைப் பற்றிய பெரும் போர் திட்ட மொன்றும் இளவரசன் மனத்தில் உருவெடுத்துக் கொண்டிருந்தது.

# 69. இந்திரவர்மன் இதயச் சிதறல்

பரமேசுவரவர்மனிடம் பேசிக் கொண்டிருந்தபோதே பல்லவர் படையின் நடவடிக்கைகளைப் பற்றியும், பேரரசைப் பாதுகாக்க வேண்டிய முறைகளைப் பற்றியும் தனித் திட்டமொன்று மனத்தில் உருவெடுக்கவே பல்லவ இளவல் அவற்றுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் உடனடியாக இறங்க முற்பட்டானாதலால், அன்று காலைக்குப் பிறகு அவன் அந்த அரண்மனைப் பக்கமே திரும்பவில்லை. தந்தையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை மைவிழியிடம் விட்டுவிட்டுச் சீனனை அழைத்துக் கொண்டு விளிந்தையிலுள்ள தனது படைப்பகுதிகளையும் விளிந்தையின் எல்லைகளையும் சீராகப் பார்வையிட்டான். கங்க மன்னிடம் போரிட்ட பிறகு தனது படைகள் பெரிதும் குறைந்துவிட்டதன்றிப் பெரும் போருக்கான ஆயுத வசதிகளும் அவற்றிடம் இல்லாததை அன்றையப் பகலுக்குள் புரிந்து கொண்டான் பல்லவ இளவல். தந்தை போரில் மிக வல்லவராயினும், போரின் எந்தக் கட்டத்திலும் புதுப்புது அணிவகுப்புகளை மின்னல் வேகத்தில் நிறுவுவதில் நிகரற்றவ ரானாலும், கங்கமன்னனுடன் போருக்கு வந்ததில் அவர் போட்ட

கணக்குப் பெரிதும் தவறி விட்டதென்றே நினைத்தான் இளவரசன் அப்படி அவர் தவறியதற்குக் காரணம் ஸ்ரீ ராமபுண்ய வல்லபரின் தந்திரமேயென்பதில் அவனுக்குச்சிறிதும் சந்தேக மில்லை. அடுத்தபடி பல்லவர்கள் போரில் இறங்குவதானால் அவர்கள் சாளுக்கிய விக்கிரமாதித்தனுடன் போரிடும் திறமையுடன் மட்டுமல்லாது ஸ்ரீ ராமபுண்யவல்லபரின் தந்திரத்துக்கும் ஈடு கொடுக்கும்படியா யிருக்குமென்பதைப் புரிந்து கொண்டானாதலால், அன்றைய பகலில் விளிந்தையைச் சுற்றிப் பார்த்தபோது ஏதும் பேசாமலே புரவியை நடத்திச் சென்றான். அவனுடன் சென்ற சீனனும் பல்லவ இளவரசன் சிந்தையிலிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டதன் விளைவாக அவனும் மௌனமாகவே தனது புரவியை நடத்தினான்.

சாதாரண காலத்தில் பல்லவர்களின் வடமேற்கு எல்லை நகரமான விளிந்தை மிக அழகான நகரம்தான். ஒரு பக்கத்தில் காவிரியும் இன்னொரு பக்கம் அதன் பாசன வாய்க்காலும் ஓடி இடையே சோலைகள் நிறைந்த வனப்பு வாய்ந்த நகரமாதலால், அங்கு ஆண்டில் ஒரு முறை அரசகுலத்தார் வந்து தங்கச்சிறிய அரண்மனையொன்றையும் பல்லவர்கள் கட்டிவைத்திருந்தார்கள். தவிர பல்லவ நாட்டுக்கும் கங்க நாட்டுக்கும் சாளுக்கிய நாட்டுக்கும் முகப்பிலிருந்த முக்கிய காரணத்தால் அது வணிகத்துக்கும் சிறந்த இடமாயிருந்ததால், அதில் வணிகப் பெரு மக்கள் பலரும் குடியேறிப் பெரிய மாளிகைகளைச் சிருஷ்டித்திருந்தார்க்ள. பெரிய அரசவீதியும் இருபக்கங்களிலும் வணிகர் வீதியும் வேளாளர் வீதியும் இருந்ததாலும், அந்தத் தொழில்களை அடுத்த ஊழியர் வீதிகளும் பிற்புறங்களில் இருந்தாலும், விளிந்தை பெரிய நகரமல்ல வென்றாலும் அதை மிகச் சிறிய நகரமென்றும் சொல்ல முடியாது.

இத்தகைய விளிந்தை நகரத்தை முற்பகல் முழுதும் பார்வையிட்ட பல்லவ இளவல், பல்லவர் படைத் தலைவனான பலபத்ரவர்மன் பல்லவர் தோல்வியுற்ற பிறகு ஒரே நாளில் தானிட்ட உத்தரவுகளை நிறைவேற்றி விட்டதையும் படைகளை ஓர் ஒழுங்குக்குக் கொண்டு வந்து விட்டதையும், ஓரளவு நகரம் பலமாகவே பாதுகாக்கப்பட்டிருப்பதையும் கவனித்தான். எல்லா வீதிகளின் முனைகளிலும் புரவி வீரர்கள் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள். நகரத்தின் ராஜ வீதியிலுள்ள சில இல்லங்கள் பல்லவர் படை உபதலைவர்களுக்கும் ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன. நகரத்தின் தென்கிழக்குப் பகுதியிலும் வடமேற்குப் பகுதியிலும் இருந்த சோலைகளில் படையின் பெரும்பகுதி தங்க வைக்கப்பட்டிருந்ததாலும், அந்தப் படைகளுக்கு



வேண்டிய உணவுகளைக் காலாகாலத்தில் கொடுக்க நகரமக்களுக்கு உத்தரவிருந்ததாலும், படைகள் சோலைளை விட்டு வெளிவராமல் அங்கேயே யார் கண்களுக்கும் புலப்படாமல் தங்கியிருந்தன. காவிரிக் கரையிலும் பாசன வாய்க்கால் கரையிலும், மற்றும் அந்த நகருக்கு வரும் சாலைமுகப்புகளிலும் ஒற்றர்கள் சதா நடமாடிக் கொண்டிருந்தார்கள். ஏற்பாடுகள் இத்தனை திட்டமாயிருந்தபோதிலும் விளிந்தை நகரம் சரியான படையால் தாக்கப்படுமானால் அதன் கதி அதோகதிதான் என்பதைப் புரிந்து கொண்ட பல்லவ இளவல் தீவிர சிந்தனையுடன் காவிரியின் கரையிலிருந்த சோலைக்குள் புரவியை நடத்திச் சென்றான்.

சோலையில் ஆங்காங்கு மரத்தடியில் மல்லாந்து படுத்தும் உட்கார்ந்து கொண்டுமிருந்த படை வீரர்கள் இளவரசன் புரவியைக் கண்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து இளவரசனுக்குத் தலை வணங்கினார்கள்.

புரவியிலமர்ந்து காவல் புரிந்து கொண்டிருந்த சில வீரர்கள் வாட்களைத் தாழ்த்தி மரியாதை செய்தார்கள். அவர்களனைவரையும் பார்த்துக் கொண்டு சோலையைத் தாண்டிக் காவிரிக் கரைக்கு வந்த இளவரசன் புரவியிருந்து இறங்கி நீண்ட நேரம் காவிரியின் வடமேற்குப் புறத்தைக் கவனித்துக் கொண்டே நின்றான். பிறகு திடீரெனத் திரும்பி அதுவரை தன்னை நிழல் போலத் தொடர்ந்து தான் புரவியிலிருந்து இறங்கியபோது இறங்கிய சீனனைப் பார்த்து, ''யாங்சின்! இந்த நகரத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினான்.

யாங்சின் சிறிது தனது உதடுகளைச் சப்புக் கொட்டினான் ஒரு முறை. அவனது வளைந்த மீசை ஒரு பக்கம் விகாரமாக வளைந்தது ஒரு விநாடி. அந்த விகாரங்களாலேயே தனது வெறுப்பை உணர்த்தினான் சீனன். ஆனால் வாயைத் திறந்து பதிலேதும் சொல்லவில்லை. ''நான் ஒரு கேள்வி கேட்டேன் உன்னை'' என்று மீண்டும் சொன்னான் இளவரசன்.

இம்முறை சீனனிடமிருந்து பதில் வந்தது. ''ஆம், கேட்டீர்கள்'' என்று சொன்னான்.

''உன் பதில்?''

''இந்த நகரம் சமாதான காலத்தில் பொழுது போக்க அரச குலத்தாருக்கு உதவும்.''

''போருக்குப் பயன்படாதென்கிறாய்?''

''ஆம்.''

''காரணம்?''

''தங்கள் தந்தையின் படை இங்கு வருவதற்கு முன்பே கங்க மன்னன் படை சமவெளிக்கு வந்துவிட்டதாகப் பேசிக் கொள் கிறார்கள்.''

''அது உண்மைதான்.''

''அப்படியானால் கங்க மன்னன் நகரத்துக்குள் வந்து தனது படைகளை அணிவகுத்து ஏன் நிறுத்தவில்லை? சமவெளியில் போரிடுவதைவிட நகரத்துக்குள்ளிருந்து போரிடுவது அதிகப் பாதுகாப்பல்லவா?''

யாருக்கும் தோன்றாத இந்தப் புதுக் கேள்வி சீனனுக்குத் தோன்றியதைப் பற்றி வியப்படைந்த பல்லவ இளவல் அவனை நோக்கி வியப்புப் படர்ந்த விழிகளை அவன்மீது திருப்பினான். ''ஆம். இந்த நகரம் பெரும் போரைத் தாங்கக்கூடியதல்ல. ஆனால் தற்காப்புக்குச் சரியான இடம்'' என்று கூறவும் செய்தான்.

''காவிரியும் பாசன வாய்க்காலும் இதன் இயற்கை அரண்கள். ஓரளவு பாதுகாப்பளிக்கும். ஆனால் இந்த நகருக்கு வரும் இருசாலைகளை எதிரிப் படைகள் அடைத்துவிட்டால் இந்த நகரத்தை ஒரு வாரத்துக்கு மேல் யாரும் பாதுகாப்புச் செய்ய முடியாது'' என்றான் சீனன்.

''உங்கள் நாட்டில் இந்த மாதிரி நகரத்தை என்ன செய்வீர்கள்?'' என்று வினவினான் இளவரசன்.

''எங்கள் நாட்டு விஷயம் வேறு.''

''எப்படி வேறு?''

''எங்கள் நாட்டில் மக்கள் எப்பொழுதும் போருக்குச் சித்தமாயிருக்கிறார்கள். அவசியமேற்பட்டால் எல்லோரும் வாட்களை எடுத்துக் கொள்வார்கள். தவிர, படை சேதத்தைப் பற்றியும் நாங்கள் கவலைப்பட மாட்டோம்.''

''வேறு எதைப்பற்றி கவலைப்படுவீர்கள்?''

''எதிரியை அழிப்பதைப் பற்றித்தான். சாரிசாரியாக மன்னனின் பாதுகாப்புக்கு மக்கள் கிளம்புவார்கள். எங்கள் எண்ணிக்கையைப் பார்த்தே கலங்கியவர்கள் உண்டு. எங்கள் புரவிப்படையின் பகுதிகள் எதிரி நகரங்களில் எங்கு நுழைந்தாலும் அந்த நகரங்கள் நிர்மூலம்தான். அவை திரும்பக் கிளைத்தெழ ஆண்டுகள் பல ஆகும். ஆகையால் சீன சக்கரவர்த்தியின் ஆணையைக் கண்டு அக்கம் பக்கம் நாடுகள் சதா அச்சத்திலிருக்கின்றன'' என்ற சீனன் சீனச்சக்கரவர்த்தியைப் பற்றிச் சொன்னபோது தலை தாழ்த்தி வணங்கினான் அவரிருந்த கீழ்த் திசையை நோக்கி.

---



ராஜசிம்ம பல்லவன் புரிந்து கொண்டான் சீனர்களின் பேரரசு உருவானதற்குக் காரணத்தை.

சீனச் சக்கரவர்த்தியின் அரண்மனையிலிருந்த பல அழகிகளைப் பற்றியும், நீராட்டப் புனல்கள் பற்றியும் பல மது வகைகள் பற்றியும் அவன் நிரம்பக் கேட்டிருந்தான். அங்கு போய் வந்த பல தமிழக வணிகர்கள் அதன் பெருமையைப் பற்றி பலவாறு வர்ணித்திருப்பதை எண்ணித் தானும் அங்கு ஒருமுறை போய் வரமுடியுமா என்று நினைத்துப் பார்த்தான். அத்துடன் தனக்கு முன்னுள்ள கடமைகள் தன்னை எங்கும் அசைய விடாதென்பதைப் புரிந்து கொண்டான். ஆகவே விசனப் பெருமூச்சொன்று விட்டுச் சீனனை அழைத்துக் கொண்டு மற்றுமுள்ள தனது போர்ப் பாசறைகளைப் பார்த்துவிட்டு அந்தி வேளையில் அரண்மனை திரும்பினான்.

அரண்மனைக்குத் திரும்பும்போதே அன்று காலை தன் மனத்தில் உருவான திட்டங்களுக்கு உருக்கொடுக்கும் யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

எப்படியும் அடுத்த பத்து நாட்கள் தான் விளிந்தையில் தங்காமல் எதுவும் நடக்காது என்று தீர்மானித்துக் கொண்டானாகையால் பல்லவர் அரண்மனையென்று அழைக்கப்பட்ட அந்த அரச மாளிகைக்கு வந்ததும் நேராகத் தந்தையின் அறைக்குச் செல்லாமல் தனியறை ஒன்றுக்குச் சென்றான்.

அங்கிருந்த காவலனை அழைத்துப் பலபத்ரவர்மனையும் இந்திரவர்மனையும் அழைத்து வர உத்தரவிட்டான். அவ்விருவரும் வந்ததும் அவர்களை ஆசனங்களில் அமரச் சொல்லி, ''தந்தைக்கு யாங்சின் சிகிச்சையால் துரிதமான குணம் ஏற்பட்டிருந்தாலும் இன்னும் சில நாட்கள் அவருக்கு நாம் போர்க்கவலைகளை அளிக்கக் கூடாது'' என்று அவ்விருவரையும் நோக்கிக் கூறினான்.

ஆமோதிப்பதற்கு அறிகுறியாக இருவரும் தலை அசைத்தாலும் பலபத்ரவர்மன் மட்டும் அரசகுமாரன் எண்ணத்தை உணர்ந்து கொண்டு, ''உங்கள் ஆணைகளை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறோம்'' என்றான்.

இளவரசன் சிரம் அசைத்தான் அவன் புரிந்து கொண்டதைத் தானும் புரிந்து கொண்டு விட்டதாக உணர்த்த. ''தந்தையிருக்க நான் ஆணைகளைப் பிறப்பிப்பது சரியில்லை. இருப்பினும் இப்பொழுதுள்ள நிலைமையில் வேறெதுவும் செய்வதற்கில்லை'' என்று கூறினான் இளவரசன்.

''அதாவது?'' என்று குறுக்கிட்டான் இந்திரவர்மன்.

''இன்றுமுதல் சாளுக்கியர்களிடம் போரிடும் பொறுப்பை, திட்டங்களை வகுக்கும் அலுவல்களை, நானே ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கூறிய இளவரசன் தான் உட்கார்ந்த மஞ்சத்தை விட்டு எழுந்திருந்தான்.

மற்ற இருவரும் எழுந்தார்கள். சீனன் உட்காராமல் ஆரம்பத்தி லிருந்து ஒரு மூலையில் கையைக் கட்டிக் கொண்டு நின்றிருந்ததால் எழுந்திருக்கும் அவசியம் அவனுக்கு இல்லாது போயிற்று.

இளவரசன் அந்த அறையில் குறுக்கும் நெடுக்கும் நடமாடிக் கொண்டு உத்தரவுகளைப் பிறப்பித்தான். ''பலபத்ரவர்மரே, முதலில் விளிந்தைச் சமவெளியிலுள்ள சடலங்களைப் புதைக்க ஏற்பாடு செய்யுங்கள். இன்றிரவே அந்த வேலை துவங்கட்டும். நாளை முதல் மீதியுள்ள நமது படைகளைக் கணக்கிட்டு இன்னும் எத்தனை வீரர்களைத் திரட்டினால், நமது படைபலமுள்ளதாகும் என்பதற்கு விவரங்களைத் தயாரித்துக் கொடுங்கள். இந்த அலுவல்களுக்கு வேண்டிய செல்வ வசதி நம்மிடமிருக்கிறதா என்பதைப் பற்றியும் கவனியுங்கள். போதாவிட்டால் எத்தனை பொன் நாணயங்கள் வேண்டும் என்பதையும் நிர்ணயித்துச் சொல்லுங்கள். இந்திரவர்மரே, நமது ஒற்றர்கள் காஞ்சியிலும் வாதாபியிலும் நடமாடட்டும். அங்குள்ள நிலவரங்கள் நமக்கு மிகமிகத் தேவை. இன்னும் ஒரு வார காலத்திற்குள் எத்தனை செய்திகளைச் சேகரிக்க முடியுமோ அத்தனையும் சேகரியுங்கள். காஞ்சியைவிட முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது சாளுக்கியர் தலைநகரான வாதாபிதான்.''

இளவரசன் உத்தரவுகளை ஏற்றுக் கொண்ட இருவருமே தலை தாழ்த்தினாலும் இந்திரவர்மன் மட்டும் ஒரு கேள்வி கேட்டான். ''சாளுக்கியர் பெரும்படை காஞ்சியிலிருக்க அவர்கள் தலைநகரத்தை நாம் கண்காணிப்பானேன்?'' என்று.

''காரணமிருக்கிறது. பிறகு சொல்கிறேன்.'' இளவரசன் உத்தரவு திட்டமாக இருந்தது.

சிறிது சிந்தனைக்குப்பிறகு மீண்டும் சொன்னான் இளவரசன். ''வாதாபிக்கு நீங்களே நேரில் செல்வதுகூட நல்லது'' என்று.

இந்திரவர்மன் சற்றுச் சந்தேகக் கண்களால் இளவரசனை நோக்கினான். பிறகு தலை தாழ்த்தி, ''சரி! இன்றிரவு நானே புறப்படுகிறேன்'' என்றான்.

அன்றிரவு புறப்படச் சித்தமான இந்திரவர்மன் இரவு நன்றாக ஏறிய பிறகே புறப்பட்டான்.



புறப்படு முன்பு தனது மகளிடம் சொல்லிக் கொள்ள அவள் அறைக்குச் சென்றான். அவள் அங்கில்லாததால் அங்கிருந்த பணி மகளை விசாரித்தான். ''இப்பொழுதுதான் கீழிறங்கிச் சோலைப்பக்கம் சென்றார்கள்'' என்று பணிமகள் கூறவே, உப்பரிகையிலிருந்து கீழிறங்கிச் சோலைப் பக்கம் சென்றான்.

அங்கு மைவிழி தென்படாதிருக்கவே திரும்ப முயன்றான். ஆனால் அதே சோலைப் பக்கம் இளவரசன் வருவதைக் கவனித்ததும், இந்திரவர்மன் இதய உணர்ச்சிகள் சுழன்று பலவாறாகச் சிதறத் தொடங்கவே, திடீரென்று பக்கத்திலிருந்த ஒரு மரத்தடியில் மறைந்தான்.

அவனிருப்பதை அறியாத பல்லவ இளவல் சோலையினுள்ளே மெல்ல நடந்தான். இளவரசன் யாரைத் தேடிப் போகிறான் என்பதை உணர்ந்த இந்திரவர்மன் இதயம் சிதற, பூனை போல அவனைத் தொடர்ந்தான்.

## 70. சோலை ராணி

கிருஷ்ணபட்சம் முடிய இரண்டு நாட்களேயிருந்தபடியால் மாளிகைச் சோலையில் காவல்வீரர்கள் இருந்த இடங்களிலிருந்த பந்தங்கள் வீசிய வெளிச்சத்தையும் மாளிகையின் தரைத் தளத்திலிருந்தும், உப்பரிகையிலிருந்தும் சாளரங்கள் மூலம் தெரிந்த விளக்குகள் விசிறிய வெளிச்சத்தையும் தவிர வேறு வெளிச்ச மேதுமில்லாததால் சோலையின் பெரும் பகுதி கும்மிருட்டாகவே இருந்தது. மாளிகைப் பின்புறத்திலிருந்த சோலையில் சாதாரண காலங்களில் வீரர்கள் யாரும் அனுமதிக்கப் படுவதில்லையென்றாலும் போர் நிலை காரணமாக வீரர்களின் பாதுகாப்பு அங்குமிருந்தபடியால் சோலை முகப்புகளில் மும்மூன்று ஈட்டிகளின் மத்தியில் ஆங்காங்கு பந்தங்கள் எரிந்தன.

அதே காரணத்தை முன்னிட்டு மாளிகை அறைகளிலும் அதிக விளக்குகள் காணப்படாவிட்டாலும் ஒவ்வோரிடங்களிலிருந்த பெரிய விளக்குகள் வெளிச்சத்தைச் சோலைப்புறம் வீசிக்கொண்டி ருந்தன. அந்த விளக்குகளின் வெளிச்சத்தையும் பந்தங்களின் வெளிச்சத்தையும் தாண்டிச் சென்ற இந்திரவர்மன் சோலையின் இருண்ட பகுதிக்கு வந்ததும் அந்த இருட்டில் மகளை எங்கு தேடுவ தென்பதை அறியாமல் கோடியிலிருந்து மினுக்கு மினுக்கென்று வந்துகொண்டிருந்த ஒரு வெளிச்சம் கண்ணில் படவே அதை நோக்கிச் செல்ல இரண்டடி வைத்தான். அந்தப் பக்கம் யாரோ வருவதை அறிந்ததும் சிறிது விலகி

வருவது யாரென்று பார்க்க முகப்புப் பந்தங்களிலிருந்த இடத்தை நோக்கியதும் திக்பிரமையும் சீற்றமும் அடைந்தான். பந்தங்களின் வெளிச்சத்தில் நின்ற இளவரசன் அங்கிருந்த காவலரிடம் ஏதோ விசாரித்ததையும் பிறகு தானிருந்த பக்கம் நோக்கி வருவதையும் கண்டதும் ஒரு மரத்தின் பின்புறம் ஒதுங்கி மறைந்து நின்றான் இந்திரவர்மன்.

இளவரசன் அவனிருந்த பகுதியை நோக்கி மெல்ல நடந்து வந்து அந்த மரத்தையும் தாண்டிச்சென்றதும் இந்திரவர்மனும் அவனைப் பூனை போல் பின்பற்றிச் சென்றான். இளவரசன் நேராகச் சோலையை ஊடுருவிச் செல்லாமல் திடீர்திடீரென நின்று ஆகாயத்தைப் பார்த்தான். பிறகு எதையோ யோசித்தான்; மீண்டும் பத்தடி நடந்து சென்றான். இப்படி இரண்டு மூன்று முறை நின்ற பிறகு சட்டென்று திரும்பி, இந்திர வர்மரே! தைரியமாக முன்னால் வாருங்கள்'' என்று அழைக்கவே சிறிது அச்சமடைந்த இந்திரவர்மன் இளவரசனை அணுகி வந்தான். ''எதிரியை வேவு பார்க்க உங்களை வாதாபி செல்ல உத்தரவிட்டேன்'' என்று கூறினான் இளவரசன் கோபம் லேசாகத் துளிர்த்த குரலில்.

''உத்தரவிட்டீர்கள்'' என்ற இந்திரவர்மன் பதிலிலும் சினம் ஒலித்தது.

''ஆனால் எதிரியை வேவு பார்ப்பதைவிட உங்கள் இளவரசனை வேவு பார்ப்பது சற்று சுலபமாக இருக்கிறது'' என்று குறிப்பிட்டான் இளவரசன், இந்திரவர்மன் சினத்தைச் சற்றும் லட்சியம் செய்யாமல்.

இதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை இந்திரவர்மன். ''என் மகள் இங்கு வந்திருக்கிறாள்'' என்றான் சினம் தணியாத குரலில்.

''ஆகவே உமது கடமை இரண்டு மடங்காகிறது'' என்ற இளவரசன் குரலில் இகழ்ச்சியிருந்தது.

''எப்படி இரு மடங்காகிறது?''

''மகளையும் வேவு பார்க்கிறீர்கள்.''

''மகளைத் திருத்துவது தந்தையின் கடமை.''

''அந்தக் கடமையை மாமல்லபுரத்துச் சவுக்குத் தோப்பில் ஏன் நிறைவேற்றவில்லை? எந்தத் துணிவில் அவளைத் தனிமையில் விட்டுச் சென்றீர்கள்?''

இளவரசனின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் திணறினான் இந்திரவர்மன். தந்தைப் பாசம் அப்பொழுதும் அவனை விடாததால், ''அங்கிருந்த நிலைமை வேறு'' என்று சமாதானம் சொன்னான்.



இளவரசனின் கண்கள் அந்த இருட்டிலும் பளபளத்தன. ''ஆம் வேறுதான். அங்கு நானும் மைவிழியுந்தான் தனித்திருந்தோம். அது மட்டுமல்ல, நீங்கள் காஞ்சியில் சிறையிலிருந்த போது நானும் உங்கள் மகளும் தண்டி மகாகவியின் மாளிகையில் இருந்தோம். பிறகு காஞ்சியின் கடிகையிலும் நானிருந்த அறைக்கு அவள் வந்தாள்'' என்றும் மெள்ள மெள்ள வார்த்தைகளை ஆணித்தரமாக உதிர்த்தான் பல்லவ இளவல்.

இந்திரவர்மன் இதயத்தில் வேல்கள்போல் பாய்ந்த இளவரசனின் சொற்கள் அவனுக்கு இணையிலா வேதனையை அளித்தன. ''இளவரசே! வேண்டாம். மேற்கொண்டு ஏதும் சொல்லாதீர்கள். அவள் தாயில்லாப் பெண். என்னைத் தவிர அவளுக்கு வேறு யாருமில்லை'' என்று கெஞ்சினான் வேதனை நிறைந்த குரலில்.

இளவரசன் மனம் இந்திரவர்மன் வேதனைக் குரலால் சிறிது இளகவே அவன் இந்திரவர்மனை நெருங்கி வந்து அவன் தோள் மீது ஒரு கையை வைத்தான். ''இந்திரவர்மரே! உமக்கு ஒன்று உமது மகளின் மீதாவது நம்பிக்கை இருக்க வேண்டும். அல்லது உங்கள் இளவரசன் மீதாவது நம்பிக்கை இருக்க வேண்டும். இரண்டுமில்லா விட்டாலும் தமிழகப் பெண்களின் பண்பாட்டிலும் கற்பின் உறுதியிலுமாவது நம்பிக்கை இருக்க வேண்டும். எதிலும் உமக்கு நம்பிக்கையில்லை யென்றால் உமது மகளை நீர் செல்லுமிடங்களுக் கெல்லாம் அழைத்துச் சென்று ஆங்காங்கு அறைகளில் பூட்டி வைக்க வேண்டும். சந்தேகம் மனிதனைப் பித்தனாக்கிறது. அதன் வலையில் வீணாக விழ வேண்டாம்'' என்று கூறினான்.

இளவரசன் கை தோளில் பட்டதுமே இந்திரவர்மன் உடல் ஒருமுறை நடுங்கியது. தனது மகளைக் கெடுப்பதற்குப் பல வாய்ப்புகள் இளவரசனுக்கு இருந்திருப்பதைப் புரிந்து கொண்ட இந்திரவர்மன் கலங்கினான். மாமல்லபுரத்துச் சவுக்குத் தோப்பு மணல் மேட்டில் மைவிழியைச் சுடுசொற்களால் தாக்கித் தள்ளி விட்டு வந்த தனது கடின இதயத்தை அந்தச் சமயத்தில் பெரிதும் வெறுத்துக் கொண்டான் இந்திரவர்மன். இத்தனைக்கும் இளவரசன் தன்மீது சீற்றம்கொள்ளாதது அவனுக்கு மிக வியப்பாகவும் இருந்தபடியால் கேட்டான், ''நான் எதற்கும் மைவிழியை ஒரு முறை பார்த்துவிட்டுச் செல்லவேண்டும்'' என்று.

''சரி வாருங்கள்! இந்த அடர்ந்த சோலையில் அவளை ஒருவர் தேடுவதைவிட இருவர் தேடுவது நல்லது'' என்று கூறிய இளவரசன் இந்திரவர்மன் பின்தொடர விளக்கு வெளிச்சம் வந்த சோலையின் பின் கோடியை நாடிச் சென்றான். அங்கிருந்த ஒரு குடிசையில் சிறு விளக்கு

எரிந்து கொண்டிருந்தது. வாயிலில் ஒரு கிழவன் அமர்ந்திருந்தான். அவனை நோக்கிய இளவரசன் ''இங்கு அரண்மனையிலிருந்து பெண்ணொருத்தி வந்தாளா?'' என்று வினவினான்.

கிழவன் இளவரசனைக் கண்டதும் எழுந்து நின்றான். ''இல்லை, வரவில்லை'' என்றான் தலை தாழ்த்தி.

''இந்தச் சோலைக்கு வந்ததாகத்தான் பணிமகள் சொன்னாள்'' என்றான் இந்திரவர்மன்.

கிழவன் இந்திரவர்மனைக் கூர்ந்து நோக்கினான். ''இந்தச் சோலையில் எந்தப்புறம் அந்தப் பெண் சென்றாளோ தெரியாது. சோலை பெரிது. இந்த இருட்டில் தேடுவது கஷ்டம். அவசியமாகத் தேடவேண்டுமென்றால் எரிகள்ளி கொளுத்தித் தருகிறேன்'' என்றான்.

இந்திரவர்மன் இளவரசனை நோக்கினான். என்ன செய்யவா மென்ற கேள்வி அவன் பார்வையில் தெரிந்தது. ''இந்திரவர்மரே! நீர் வேண்டுமானால் எரி கள்ளியை எடுத்துக் கொண்டு சோலைக்குள் தேடும். இன்று முழுவதும் நகரத்தைப் பார்வையிட்டதால் எனக்கு அலுப்பு அதிகமாயிருக்கிறது. சற்று நேரம் இந்தப் பகுதியில் உலாவிவிட்டு மாளிகை சென்று படுக்கப் போகிறேன்'' என்று கூறியதன்றிக் கிழவனை நோக்கி, ''இவரிடம் ஒரு எரிகள்ளியைக்* கொடுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அந்த உத்தரவை நிறைவேற்ற உள்ளே செல்ல முயன்ற கிழவனை, ''சற்றுப் பொறு!'' என்ற இந்திரவர்மன் குரல் தேக்கியது.

கிழவன் சட்டென்று நின்று இந்திரவர்மனை நோக்கி இளவரசனையும் நோக்கினான். ''இதில் பொறுக்க என்ன இருக்கிறது இந்திரவர்மரே? கள்ளியை எடுத்துக் கொண்டு மகளைத் தேடி மாளிகையில் விட்டுப்போம். இல்லையேல் பல்லவ நாட்டின் பிற்கால ராணிமீது நம்பிக்கை வைத்து உமது கடமையைச் செய்ய வாதாபிக்குப் புறப்படும்'' என்றான் இளவரசன்.

இளவரசனின் சொற்களைக் கேட்ட இந்திரவர்மன் திகைத்து நின்றான். ''என்ன! என்ன சொன்னீர்கள்?'' என்று வினவினான் திகைப்புடன்.

''நம்பிக்கை வைக்கச் சொன்னேன்.'' இளவரசன் குரல் சர்வ சாதாரணமாயிருந்தது.

* துணி சுற்றாமலும் எண்ணெய் ஊற்றாமலும் நீண்ட நேரம் அணையாமல் எரியக் கூடிய காட்டுச் கள்ளி. காட்டுவாசிகள் பலர் இப்பொழுதும் இதை உபயோகப்படுத்துகிறார்கள்.



''ஏதோ பல்லவ ராணி என்று...''

''ஆம் சொன்னேன்.''

''மைவிழி...?''

''அவளைப் பற்றித்தான் சொன்னேன். பல்லவ இளவரசனைக் கயவனென்று நினைத்தீரா காரிகையரைக் கற்பழித்து நட்டாற்றில் விட?''

''இல்லை... அவள்...''

''அவளுக்கென்ன?''

''ஓர் ஒற்றன் மகள். உங்களைவிடப் பதவியில் தாழ்ந்தவள்.'' என்று மேலே ஏதோ சொல்லப்போன இந்திரவர்மன் பேச்சைக் குறுக்கிட்டு மறித்த பல்லவ இளவல், ''பதவியைப் பார்ப்பதல்ல பல்லவர் முறை. பல்லவ மன்னர்கள் குணத்தைப் பார்க்கிறார்கள். உம்மைப் போன்ற சந்தேகப் பிராணிகளுக்குப் பிறந்திருந்தாலும் நாடாளும் அரியணையில் அமரும் சிறப்பைப் பெற்றவள் மைவிழி. அவள் உறுதியைக் குலைக்க யாராலும் முடியாது அவள் இஷ்ட விரோதமாக யாரும் அவளை நெருங்கவும் முடியாது. போய் வாருங்கள் வாதாபிக்கு. இல்லையேல் விளிந்தையிலேயே தங்கி வேறு ஒற்றர்களை அனுப்புங்கள்'' என்று கூறிப் பிறகு சட்டென்று வேறு பக்கம் திரும்பி நடக்கத் துவங்கினான்.

இந்திரவர்மன் கதிகலங்கிப் போய் நின்ற இடத்திலேயே பல விநாடிகள் இளவரசன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். சோலையில் வேறு ஒரு புறத்தில் இளவரசன் கண்ணுக்கு மறைந்ததும் இந்திரவர்மன் பெருமூச்சொன்றை விட்டு மாளிகை நோக்கித் திரும்பினான். மீண்டும் சோலையினூடே சென்ற இந்திரவர்மன் பல உணர்ச்சிகளால் தாக்கப்பட்டான். இளவரசனின் உறுதியான உள்ளத்தை அவன் அறிந்தேயிருந்தான். தனது மகள் பல்லவ நாட்டின் பிற்கால ராணியென்று இளவரசன் கூறியது அவன் மனத்தில் பெரும் திருப்தியை அளித்திருந்தாலும் சந்தேகம் நிரப்பிய அவன் புத்தி அது 'எப்படி சாத்தியம்? என்ற கேள்வியைத் திரும்பக் கேட்டது. பெண்ணைப் பற்றிப் பலபடி நினைத்ததால் இந்திரவர்மன் கண்களி லிருந்து இரண்டொரு துளிகள் கன்னங்களில் வழிந்தோடின. மகளை நிராதரவாகத்தான் மாமல்லபுரத்துச் சவுக்குத் தோப்பில் தள்ளிவிட்டு வந்ததை இளவரசன் குத்திக் காட்டியதை எண்ணி மனமுருகினான். 'அப்பொழுது கோபம் கண்ணை மறைத்தது. இப்பொழுது சந்தேகம் கண்ணை மறைக்கிறது. நான் பெரும் குருடன், மதியற்றவன்' என்று தன்னைத் தானே கடிந்துக் கொண்டு மாளிகையை அடைந்த இந்திரவர்மன் வாதாபிக்குச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானான்.

இளவரசனோ, சோலைக்குள் நுழைந்து அதிலிருந்து வந்த நறுமணத்தை முகர்ந்து நின்றான். பிறகு எதையோ புரிந்து கொண்டவன்போல் வானத் தாரகைகளின் ஒளியல்லாது வேறு ஒளியில்லாத சோலையின் சிறிது கலைந்த பகுதியை நோக்கி நடந்தான். மரங்கள் அடர்த்தியில்லாத ஓர் இடத்துக்கு வந்ததும் மீண்டும் நின்றான். அவன் காலில் நீண்ட மரமல்லி மலர்கள் மிதிபட்டதை உணர்ந்தான். அதிலிருந்து எதையோ புரிந்து கொண்டவன் போல் மீண்டும் சோலை வழியே சென்றான். எதிரேயிருந்தது ஒரு பெரிய மரமல்லி மரம், அது அடித்த நிழலில் மற்ற செடிகள் வளர வாய்ப்பில்லாததால் அதைச் சுற்றிலும் இடைவெளியாயிருந்தது. அந்த மரமல்லி மரத்தில் சாய்ந்த வண்ணம் இருந்தாள் மைவிழிச் செல்வி. வானிலிருந்து மரக்கிளைகளையும் ஊடுருவிய விண்தாரகைகளின் சின்னஞ்சிறு ஒளி அவள் மீது கவர்ச்சியான வெளிச்சமெதையும் வீசாவிட்டாலும் பல்லவ இளவல் எட்ட நின்றே அவளைக் கவனித்தான். இருட்டிய அந்தச் சோலை நடுவே அவள் விளக்கெனத் தோன்றினாள். கிட்டத்தட்ட மாமல்லபுரத்தில் முதல் நாள் வேள்வித் தூணின் அருகில் நின்ற நிலைதான் அது.

அன்று அங்கு சித்ரா பௌர்ணமியின் பூரண நிலவு. இன்று இங்கு அமாவாசை நெருங்கும் இருட்டின் வீச்சு. அங்கு அவள் மீது மலர் தூவ மரமல்லி மரம் இல்லை; இங்கு இருந்தது.

தலையில் இரண்டொரு நீண்ட மரமல்லி மலர்கள் வெளுத்த சிறு ஊது குழல்கள் போல் காட்சியளிக்க, சிற்றிடை இல்லாதது போல் மறைந்துவிட, மரத்தில் சாய்ந்தால் மார்பகத்தின் குமுதங்கள் இரண்டும் திமிறி நோக்க நின்ற மைவிழி இளவரசன் சித்தத்தையும் உறுதியையும் அறவே குலைக்கவே அவளை நோக்கி நடக்கலானான் ராஜசிம்ம பல்லவன்.

## 71. அகமும், புறமும்

**ம**ரமல்லி மரத்தில் சாய்ந்து மதியை மயக்கும் அழகுடன் நின்ற மைவிழிச் செல்வியை நோக்கி மெள்ள மெள்ள நடந்த பல்லவ இளவல் அவளை நெருங்கியதும், அவளைத் தொடாமலே நின்று உற்று நோக்கினான். அவள் மரத்தில் சாய்ந்து நின்ற நிலை, அவளை அந்த மரத்தில் கைதேர்ந்த சிற்பியொருவனால் கடையப்பட்ட அற்புதச் சிலையாகச் செய்திருந்தது. ஒரு பக்கம் ஒதுங்கிய இடையும், சற்றே சாய்ந்த நிலையும், அப்படிச் சாய்ந்ததால் குழலிலிருந்து வளைந்து



தொங்கி, எழுந்த மார்பின் ஆரம்பத்தைத் தொட்ட முத்துச்சரமும், கழுத்தில் அவள் அணிந்திருந்த நவரத்தின மாலை நிலை புரண்டு தனக்குப் போட்டியாக வந்த முத்தாரத்தை முட்டித் தள்ள முயன்ற விந்தையும், அந்த இரண்டு நகைகளின் உறுத்தலைக் கூடச் சகியாதது போல் அசைந்த மலர் மொட்டொன்றும், இடை சற்று ஒடிந்ததால் அதன் கீழே பருத்த பாகங்களிலொன்று ஒரு புறமாக எழுந்து விட்ட எழிலும், கால்கள் சற்று ஏற்றத் தாழ்வுடன் மரமல்லி மரத்தண்டின் பருத்த வேரொன்றில் நின்ற நிலையும், இளவரசன் மனத்தே அவள் தெய்வீகச் சிலையா மானிடரைக் கௌவும் மாதவன் மாயையா என்ற சந்தேகத்தைப் பெரிதும் கிளப்பின. கிருஷ்ண பட்சத்தின் இருட்டுக் கூட அவள் அழகைத் தன் கண்ணிலிருந்து மறைக்க முடியாததையும், வானம் அளித்த சிறு வெளிச்சம் கூட அவள் வதனத்தின் சிறப்பைக் குறைக்க முடியாமலிருந்ததையும், இன்னொரு மதியைப் பூமியில் கண்டு விட்டன போல் தாரகைகள் கண்களைச் சிமிட்டி வெட்கப்பட்டதையும் கண்டு, காளிதாஸ மகாகவி ரகுவம்ச மகா காவியத்தில் இந்துமதியை விளக்கமாக வர்ணித்தது எத்தனை உண்மையாக இருக்க வேண்டும் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான் பல்லவ இளவல். 'அந்தக் காவிய விளக்கு சுயம்வர மண்டபத்திலிருந்த மன்னர்களின் முன்பு சென்ற போது அவர்கள் முகங்கள் பளிச்சிட்டன. அகன்றதும், இருட்டிக் கறுத்தன. இந்த விளக்கு என்னை என்ன செய்கிறது பார்ப்போம்' என்று எண்ணிக் கொண்டே அவளை அணுகி அவள் இடையில் தனது இடது கையை வைத்தான். ''மைவிழி!'' என்று மெள்ள அழைக்கவும் செய்தான்.

அவள் பதிலேதும் சொல்லாவிட்டாலும், தன் கை பட்டதும் அவள் உடல் சிறிது சிலிர்த்தது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. காதலன் கைப்பட்டதும் காரிகைகளுக்கு மயிர்க்கூச்சலேற்படும் என்பதை ஆதி மகாகவியான வால்மீகி சந்தியாகால வர்ணனையில் உணர்த்தியிருப்பது எத்தனை உண்மை என்பதைப் புரிந்து கொண்டான் பல்லவ இளவல். 'அந்த மயிர்க்கூச்சுக்கு அவர் வானின் தாரகைகளை உவமையாகக் குறிப்பிட்டது எத்தனை பொருத்தம்! நட்சத்திரங்கள் ஒரே சமயத்தில் தோன்றுகின்றன. ஒரே சமயத்தில் மறைகின்றன. காதல் வேகத்தின் ஆரம்பித்திலேற்படும் மயிர்க்கூச்சும் அப்படித்தானே!' என்று காவிய ஆராய்ச்சியில் அவன் அந்தச் சமயத்தில் இறங்கினான், உண்மையில் அந்த ஆராய்ச்சி மைவிழிச் செல்வியைப் பற்றியதாகவே இருந்தது. அப்படி சிலிர்த்து நின்ற சித்திரப் பாவையை அவன் மீண்டும் ஒரு முறை அழைத்தான், ''மைவிழி?'' என்று.

அந்த இரண்டாவது அழைப்புக்கு அவளிடமிருந்து ஓர் ''ஊம்...'' மட்டும் பதிலாக இருந்தது. அந்த 'ஊம்' கூட வேய்ங் குழலின் ஏதோ மெல்லிய நாதம் போல் அவன் காதில் ஒலிக்கவே, அதிலும் மயங்கிய பல்லவ இளவல் உரையாடலை வளர்க்க இஷ்டப்படாவிட்டாலும், ''இந்த இருட்டில் இங்கு எதற்கு வந்தாய் மைவிழி?'' என்று கேட்டு இடையிலிருந்த இடது கையை எடுத்து அவள் தலைக்கு மேலிருந்த மரத்தண்டில் வைத்துக் கொண்டு வலது கையை இடையின் வலப்புறத்தில் வைத்தான்.

மைவிழியின் உணர்ச்சிகள் மெள்ளக் கட்டை மீறிக் கொண்டிருந்தன. இளவரசன் நிலையும் கொந்தளிக்கும் கட்டத்துக்கு வந்து கொண்டிருந்தது. இளவரசன், அந்த நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவள் தலையில் விழுந்திருந்த இரண்டு மரமல்லி மலர்களைத் தனது வலது கையை உயர்த்தி எடுத்து முகர்ந்தான். ''மைவிழி உன் குழலுக்கு மலர் சூட்ட இந்த மரமல்லி மரம்கூட ஆசைப்படுகிறது'' என்றும் மெல்லக் கூறித் தனது முகத்தை அவள் முகம் நோக்கித் தாழ்த்தினான். ''நான் கேட்டதற்குப் பதிலே சொல்ல வில்லையே மைவிழி!'' என்று மீண்டும் கேட்டான் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக. அவள் இரவின் ஆரம்பத்தில் நீராடியிருந்தபடி யால் அவளது அழகிய உடலிலிருந்து அப்பொழுதும் எழுந்த தசாங்கப் பொடியின் நறுமணம் அவன் நாசிக்குச் சுகந்தத்தை அளித்ததால் கேள்வி கேட்பதுடன் அவன் நிற்காமல் பெருமூச் சொன்றும் விட்டான்.

இளவரசன் நிலை மைவிழிக்கு நன்றாகப் புரிந்தே இருந்தது. அவன் கேட்ட கேள்வி, உணர்ச்சிகளை மறைக்க ஒரு புரட்டு என்பதை அவள் நன்றாக உணர்ந்தாள். தங்கள் இருவர் உள்ளங்களும் பேசத் துடிக்கும் பேச்சு, கேட்க எண்ணும் கேள்விகள் வேறு என்பதை அவள் சந்தேகமற அறிந்திருந்தாளாதலால், 'இந்தப் புரட்டு எதற்கு?' என்று தன்னைத்தானே வினவிக் கொண்டாள்.' ஆனால் இத்தகைய பொய்க் கேள்விகளும், பதில்களும் அவற்றுக்கிடையே அவரவர்கள் செயலுக்குத் துடிக்கும் அவயவங்களின் உண்மையும் கலந்ததுதான் காதல் போலிருக்கிறது!' என்றும் நினைத்ததால் மெல்லப் புன்முறுவல் கோட்டினாள் மைவிழி. அத்துடன் சொன்னாள், ''சுதந்திரமாகச் சிறிது நேரம் தனிமையில் கழிக்கலாமென்று வந்தேன்'' என்று.

இளவரசன் இதழ்கள் அவள் நுதலைத் தொட்டன. பிறகு மீண்டும் சொற்களை உதிர்த்தன. ''நான் கெடுத்து விட்டேன் போலிருக்கிறது?''

மெல்ல நகைத்தாள் மைவிழி. அந்த நகைப்பொலி ஜலதரங்கத்தின் மந்திர ஸ்தாயி ஸ்வரங்களைப் போல் சோலையின் நிசப்தத்தை லேசாக ஊடுருவியது.



''எதற்கு நகைக்கிறாய் மைவிழி?'' என்ற கேள்வி அவள் இடது செவியில் ஒலித்தது ரகசியமாக. அந்தக் கேள்வியுடன் அவன் கைகளிரண்டும் ஏககாலத்தில் இறங்கி அவள் இடையின் இரு பகுதிகளையும் இறுகப் பிடித்தன.

''கெடுத்து விட்டதாகச் சொன்னீர்களே, அதற்கு'' என்றாள் அவள் மெதுவாக.

''யாரைக் கெடுத்துவிட்டேன்? உன்னையா?''

''சேச்சே! இதென்ன பேச்சு?''

''வேறென்ன?''

''என் தனிமையைக் கெடுத்து விட்டதாகச் சொன்னீர்களே அதை.''

''அதையா?'' என்று கேட்ட இளவரசன் கைகளிலொன்று இடைக்குக் கீழே சற்று நகர்ந்தது?

''உம்.'' மைவிழி அதட்டிப் பிடித்து அகற்றினாள்.

''அதட்டுகிறாயே!''

''ஆம். அதட்டுவேன்.''

''ஏன்?''

''பின் என்ன? இடங்கொடுத்தால் மடம் பிடுங்குகிறீர்கள்.''

இளவரசன் இம்முறை மெல்லப் புன்முறுவல் கோட்டினான். ''மைவிழி?'' என்று மீண்டும் ஒருமுறை இன்பமாக அழைத்தான்.

''ஏன்?'' என்று கேட்டாள் அவள் சிறிது மரத்தடியிலிருந்து நகர முயன்று. அப்படி முயன்றதால் அவன் கைவளையத்தில் சிக்கிக் கொண்டாள்.

''நான் என்ன அத்தனை துஷ்டனா?'' என்று வினவினான் பல்லவ இளவல் மிக மெதுவாக.

''பரம துஷ்டர்!''

''அப்படி என்ன செய்துவிட்டேன்?''

''இதோ, நான் அப்படியும் இப்படியும் போகவிடாமல் கைகளை வளைத்துவிட்டீர்களே?'' இதைச்சொன்ன அவள் குரலில் பொய்க் கோபமிருந்தது. பாசாங்கு இருந்தது, உண்மையில்லை.

இளவரசன் இரு கைகளாலும் அவளைப் பிடித்துச் சற்று எட்ட நிறுத்திப் பார்த்தான். பிறகு கேட்டான். ''வளைக்காமல் என்ன செய்வது?'' என்று வினவினான்.

''எதற்காக வளைக்க வேண்டும்?''

''சீறும் படைக்கலங்களைக் கொண்ட எதிரியை வளைக்கா விட்டால்...?''

''வளைக்காவிட்டால்?''

''அடக்க முடியாது.''

''யாரை?''

''எதிரியை.''

''நன் எதிரியா உங்களுக்கு?''

''சந்தேகமென்ன?''

''என்ன செய்துவிட்டேன் உங்களை?''

இளவரசன் அதற்குப் பதில் சொல்லாமல் அவளை நன்றாக இழுத்து அணைத்தான். ''வதைக்கிறாய், வதைப்பவர் எதிரியல்லவா?'' என்று அவள் காதருகே கூறி, கழுத்தில் இதழ்களை ஆழப் புதைக்கவும் செய்தான்.

அவளிடமிருந்து சொற்கள் ஏதும் உடனடியாக வரவில்லை. உணர்ச்சிகள் எல்லை மீறிப் புரண்டு கொண்டிருந்தன. அவள் மெள்ளச் சொன்னாள், ''நீங்களும்தான் என்னை வதைக்கிறீர்கள்?'' என்று.

அவளை அணைத்த கைகள் சிறிது தளர்ந்தன. அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு, ''இப்படி வா மைவிழி!'' என்று இரண்டடி மரத்தண்டைவிட்டு நகர்ந்தான் இளவரசன். ''எங்கு வரவேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டே மரத்தின் அடியைவிட்டு ஓர் அடி காலை எடுத்து வைத்தாள் மைவிழி.

''எங்குமில்லை. இப்படி உட்கார்'' என்று பக்கத்திலிருந்த புல் தரையைக் காட்டி அவளை உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்தான் ராஜசிம்மன். அந்தப் புல்தரை மரத்திலிருந்து இரண்டு மூன்று அடிகளே இருந்தது. அதன்மீது மரமல்லி மலர்கள் ஏராளமாக உதிர்ந்து புல்லின் பசுமையை வெண்மையாக மாற்றியிருந்தன. அதைச் சுட்டிக்காட்டிய இளவரசன், ''மைவிழி! நிம்மதிக்குச் சரியான இடமாகத்தான் தேர்ந்தெடுக்கிறாய்'' என்று கூறினான் மெதுவாக.

''நான் எங்கே தேர்ந்தெடுத்தேன்? நீங்கள்தானே தேர்ந்தெடுத் தீர்கள்? மரத்தடியில் நின்றிருந்த என்னை இழுத்து வந்து இங்கு உட்கார வைத்தது நீங்கள் தானே?'' என்று கேட்ட மைவிழி, அவன் கண்களுடன் தன் கண்களைக் கலந்தாள். அவள் பெருவிழிகளில் நகைப்புமிருந்தது, பூரிப்புமிருந்தது. வைரம் சற்று இருந்தாகக்கூடத் தோன்றியது.



இளவரசன் கண்கள் அவள் இதயத்தை ஊடுருவுவது போல் பார்த்தான். ''இந்த இடம் உனக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன அடுத்த வினாடி.

பெரும்படைகளை அனாயாசமாக நடத்திச் செல்லும் அந்த மாவீரன் தன் அருகாமையைக் கண்டு அச்சப்படுவதை உணர்ந்த மைவிழி 'எந்த வீரனும் பெண்களிடம் வந்து விட்டால் இவ்வளவு தான் போலிருக்கிறது?' என்று மனத்துள் சிரித்துக் கொண்டாள். இருப்பினும், ''பிடிப்பதற்கும் பிடிக்காததற்கும் என்ன இருக்கிறது இதில்?'' என்று வினவினாள் தலைதாழ்த்தி.

''இது புல்தரை'' என்று கூறிய இளவரசன் தனது வலது கையை அவளது காலின் மீது வைத்தான். இடது கை அவள் இடையில் மீண்டும் தவிழ்ந்து இறங்கியது.

''அது தெரிகிறத'' என்று கூறினாள் மைவிழி.

''மரமல்லி மலர்ப்படுக்கை விரித்திருக்கிறது'' என்று இழுத்தான் இளவரசன்.

''ஓகோ! அப்படியா சமாசாரம்?'' என்ற மைவிழி அவனை விட்டுச் சிறிது நகர முயன்றாள். ஆனால் நகர முடியாமல் அவன் இடது கை முரட்டுத்தனமாக அவளை இழுத்து, இருந்த இடத்திலேயே உட்கார வைத்து விட்டது. ''என்ன தெரிந்து கொண்டு விட்டாய் நீ?'' என்ற இளவரசன் அவளை இடது கையால் நன்றாகத் தன்னுடன் நெருக்கினான்.

''மெள்ள மெள்ள. அவள் சொன்னது சரியாகத்தான் போய் விட்டது.'' என்ற மைவிழி அவன் கையிலிருந்து திமிற முயன்று முடியாமல் கூறினாள்.

''யார் சொன்னது? என்ன சரியாகப் போய்விட்டது?'' என்று கேட்டான் இளவரசன்.

''தேவி சொன்னது.''

''ரங்கபதாகா. தேவியா?''

''ஆம்.''

''அவள் என்ன சொன்னாள்?''

''எச்சரித்தாள்.''

''என்னைப் பற்றியா?''

''ஆமாம். ஏதும் தெரியாததுபோல் கேட்காதீர்கள். சத்தியம் செய்ய வேறு முறையும் இருப்பதாகக் கூறி நீங்கள் எங்கள் அறைக்குள் நுழையவில்லையா?''

''நுழைந்தேன். ஆனால் நீங்கள் பேசிக் கொண்டது என்னவென்று தெரியாதே எனக்கு.''

''எல்லாம் தெரியும்.''

''தெரியாது. இப்பொழுதுதான் சொல்லேன்.''

''உங்களுக்கு அதிகமாக இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்லிச் சத்தியம் வாங்கிக் கொண்டிருக்கிறாள் தேவி.''

''அப்படியோர் ஒப்பந்தம் உங்களுக்குள் ஏற்பட்டிக்கிறதா?''

''ஆம்.''

இதைக் கேட்ட இளவரசன் நகைத்தான். ''எதற்கு நகைக் கிறீர்கள்?'' என்று கேட்டாள் மைவிழி.

''எனக்கு உள்ளேயே எதிரிகள் ஏற்பட்டு விட்டார்களே என்று'' என்றான் இளவரசன்.

''உங்களுடைய பிற்காலப் போர்கள் பெண் மாயையால் மறைக்கப்படாதிருக்க நாங்கள் எடுத்துக் கொண்ட விரதம் இது'' என்ற மைவிழி அவன் மார்பினில் தன் தோளை இழைத்தாள்.

இளவரசன் கை அவள் கழுத்தைச் சுற்றி வந்து மார்புக்குச் சற்று மேற்புறத்தில் பதிந்தது. அவளை வலிய மரமல்லி மலர்ப் படுக்கையில் கிடத்தினாள்.

தேவலோகத்திலிருந்து திடீரெனச் சாபத்தால் கீழே விழுந்து விட்ட அப்சர மங்கைபோல் கிடந்தாள் மைவிழி அந்த மலர்ப் படுக்கையில். அவள் இருபுறமும் தன் கைகளை ஊன்றிக் கொண்ட இளவரசன், ''மைவிழி! நான் ஆசார்யரிடம் காவியம் படித்தேன். சாஸ்திரங்கள் படித்தேன். புராணங்கள் படித்தேன். தமிழும் படித்தேன் சிறந்த பண்டிதர்களிடம், எதிலும் விலக்கில்லை இதற்கு'' என்று அவளை நோக்கிக் குனிந்தான்.

மைவிழியின் உணர்ச்சிகள் அசுர வேகத்தில் ஓடின. இளவரசன் முகம் தன் முகத்தை நோக்கித் தாழ்வதை உணர்ந்ததால் உள்ள வேட்கை மிதமிஞ்சியது. ''இதற்கு என்றால்?'' என்ற சொற்கள் உதடுகளிலிருந்து பலவீனத்துடன் வெளிவந்தன.

''இந்த நிலைக்கு. அக வாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் பிரித்தே வைத்திருக்கிறது தமிழ்மொழி. அகம் வேறு, புறம் வேறு, காதல் வேறு, போர் வேறு. இரண்டுக்கும் வழி வகைகள் இலக்கணங்கள் வேறு'' என்று அவள் காதருகே முணுமுணுத்தன இளவரசன் உதடுகள். அதைச் சொல்லத் தாழ்ந்த அவன் தலையுடன் உடலும் தாழவே அவள் உடலில் லேசாக அவன் உடல் அழுந்தவே செய்தது.



''இது அகம் போலிருக்கிறது!'' என்று அவளது செவ்விய அதரங்கள் முணுமுணுத்தன.

பிறகு, அவள் உதடுகள் பேசும் சக்தியை இழந்தன. பழம் பெரும் தமிழ் நூல்களில் வெற்றி பெறப் போவது அகமா புறமா என்ற கேள்வி அந்த நிலையில் பெரிதாக எழுந்தது. அகம் ஒரு புறமும், புறம் ஒரு புறமும் இழுக்க, திணறினர் இருவரும். எழுந்த கேள்விக்குப் பதில் இல்லை. கேள்வி பதிலை மிஞ்சிய நிலையை இருவரும் வெகு துரிதமாக அடைந்து கொண்டிருந்தனர்.

## 72. இன்னும் ஒரு புராணம்!

மரமல்லி மரத்துக்கு அருகாமையிலிருந்து மரகதப் பச்சைப் புல்லென்னும் பஞ்சணையில், அதன்மீது மரமல்லி விரித்த மென்மையும் வெண்மையும் கலந்த மலர் மஞ்சத்தில், மைவிழியும் பல்லவ இளவலும் கேள்வி பதிலை மிஞ்சிய உரையாடலுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தில் மிதக்கலாயினர். தன் உடலை நோக்கிக் குனிந்த இளவரசனின் முரட்டு உதடுகள் தன் இதழ்களுடன் கலக்காவிட்டாலும், நுதலில் கண்ணியத்துடனேயே புதைந்தாலும், இதழ்களையே கவர்ந்து விட்டது போன்ற இதய அதிர்ச்சி ஏற்பட்டது இந்திரவர்மன் மகளுக்கு.

இளவரசன் நிலையும் அவள் நிலைக்கு அதிகமாக மிஞ்சாத கட்டத்திற்கு வந்து கொண்டிருந்தால் குனிந்த அவன் தலையும் உடலும் சற்று எச்சரிக்கையுடன் ஓரளவு எட்டியே நின்றன. அவள் நுதலில் கண்ணியத்துடன் புதைந்த அவன் உதடுகள்கூட அதிகமாக இழையாமல் சற்றுத் தடவியதுடன் தயங்கின. இருப்பினும் தாழ்ந்த தன் உடலில் பட்ட அவள் பூவுடலின் எழுச்சியான பகுதிகள் அவன் உணர்ச்சிளையும் குலைக்கும் நிலைக்குக் கொண்டு வந்திருந்தன.

ஆசையுடன் அவன் ஏற்கனவே இருமுறை அணைத்த பூங்கொடி தான் அது. இருப்பினும் அந்த இருமுறையும் ரங்கபதாகாதேவி உடனிருந்தாள். இருவரையும் கடிகையின் அறையிலும் சரி, விளிந்தை அறையிலும் சரி, சேர்த்து அணைத்த போது இல்லாத வேகம் அவ்விருவரும் தன்னிடம் தனிமையில் இருந்தபோது ஏற்பட்டதை நினைத்தால் அவன் உணர்ச்சிகளில் வியப்பும் ஊடுருவிச் சென்றது. அவர்களிருவரையும் அழுந்த இணைத்த உடல் இப்பொழுது மைவிழி தனிமையில் சிக்கிக் கொண்ட சமயத்தில் ஏன் நடுங்க வேண்டும் என்று தன்னைத் தானே அவன் கேட்டுக் கொண்டான். கேள்விக்குப் பதில் இல்லை. கேள்வி மறைந்து மாயை மூண்டது. மாயை மூண்டதால்

மௌனம் நிலவியது. உணர்ச்சிகளுக்கல்ல. உணர்ச்சிகள் பேரிரைச்சல் போட்டன. அந்தச் சமயம் அவளுடைய அக்கம் பக்கத்தில் ஊன்றியிருந்த இரு கைகளில் பட்ட வழவத்த அவள் பகுதிகள் அந்த இடங்களின் சேலையையும் அசைத்தன.

இளவரசன் மீளா நிலைக்குத் தன்னை அழைத்துச் செல்வதை உணர்ந்தாள் மைவிழிச் செல்வி. அதனால் உடலை அவனிடமிருந்து சற்று விலக்கவும் முயன்றாள். 'மைவிழி! அவருக்கு அதிகமாக இடங்கொடுத்து விடாதே' என்ற ரங்கபதாகாதேவியின் எச்சரிக்கை அவள் காதுகளில் ஒலித்தது. 'சரி. சொல்லி விட்டாய் அக்கா! ஆனால் இப்பொழுது உடல் என்வசமில்லையே! நான் என்ன செய்வேன்?' என்று தேவிக்கு உள்ளூரச் சமாதானம் சொன்னாள் மைவிழி. அந்தச் சமாதானம்கூட அர்த்த மற்றதாகப் பட்டது அவளுக்கு. செய்தவறியாமல் திகைத்து இளவரசன் தோள்களைப் பிடித்துச் சற்று அவனை உயர்த்த முயன்றாள். அவனும் அவள் நிலையைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். அவள் மலர் உடலுக்குச் சுதந்திரமளித்து மீண்டும் எழுந்து உட்கார்ந்து கொண்டான் பல்லவ இளவல். பிறகு மெல்ல நகைத்தான்.

மைவிழி தனது மலர்ப் பெருவிழிகளை அகல விரித்து அவனை நோக்கினாள். ''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''என் தோள்களைப் பிடித்துத் தள்ள முயன்றாய்'' என்றான் இளவரசன்.

''ஆம். முயன்றேன். அதற்கென்ன?'' மைவிழியின் கேள்வி மெள்ள உதிர்ந்தது அவள் அழகிய உதடுகளிலிருந்து. அந்தச் சமயத்தில் மெல்ல உதடுகள் துடித்ததால் சொற்கள் சங்கடத்துடன் வெளிவந்தன.

பக்கத்தில் உட்கார்ந்த இளவரசன் கையொன்று அவள் வயிற்றில் அமர்ந்தது. ''முயன்றது சரி. முடியுமா உன்னால்?'' என்று கேட்டான் இளவரசன்.

''முடிந்ததைப் பார்த்தேனே?'' மைவிழியின் கையொன்று அவள் வயிற்றுத் தாமரையில் பதிந்த அவன் கைமீது படிந்தது.

''என்ன பார்த்தாய்?''

''உங்களை எழுப்பி உட்கார வைத்து விட்டேனே அது போதாதா?''

''உட்கார வைத்து விட்டால் போதுமா?''

''ஏன் போதாது? அதுவரை வெற்றிதானே?''

''வெற்றிதான் ஏற்பட்டுவிட்டதே, கையை ஏன் நகரவிட மாட்டேனென்கிறாய்?''



''ஆண்கள் கைகள் துஷ்டக் கைகள்.''

''அதனால்?''

''அவற்றுக்கு இடம் கொடுக்கக் கூடாது.''

''என்னை நினைத்தாலே பயமாயிருக்கிறதா?''

''ஆம். ஆம்.''

''நான் என்ன புலியா கரடியா?''

''இரண்டும்தான்.''

''புரியவில்லை மைவிழி!''

''கண்களைப் பார்த்தால் புலி மாதிரி இருக்கிறது.''

''உம்.''

''விசாலமான மார்பைப் பார்த்தால் கரடி கெட்டது.''

இருவரும் சேர்ந்து நகைத்தனர். அந்த நகைப்பு அவர்கள் உணர்ச்சிகளை ஒரு கட்டுக்குக் கொண்டு வந்துவிடவே மைவிழி மேலும் சொன்னாள். ''என் தந்தை இந்த மாளிகையில் தானிருக்கிறார். ஞாபகமிருக்கட்டும்'' என்று.

இளவரசன் இதழ்களில் இளமுறுவல் கண்டது. ''இருந்தார் என்று சொல்.''

மைவிழியின் மருண்ட விழிகள் அவனை நோக்கிப் பெரிதாக மலர்ந்தன. ''இருந்தார் என்றால்?'' என்று கேட்டன செவ்விய உதடுகள்.

''இப்பொழுது இல்லையென்று அர்த்தம்'' என்றான் இளவரசன்.

''எங்கே போய்விட்டார்?'' என்று கேட்ட மைவிழி அவனை நோக்கி ஒருக்களித்து ஒரு கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்தாள். அந்த நிலையில் அவள் காலின் உருண்ட மேற்பகுதி உட்கார்ந்திருந்த அவன் காலில் அழுந்தியது.

''போயிருப்பார்'' என்று பதில் சொன்னான் இளவரசன்.

''போயிருப்பார் என்றால்?'' என்று கேட்டாள் மைவிழி.

''போக உத்தரவிட்டேன்'' என்று இளவரசன் உதடுகள் கூறின.

''எங்கு?''

''வாதாபிக்கு.''

''அங்கு எதற்கு?''

''சில விஷயங்களை அறிவதற்கு.''

''அதிருக்கட்டும்! நீங்கள் உத்தரவிட்டால் அவர் போக வேண்டியதுதானே?''

''ஆம்.''

''போயிருக்க வேண்டும் என்று சந்தேகமாகச் சொல்கிறீர்களே?''

''அதற்கும் காரணமிருக்கிறது.''

''என்ன காரணமோ?''

''உன் தந்தை என் மீது சந்தேகப்பட்டார். இந்தச் சோலைக்குள் என்னைத் தொடர்ந்து வந்தார்.''

''ஐயையோ!'' மைவிழியின் குரலில் அச்சமிருந்தது.

''அச்சப்படாதே'' என்றான் இளவரசன்.

''தந்தை இந்த நிலையில் நம்மைப் பார்த்தால்...'' என்று இழுத்தாள் அவள்.

''பார்க்க மாட்டார்'' என்று ஆதரவு கூறிய இளவரசன் அவளைத் தன்னை நோக்கி இழுத்தான்.

''ஏன் பார்க்க மாட்டார்?''

''இங்கு உன்னைப் பார்க்க வந்த அவரைத் திருப்பி அனுப்பிவிட்டேன்.''

''என்ன சொல்லித் திருப்பி அனுப்பினீர்கள்?''

''பல்லவப் பேரரசின் பிற்கால ராணியிடம் நம்பிக்கை வைக்கும்படி சொல்லி அனுப்பினேன்.''

''யாரவர்?''

''வேறு யார், இவள்தான்'' என்ற இளவரசன் அவளை நன்றாகத் தன்னை நோக்கித் திருப்பினான்.

மைவிழியின் உள்ளத்தில் பெருமையும் காதலும் இணைந்து வெள்ளமெடுத்து ஓடின. ''அத்தனை பெரிய பதவிக்கு நான் தகுதியா?'' என்று கேட்டாள் நன்றாகப் புரண்டு.

''இல்லை, தகுதியில்லை'' என்றான் இளவரசன்.

''என்ன சொல்கிறீர்கள்?'' சீற்றத்துடன் கேட்ட மைவிழி புரண்ட நிலையிலிருந்து மீள முயன்றாள்.

மீள விடவில்லை அந்தக் காளை. ''உலகிலுள்ள எந்தப் பதவியும் உனக்குத் தகுதியில்லை. ஆனால் நான் அளிக்கக்கூடியது இவ்வளவு தான்'' என்ற இளவரசன் அவள் வழவழத்த கன்னத்தைத் தடவினான் வலது கையால்.

மைவிழியின் மகிழ்ச்சி கரை புரண்டது. ''பெரும் ஆள் நீங்கள்'' என்றாள் மகிழ்ச்சியுடன் ஊடே.

''பெருமாளா! ராமபிரானைச் சொல்கிறாயா?'' என்ற விஷமமாகக் கேட்டான் இளவரசன்.

''இல்லை.''



''வேறு யாரையோ?''

''கிருஷ்ணனைச் சொன்னேன்.''

''ஏனப்படி?''

''ராமன் ஒருத்தியைத்தவிர வேறுயாரையும் கண்ணெடுத்துப் பார்த்ததில்லை. உங்களுக்கு இப்பொழுதே இருவர் இருக்கிறார்கள். போகப் போக எப்படியோ!'' என்று அவள் நகைத்தாள்.

''முருகனை ஏன் சொல்லவில்லை?'' என்று கேட்டான் இளவரசன்.

''அவர் இரண்டு பேரோடு நிறுத்திக் கொண்டார்.

''நானும் அப்படித்தானே?''

''இதுவரை அப்படித்தான்.''

''என் மேல் உனக்கு நம்பிக்கையில்லை போலிருக்கிறது?''

''எந்த ஆண்மகனையும் நம்பக்கூடாது.''

''பெண்களை நம்பலாமா?''

''கண்டிப்பாய் நம்பலாம்!''

''அவர்கள் என்ன அப்படி உயர்வு?''

''அவர்களால் தான் உலகம் நிலைப்பதாக, அறம் நிலைப்பதாக, புராணங்களில் சொல்கிறார்கள். புராணங்களில் கஷ்டப்பட்டவர்களெல்லாம் பெண்கள்தான்.''

இளவரசன் கை அவளை இழுத்தது. ''இது உன் புராணம் போலிருக்கிறது. நேற்று ரங்கபதாகாதேவி, தேவி புராணம் சொன்னாள். இன்று மைவிழி புராணம் படிக்கிறாள் எனக்கு.'' அவன் கவர்ச்சி உடல் அவன் கண்களை எங்கெங்கோ அலையவிட்டது. கைகூட அலைய முற்பட்டது. ''என்ன இது?'' என்ற கடுஞ் சொல் மைவிழியின் உதடுகளிலிருந்து வெளிவந்தது.

''ஆரம்பம்'' என்றான் இளவரசன்.

''என்ன ஆரம்பம்?''

''மைவிழிப்புராணம் ஆரம்பம்.''

மைவிழி அசைந்தாள் மரதகப் பஞ்சணையில், மரமல்லி மலர்ப்படுக்கையில். ''ஆரம்பத்துடன் நிற்கட்டும்'' என்றாள் சினத்துடன்.

நிற்கும் கட்டமா அது. அல்லது நிலைக்கும் திட்டமா? இரண்டுமில்லையே!

# 73. இன்பக் குறள்

நள்ளிரவு நெருங்கி, சோலைப் பறவைகளின் கூச்சலும் அடங்கிவிட்ட நேரம் அது. மரங்களின் உதிர்ந்த சருகுகளில் பல்லி முதலிய ஊர்வன ஜீவராசிகளும் அசையும் காலமும் அடங்கி விட்ட வேளை அது. அந்தச் சமயத்தில் அடங்காதவை இரண்டு ஈசுவர சிருஷ்டியில்: ஒன்று காமம், இன்னொன்று திருட்டு, இரண்டுக்கும் நெருங்கிய உறவு உண்டு. காமத்தில் கள்ளத்தனமும் கள்ளத்தனத்தில் காமமும் கலப்பது இயற்கை சிருஷ்டித்த விந்தை. அந்த விந்தையில் சிக்கிக் கிடந்த மைவிழிச் செல்வியும் பல்லவ இளவலும் அக்கம் பக்கத்தில் படுத்துக் கிடந்தனர். எந்த அச்சத்தினாலோ அல்லது காமம் விளைவிக்கும் கள்ளத்தினாலோ இருவரும் அதிகமாக நெருங்கிப் படுக்கவில்லை. பரஸ்பரம் வலிய அணைக்கவுமில்லை. ஒரு சாண் விலகியே இருவரும் ஆகாயத்தை நோக்கிக் கொண்டு படுத்திருந்தாலும் கைகள் செய்த சிறு சேஷ்டைகளைத் தவிர இன்பப் பூர்த்திக்கு முயலவில்லை இருவரும். மைவிழியைக் கட்டுப்படுத்தியிருந்தது அவள் ரங்கபதாகாதேவிக்கு அளித்த வாக்கு. இளவரசனைக் கட்டுப் படுத்தியிருந்தது பரம்பரையாக வந்த அற உணர்வு. தனிமையில் தன்னை நம்பி தன் நெறியில் நம்பிக்கை வைத்துப் பக்கத்தில் கிடக்கும் பாவையை, பாவையின் கற்பைக் காக்கும் பொறுப்பு அரசகுலத்தான் என்ற காரணத்தால் தன்னுடையது என எண்ணினான் இளவரசன். இளவரசன் உறுதி அவன் உணர்ச்சிகளையும் அதீதமான வேட்கையை யும் கட்டுப்படுத்தி வைத்திருந்தது.

மைவிழிக்கு அத்தனை உறுதியில்லாததால், அவன் கை படப்பட அவள் அங்கங்கள் துடித்ததால் அவள் நிலை குலைந்து கிடந்தாளானாலும் 'தேவி சொன்னதை நான் எப்படி மறக்க முடியும்? என்னிடமுள்ள ஆசை இவருடைய பிற்கால நலனைப் பாதிக்கக் கூடாதே' என்று உள்ளூர எண்ணித் தன்னை எப்படியும் அடக்கிக் கொள்வது கடமையென நினைத்தாள். அப்படி நினைத்த நேரத்திலேயே அவனது இடது கை அவளது பூவுடலுக்குக் குறுக்கே விழுந்தது. அவன் அழைத்தான் மெல்ல, ''மைவிழி!'' என்று.

மைவிழி சற்றுத் திரும்பிப் பார்த்தாள். அவன் கண்கள் அவளைத் திரும்பியும் பார்க்கவில்லை; வானத் தாரகைகளையே பார்த்துக் கொண்டிருந்தன. அதனால் மெல்ல உள்ளூர நகைத்துக் கொண்டாள் அவள். 'என்னைப் பார்க்காமல் ஆகாயத்தைப் பார்த்துப் பேசினால் எல்லாம் சரியாகிவிடுமா?' என்று தனக்குள் வினாவை எழுப்பிக் கொண்டு பதிலுக்கு ஓர் ''ஊம்'' கொட்டினாள்.



''நடுநிசி நெருங்கிவிட்டது'' என்று கூறினான் இளவரசன் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டே.

''எத்தனை நாழிகை இருக்கும் இப்பொழுது?'' என்று வினவினாள் மைவிழி மிக மெதுவாக.

''எனக்கெப்படித் தெரியும்'' என்றான் ராஜசிம்மன்.

''வான கணித சாஸ்திரம் படித்ததில்லையா நீங்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''படித்திருக்கிறேன்.''

''அப்படியானால் சொல்லலாமே!''

''எப்படி?''

''நீண்ட நேரமாக வானத்தையே பார்த்துக் கொண்டிருக் கிறீர்கள்.''

''ஆமாம்.''

''நட்சத்திரங்கள் இருக்கும் நிலையைப் பார்த்து நாழிகை சொல்லலாமே?''

''சொல்லலாம். ஒரு கஷ்டமிருக்கிறது.''

''என்ன கஷ்டமோ?''

''வானத்தில் தாரகைகள் இருக்கின்றன.''

''ஆம்.''

''ஆனால் அவற்றின் பரிமாணம், அமைப்பு இவை கண்ணுக்குத் தெரியவில்லை.''

''ஏன்?''

''பூமியில்...''

''உம்?''

''ஒரு தாரகை.''

''பூமியில் தாரகையா?''

''ஆம்.''

''விந்தையாயிருக்கிறதே. பூமியில் தாரகை ஏது?''

''இருக்கிறது.''

''எங்கு?''

''இதோ என் பக்கத்தில்'' என்று அவள் உடலுக்குக் குறுக்கே விழுந்த கையால் தட்டிக் காட்டினான் இளவரசன்.

மைவிழி நகைத்தாள். ''நல்ல திருடர் நீங்கள்'' என்றும் சொன்னாள்.

''பொல்லாத திருடனல்லவே மைவிழி!'' என்று கேட்டான் இளவரசன்.

''அதையும் திட்டமாகச் சொல்ல முடியாது'' என்ற மைவிழி நகைத்தாள்.

''என்னைத் திருடன் என்கிறாயா?''

''ஆம்.''

''என்ன காரணமோ?''

''என்னைத் தேடி வந்த தந்தையைத் திருப்பி அனுப்பிவிட்டு நீங்கள் மாத்திரம் வந்திருக்கிறீர்கள்.''

''அதனாலென்ன?''

''என்னைத் தனிமையில் பிடித்துக் கொள்ளத்தானே அந்த ஏற்பாடு?''

''இல்லை... இல்லை.'' இளவரசன் அவசர அவசரமாகச் சொற்களை உதிர்த்தான்.

''என்ன இல்லை? எதற்காக என் தந்தையைச் சாளுக்கிய நாட்டுக்கு அனுப்பினீர்கள்?'' என்று வினவினாள் மைவிழி.

''உன்னை என்னிடம் வைத்துக் கொள்ளவா?'' என்ற குரலில் கேலி இருந்தது.

''வேறு எதற்கோ?''

''அரசியல் ஒன்றுதான் அதற்குக் காரணம்.'' இதைச் சொன்ன இளவரசன் பெருமூச்சு விட்டான்.

மைவிழி தலையைத் தூக்கி அதற்குத் தனது இடது கையை முட்டுக் கொடுத்துக் கொண்டாள். ''ஏன் ஆயாசப்படுகிறீர்கள்?'' என்று வினவவும் செய்தாள் அவன் மீது தனது கடைக்கண்ணை வீசி.

இளவரசன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சில வினாடி சிந்தனையில் இறங்கினான். ''நாமிருவரும் பிரியும் காலமும் வந்து விட்டது'' என்று கூறினான் வருத்தம் தோய்ந்த குரலில்.

அதைக்கேட்ட மைவிழிச் செல்வி அதிர்ச்சியடைந்தாள். சட்டென்று எழுந்து உட்காரவும் செய்தாள். ''என்ன! என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவவும் செய்தாள்.

''நாம் பிரியும் காலமும் வந்துவிட்டது என்று சொன்னேன்'' என்றான் இளவரசன்.



''ஏன் பிரியவேண்டும்? நீங்கள் எங்கு செல்லப் போகிறீர்கள்?''

''பல இடங்களுக்குப் போகப் போகிறேன். ஆனால் முதலில் விளிந்தையை விட்டுச் செல்ல போவது நானில்லை.

''வேறு யார்? நானா?''

இளவரசன் அவளை உற்று நோக்கினான். அவள் உட்கார்ந்திருந்த நிலையே அவனுக்கு உன்மத்தம் கூட்டக்கூடியதாக இருந்தது. பசும்புல் தரையில் அவளைத்தான் படுக்க வைத்ததாலும் புரட்டியதாலும் தலையிலிருந்த மலர்ச்சரம் கலைந்து கிடந்தது. குழல்களில் சில பின்னலை விட்டுச் சிதறிக் கிடந்தன. மேலாடையும் நிலைகுலைந் திருந்தது. மார்பில் உருண்ட நவரத்தின மாலை மார்பகத்தின் மேல் பகுதியில் அழுத்தியதன் விளைவாக அவள் கஞ்சுகத்தின் மேற்புறத்தில், நவரத்தினக் கற்களிரண்டு பதிந்து இரண்ட செவ்விய புள்ளிகளை அமைத்திருந்ததால், அவள் உடலி லிருந்து ஆபரணங்கள் முளைக்கும் மயக்கத்தை அளித்திருந்தது. உட்கார்ந்த நிலையில் அவளை உற்றுப் பார்த்த கண்கள் தனி ஒளி பெற்று வீசின.

நிலை அடியோடு மாறிவிட்டதைப் புரிந்து கொண்டான் இளவரசன். 'சில நாழிகைகளுக்கு முன்பு இவள் படுத்துக் கிடந்தாள். நான் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். இப்பொழுது இவள் உட்கார்ந்திருக்கிறாள். நான் படுத்திருக்கிறேன்' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான். 'ஆனால் எப்படியிருந்தாலென்ன? இவளுடைய எழில் அப்பொழுதும், என்னை உன்மத்தனாக்கிற்று. இப்பொழுதும் ஆக்குகின்றது'' என்றும் சொல்லிக் கொண்டான்.

இப்படி அவன் ஏதும் பேசாமல் படுத்துக் கிடந்ததன் காரணத்தை அவள் புரிந்து கொள்ளவே செய்தாள். அவனை இவ்வுலகத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொன்னாள், ''நானொரு கேள்வி கேட்டேன்'' என்று.

''ஆம். கேட்டாய்'' என்றான் இளவரசன் உட்கார்ந்த அவள் உடலை அலசிப் பார்த்த வண்ணம்.

''நீங்கள் பதிலேதும் சொல்லவில்லையே'' என்றாள் மைவிழி.

''இல்லை.''

''ஏன்?''

''நீ மட்டுமா கேள்வி கேட்டாய்?''

''வேறு யார் கேட்டார்கள்?''

''எவை என்று கேள்.''

''சரி, சரி... கேட்கிறேன். எவை?''

''உன் கண்களிரண்டு கன்னங்களிரண்டு, மார்பு...''

''போதும், போதும் நிறுத்துங்கள்.''

''சரி. நிறுத்திவிட்டேன்'' என்ற இளவரசன் நகைத்தான்.

தன் ஒரு கையால் அவன் வாயைப் பொத்தினாள் மைவிழி. அந்த உள்ளங்கையில் அவன் முரட்டு உதடுகள் விரிந்து பதிந்தன. சட்டென்று கையை எடுத்து கொண்டாள் அவள்.

''ஏன் வாயின் மூடியை எடுத்து விட்டாய்?'' என்று கேட்டான் இளவரசன்.

''உலை வாயை மூடலாம். ஊர் வாயைக் கூட மூடலாம் ஆனால் உங்கள் வாயை மூட முடியாது'' என்று அவள் பொய்யாகச் சீறினாள்.

''ஏனோ?''

''உங்கள் வாய் சும்மாயிருக்காது.''

''என்ன செய்யும்?''

''இப்பொழுதுதான் செய்ததே?''

''அது போதுமா?''

''போதும்... போதும்.''

''சரி, வேறு என்ன செய்யச் சொல்கிறாய்?''

''பதில் சொல்லச் சொல்கிறேன். என் கேள்விக்கு'' என்று கூறிய மைவிழி அவன் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்தாள்.

நகைத்தான் இளவரசன் மெல்ல அந்த நிலையில்.

''ஏன் நகைக்கிறீர்கள்? என்னைப் பார்த்தால் சிரிப்பாக இருக்கிறதா உங்களுக்கு?'' என்று வினவினாள் அவள், அவன் கண்களிலிருந்து தன் கண்களை அகற்றாமல்.

''மைவிழி!''

''என்ன மைவிழிக்கு?''

''என்னைப் பேசச் சொல்கிறாய்.''

''ஆம்.''

''ஆனால் உன் கண்களால் என் கண்களைக் கவர்ந்து கொள்கிறாய்.''

''அதனால்?''

''நான் பேசக் கூடாது.''

''ஏன் பேசக் கூடாது?'' என்று வினவினாள் மைவிழி.

''ஒரு பெரியவருக்கு, தமிழ் முனிவருக்கு, அவர் சொல்லுக்கு ஊறு விளைவித்தவனாவேன்'' என்றான் இளவரசன் மெதுவாக.



''யாரந்த முனிவர்?''

''தெய்வத் திருவள்ளுவர்'' என்றான் இளவரசன்.

''நீங்கள் பேசாததற்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டாள் அவள் வியப்புடன்.

''கண்ணோடு கண்ணோக்கும்போது...''

''சொல்லுங்கள்.''

''வாய்ச் சொற்கள் என்ன பயனுமில.''

''குறள் படித்திருக்கிறீர்களா?''

''ஆமாம். அவரது தெய்வச் சொல் எத்தனை உண்மையானது! உனது கண்கள் என் கண்களுடன் உறவாடும்போது என்னால் பேச முடியவில்லை, பேசினாலும் பயனில்லை.'' இதைச் சொன்ன இளவரசன் பெருமூச்செறிந்துவிட்டுச் சொன்னான் : ''மைவிழி! உன் கண்கள் என் கண்களை மட்டும் பார்க்கவில்லை, கண்கள் மூலம் என் இதயத்தையே ஊடுருவிப் பார்க்கின்றன. அப்பொழுது நான் பேசும் சக்தியை இழக்கிறேன்.''

இதைக் கேட்ட மைவிழி கண்களை அப்புறம் திருப்பிக் கொண்டாள். ''இப்பொழுது சொல்லுங்கள்.''

இளவரசன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான். கடைசியாகச் சொன்னான். ''விளிந்தையிலிருந்து நீதான் முதலில் கிளம்பப் போகிறாய்'' என்று.

திகைத்தாள் மைவிழி. ''நானா?'' என்ற அதிர்ச்சிக் கேள்வி உதிர்ந்தது துடித்த அதரங்களிலிருந்து.

''ஆம்'' என்ற இளவரசன் அவள் தலையைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

''எங்கு? எதற்கு?'' என்ற இரு கேள்விகளை வீசினாள் அவள்.

''நாளை மந்திராலோசனையில் சொல்கிறேன்'' என்றான் இளவரசன்.

''ஏன், இப்பொழுது சொல்லக் கூடாதா?'' என்று கேட்டாள் அவள்.

''இந்த இன்ப நேரத்தில் அது வேண்டாம்'' என்றான் இளவரசன்.

இளவரசன் ஏதோ ஆழ்ந்த திட்டத்தைத் தயாரித்திருக்கிறான் என்பதை அப்பொழுது புரிந்து கொண்டாள் மைவிழிச் செல்வி. எது என்னவென்பதை மறு நாளே கூறினான் இளவரசன். அந்தத் திட்டத்தினால் மனமுடைந்தாள் மைவிழிச் செல்வி.

# 74. மாயாதேவி

மறுநாள் நடந்த மந்திராலோசனையில் அந்தத் திட்டத்தை இளவரசன் விளக்கும் வரையில் அதைப்பற்றி ஏதுமே அறியாத மைவிழி, மனத்தில் இல்லாத பொல்லாத சந்தேகங்களையெல்லாம் எழுப்பிக் கொண்டாளாதலால், வெள்ளி முளைப்பதற்குச் சற்று நேரத்துக்கு முன்பே இளவரசனுடன் மாளிகைக்கு வந்தாளானாலும், இரவின் முக்கால் பாகத்தைத் தூக்கமின்றியே மரகதப் பஞ்சணையில் இளவரசன் அன்புப் பிணைப்பில் கழித்து விட்டாளானாலும், மாளிகையில் தனது அறைக்கு வந்த பின்பும் உறக்கம் பிடிக்காமலே கட்டிலில் புரண்டாள்.

உதய காலத் தாரைகள் ஊதியது காதில் விழவில்லை. மன்னரை எழுப்பப் பணி மகளொருத்தி மன்னனிருந்த அறைக்கு முன்பாக எழுப்பிய யாழிசை ஒலிகூட அவள் உணர்ச்சிகளைத் தொடவும் வலிமையற்றதாயிற்று. சோலையில் காலையில் கூவிய பட்சி ஜாலங்களின் ஒலி காதலில் பிணைப்புண்டு இரவைக் கழித்துவிட்ட, அந்த ஏந்திழையை எழுப்ப இயலாததாயிற்று. நீண்ட நேரமாகியும் எழுந்திராததால் அவளை எழுப்பப் பணி மகளொருத்தி கதவைச் சற்று அதிகமாகத் தட்டவே மெல்லக் கண் விழித்த மைவிழிச் செல்வி கதவைத்திறந்து வாயிற்படிக்கு அப்பால் நின்றிருந்த பணி மகளை நோக்கி, ''ஏன் இடிக்கிறாய் கதவை? என்ன அவசரம் வந்துவிட்டது உனக்கு?'' என்று சீற்றத்துடன் வினவினாள் அப்பொழுதும் அரைத்தூக்கத்துடன்.

பணிமகள் மைவிழியை உற்று நோக்கினாள். அவள் குழல் கலைந்த அலங்கோலம், அங்கிருந்த முத்துச்சரம் மாட்டலாகத் தொங்கிச் சிதறியிருந்த விநோதம், நவரத்தின ஆரம் புரண்டு கிடந்த முறை, ஆடை கலைந்து கிடந்த விபரீதம். இத்தனையையும் கவனிக்கவே செய்த பணி மகள் புன்முறுவல் கொண்டு ''அவசரம் எனக்கில்லை அம்மணி'' என்றாள் தலை தாழ்த்தி.

''வேறு யாருக்கு?''

''இளவரசருக்கு.''

''இளவரசருக்கா!'' போலி வியப்பிருந்தது கடல் மல்லைக் கட்டழகியின் கேள்வியில்.

''ஆம்.''

''என்ன அவசரமோ?''



''நீங்கள் நீராடிப் புத்தாடை புனைந்ததும் மந்திராலோசனை ஆரம்பிக்குமாம் மன்னர் அறையில்.''

''எத்தனை நாழிகைக்கு?''

''உதயம் கழித்து ஆறு நாழிகைகளுக்குப் பிறகு இப்பொழுதே இரண்டரை நாழிகைகள் ஓடிவிட்டன.''

பணிமகள் மறைமுகமாகத் தான் அதிகமாகத் தூங்கி விட்டதை உணர்த்துகிறாளென்பதைப் புரிந்து கொண்ட மைவிழி அவளை நோக்கிப் புன்முறுவல் கோட்டினாள். ''சரி. சீக்கிரம் நீராட்டத்துக்கு ஏற்பாடு செய்'' என்றும் உத்தரவிட்டாள்.

பணிமகள், ''எல்லாம் சித்தமாயிருக்கிறது'' என்று கூறினாள்.

இருவரும் நீராட்ட அறையை அடைந்ததும் மங்கள நீராட்டத்துக்கான வாசனைத் திரவியங்களும், நீராடியதும் உடலைப் போர்த்திக் கொள்ளப் பொன்னாடையும் சித்தமாயிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தாள். மகிழ்ச்சியுடன் பணிப் பெண் நீரூற்ற நீராட்டத்தையும் முடித்துக் கொண்டாள். பிறகு பொன்னாடையில் பொன்னான உடலை நன்றாக மூடிக் கொண்டு, தன்னறை அடைந்து புத்தாடை புனைந்து புது மலர் சூட்டி, திலகமிட்டு, இரண்டோர் ஆபரணங்களை மட்டும் மாற்றிக் கொண்டாள். பிறகு கிளம்பினாள் பரமேசுவரவர்மன் அறையை நோக்கி. அங்கு வாயில் காவலிருந்த வீரன் தலைவணங்கி வழிவிட அறைக்குள் புகுந்தாள், மலைத்து நின்று விட்டாள் சில விநாடிகள்.

அறையில் மந்திராலோசனைக்கு அனைவரும் கூடியிருந்தனர். தன் ஒருத்திக்காகத்தான் அனைவரும் காத்திருக்கிறார்களென்பதை உணர்ந்ததால் வெட்கமும் ஓரளவு அச்சமும் அடைந்து பரமேசுவரவர் மனை நோக்கினாள். அவள் பார்வையில் அச்சமிருந்தது, வெட்கமிருந்தது, பெருமிதமிருந்தது. பாராளும் பல்லவ மன்னனும், சிற்பத்திலும் போரிலும் வல்ல பல்லவ இளவலும், பலபத்ர வர்மனும் மற்றுமிரண்டு உபதளபதிகளும் தனக்கு முன்னாலேயே ஆசனங்களில் அமர்ந்திருப்பதையும் தனக்கு மட்டும் ஓர் ஆசனம் தனித்துப் போடப்பட்டிருந்ததையும் கண்ட மைவிழி, 'போரில் வல்ல இவர்களெங்கே, நானெங்கே! எனக்காக இவர்களைக் காக்க வைத்துவிட்டேனே' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு சில விநாடிகள் சிலையென நின்றாள். ''மகளே, உட்கார்'' என்ற பரமேசுவர வர்மனின் கம்பீரமான குரலோசை அவளுக்குத் தைரியமூட்டவே, அவள் ஆசனத்தை நாடிச் சென்று அமர்ந்தாள். அவள் அமர்ந்ததும் அறைக் கதவிடமிருந்த காவலன் கதவை இழுத்துச் சாத்தினான்.

அன்று பரமேசுவர வர்மன் திடகாத்திரனாக உட்கார்ந்திருந்ததையும் அவன் மார்புக் கட்டு பலமாயிருந்தாலும் அதில் ரத்தக் கறையோ பச்சிலைக் கறையோ எதுவுமில்லாமல் அது சுத்தமாயிருப்பதையும் மன்னன் முகத்தில் நல்ல தெளிவிருந்ததையும் மைவிழி கவனித்தாள்.

சீனன் சிகிச்சையின் அற்புதம் அது என்பதை உணர்ந்ததால் அவன் எங்கே காணோம் என்று அறையைச் சுற்று முற்றும் நோக்கினாள். கோடிச் சாளரத்தினருகில் செண்பகக் கிளையின் கீழ் அவன் ஓரமாகச் சாய்ந்து நிற்பதைக் கண்டாள். அவன் மந்திரா லோசனையில் கலந்து கொள்ளாவிட்டாலும் அங்கு நடக்கும் பேச்சு விவரங்களை அவன் கவனிப்பானென்பதிலோ, சமயத்தில் இளவரசன் அவனைக் கலந்து கொள்வானென்பதிலோ அவளுக்குச் சிறிதும் சந்தேகமில்லாததால், தனது கண்களை அவனிடமிருந்து மன்னன்மீது திருப்பினாள். அவள் கண்கள் ஓடிய திசையைக் கவனித்த இளவரசன், ''யாங்சின் இங்கிருப்பதால் எந்தத் தவறுமில்லை. அவன் வேறு நான் வேறு அல்ல'' என்று கூறினான். ''இனி மந்திராலோசனையைத் துவக்கலாம்'' என்றும் சொன்னான்.

சிறிது மௌனத்திற்குப் பிறகு பரமேசுவர வர்மன் தன்னெதிரிலே அரைச் சக்கர வட்டமாக அமர்ந்திருந்தவர்களை நோக்கிக் கூறினான். ''காஞ்சி மாநகரை விட்ட பிறகு இப்பொழுதுதான் இத்தகைய ஒரு மந்திராலோசனை நடக்கிறது'' என்று.

''ஆம்'' என்றான் பலபத்ரவர்மன்.

பரமேசுவர வர்மனின் கண்கள் பலபத்ரன்மீது நிலைத்தன.

''அதுமட்டுமல்ல, இருமுறை தோல்வியுற்ற பிறகு இப்பொழுதுதான் கூடிப் பேச முயலுகிறோம்'' என்று பல்லவ பரமேசுவர வர்மன் கூறினான். அவன் சொற்களில் சோர்வுமில்லை, உற்சாகமுமில்லை. உறுதியேயிருந்தது. அந்த உறுதியுடன் தொடர்ந்தான் பேச்சை. ''காஞ்சியை நாமாகக் கைவிட்டோம், கோயில் களையும் சிற்பங்களையும் பாதுகாக்க, இங்கு போரிட முயன்றோம், நம்மைவிடப் பல மடங்கு மேதையான ஸ்ரீராம புண்யவல்லபரால் முறியடிக்கப்பட்டோம்...''

''இல்லை... இல்லை. கங்க மன்னனால்'' என்று குறுக்கிட்டான் பலபத்ர வர்மன்.

''பூவிக்ரமன் ஆயுதம்... அதை ஏவியவர் ஸ்ரீ ராமபுண்யவல்லபர். ஆகையால் நமது மந்திராலோசனை எந்த வழியில் சென்றாலும் அது ஸ்ரீ



ராமபுண்யவல்லபரைப் பற்றியதாகவே இருக்கவேண்டும்'' என்ற குறிப்பிட்டான் பரமேசுவர வர்மன்.

அதுவரை பேசாமடந்தையாக இருந்த மைவிழிச் செல்வி, ''அவரையும் மீறும் மேதையொருவர் இருக்கிறார்'' என்று குறுக்கே புகுந்து தனது கருத்தைத் தெரிவித்தாள்.

அனைவர் கண்களும் அவளை நோக்கித் திரும்பின. மன்னனைக் குறுக்கிடும் அந்த மடந்தையின் துணிவை எண்ணி அச்சமும் உற்றனர். அவர்கள் தன்னைக் கவனிப்பதை அறிந்தும் அதைப்பற்றி லட்சியம் செய்யாமல் சொன்னாள் மைவிழிச்செல்வி. ''ஸ்ரீராமபுண்யவல்லபர் பெரிய மேதை. போர் நுணுக்கங்களை அறிந்தவர். இருந்த இடத்திலிருந்தே சதுரங்கக் காய்களைப் போல் படைகளை நகர்த்தவல்லவர். ஆனால் அவரை விடப் பல படிகள் அதிகமாய் அதி நீட்சண்யமான அறிவை உடையவராய் இருக்கிறார் விக்கிரமாதித்த மன்னர். அவரை நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் மந்திராலோசனை நடத்தினால் அது வீண் யோசனையாகும்.''

''உண்மை'' என்று ஆமோதித்தான் ராஜசிம்ம பல்லவன்.

''இளவரசரைச் சிறை மீட்க என்னிடமும் விளிந்தைப் போரை நிறுத்தித் திரும்பிச் செல்ல உத்திரவிட்டு ரங்கபதாகா தேவியிடமும் ஓலைகளை அனுப்பியவர் விக்கிரமாதித்த மாமான்னர்'' என்று சுட்டிக்காட்டினாள் மைவிழி.

'அது மட்டுமல்ல. என்னைச்சிறைசெய்ய ஸ்ரீராமபுண்ய வல்லபர் உத்தரவிட்டிருந்தும் என்னைத் திரையனேரிக்கு அருகில் பார்த்தும் பாராததுபோல் சென்றவர் விக்கிரமாதித்தர். ஆகவே ஸ்ரீராமபுண்ய வல்லபர் திட்டம் முடிவானதென்று சொல்ல முடியாது'' என்றான் இளவரசன்.

இருவர் சொல்லையும் கேட்டுக்கொண்டு பதிலேதும் கூறாமல் பல விநாடிகள் மௌனமாக இருந்த பரமேசுவரவர்மன் பல்லவ தளபதியை நோக்கி. 'உமது அடுத்த திட்டம் என்ன?'' என்று வினவினான்.

''இருவர் சொல்லுவதிலும் பொருளிருக்கிறது'' என்றான் பலபத்ரவர்மன்.

''ஆகவே, நாம் விக்கிரமாதித்த மன்னரையும் கன் காணிக்க வேண்டும்'' என்று திட்டமாக அறிவித்தான் பல்லவ இளவல்.

பரமேசுவர வர்மன் தனது புதல்வனை நோக்கினான். ''அதற்குத்தான் இந்திரவர்மர் தமது ஒற்றர்களை அனுப்பி யிருக்கிறாரே?'' என்று கூறவும் செய்தான்.

''விக்கிரமாதித்தரின் சித்தத்தை அறிய ஸ்ரீராமபுண்யவல்லபரே திணறுகிறார். அப்படியிருக்க, சாமான்ய ஒற்றர்கள் என்ன செய்ய முடியும்? படைகளைப் பற்றி விஷயங்களைச் சேகரிக்கலாம், செய்தி அனுப்பலாம். ஆனால் அதல்ல முக்கியம். விக்கிரமாதித்தர் மனத்திலுள்ளதை அறிய வேண்டும்.'' என்றான் இளவரசன்.

இந்தச் சமயத்தில் ஓர் உபதளபதி குறுக்கிட்டு, ''விக்கிரமாதித்த மன்னரை யார் அணுக முடியும்?'' என்று வினவினான்.

''கவிகள் அணுக முடியும்?'' என்று பதில் சொன்னான் பல்லவ இளவல்.

பரமேசுவர வர்மனின் கண்களில் சந்தேகம் படர்ந்தது. ஆசார்யரை வேவுகாரராக்கப் பார்க்கிறாயா ராஜசிம்மா?'' என்று வினவினான் மன்னவன்.

''இல்லை. அந்த உத்தசேமில்லை.''

''வேறு யாரை அனுப்பி விக்கிரமாதித்தன் சித்தத்தை அறிவாய்?''

''ஒரு மாயா தேவியை அனுப்பப் போகிறேன்'' என்ற இளவரசன் மைவிழியைச் சுட்டிக் காட்டினான்.

பரமேசுவர வர்மன் மீசை ஒரு முறை பயங்கரமாக அசைந்தது. கண்களில் கனல் பறந்தது. ''பெண்களை முன்னிட்டுப்பின்னால் நின்று போரிடச் சிகண்டியல்ல, பரமேசுவர வர்மன்'' என்று சொற்களில் உஷ்ணம் தொனிக்கக் கூறினான் பல்லவ மன்னன். ''தவிர இவள்...'' என்று ஏதோ சொல்லத் துவங்கியதைக் குறுக்கிட்டு மறித்த இளவரசன், ''என் பிற்கால மனைவி. பல்லவ சாம்ராஜ்யத்தின் பிற்கால ராணி. அவள் கௌரவத்தில் எனக்கும் அக்கறை உண்டு'' என்று கூறினான்.

அதைக் கேட்டதும் பிரமித்த தந்தையையும் மற்றோரையும் நோக்கி மெள்ள மெள்ளத் தன் திட்டத்தை விவரிக்கலானான் பல்லவ இளவல். பல்லவ ராஜ்யத்தை மீட்கவும் ராமராஜ்யமாக விஸ் தரிக்கவும் அஸ்திவாரமான திட்டம் அது. அதைக் கேட்டு மன்னனும் மற்றோரும் வியந்தனர். மைவிழி மட்டும் திகைத்தாள்-தன்மீது பல்லவ சாம்ராஜ்யத்தின் பெரும் சுமை ஏற்றப்படுவதை உணர்ந்ததால்.

# 75. ஆயத்தம் ஓரிடம், அசைவு ஓரிடம்

**மை**விழியை மாயாதேவி பல்லவசாம்ராஜ்யத்தின் பிற்கால ராணியென்று கூறியதைக் கேட்டதால் பரமேசுவர வர்மனும், தன் மூலம் விக்கிரமாதித்தனின் சித்தத்தை அறியப் போவதாகக் கூறியதைக் கேட்டதால் மைவிழியும், பெரும் குழப்பத்தையும் அதிர்ச்சியையும் அடைந்ததை இளவரசன் காணவே செய்தா னென்றாலும், அவர்கள் உணர்ச்சிகளைப்பற்றி அக்கறை ஏதும் கொள்ளாமல், தனது மனத்தில் சில நாட்களாக உருவெடுத்து, அன்று பூர்த்தி பெற்ற திட்டத்தை விவரிக்கத் தொடங்கினான். அந்தத் திட்டம், மற்றவர்கள் செவிக்கும் இதயத்துக்கும் மிக இதமாயிருந்தது. தவிர அவ்வப்பொழுது மற்றவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் இளவரசன் பட்பட்டென்று பதில் சொல்லி வந்ததால், அந்தத் திட்டத்தைப் பற்றி அவன் தீர்க்காலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறா னென்பதைப் பரமேசுவரவர்மன் தன்னுள் உறுதி செய்து கொண்டான். மைவிழியோ தான் பல்லவ நாட்டு ராணியாகுமுன்னே, அந்தச் சாம்ராஜ்யத்தின் பெரும் சுமை தன்மீது ஏற்றப்படுவதை உணர்ந்தாள். உணர்ந்த பின்னும் இளவரசன் கட்டளைப்படி நடப்பதைத் தவிர வேறு வழியில்லாததை அறிந்ததால் மௌனமே சாதித்தாள்.

தனது திட்டத்தை விவரிக்கு முன்பு, தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, சிறிது சிந்தனையில் இறங்கிய இளவரசன் சில நிமிடங்களுக்குப் பிறகு தலை நிமிர்ந்து, தனது தந்தையை நோக்கி, ''தந்தையே, ஒரு பெண்ணை நான் காஞ்சிக்கு அனுப்புவதால், உங்கள் வீரத்துக்கோ, கண்ணியத்துக்கோ குறை வேற்படாது. தவிர அந்தப் பெண்ணும் அபாயமான அலுவலில் இறங்கப் போவதில்லை. இவளும் ஆசார்யரான தண்டியுமாகச் சேர்ந்து, சில விவரங்களைக் காஞ்சியில் சேகரிப்பார்கள். இதைப்பற்றி இவள் எனக்கு ஓலைகள் அனுப்புவாள். அந்த ஓலைகளை முன்னிட்டு நாம் அவ்வப்பொழுது நமது திட்டங்களில் மாறுதல் செய்துகொள்வோம்'' என்று கூறினான்.

மைந்தன் கூறியதைக் கேட்ட பரமேசுவரவர்மன் முகத்தில் முறுவலும் படர்ந்தது, இகழ்ச்சியும் படர்ந்தது. ''ராஜசிம்மா, சற்று முன்பு ஆசாரியரை வேவுகாரராக்கப் போவதில்லை என்று கூறினாய். இப்பொழுது இவளும் ஆசார்யருமாகச் சேர்ந்து சில விவரங்களைச் சேகரிப்பார்கள் என்று கூறுகிறாய். உன் கூற்று முன்னுக்குப்பின் முரண்பாடாக இருக்கிறதே'' என வினவினான் பரமேசுவரவர்மன்.

''காஞ்சியில் ஆசார்யர் சேகரிக்கப் போகும் விவரங்கள் வேறு, இவள் சேகரிக்கப் போகும் விவரங்கள் வேறு. அது மட்டுமல்ல,

இவளுக்கு முன்பே சந்துகன் காஞ்சிக்குப் போய் இருக்கிறான். முக்கால் வாசிப் பணியை அவன்தான் செய்வான்'' என்றும் அறிவித்தான் இளவரசன்.

சில நாட்களாக அடிபடாத சந்துகன் பெயர் அடிபட்டதும் பலபத்ரவர்மன் இளவரசனை நோக்கி, ''சந்துகன் தங்களுடன் காஞ்சியிலிருந்து தப்பினானல்லவா?'' என்று வினவினான்.

''ஆம்.''

''பிறகு உங்களுடன் வரவில்லையே?''

''அவன் மட்டுமென்ன, சீனனுந்தான் வரவில்லை. எல்லோரும் சாளுக்கியரின் வேட்டுவ மாளிகையில் சிறையிலிருந்தோம். நான் மட்டும் தப்பினேன். இங்கு வர விக்கிரமாதித்த மன்னன் ஓலையைக் கொண்டு மைவிழி அங்கு சென்றதும், சீனனும் ஸ்ரீராமபுண்ய வல்லபரும் இங்கு வந்தார்கள். சந்துகன் மட்டும் காஞ்சி சென்றான்.''

''அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது''

''ஸ்ரீராமபுண்யவல்லபரின் மௌனத்திலிருந்து. அவர் மைவிழியுடனும், சீனனுடனும் இங்கு வந்த பிறகு சந்துகனைப் பற்றிப் பேச்சே எடுக்கவில்லை. ஆகவே சந்துகன் இவர்களிடமிருந்து பிரிந்து சென்றுவிட்டானென்று ஊகித்துக்கொண்டேன். அவன் செல்லக்கூடிய இடம் காஞ்சிதான்'' இதை நன்றாக அழுத்திச் சொன்ன இளவரசன் அறைக் கோடியிலிருந்த சீனனை உற்று நோக்கினான். இளவரசன் சொன்னது சரியென்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினான் சீனன்.

பரமேசுவர வர்மன் சீனனை அருகில் வரும்படி சைகை காட்டினான். அருகில் வந்ததும், தன் அருகில் உட்காரும்படி இடமும் காட்டினான். ஆனால் உட்கார மறுத்த சீனன் நின்று கொண்டே சொன்னான், ''இளவரசர் சொன்னது, அனைத்தும் சரி. வேட்டுவ மாளிகையிலிருந்து கிளம்பிய நாங்கள் இந்த நகர் வரும் முக்கூட்டுச் சாலையில் உள்ள சத்திரத்தில் ஓர் இரவு தங்கினோம். மறுநாள் காலை சந்துகனைக் காணவில்லை.''

''அதனால்...?'' பலபத்ரவர்மன் கேட்டான் சந்தேகத்துடன்.

''காஞ்சிக்குத்தான் அவன் போயிருக்கவேண்டும்'' என்றான் சீனன்.

''இது உன் ஊகந்தானே?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.

சீனன் தனது இரு கைகளையும் மார்பில் கட்டிக்கொண்டான். ''இது என் ஊகம் மட்டுமல்ல. ஸ்ரீராமபுண்யவல்லபரின் ஊகங்கூட'' என்றும் கூறினான்.



ஸ்ரீராமபுண்யவல்லபர் உன்னிடம் சொன்னாரா தமது ஊகத்தைப் பற்றி?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.

''சொற்களால் சொல்லவில்லை.''

''வேறெப்படிச் சொன்னார்?''

''பார்வையால், மறுநாள் சந்துகன் காணவில்லையென்பதைக் கேட்டவுடன், காஞ்யின் சாலையை நோக்கினார் போர் அமைதி மந்திரி. பிறகு தனது வீரன் ஒருவனிடம் ஏதோ சொல்லி, காஞ்சி நோக்கி அனுப்பினார்.''

''இதை நீ இளவரசரிடம் கூறினாயா?''

''இல்லை.''

''ஏன்?''

''இளவரசருக்குச் சந்தேகமிருந்தால் கேட்பார். சந்தேகமில்லா விட்டால் மௌனமாக இருப்பார்.''

இளவரசனின் மனப்போக்கை சீனன் எத்தனை தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறானென்பதை உணர்ந்த பல்லவ மன்னன் மீண்டும் மைந்தனை நோக்கிக் கேட்டான், ''இவன் சொல்வது சரிதானா?'' என்று.

''முற்றும் சரிதான். என் இதயத்தைப் புரிந்துகொள்ளக் கூடியவர் தங்களுக்கு அடுத்தபடியாக ஸ்ரீராமபுண்யவல்லபரும் இந்தச் சீனனுந்தான்'' என்று கூறிய இளவரசன் தந்தையை நோக்கி மேலும் சொன்னான்.

''ஸ்ரீராமபுண்யவல்லபரின் தந்திரத்தால் சிறைப்பட்ட மூவரில் இருவர் வந்துவிட்டோம். மூன்றாமவர் வரவில்லை. ஆகவே சந்துகன் ஏன் வரவில்லை. எங்கு போயிருப்பான் என்பதைப்பற்றி ஊகிப்பது பெரிய விஷயமல்ல.''

அதற்குப் பிறகு அதிகக் கேள்விகளை யாரையும் கேட்கவிடாத இளவரசன், ''சந்துகன் இப்பொழுது காஞ்யிலிருக்கிறான் என்பதைப் பற்றி சந்தேகம் வேண்டாம். அங்கு மைவிழியும் சென்ற பின்பு சந்துகன் இவளைச் சந்திப்பான் என்பதிலும் சந்தேகம் வேண்டாம். அவன் சொல்லும் விவரங்களை ஆசார்யரைக் கலந்துகொண்டு எனக்குச் செய்தி அனுப்புவாள் மைவிழி. விக்கிரமாதித்தர் தலைநகரிலிருந்தும் செய்தி வரும் நமக்கு. இந்த இரண்டு செய்திகளைக் கொண்டு நாம் நமது திட்டத்தை வகுக்க வேண்டும். திட்டத்தின் முதல்படி, விளிந்தைச் சமவெளிப் போருக்குப்பிறகு மிகுந்துள்ள படையை வலுப்படுத்த வேண்டியது. போதாத தளவாடங்களைச் சேகரிக்க வேண்டியது.

இப்பொழுதே இதை ஒரு கோட்டையாகப் படைத்தலைவர் உருவாக்கியிருக்கிறார். இன்னும் அதை அதிகமாக வலுப்படுத்த வேண்டும். இன்னும் பதினைந்து நாட்களுக்குள் அந்த அலுவல் முடிந்துவிடும். விளிந்தை நமது போர்த் திட்டத்தின் போர்ச் சக்கரத்தின் அச்சு. ஆனால் அச்சின் மீது சுழலும் சக்கரத்தின் விளிம்புகள் வேறிடத்திலிருக்கும்'' என்று கூறினான்.

இளவரசனின் திட்டத்தை ஓரளவு ஊகித்துக் கொண்டாலும் சரியாக உணர முடியாத பலபத்ரவர்மன் கேட்டான், ''இளவரசர் சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டும்'' என்று

இளவரசன் உடனடியாக விளக்கவில்லை. பலபத்ரவர்மனை நோக்கிக் கேட்டான். ''காஞ்சியைக் கைப்பற்ற ஸ்ரீராமபுண்யவல்லபர் என்ன செய்தார்?'' என்று.

''ஆயுதங்களையெல்லாம் ரகசியமாகக் கங்க நாட்டில் செய்தார். ஆகையால் போர் ஏற்பாடுகள் நமக்குத் தெரியவில்லை. வாதாபி சர்வ சாதாரணமாயிருந்தது. ஆனால் திடீரென்று தளவாடங்கள் வாதாபிக்கு அனுப்பப்பட்டன. மறுநாள் விக்கிரமாதித்தன் பெரும்படை ஆயுத வசதிகளுடன் காஞ்சியை நோக்கிப் புறப்பட்டது. ஆயத்தம் ஓரிடம், அசைவு ஓரிடம் என்ற தந்திரம் கையாளப்பட்டது'' என்று விளக்கினான் பலபத்ரவர்மன்.

''இந்தத் தந்திரத்தால் காஞ்சியை நாம் கைவிட்டோம்'' என்று அறிவித்தான் பல்லவ இளவல்.

''ஆம்'' என்று பல்லவ மன்னனும் பலபத்ரவர்மனும் ஒரே சமயத்தில் ஒலி எழுப்பினார்கள்.

இளவரசன் தனது ஆசனத்தைவிட்டு எழுந்திருந்தான். கைகளை மார்பில் கட்டிக்கொண்டு அவர்கள் முன்பு ஆஜானுபாகுவாக நின்றான். ''தந்தையே படைத் தலைவரே இப்பொழுது சிந்தியுங்கள். ஸ்ரீராமபுண்யவல்லபரின் முறையை நேர் எதிராக மாற்றினால் எப்படியிருக்கும்?'' என்று கேட்கவும் செய்தான்.

''எப்படி மாற்றச் சொல்கிறாய் ராஜசிம்மா?'' என்று வினவினான் பல்லவ பரமேசுவரவர்மன்.

''இந்த விளிந்தையை வாதாபி என்று வைத்துக்கொள்ளுங்கள். இங்கு நாம் ஆயுதங்களையும் ஆயுத வண்டிகளையும், போருக்கான இதர ஏற்பாடுகளையும் செய்கிறோம். இருக்கிற படையை மட்டும் இங்கு வைத்திருக்கிறோம். படை இங்கு திரட்டப்படுவதில்லை'' என்று கூறி தந்தையையும், படைத் தலைவனையும் உற்று நோக்கினான்.



''வேறெங்கு திரட்டுவாய்?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.

''வடகிழக்கேயுள்ள ஆந்திர நாட்டிலிருந்து திரட்டுவோம். காஞ்சி வட்டாரங்களில் சிதறியிருக்கும் நமது வீரர்களையும் திரட்டுவோம். அவர்கள் பத்து இருபது பேர்களாக சின்னஞ்சிறு கோஷ்டிகளாக மேற்கிலுள்ள மலைத்தொடர் காடுகளுக்கு வந்து சேருவார்கள். ஆயுதம் நாட்டில் உண்டாகும். படை காட்டில் உறையும். இங்குள்ள ஆயுதங்கள் சிறுசிறு அளவுகளில் மேற்கு மலைத்தொடர் காட்டில் உள்ள படை வீரருக்குப் போகும். அங்கு பெரும் படை சித்தமானதும், இங்குள்ள நமது அஸ்திவாரப் படை நகரும். அதே சமயத்தில் காட்டுப் பெரும் படையும் நகரும். இரண்டும் தெற்கே செல்லும் சாலையில் இணையும்'' என்று விளக்கினான் இளவரசன்.

அவன் திட்டத்தை மற்றவர்கள் பொதுவாகப் புரிந்து கொண்டாலும், தெற்கே செல்லும் சாலையில் எதற்காகப் படைகள் ஒன்று சேரவேண்டும் என்பது புரியாததால், அதைப் பற்றி பரமேசுரவர்மனே கேட்டான். ''காஞ்சி இங்கிருந்து கிழக்கிலல்லவா இருக்கிறது?'' என்று.

''ஆம்.''

''பின் எதற்காக நமது படைகள் தெற்கு நோக்கிச் செல்ல வேண்டும்?'' என்று மீண்டும் வினவினான் மன்னவன்.

''சாளுக்கியர்களுக்கும் நமக்கும் ஏற்படும் முடிவான போர் தென் திசையில்தான் ஏற்படும்'' என்று கூறினான் இளவரசன்.

''ஏன் அப்படி?''

''இந்த இடத்தில் நம்மை முறியடிப்பது விக்கிரமாதித்த மன்னருக்கு மிகச் சுலபம். சமவெளிப் போரால் நமது படை பலவீனமடைந்திருக்கிறது. கங்க மன்னனைச் சூட்டோடு சூடாகத் தாக்கச் சொல்லி காஞ்சியிலிருந்து ஒரு படை அனுப்பி இந்த நகரத்தின் பின் பகுதியை விக்கிரமாதித்தர் தாக்கினால் நாம் படுசூர்ணமாகி விடுவோம். சாளுக்கிய மன்னர் ஏன் அப்படிச் செய்யவில்லை? எதற்காகக் கங்க மன்னனை சொந்த நாடு திரும்ப உத்தரவிட்டார்?'' என்று கேள்வி கேட்டான் இளவரசன்.

இதற்கு யாரும் பதில் சொல்லாதிருக்கவே இளவரசனே தொடர்ந்து சொன்னான் ''இந்த விளிந்தையைத் தாக்குவது விக்கிரமாதித்தருக்கு அத்தனை பெரிய விஷயமல்ல, ஆனால் அவர் இந்தச் சிறு வெற்றிகளை விரும்பவில்லை. விக்கிரமாதித்தர் பெரும்

சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்க எண்ணுகிறார். இப்பொழுது வாதாபி முதல் காஞ்சிவரை அவரது ஆதிக்கத்திலிருக்கிறது. காஞ்சி வெற்றியுடன் நின்று கைவசம் இருக்கும் நாட்டைப் பலப் படுத்துவதானால் அவர் இந்த விளிந்தையைத் தாக்கலாம். ஆனால் அவர் கண் வீச்சு பெரும் விஸ்தீரணமுள்ள சாம்ராஜ்யத்தைப் பார்க்கிறது. தவிர பாண்டியர்களுக்கும், சாளுக்கியர்களுக்கும் எற்கெனவே நேச ஒப்பந்தமிருக்கிறது இருவரும் நமது எதிரி களாதலால். ஆகவே பாண்டிய நாட்டு எல்லைவரை, அதாவது சோழநாடு உட்பட இருக்கும் நிலத்தை முதலில் விழுங்குவது விக்கிரமாதித்த மன்னரின் திட்டமாக இருக்கும். காஞ்சியிலிருந்து உறையூர் வரை வசப்படுத்திக் கொள்ள தீவிர ஏற்பாடோ போர் முயற்சியோ தேவையில்லை. படைகளை நடத்திச் சென்று வெகுவாகச் சுலபமாக உறையூர் அடைந்துவிடலாம். அப்பொழுது வாதாபியிலிருந்து உறையூர் வரை பெரும் சாளுக்கிய சாம்ராஜ்யம் ஏற்படும். அத்தகைய பெரும் சாம்ராஜ்யத்தை வலுப்படுத்துக் கொள்ள ஆங்காங்கு படைப் பகுதிகளை நிறுத்த வேண்டியிருக்கும், அப்படி நிறுத்தி விட்ட பிறகு விக்கிரமாதித்தரின் கண்கள் நம்மீது திரும்பும். அப்புறம் நமது படை பலத்தை அழிப்பது விக்கிரமாதித்தனுக்கு ஒரு பொருட்டல்ல. நாம் விக்கிரமாதித்தன் நிலையிலிருந்தால் இதைத்தான் செய்வோம்...''

இப்படிச் சொல்லி நிதானித்த மைந்தனை வியப்பு நிரம்பிய கண்களால் பார்த்தான் பல்லவ மன்னன். ''முற்றும் சரி முற்றும் சரி'' என்று பாராட்டவும் செய்தான்.

அந்தப் பாராட்டுதலை ஏற்காத இளவரசன் சொன்னான் ''இந்தத் திட்டம் ஏதும் புதிதல்ல'' என்று.

''புதிதல்லவா?'' மன்னன் கேள்வியில் வியப்பு ஒலித்தது.

''அல்ல.''

''வேறு யார் இத்தகைய திட்டத்தை வகுத்திருக்கிறார்கள்?''

''எனக்கு யார் பெயரை வைத்திருக்கிறீர்கள்?''

''உனது பாட்டன் நரசிம்ம வர்மன் பெயரை, அதைச் சொல்லி அழைக்க முடியாததால், உன் தாய் ராஜசிம்மன் என்று இரண்டாவது பெயரைச் சூட்டினாள். அதற்கும் இத்திட்டத்திற்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டான் பல்லவ மன்னன்.

''நிரம்பச் சம்பந்தமிருக்கிறது தந்தையே. பல்லவ காஞ்சியி லிருந்து தெற்கே சோழர்களை அடக்கிய பிறகு, மாமல்லர் வடக்கிலுள்ள வாதாபியை நோக்கிச் சென்றார். அழித்தார். அவர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றார். விக்கிரமாதித்தன் வடக்கிலிருந்து தெற்கில் செல்கிறான். அதே பாடந்தான், அதே பழைய கதைதான்'' என்று விளக்கினான் இளவரசன்.



''அப்படியானால் விக்கிரமாதித்த மன்னருடை சாம்ராஜ்யம் உறுதியென்று சொல்'' என்றான் பரமேசுவர வர்மன்.

''இல்லை'' என்றான் இளவரசன் திட்டமாக

''ஏன் இல்லை?''

''விக்கிரமாதித்தரைத் தென்னாட்டில் காலூன்ற விடப் போவதில்லை நான். அவர் தெற்கே சென்றால், நான் மேற்கே செல்வேன்.'' புதிர் போட்டான் இளவரசன்.

''சென்று என்ன செய்வீர்கள்?'' வினவினான் பலபத்ரவர்மன்.

விக்கிரமாதித்தன் திட்டத்துக்குத் தான் தயாரித்துள்ள மாற்றுத் திட்டத்தைப்பற்றிக் கோடிதான் காட்டினான் இளவரசன். அதைக் கேட்டதும் மிக சூட்சும புத்தியுள்ள பரமேசுவரவர்மன் எழுந்திருந்து தனது புதல்வனை அத்தனை பேருக்கும் எதிரில் அணைத்துக் கொண்டான். ''பல்லவ சாம்ராஜ்யம் உன்னால் காப்பாற்றப்படும்'' என்றும் கூறி மைந்தனின் முரட்டுக் குழல்களைக் கோதிவிட்டான்.

## 76. மூன்று அம்புகள்

மைந்தனை மார்புற அணைத்ததால் மார்பின் படுகாயம் பல்லவ மன்னனுக்குச் சிறிது வலியை அளித்தாலும், அந்த வலியிலும் அவனுக்கு ஆனந்தமே இருந்தது. அப்படியொரு வீரனைப் பல்லவமரபுக்கு ஈன்று அளித்த பெருமையால், எந்தத்தந்தையும் மகனை நேருக்கு நேராகவோ மறைவில் மற்றவரிடமோ பாராட்டக் கூடாது என்ற விதியையும் மீறிப் பல்லவ பரமேசுவரவர்மன் மைந்தனைக் கட்டியணைத்துப் பாராட்டவும் செய்தானென்றால் மீறிவிட்ட உணர்ச்சிகளால் விளைந்த நிலை அது. உணர்ச்சிகள் மீறிவிட்டதற்கு, மிகுந்த சூட்சுமத்துடனும் தீர்க்காலோசனையுடனும் பல்லவ இளவல் தீட்டியிருந்த போர்திட்டமே காரணம்.

தந்தையின் அணைப்பிலிருந்து நீங்கிய பல்லவ இளவல், சீனனை நோக்கிச் சிறிது கண்களைக் காட்டவே, சீனன் அறை மூலைக்குச் சென்று அங்கிருந்து பலகையொன்றையும், சுண்ணாம்புக் கட்டியொன்றையும் எடுத்துகொண்டுவந்தான். அவற்றைக் கையில் வாங்கிக் கொண்ட பல்லவ இளவல், பல கோடுகளையும் இடங் களையும் சுண்ணாம்புக் கட்டியால் பலகையில் தீட்டினான் நீண்ட

நேரம். பிறகு அந்தப் பலகையைத் தந்தைக்கும் மற்றோருக்கும் இடையிலிருந்த ஆசனத்தில் வைத்து, ''இதை நன்றாகக் கவனியுங் கள்'' என்று மற்றோரை நோக்கிக் கூறினான். பல்லவர் படைத் தலைவனும், மற்ற உபதளபதிகளும் மட்டுமன்றி, பரமேசுவர வர்மனும் நீண்ட நேரம் பல்லவ இளவல் வரைந்த வளைந்த கோடுகளையும், இடையிடையே புள்ளியளவில் சதுரம் சதுரமாகக் காட்டிய இடங்களையும் கூர்ந்து நோக்கினான். அவர்கள் கண் முன்பு விரிந்த அந்தக் கோடுகளில் காவிரி, பாலாறு, கிருஷ்ணா முதலிய நதிகளும், சதுரங்களில் காஞ்சி, வாதாபி, தலைக்காடு, உறையூர் முதலிய முக்கிய நகரங்களும் காணப்பட்டதைப் புரிந்துகொண்ட மன்னனும் மற்றோரும் இளவரசனின் விளக்கத்துக்காகக் காத்திருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்ததைப் புரிந்துகொண்ட பல்லவ இளவல், அந்தப் பலகையின் மத்தியிலிருந்த காவிரிக் கரையில் ஒரு புள்ளியை வைத்து, ''இதுதான் விளிந்தை, இங்கு இப்பொழுது நாமிருக் கிறோம்'' என்றுகூறி, பலபத்ரவர்மனை நோக்கி ''நிலைமை புரிகிறதா?'' என்று வினவினான்.

''புரிகிறது. நாமிருக்கும் இடத்திற்குத் தென்மேற்கில் கங்கர் களின் தலைநகரான தலைக்காடும், வடகிழக்கில் காஞ்சியும், வட மேற்கில் கிருஷ்ணா நதியின் உபநதியொன்றுக்கு அப்புறத்தில், மலைப்புறத்தில் சாளுக்கியர்களின் தலைநகரான வாதாபியும், நமக்கு தென்கிழக்கில் உறையூரும் இருக்கின்றன. நமது எதிரிகளின் வலுவான கோட்டைகளுக்கிடையில் இந்த விளிந்தை இருக்கிறது. கங்கர்களும் விக்கிரமாதித்தன் படைகளும் தென்கிழக்கிலிருந்தும் தென்மேற்கி லிருந்தும் முறையே நம்மைத் தாக்கினால், விக்கிரமாதித்தன் புதல்வனான விநயாதித்தன் வடமேற்கிலிருந்து தாக்கலாம். அப்படித் தாக்கப்பட்டால் நமது கதி அதோ கதிதான்'' என்று கூறிய பலபத்ரவர்மன். கோடுகளாக இருந்த நதிகளையும், சதுரங்களாக இருந்த நகரங்களையும் ஆள்காட்டி விரலால் கட்டிக்காட்டினான். கூட இருந்த உப தளபதிகளும் அவன் சொன்னதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையாட்டினர்.

இளவரசன் இளமுறுவல் கொண்டான் வலுவும் அழகும் வீரமும் நிறைந்த தனது உதடுகளில், ''விளிந்தையிலுள்ள நமது சிறுபடையை ஒடுக்க இத்தனை பேர் படையெடுப்பும் அவசியமா?'' என்று வினவவும் செய்தான்.

''அவசியமில்லை. விக்கிரமாதித்தன் படை மட்டுமேபோதும் நம்மை அழிக்க'' என்று ஒப்புக் கொண்டான் பலபத்ரன்.



''அப்படியிருக்க இத்தனை படைகள் பல திக்குகளிலிருந்து நம்மீது பாய்வானேன்?'' என்று வினவினான் பல்லவ இளவல்.

அதற்கு யாரும் பதில் கூறாமல் போகவே இளவரசனே பதில் கூறலானன். ''ஒரு முறை முறியடிக்கப்பட்டிருக்கும் நமது படையை அழிப்பது விக்கிரமாதித்தனின் உத்தேசமானால், கங்கனைச் சொந்த நாடு திரும்ப உத்தரவிட்டிருக்க வேண்டாம். இந்த நகரத்தை முற்றுகையிடச் சொல்லி, நாற்புறமும் உணவுப் பொருள்களோ தளவாடங்களோ இங்கு வராமற் செய்யும்படி விக்கிரமாதித்தன், கங்க மன்னனுக்கு உத்தரவிட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. நம்மைச் சுதந்திரமாக விட்டிருக்கிறான் படை திரட்டவும், மீண்டும்போரிடவும். இது ஏதோ அவன் காட்டும் தயவு என்று நினைக்கவேண்டாம். உறையூர் வரை ஆக்ரமிக்க விரும்பும் விக்கிரமாதித்தன், நமது முறிந்த படையுடன் போரிட விரும்ப வில்லை. தவிர அவன் ஆக்ரமித்த இடங்களில் ஆங்காங்கு சிறு படைகளை நிறுத்தினாலே நம்மை அவன் காஞ்சிப் பக்கம் திரும்பாமல், கை காலாட விடாமல், செய்துவிட முடியும். கங்கனைப் போரிட வேண்டாமென்று திரும்பச்செய்தானே தவிர, நம் நடவடிக்கைகள் மீது ஒரு கண்ணை வைக்கும்படி கண்டிப்பாய்ச் சொல்லியிருப்பான். அவன் படைப் பிரிவுகளில் சில காஞ்சிக்கு வரவொட்டாமல் நம்மைத் தடைசெய்யமுடியும். இப்படி இருபுறமும் நம்மீது ஒரு கண்ணை வைத்துக்கொண்டு, தென்கிழக்கே உறையூர் செல்வான் விக்கிரமாதித்தன். நாம் அவன்படைகளின் சிறு பகுதிகளால் ஆங்காங்கு இடப்பட்ட வேலிகளுக்குள் சிக்கியிருப்போம். இதைவிட நம்மை அசைவற்று இருக்கச் செய்ய வேறு திட்டம் கிடையாது...''

''உண்மை'' என்றான் பலவத்ரவர்மன்.

''ஆனால் விக்கிரமாதித்தனின் திட்டத்தில் ஒரே ஓர் ஊனமிருக்கிறது'' என்றான் இளவரசன்.

''என்ன அது?'' பலபத்ரவர்மனும், உபதளபதிகளும் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

''இப்பொழுது கவனியுங்கள். விளிந்தை, தலைக்காடு, உறையூர் எல்லாம் காவிரிக் கரையிலிருக்கின்றன. காஞ்சிகூடச் சற்று மேலே பாலாற்றுக்கருகில் இருக்கிறது. நமக்கு ஓரளவு அருகிலுள்ள இடங்கள் இவைதான். வாதாபி வடமேற்கில் கிருஷ்ணாவின் ஆரம்பத்தில் சற்றுக் கீழே வந்து கலக்கும் உபநதி மீதியிருக்கிறது. தவிர வாதாபியை மலைக் கோட்டையாக நிர்மாணித்திருக்கிறார் முதலாவது புலிகேசி.

இரண்டாவது புலிகேசி அதிகமாக அதைத் திடப்படுத்தியிருக்கிறார். ஆகவே முறியடிக்கப்பட்ட, பலமிழந்த, இப்படையைக் கொண்டு வடமேற்கே வெகுதூரத்திலுள்ள சாளுக்கிய நாட்டை நாம் நெருங்குவோமென்று விக்கிரமாதித்தன் நினைக்க மாட்டான். தனது புதல்வனான விநாயதித்தனை நம்மீது ஒரு கண் வைக்கும்படி விக்கிரமாதித்தன் ஏற்பாடு செய்திருந்தாலும் தீவிர எதிர்ப்பையோ படையெடுப்பையோ அந்தத் திசையில் எதிர்பார்க்க மாட்டான். எதிர்பாராத இடத்தை நோக்கி நமது படைநகரும்'' என்று கூறிய இளவரசன் ஆள்காட்டி விரலால் படை செல்லக்கூடிய திசையையும் சுட்டிக்காட்டினான்.

அதுவரை பேசாதிருந்த பரமேசுவரவர்மன் ஒரு கேள்வி கேட்டான். ''நமது படையை வலுப்படுத்த வசதியிருக்கிறதா உனக்கு?'' என்று.

இளவரசன் சொன்னான்

''இச்சமயம் இல்லை.''

''வசதி ஏற்பட வழியிருக்கிறதா?''

''இருக்கிறது.''

''அந்த வழி என்னவோ''

''யாரிடம் நாம் நமத' வசதிகளைப் பறி கொடுத்தோம்?''

''சாளுக்கியர்களிடம்.''

''அவர்களிடமிருந்து வசதிகளைப் பெறுவோம்.''

''எப்படி?''

இளவரசன் சற்றுச் சிந்தித்துவிட்டுச் சொன்னான் ''நமது ஆயத்தைப் பற்றியும், படை திரட்ட வேண்டிய வழிகளைப் பற்றியும் ஏற்கனவே சொன்னேன். அதாவது வடமேற்கிலுள்ள சாளுக்கிய நாட்டைத் தாக்க முயலுவதாகவும் கூறினேன். காஞ்சியிலுள்ள செல்வம் சாளுக்கியர்களின் கையிலிருக்கிறது. சாளுக்கியர் செல்வம் நமது கைக்கு வரப் போகிறது. பெரும் படை திரட்டப் பெரும் பணம் வேண்டும். அந்தப் பணத்தை நான் சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டு வருகிறேன். சாளுக்கிய நாட்டின் மீது நானே படையெடுத்துச் செல்கிறேன்.

இதைக் கேட்ட பல்லவ மன்னனும், தளபதியும் வியப்புடன் இளவரசனை நோக்கினர். ''சாளுக்கிய நாட்டைத் தாக்குவது அத்தனை சுலபமா?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.



''சுலபமல்ல. தவிர நான் வாதாபியை நோக்கிச் செல்வேனே தவிர அதை அணுக மாட்டேன். அதன் கோட்டைப்புறம் போகவும் மாட்டேன்'' என்றான் இளவரசன்.

''போகாமல்?''-பலபத்ரன் கேள்வியில் அவநம்பிக்கை அதிகமாக ஒலித்தது.

அவநம்பிக்கையின் ஒலியைக் கவனிக்கவே செய்த இளவரசன். ''படைத் தலைவரே பழைய நாட்டுக்கதை ஒன்று இருக்கிறது அது ஒரு கிழவி சொன்ன கதை. அதைச் சொல்லட்டுமா?'' என்று வினவினான்.

பலபத்ரவர்மன் குழப்பம் அதிகமாயிற்று. கிழவி சொன்ன நாட்டுக் கதைக்கும் சாளுக்கியர்கள் மீது படையெடுப்பதற்கும் என்ன சம்பந்தம் என்பது அவனுக்குப் புரியவில்லை. இளவரசனே விளக்கினான். ''மன்னனொருவனின் உரிமை இன்னொருமன்னனால் பறிக்கப்பட்டது. பறிகொடுத்தவன் பலமுறை எதிரிமீது படையெடுத் தான், முறியடிக்கப்பட்டான் மீண்டும் மீண்டும். ஆகவே மனம் சலித்து உணவின்றித் தவித்து ஒரு மூதாட்டியின் வீட்டுக்குச் சென்று பசிக்கிறது என்றான் தோல்வியுற்ற மன்னன். கிழவி அவனுக்கு ஒரு கிண்ணத்தில் சுடச்சுடச் சோறு பிசைந்து கொடுத்தாள். சோறு தின்னக் கிண்ணத்தில் கையை விட்டான் தோல்வியடைந்த மன்னன். கை சுட்டதால் 'ஐயோ' என்று அலறிக் கையை எடுத்துக் கொண்டான். கிழவி கேட்டாள் அவனை 'உன் தோல்விக்குக் காரணம் இப்பொழுது புரிகிறதா?' என்று 'புரியவில்லை'யென்றான் முறியடிக்கப்பட்ட மன்னன். 'கிண்ணத்தின் மமத்தியில் அவசரப்பட்டுக் கையை விட்டதால் கையைச் சுட்டுக் கொண்டாய். ஓரத்திலிருந்து உணவைச்சிறிது சிறிதாக எடுத்துச்சாப்பிடு' என்றாள் கிழவி. சிறிது சிறிதாகக் கிண்ணத்தின் ஓரத்திலிருந்து உணவு எடுத்துப் புசித்தான் மன்னன். கையில் சூடுபடவில்லை. முழுதும் உணவை விழுங்கினான். அப்பொழுது கிழவி, 'நாட்டை வெற்றி கொள்ள விரும்புபவன். நாட்டின் எல்லைகளைச் சிறிது சிறிதாகக் கைப்பற்ற வேண்டும்; அப்படிச் செய்தால் முழுவதையும் விழுங்கலாம் கிண்ணத்தின் சோற்றை விழுங்கியதுபோல்' என்று அறிவுரை கூறினாள். அந்த அறிவுரை அவனுக்கு மட்டுமல்ல...''

இதைக்கேட்ட பலபத்ரவர்மன் புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையசைத்தான். இளவரசன் மேலும் கூறினான்: ''விக்கிரமாதித்தன் தெற்குநோக்கிக் கிளம்பியதும், நாம் சிறு படையுடன் சாளுக்கிய நாடு செல்வோம். அந்த நாட்டின் விளிம்புகளில் தாக்கி, கிராமங்களுக்கு வரி

விதிப்போம். ஆங்காங்குள்ள பொக்கிஷங்களிலிருந்து பணம் திரட்டுவோம். நாட்டின் முனைகள் தாக்கப்படும்போது விநயாதித்தன் நம்மை எதிர்க்க வருவான். எந்த இடத்தில் சந்தித்தால் நமக்கு அனுகூலமோ அங்கு சந்தித்து அவனை முறியடிப்போம். ★அது நமது இரண்டாவது போர்முனை. அங்கிருந்து கிடைக்கும் பொருளைக் கொண்டு வந்து இங்கு படை திரட்டுவோம்...''

இது மிகவும் துணிகரமானதும் அபாயமானதுமான திட்டமென்பதை உணர்ந்ததால் பலபத்ரவர்மன் மௌனமாக இருந்தான். உபதளபதி ஒருவன் மட்டும் இளவரசனை நோக்கி, ''இத்திட்டம் அபாயமானது. நலிந்த படையுடன் எதிரி நாட்டில் நுழைகிறோம்'' என்று சுட்டிக்காட்டினான்.

''அபாயத்தால் மனிதன் மனம் துணிவு பெறவேண்டும். துணிவினால்தான் இக்கட்டான நிலையைச் சமாளிக்க முடியும். இந்தப் படையெடுப்பைத் தந்தையின் உத்தரவு பெற்று நானே நடத்தப் போகிறேன். அபாயமில்லாமல் உலகத்தில் முன்னேற்றமில்லை. முன்னேற்றமில்லாமல் வாழ்க்கையில்லை விக்கிரமாதித்தன் உறையூரை அடைந்துவிட்டால், தனது தலைநகரிலிருந்து தொலைதூரம் போய்விடுகிறான். சாளுக்கிய நாட்டின் விளிம்புகளை நாம் விழுங்குவதையோ விநயாதித்தனும், அவன் மகன் விஜயாதித்தனும் நம்மை எதிர்த்து வருவதையோ, அவன் தடுக்க முடியாது. அப்படியே தடுக்க முற்பட்டாலும் அவன் உறையூரிலிருந்து கிளம்புவதற்குள் நான் முன்னமே சொன்னபடி நமது படை தெற்கு நோக்கி நகர்ந்துவிடும்'' என்று கூறினான் இளவரசன் சர்வசாதாரணமான குரலில். அத்துடன் நடுவிலிருந்த பலகையில் மூன்று அம்புகளையும் தீட்டிவிட்டு, ''இந்த முதல் அம்பு நமது முதல் படையெடுப்பு நடக்கும் வழி, அதாவது இங்கிருந்து சாளுக்கிய நாடு செல்கிறது. அங்கிருந்து தென்மேற்குப் புறமாகவே மலைத் தொடரின் வழியே விளிந்தைக்குத் திரும்புவதை இரண்டாவது அம்பு குறிக்கிறது. மூன்றாவது அம்பு நான் அழைத்துவரும் படையும், மலைத்தொடர் காட்டில்மேல் திசையில் தயாராகும் படையும் இணைந்து தெற்கே உறையூர் செல்வதைக் குறிக்கிறது'' என்றான்.

---

• *கங்கனிடம் தோல்வியடைந்தபிறகு, பரமேசுவரவர்மன் சிறிதும் சளைக்காமல் சாளுக்கிய நாட்டுக்கு ஒரு தனிப்படை அனுப்பினான். அப்படை விநயாதித்தனையும் விஜயாதித்தனையும் தோற்கடித்துப் பெரும் செல்வத்தை அள்ளி வந்தது —A History of South India-By Sri K.A.N. Sastri-P. 147.*



''இப்பொழுது உடனடியாகச் செய்யவேண்டியது என்ன?'' என்று கேட்டான் பரமேசுவரவர்மன்.

''நாம் மூவரும் மூன்று திக்குகளில் செல்கிறோம்!''

''நாம் மூவருமா?''

''ஆம். தாங்கள், நான், மைவிழி மூவரும் புறப்படுகிறோம். இன்றே மைவிழி காஞ்சிக்குப் புறப்படுகிறாள். *நாளை நீங்கள் ஆந்திர நாடு சென்று முடிந்த படையைத் திரட்டி வாருங்கள் இங்குள்ள படையை நானும் பலபத்ரவர்மரும் பலப்படுத்திக் கொண்டு இன்னும் ஒரு வாரத்திற்குள் சாளுக்கிய நாடு செல்கிறோம்.'

''சரி. உன்னிஷ்டம்.''

தந்தையின் திருவடியில் முடியை வைத்து வணங்கினான் இளவரசன். ''தந்தையே, தலையிருக்க வால் ஆடக்கூடாது. ஆனால் இன்றையநிலையில் நாமிருவரும் தனித்தனியாக அலுவல் புரியவேண்டியிருக்கிறது. ஆசி கூறுங்கள் உங்கள் மகனுக்கு'' என்று வணக்கத்துடன் கேட்டுக் கொண்டான். மைந்தன் தலையில் கைவைத்து ஆசீர்வதித்தான் பல்லவ மன்னன். ''ராஜ சிம்மா! நீ இதோ பலகையில் போட்டிருக்கும் மூன்று அம்புகளும் அந்தந்தத் திசையில் பாயட்டும். பல்லவர் பிற்காலம் பொற்காலமாகட்டும்'' என்று கூறி மைந்தனின் தலைக்குழலைத் தடவிக்கொடுத்தான் '''பலபத்ரவர்மரே! நாளை நான் ஆந்திரம் செல்ல ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறி மைவிழியைப் பார்த்தான்.

''மைவிழியை நான் அனுப்பிவைக்கிறேன்'' என்று கூறினான் இளவரசன்.

இந்த மந்திராலோசனை விளிந்தையில் நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு விக்கிரமாதித்தனும் மிக ரகசியமாக மந்திராலோசனையில்இறங்கினான் காஞ்சியில் அவன் திட்டத்துக் கும் யோசனைக்கும் பலத்த எதிர்ப்பு இருந்தது. எதிர்ப்பை அலட்சியம் செய்தான் விக்கிரமாதித்தன். அவன் நினைப்பின் வீச்சு, நெஞ்சின் கனவு, நீண்ட தூரம் சென்றது. அவன் மனத்தில் விரிந்தது இணையற்ற ஒரு சாம்ராஜ்யம்.

---

• *பரமேசுவரவர்மன் ஆந்திரநாடு சென்று, பெரும்படை திரட்டி, தெற்கே வந்து, வெற்றியில் வெறி கொண்டிருந்த சாளுக்கியனைத் திடீரென்று எதிர்த்தான்:- ஈராஸ் பாதிரியார் கூறுவது. தகவல்: டாக்டர் ராசமாணிக்கனாரின் பல்லவர் வரலாறு - பக்கம் - 137.*

# 77. விக்கிரமாதித்தன் மந்திராலோசனை

மகத்தான சிற்பக் கலைச் செல்வத்துக்கும் மக்களின் பக்திச் செல்வத்துக்கும், மகேந்திரவர்மன் கால முதல் பல்லவ மன்னர்களின் வீரமெனும் செல்வத்துக்கும், பிரத்தியட்ச அத்தாட்சி போல் விளங்கிய காஞ்சி மாநகரின் மேலை ராஜவீதியிலிருந்த பெரிய அரண்மனையின் மந்திராலோசனை மண்டபத்தின் நட்ட நடுவிலிருந்த அரியணையில் அமர்ந்திருந்த சாளுக்கிய முதலாம் விக்கிரமாதித்தன் முகத்தில் ஜெயஸ்ரீயும், அன்று அமாவாசை யாகையால் விடியற்காலையில் நீராடி க்ஷத்திரியர்களுக்கான கோபீ சந்தனமும் கலந்து ஜொலித்துக் கொண்டிருந்தாலும், அவன் இரண்டு நாட்களாக யோசித்து முடிவுக்கு வந்துவிட்ட சாம்ராஜ்ய விஸ்தரிப்பைப் பற்றிய திட்டத்தால் மகிழ்ச்சியும் அவன் முகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அவனெதிரே நானாவித ஆசனங்களில், அர்த்த சந்திர வட்டமாக அமர்ந்திருந்த தளபதி, உபதளபதிகள் முகத்திலும் அவனுக்கு வெகு அருகில் கிட்டத்தட்டச் சரிசமமான மஞ்சத்தில் வியாக்ராசனம் விரித்து அமர்ந்திருந்த சாளுக்கிய' மன்னனின் போர் அமைதி அமைச்சர் ஸ்ரீராமபுண்ய வல்லபர் முகத்திலும், கவலையில்லாவிட்டாலும் மன்னன் இந்த மந்திராலோசனைக்கு அழைத்திருக்கும் காரணம் எதுவாயிருக்கும் என்ற சிந்தனை படர்ந்து கிடந்தது.

விக்கிரமாதித்த மன்னனின் கண்களோ எதிரேயிருந்த யாரையும் கவனிக்காமல் எங்கோ வெகு தூரத்தைக் காண்பது போலும், ஆழ்ந்த சிந்தனையில் திளைத்தன போலும் கனவுப் பார்வையை வீசிக் கொண்டிருந்தன. இப்படிப் பல நிமிடங்கள் ஓடிய பின்பே, எதிரே அமர்ந்திருந்த தளபதி, உபதளபதிகளையும் பக்கத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீ ராமபுண்யவல்லபரையும் அவனது கண்கள் வட்டமிட்டன. உதடுகளும் மெல்லத் திறந்து சொற்களை உதிர்த்தன. ''ஸ்ரீராமபுண்யவல்லபரே, தளபதி, உபதளபதிகளே! காஞ்சியை நாம் வெற்றி கொண்டு ஒரு மாத காலம் ஓடிவிட்டது. இந்த ஒரு மாத காலத்தில் நாம் செயலற்றுக் காஞ்சியில் உட்கார்ந்துவிட்டோம். எதிரிகள் செயல்களில் இறங்கி முறியடிக்கப்பட்டார்கள். இப்போது நிலைமை பல்லவத் தலைநகரில் திடப்பட்டு விட்டது. அடுத்து நடக்க வேண்டியதைப்பற்றி யோசிக்கவே இந்த மந்திராலோசனை சபையைக் கூட்டினேன். காஞ்சியைக் கைப்பற்றிவிட்டுக் கையைக் கட்டிக்கொண்டு உல்லாசப் பொழுது போக்க நாம் வாதாபியிலிருந்து வரவில்லை என்பதை நீங்கள் உணருவீர்கள் என்று நினைக்கிறேன்'' என்று அழுத்தந்திருத்தமாய்ப் பேசிய விக்கிரமாதித்தன் மற்றவர் களிடமிருந்து பதிலை எதிர்பார்த்து அரியணையில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

தளபதிகளும், உபதளபதிகளும், மன்னவன் மனத்தில் ஏற்கெனவே திட்டமொன்று உருவாகிவிட்டதைப் புரிந்து கொண்டதால், பதிலேதும் சொல்லாமல் வருவது மன்னன் வாயினாலேயே வரட்டுமென்று வாளாவிருந்தனர். சாதாரணச் சமயங்களில் முதலிலேயே யோசனை கூறுபவரும் மன்னன் உத்தேசத்துக்கு மாறான கருத்துக்களையும் துணிவுடன் தெரிவிப்பவரு மான போர் அமைதி மந்திரியான ஸ்ரீராமபுண்யவல்லபர் கூட அன்று ஏதும் கூறாமல் மௌனமாகவே மஞ்சத்தில் அமர்ந்து பின்னாலிருந்த அலங்காரச் சார்மணையில் சாய்ந்து விட்டார்.

அவர்கள் அனைவர் மௌனத்துக்கும் காரணத்தை உணர்ந்திருந்தாலும், உணராததுபோல் நடித்த விக்கிரமாதித்த மன்னன் மீண்டும் சொன்னான். ''மௌனப் பாவைகளிடையே அமர இந்தச் சபை கூட்டப்படவில்லை. போரில் வல்லவர்களும், தந்திரத்தில் சிறந்தவர்களுமான உங்கள் யோசனைகளை அறியவும் கூடியவரை பின்பற்றவுமே இன்று உங்களை அழைத்திருக்கிறேன். உங்கள் எண்ணங்களைத் தெளிவாகக் கூறலாம்'' என்று.

முதல் முதலில் சாளுக்கியத் தளபதியே பதில் கூறத் தொடங்கினான், மன்னன் கேட்ட பின்பும் பதில் கூறாதிருப்பது மரியாதைக் குறைவென்ற காரணத்தால். ''மன்னருக்குத் தெரியாதது எதையும் நானோ, உபதளபதிகளோ கூறப் போவதில்லை. மன்னரின் உத்தரவுகளை, திட்டங்களை நிறைவேற்றுவது ராணுவத்தின் கடமை. அந்தக் கடமையைச் செய்ய எங்கள் வாட்கள் தயாராயிருக்கின்றன. திட்டங்களை இதுவரை நாங்கள் யாரும் வகுத்ததில்லை. மன்னவரும் போர் அமைதி மந்திரியுமே வகுத்திருக்கிறார்கள். நாங்கள் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறோம்'' என்று கூறினான் தளபதி. அவன் சொன்னதை ஆமோதிக்கும் வகையில் இதர உபதளபதிகளும் தலைகளை ஆட்டினார்கள்.

தளபதியின் சொற் கேட்டு முறுவலின் சாயையை முகத்தில் படரவிட்டுக் கொண்ட சாளுக்கிய விக்கிரமாதித்தன் சற்றே திரும்பி ஸ்ரீ ராமபுண்யவல்லபரை நோக்கி, ''குருநாதர் என்ன சொல்கிறார்?'' என்று வினவினான்.

ஸ்ரீ ராமபுண்யவல்லபரின் கூரிய கண்கள் மன்னவனின் ஈட்டிக் கண்களைத் துணிவுடன் சந்தித்தன. ''ஸ்ரீராமபுண்யவல்லபரின் யோசனை அத்தனை அவசியமா?'' என்று விசாரித்தார் இகழ்ச்சி நிரம்பிய குரலில் போர் மந்திரி.

விக்கிரமாதித்தன் அவர் கண்களிலிருந்து தனது கண்களை விடுவித்துக் கொள்ளாமல் கேட்டான். ''அமாத்யருக்கு அதிலென்ன சந்தேகம் வந்துவிட்டது திடீரென்று?'' என்று.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் கூர் விழிகள் சலனமற்று மன்னனை ஆராய்ந்தது மட்டுமில்லாமல் சொற்களும் சாந்தமாகவும் உறுதியுடனும் அவர் வாயிலிருந்து வெளிவந்தன. ''போர் மந்திரியின் திட்டங்களை மன்னர் பிரான் சமீப காலமாக ஏற்றுக் கொள்வதில்லை அது மட்டுமல்ல, அத்திட்டங்களைக் குலைக்கவுமே மன்னர் உத்தரவு களைப் பிறப்பிக்கிறார். ஆகவே என்யோசனையோ திட்டமோ மன்னருக்கு அத்தனை அவசியமென்று எனக்குத் தோன்றவில்லை'' என்று கூறினார் போர் அமைதி மந்திரி சற்றுச் சஞ்சலமும் வருத்தமும் கலந்த குரலில்.

விக்கிரமாதித்தன் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''விளக்கமாகச் சொன்னால் தளபதியும், உபதளபதிகளும் புரிந்து கொள்வார்கள்'' என்று கூறினான் இளமுறுவல் சற்றும் நீங்காத உதடுகளால், அத்துடன், ''எனது அபசாரத்தை இவர்கள் முன்பு கூறுவது எனக்குப் பிராயச்சித்தமும் ஆகும்'' என்று சொன்னான் மன்னன்.

மன்னன் தங்களை நோக்கி நகைக்கிறானா, உண்மையில் தனது செயல்களை நினைத்து வருந்துகிறானா என்பதை ஊகிக்க முடியாத ஸ்ரீராமபுண்யவல்லபர், ''மன்னவா! இந்தக் காஞ்சியைக் கைப்பற்றிய பிறகு உனது நடவடிக்கைகள், உத்தரவுகள், எண்ணங்கள் எல்லாமே என் மனத்துக்குப் பூரண விரோதமாக இருந்திருக்கின்றன. மாமல்ல புரத்திலிருந்து இங்கு வந்த பல்லவ இளவலைக் காஞ்சியை விட்டு அகலாதிருக்க ஏற்பாடு செய்தேன். அவனைத் தப்ப விட்டாய்'' என்று துவங்கினார்.

''இல்லை, இல்லை. நான் தப்பவிடவில்லை'' என்ற விக்கிரமாதித்தன், ''வீண் பழி சுமத்தாதீர்கள்'' என்றும் கூட்டினான் சொற்களை.

''வேறு யார் தப்பவிட்டது? நானா?'' போர் அமைதி மந்திரி திட்டமாகக் கேட்டார்.

''ஆம்.''

''இங்குதான் உனக்கு மறதியிருக்கிறது.''

''இல்லை அமாத்யரே! தண்டி மகாகவியின் உதவியால், இரு பெண்களின் உதவியால் தப்பினான் ராஜசிம்மன். குருநாதர் அவனைப் பெரிய கொல்லன் சந்துகன் வீட்டில் சிறை செய்ய விரித்த வலையையும் அவன் அறுத்துக் கொண்டு வெளியேறி விட்டான்.''



''இதுவரை சரிதான். இதுவரை என் முயற்சிகளின் தோல்வியைச் சரியாக உணர்த்தினாய் விக்கிரமாதித்தா! ஆனால் அதற்குப் பிறகு அவனைத் திரையனேரிக்கு அருகில் சந்தித்தாயே, அப்பொழுது ஏன் அவனைச் சிறை செய்யவில்லை? ஏன் தப்பவிட்டாய்?'' என்று வினவினார் போர் அமைதி அமாத்யர் உஷ்ணம் துளிர்த்த குரலில்.

''காரணம் முன்பே சொன்னேன் தங்களுக்கு.''

''என்ன காரணம்?''

''ராஜசிம்மனை நேருக்கு நேர் போரில் சந்திப்பதாக மாமல்லபுரத்தில் சொன்னேன். சத்யாச்ரயன் சொல்லை மீறியதில்லை இதுவரை. ஆகையால் போகவிட்டேன் அவனைக் கண்டும் காணாதது போல்'' என்ற மன்னவன் குரல் உறுதியுடன் ஒலித்தது.

''அது என் திட்டத்துக்கு விரோதம்தானே?'' என்று வினவினார் அமாத்யர்.

''இருக்கலாம். ஆனால் மறுநாள் என் சொல்லைக் காப்பாற்ற உறுதி கொண்டதைத் தங்களிடம் கூறினேன். அதையும் மீறித் தாங்கள் தனியாகத் தளபதியை அழைத்துச் சிறை செய்ய உத்தரவுகளைப் பிறப்பித்தீர்கள். அந்த உத்தரவுகளை நிறைவேற்றத் தளபதியால் முடியவில்லை. இரண்டு சத்திரங்களிலிருந்தும் குவலாலாவின் மாளிகையிலிருந்தும் தப்பிச் சென்று விட்டான் பல்லவ இளவல்'' என்று சுட்டிக் காட்டினான் விக்கிரமாதித்தன். ''ஆகையால், உங்கள் திட்டங்களை முறித்தது நானல்ல. பல்லவ இளவலின் வீரம், அவனது முன்யோசனை. இதிலிருந்து புரிந்து கொள்ளலாம் மறதி எனக்கல்ல என்பதை'' என்றும் கூறினான் சாளுக்கிய மன்னன்.

ஸ்ரீ ராமபுண்யவல்லபர் ஆசனத்திலிருந்த வண்ணம் சிறிது அசைந்தார். ''எப்படியும் நமது வேட்டுவ மாளிகையில் அவனைச் சிறை செய்தேன். விடுதலை செய்யும்படி நீதான் அவன் காதலியை அனுப்பினாய்'' என்று குற்றம் சாட்டினார் போர் அமைதி மந்திரி.

''என் உத்தரவு வருமுன் அவன் தப்பிவிட்டதாகக் கேள்வி'' என்றான் விக்கிரமாதித்தன்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் வதனத்தில் வியப்பு விரிந்தது. சிறிது சந்தேகச் சாயையும் படர்ந்தது. ''சாளுக்கிய மன்னர் என்னை வேவு பார்க்கவும் ஒற்றர்களை வைத்திருப்பதாகத் தெரிகிறது'' என்று கூறினார்.

''மண்டலத்தில் விளைவதை அறிந்து கொள்வது மன்னன் கடமை. ஆகையால் அறிந்து கொண்டான். தவிர, ராஜசிம்மனைத் தந்திரத்தால் வளைப்பது என் நோக்கமல்ல. ஆதலால் அவனையும்,

சினனையும், சந்துகனையும் விடுதலை செய்ய உத்தரவனுப்பினேன். பரமேசுவரவர்மனையும் போர் திட்டமிடுவதிலும் வாள் வீச்சிலும், வில் வித்தையிலும் பெயர் வாங்கியிருக்கும் பல்லவ மகா வீரனான நரசிம்மவர்மன் என்கிற ராஜசிம்மனையும் நேருக்கு நேர் போரில் சந்திக்க இஷ்டப்படுகிறேன். நானிஷ்டப்படும் இடத்துக்கு, போர்க்களத்துக்கு, அவர்களை வரவழைக்க விரும்புகிறேன். அத்தகைய வெற்றி வாகை சூட, சாளுக்கியர்களின் வீரத்தை நிலை நிறுத்த வழி சொல்லுங்கள் அமாத்யரே! முதலாவது நரசிம்மவர்மன் வாதாபியை நேர்ப் போர் முறையால் வெற்றி கொண்டான். இரண்டாவது நரசிம்மவர்மனான ராஜசிம்மனை விக்கிரமாதித்தன் தந்திரத்தால் வெற்றி கொண்டான் என்ற அவச் சொல்லைப் பெற நான் இஷ்டப்படவில்லை. விக்கிரமாதித்தன் தோள் தினவும் அத்தினவின் விளைவும் முறியடித்தது. முறியடித்து மாபெரும் சாம்ராஜ்யத்தை நிறுவியது என்று வரலாறு சொல்ல வேண்டும். அதற்கு வகை சொல்லுங்கள்'' என்று சொற்களை உதிர்த்தான் விக்கிரமாதித்தன். பேச்சின் கடைசி இடத்துக்கு வந்தபோது, அவன் சொற்களில் வீராவேசம் தாண்டவமாடியது. சொற்கள் தணல்களென உதிர்ந்தன.

விக்கிரமாதித்தனின் ஆவேசத்தைக் காணவே செய்தார் ஸ்ரீராமபுண்யவல்லபர். ஆனால், அதைப்பற்றி அதிகமாக லட்சியம் செய்தாரில்லை ''மன்னவா! ஏற்கனவே திட்டத்தை வகுத்தே இந்த மந்திராலோசனை சபையை நீ கூட்டியிருக்கிறாய் என்பதை நானறிவேன். ஆகையால் முதலில் உன் கருத்தைச் சொல்'' என்று வினவினார்.

விக்கிரமாதித்தன் ஒரு வினாடி சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு மெல்ல குருவுக்குத் தலை வணங்கிவிட்டுக் கூறினான்: ''அமாத்யரே! வைத்தியரிடமும் ஆலோசகரிடமும் எதையும் மறைக்கக்கூடா தென்பது கௌடில்யர் கருத்து. தந்திரத்தையும் போரையும் இணைக்கவும் அவர் வழி காட்டியிருக்கிறார். ஈனதசையிலிருந்த சந்திரகுப்தனைக் கொண்டு, நந்தர்களின் பலத்தை உடைத்த அந்த மகானை நினைவில் கொண்டு நானொரு திட்டம் தயாரித்திருக்கிறேன். அதை நீங்கள் அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டுமென்ப தில்லை. குறையிருந்தால், தெளிவாகக் கூறலாம்...'' இதைச் சொன்ன விக்கிரமாதித்தன் அரியாசனத்திலிருந்து எழுந்து, ''இப்படி வாருங்கள்'' என்று கூறி அந்த ஆசனத்துக்குப் பின்னாலிருந்த சுவரை நோக்கி அவர்களை அழைத்துச் சென்றான்.



அந்தச் சுவரிலிருந்த அரசாங்கப் பாதைகளையும், ஊர்களையும் தனது குறுவாளொன்றால் காட்டி விவரிக்க முற்பட்டு, ''இங்கிருப்பது காஞ்சி. வாதாபியிலிருந்து இதுவரை விளிந்தை நகர் ஒன்றைத் தவிர மற்ற இடங்களெல்லாம் நமது வசத்திலிருக்கின்றன. இனி வடக்கில் வலுவான எதிரி யாரும் கிடையாது. கங்கனால் நன்றாக முறியடிக்கப்பட்ட பல்லவர் படைகள் உருத்தேற நீண்ட நாளாகும். அதை வலுவடைய விடாமல் ஒரு புறம் நாம் கட்டுப்படுத்த வேண்டும். அந்த இடங்கள் இவை'' என்று கூறி மூன்று சாலைகளைக் காட்டினான்.

தளபதி புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். மன்னன் அவனது ஆமோதிப்பைக் கவனித்தானானாலும் அமாத்யர் ஆமோதிப்பையோ எதிர்ப்பையோ காட்டாததைக் கண்டு மேலும் விவரிக்கத் தொடங்கி, ''பல்லவ பரமேசுவரனும் பல்லவ இளவலும் நம்மை எதிர்த்து வருவதானால், இந்த மூன்று சாலைகள் தானிருக் கின்றன. ஒன்று கங்க நாடு செல்வது. இன்னொன்று சாளுக்கிய நாடு செல்வது. இன்னொன்று மேற்குக் கோடியில் பிரிந்து மலைத் தொடர் செல்வது. இந்த மூன்றிலும், பத்தாயிரம் பத்தாயிரம் பேர் கொண்ட படைகளை நிறுத்தி, சாலைகளை அடைத்து விடுவோம். பிறகு காஞ்சியில் பாதுகாப்புக்கு ஒரு சிறு படையை நிற்கவைப்போம். ஏனென்றால் சிற்பங்களைப் பழுதாக்கப் பரமேசுவரவர்மன் விரும்பமாட்டான். ஆகையால் காஞ்சியை நம்மிடம் ஒப்படைத்தவன் அந்த மகாவீரன். அவன் படைகளுக்கு இந்த மூன்றிடங் களில் தடைகளை அமைத்துத் தடுத்துவிடுவோம். பிறகு...'' இந்த இடத்தில் பேச்சை நிறுத்தி அமாத்யரை நோக்கினான் விக்கிரமாதித்தன்.

''பிறகு?'' அமாத்யர் கேள்வி எழுப்பினார்.

''மீதியுள்ள நமது பெரும் படை சோழ நாட்டை நோக்கி நகரும். சோழ நாடு ஏற்கெனவே பல்லவர் ஆக்கிரமிப்பலிருப்பதால், வழியில் அதிக எதிர்ப்பிருக்கக் காரணமில்லை. நேரே *உரக புரி சென்று அங்கு நமது படை தங்கும். அங்கு இருந்து கொண்டு வாதாபி யிலிருந்து உறையூர்வரை பெரும் சாம்ராஜ்யத்தை அமைப்போம்'' என்று கூறிய விக்கிரமாதித்தன் உறையூரைத் தனது குறுவாளால் குத்தி னான். அவன் சொற்களில் வீரமிருந்தது. கண்களில் கனவு தெரிந்தது.

* உரகபுரி என்பது உறையூரின் பெயர்.

ஸ்ரீ ராமபுண்யவல்லபர் மெல்லக் கூறினார். ''இது அபாயமான திட்டம்'' என்று.

''எப்படி?'' விக்கிரமாதித்தன் கேள்வியில் உணர்ச்சி அதிகமாயிருந்தது.

''மிகவும் அகலக்கால் வைக்கிறாய் விக்கிரமாதித்தா! தலை நகரிலிருந்து நீண்ட தூரம் போகிறாய். தவிர பல்லவ இளவரசனை, அவன் சக்தியை திறனை, யுக்தியைச் சாதாரணமாக மதிக்கிறாய். அவன் சிற்பத்தைச் சிருஷ்டிக்கும் சிற்பி மட்டுமல்ல போர்ச் சிற்பியுங்கூட. எப்படியும் இழந்த நாட்டைப் பெற அவன் முயலுவான். இங்கிருந்து அவன் முயற்சிகளை ஒடுக்கிய பிறகு தெற்கே கவனம் செலுத்துவது நல்லது'' என்று தனது எண்ணத்தை எடுத்துச் சொன்னார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''அத்தனை பெரிய வீரனா ராஜசிம்மன்'' என்று கேட்டான் விக்கிரமாதித்தன்.

''ஆம்.''

''அப்படியானால் அவனுக்கு இடங்கொடுத்துப் பார்ப்போம். உமது சீடன் ராஜசிம்மனுக்கு எள்ளளவும் குறைந்தவனல்ல னென்பதைப் புரிந்து கொள்வீர்.''

''அது எனக்குத் தெரியும் விக்கிரமாதித்தா! ஆனால் உன் இந்தத் திட்டம் நமது வலிமையை மீறியது, படைகளை நீண்ட தூரம் அழைத்துச் செல்வது, இதனால் அபாயமே நேரிடும். ஆகையால் இதற்கு நான் உடன்படவில்லை'' என்று கூறினார் ஸ்ரீராமபுண்ய வல்லபர்.

''ராஜசிம்மனாகிற ராஜசிற்பியையும் போர்ச் சிற்பியையும் போரிலே விக்கிரமாதித்தன் புறம் காண்பான். அபாயத்தை நினைத்து அவதிப்படுபவன் அகண்ட சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்க முடியாது'' என்று ஸ்ரீராமபுண்யவல்லபரை நோக்கிக் கூறிய விக்கிரமாதித்தன். தளபதியை நோக்கி, ''நான் சொன்ன வழிகளில் படைகளைப் பிரித்து அமையுங்கள். இன்னும் ஒரு வாரத்தில் நாம் தெற்கே பயணப் படுகிறோம்'' என்றும் உத்தரவிட்டான். உத்தரவைக் கேட்ட தளபதி தலை வணங்கினான். ஸ்ரீராமபுண்யவல்லபர் பதிலேதும் சொல்ல வில்லை. அவர் மனத்தைப் பெரும் கவலையும், துக்கமும் சூழ்ந்து கொண்டதை முகம் தெளிவாகக் காட்டியது. அத்துடன் அதிக அதிர்ச்சியை விளைவிக்கும் மற்றோர் உத்தரவையும் மறுநாள் பிறப்பித்தான் சத்யாச்ரயன்.

# 78. தென் திசை விஜயம்

புஜபலம் புத்திபலம் இரண்டும் இணையும் போதுதான் போர்களில் பெரு வெற்றிகள் விளைகின்றன. இரண்டில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் விளைவது தோல்விதான். இது சாளுக்கிய அமாத்யரான ஸ்ரீராமபுண்யவல்லபரின் சித்தாந்ததம். இந்தச் சித்தாந்தத்துக்கு நேர்மாறான ஓர் உத்தரவை மறுநாள் விக்கிரமாதித்த சத்யாச்ரயன் பிறப்பித்ததும் ஸ்ரீராமபுண்யவல்லபரின் சித்தம் பேரதிர்ச்சிக்குள்ளாகிச் சுக்கு நூறாகச் சிதறத் தொடங்கியது. வேண்டுகோளை விடுக்கும் பாவனையில் அந்த உத்தரவை மிகப் பக்குவமாக அவரிடமே கூறினான் விக்கிரமாதித்தன். தனது அகண்ட சாம்ராஜ்ய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய அலுவல்களில் துரிதமாக இறங்கும்படி தளபதிக்கு உத்தரவிட சத்யாச்ரயன், மறுநாள் காலையில் சூரியோதயமாகி ஐந்து நாழிகைக்குப் பிறகு முறைக்கு மாறாகத் தானே ஸ்ரீராமபுண்யவல்லபரின் மாளிகைக்குச் சென்றான். அவர் பூஜை அறையிலிருப்பதைக் காவலர் கூறக் கேட்டதும், தன் வரவை அறிவிக்க வேண்டாமென்று காவலரை எச்சரிக்கை செய்து, பாதுகைகளை இரு காவலர் நீக்க, இரு காவலர் நீர் கொண்டு பாதங்களில் ஊற்ற, கால்களைக் கழுவிக் கொண்டு உள்ளே பூஜை அறைக்குள் நுழைந்தான் சாளுக்கிய சத்யாச்ரயன். பூஜை அறையிலிருந்த தூய சாந்நித்யத்தைக் கண்டதும் பேசாமல் ஒரு மூலையில சிலைபோல் நின்று விட்டான்.

சக்தியின் வரப்பிரசாதம் பெற்றவரான ஸ்ரீராமபுண்யவல்லபர் கண்மூடித் தியானத்திலிருந்தார். அவர் எதிரே மகாசக்தியின் பஞ்சலோக பிம்பமொன்றும், பீஜாக்ஷரங்கள் பொறிக்கப் பெற்ற ஸ்ரீ சக்கரத் தகடு ஒன்றும், நாலைந்து சாளக் கிராமங்களும், தங்கத் தாம்பாளமொன்றில் காட்சியளித்தன. அந்தத் தாம்பளத்தின் பக்கத்தில் செம்பருத்திப் புஷ்பங்களும், ஒற்றை நந்தியாவட்டை மலர்களும் வில்வ துளசி தளங்களும் நிரம்பிய கூடையொன்று இருந்தது. இவை தவிர, இரண்ட சிங்கமுகக் கிண்டிகளும் இருந்தன.

நீண்ட நேரம் தியானத்திலிருந்த ஸ்ரீராமபுண்யவல்லபர் மெல்லக் கண்விழித்து, மகாசக்தி பிம்பத்தைச் சிறிது நேரம் உற்று நோக்கினார். பிறகு கிண்டியிலிருந்த பாலைச் சிங்க முகத்தின் மூலம் அந்தப் பிம்பத்துக்கும், தகட்டுக்கும் வேதரிக்குகளைச் சொல்லி அபிஷேகம் செய்து விட்டு, சாளக்கிராமங்களுக்கு மட்டும் பிரும்ம யக்ஞ ஸாம கானம் சொல்லி, திருமஞ்சன மாட்டினார். அதே விதம் ரிக்குளையும் ஸாம கானத்தையும் சொல்லி மகாசக்தி மீதும் தகட்டுக்கும்

சாளக்கிராமங்களுக்கும் இன்னொரு கிண்டியிலிருந்த கோதாவரி நீரால் மங்களத் திருமஞ்சனம் செய்தார்.

தோளிலிருந்த பட்டு வஸ்திரத்தால் அவற்றையெல்லாம் நன்றாகத் துடைத்து, தாம்பாளத்தை ஒட்டியிருந்த சிம்மாசனத்தில் அமர்த்தினார். மகாசக்திக்கு மட்டும் சிவப்புவஸ்திரம் அணிவித்து, செம்பருத்தி மலர்களால் அலங்காரம் செய்தார். ஸ்ரீசக்கரத்திற்கும், சாளக்கிராமங்களுக்கும் நந்தியாவட்டை மலர்களை எடுத்து ஆங்காங்கு வைத்து ஜபித்தார். பிறகு வில்வ துளசி தளங்களைக் கலந்து எடுத்து, மகாசக்திக்கும் மற்ற தெய்வாம்சம் பெற்ற சக்ர சாளக்கிராமங்களுக்கும் அஷ்டோத்தர அர்ச்சனை செய்தார்.

முதலில் பராசக்தி, பிறகு ஸ்ரீ சக்ரம், அதற்குப் பிறகு சாளக்கிராமங்கள் என்ற முறையில் அர்ச்சனையை முடித்து, தீப தூபங்களைக் காட்டி, கணகணவென்று வெண்கலச் சிறுமணியை அடித்தார். அதை அவர் அடித்து முடித்ததும், பணிமகளொருத்தி ஆடையைச்சிக்கனமாக அணிந்து, நெற்றியில் குங்குமம் பளபளக்க ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் நைவேத்யம் கொண்டு வந்து வைத்து நைவேத்ய பாத்திரத்தின்மீது மூடியிருந்த சிவப்புப் பட்டுச் சேலையை அகற்றினாள்.

உத்தரணியில் தீர்த்தமெடுத்து நைவேத்யம் செய்த ஸ்ரீராமபுண்ய வல்லபர், கடைசியில் மீண்டுமொரு முறை கற்பூராஞ்சனம் காட்டிவிட்டு எழுந்திருந்து நெடுஞ்சாண் கட்டையாகத் தெண்டனிட்டார் மகாசக்தி முன்பு. அதுவரை எட்ட நின்றிருந்த தரணியாளும் மன்னனும், அவரைப் போலவே தரணியில் விழுந்து வணங்கினான். தன் பக்கத்தில் மற்றொருவர் தெண்டனிடுவதைப் பார்த்த பிறகே, பூலோக உணர்வை அடைந்த ஸ்ரீராமபுண்யவல்லபர், மன்னனை நோக்கித் திரும்பி, ''யார் நீயா விக்கிரமாதித்தா?'' என்று வியப்பும் அன்பும் நிறைந்த குரலில் கேட்டார்.

''ஆம் குருநாதரே!'' என்றான் மன்னவனும் குருவை ஒரு முறை வணங்கி எழுந்திருந்து.

ஸ்ரீராமபுண்யவல்லபர் அவன் தலைமீது கையை வைத்து, ''உன் கனவுகள் நனவாகட்டும், உன் எண்ணங்கள் வெற்றியடை யட்டும். அம்பிகையின் அருள் உனக்குப் பூரணமாக ஏற்படட்டும்'' என்று ஆசீர்வாதம் செய்தார். ''நீ இங்கு வந்து நீண்ட நேரமாகிறதா?'' என்றும் விசாரித்தார்.



''ஆம்'' என்றான் சாளுக்கிய பூபதி.

''தியானத்தில் இருந்துவிட்டேன். ஆகையால் உன்னைக் கவனிக்கவில்லை.'' என்றார் ஸ்ரீராமபுண்வல்லபர்.

''என்னைக் கவனிக்கவில்லையென்று சொல்வது சரியல்ல''.

''கவனித்தும் கவனிக்காதது போலிருந்து விட்டேனா?''

''இல்லை. மகாசக்தியிடம் தினம் தினம் பூஜை செய்யும் போது, எனது நலனைத்தானே பிரார்த்திக்கிறீர்கள்?''

''ஆம்''

''அப்படியானால் என்னைக் கவனிக்கவில்லையென்று எப்படிச்சொல்ல முடியும்? உங்கள் உள்ளக் கண்கள் என்னைச் சதா நினைத்தபடிதானே இருக்கின்றன'' என்ற மன்னவன், குருவின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

எதற்கும் நெகிழாத புண்யவல்லபரின் உள்ளமும் நெகிழ்ந்தது மன்னனின் பணிவாலும் அன்பினாலும். ''மன்னவா! உன்னைப் பெற இந்தப் பாரதம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு, ''என்னைப் பணியமட்டும் நீ இங்கு வரவில்லை என்று நினைக்கிறேன். என்ன காரியமாக வந்தாய்? என்று கேட்டுக் கொண்டே, தட்டிலிருந்த அபிஷேகத் தீர்த்தத்தை ஒரு படிகத்தில் கொட்டி, மன்னன் கைகளில் மூன்று உத்தரிணிகள் கொடுத்தார். அத்துடன் பில்வ துளசி தளங்கள் பிரசாதமும், நைவேத்யப் பிரசாதமும் அளித்தார்.

அபிஷேக நீரருந்தி, துளசி,பில்வங்களையும், நைவேத்யப் பிரசாதத்தையும் வாயில் போட்டுக் கொண்ட மன்னவன், ''தங்களைக் கண்டு முக்கிய வேண்டுகோள் விடுக்க வந்தேன். சமயம் பூஜை சமயமாயிருந்தது. நல்ல சகுனமாயிற்று எனக்கு. அதுவும் மகாசக்தி யின் பிம்பமும் அருள் பிம்பமாயிருந்தது. மகிஷாசுரமர்த்தினியின் உக்ர பிம்பமாயில்லை'' என்றான்.

''மகிஷாசுரமர்த்தனி வேறு, மகாசக்தி வேறல்ல. இந்த விக்ரகம் இல்லாத சமயங்களில், மகிஷாசுரமர்த்தனி செதுக்கப் பெற்ற சிற்பங்களுக்கும் பூஜை செய்கிறேன். உதாரணமாக சில நாட்களுக்கு முன்பு நமது வேட்டுவ மாளிகையின் பூஜையறையில் மகிஷாசுரமர்த்தனிதானிருக்கிறாள். அங்கு மாத்திரமா? எங்குமிருக் கிறாள் பரமேஸ்வரி, எதிலுமிருக்கிறாள். சேதனத்திலுமிருக்கிறாள், அசேதனத்திலுமிருக்கிறாள். இந்த மகாசக்தி பிம்பத்திலும்தான் இருக்கிறாள். அவளிருக்குமிடங்களில் வெற்றியும் மங்களமுமே

உண்டாகும்.'' என்ற ஸ்ரீராமபுண்யவல்லபரின் சொற்களில் பக்திப் பிரவாகம் எடுத்தது.

''மகாசக்தி தங்களிடமிருப்பது எனது பாக்யம்'' என்றான் விக்கிரமாதித்தன். எங்கு வந்தாய் என்று அவர் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் கூறவில்லை பாராளும் சாளுக்கிய பார்த்திபன்.

அதை ஸ்ரீராமபுண்யவல்லபர் கவனிக்கத் தவறவில்லையாகையால், சொன்னார்: ''மன்னவா! அதனால் தான் நீ செல்லுமிடங்களிலெல்லாம் மகாசக்தியையும், சக்ரத்தையும், சாளக்கிராம மூர்த்திகளையும் எடுத்து வருகிறேன். அவை உடனிருக்கும் வரையில் உனக்குக் குறைவேதுமில்லை'' என்று.

''மகாதேவி தங்களிடமிருக்கும் வரையில் நான் எங்கிருந்தாலும் வெற்றி தருவாள். எனக்கு மங்களத்தை அளிக்கத் தங்கள் பூஜை போதாதா?'' என்று வினவினான் விக்கிரமாதித்தன்.

சாணை பிடிக்கப்பட்ட கத்தியைவிடக் கூர்மையான அறிவுள்ள ஸ்ரீராமபுண்யவல்லபர் கண்கள் சர்வ சாதாரணமாக மன்னனை நோக்கினாலும், அவர் பார்வை அவன் மனத்தை ஊடுருவிச் சென்றது. ''சொல்ல வந்ததை வாய்விட்டுச் சொல்லிவிடு'' என்று வினவினார் அமாத்யர்.

விக்கிரமாதித்தன் சிறிது தயக்கத்துடன் சொன்னான்: ''குருநாதர் என்னை மன்னிக்கவேண்டும், நேற்று மந்திராலோசனையில் அவர் கருத்தை எற்காததற்காக''என்று.

''அது நேற்றைய கதை இன்று கதை என்ன?'' என்று வினவினார் ஸ்ரீராமபுண்யவல்லவர்.

''இந்த காஞ்சி பல்லவர் தலைநகர்...'' என்று மெள்ளத் துவங்கினான் சத்யாச்ரயன்.

''அதனாலென்ன?''

''இங்கிருப்பவர் தான் காஞ்சியையும் காப்பாற்ற முடியும், காஞ்சியை நோக்கி வரும் சாலைகளையும் காக்க முடியும்.''

''புரிகிறது'' என்ற ஸ்ரீராமபுண்யவல்லபரின் சொற்களில் அதிர்ச்சி லேசாகத் தெரிந்தது.

''என் ஸ்தானத்தில் தாங்கள் இங்கிருக்க வேண்டும். நான் உறையூரை அடைவதற்குள் இந்த மூன்று சாலைகளிலுள்ள படைகளை நிர்வகித்து, பல்லவ மன்னனும் அவன் இளவலும் என்னை அணுகாமல்



பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்றான் மன்னன் உத்தரவு தொனிக்காத, வேண்டுகோள் ஒலித்தகுரலில்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் கூரிய கண்கள் விக்கிரமாதித்தனை அளவெடுத்தன ஒரு விநாடி ''காஞ்சியில் என்னைவிட்டு உரகபுரி செல்லப் போகிறாய் நீ'' என்று வினவினார் அதிர்ச்சி மேலிட்ட குரலில்.

''அதுதான் உத்தேசம்'' என்றான் விக்கிரமாதித்தன் நிலையான குரலில்.

''என்னைத் தாண்டி பல்லவர் உரகபுரியை அடைந்தால்...? ஸ்ரீராமபுண்யவல்லபரின் கேள்வியில் மன்னனைப் பற்றிச் சிறிது அச்சமும் இருந்தது.

''உங்கள் சீடன் அவர்களைப் போர்க்களத்தில் சந்திப்பான்'' என்றான் விக்கிரமாதித்தன்.

''அந்தப் போர் ஏற்படும்போது, உனக்கு ஆலோசனை சொல்ல உனது போர் மந்திரி தேவையில்லையா?''

''தேவைதான். ஆனால் இங்கும் பல்லவர்களைத் தேக்க வல்லவர் ஒருவர் வேண்டுமே. அதற்குத் தங்களைத் தவிர வேறுயாரிருக்கிறார்கள்?''

இதைக் கேட்டதும், வருத்தம் கலந்த புன்முறுவலொன்று ஸ்ரீராமபுண்யவல்லபரின் இதழ்களில் படர்ந்தது. அதன் சாயை அவர் வதனத்திலும் விரிந்தது. ''மன்னவா, உன் துணிவை மெச்சுகிறேன். ஆனால் அடுத்த முறை நீ போரில் பல்லவர்களைச் சந்திக்கும் போது, பரமேசுவரவர்மனை மட்டும் சந்திக்கப்போவதில்லை. அவன் மகன் ராஜசிம்மனையும் சந்திப்பாய். அவனுக்கு முதலாம் நரசிம்மவர்மன் என்ற பெயரை வைத்திருக்கிறான் பரமேசுவரவர்மன். ஆனால் பல்லவ இளவல் அந்தப் பழைய நரசிம்மவர்மனைவிடத் தந்திரத்திலும், போர்த்திட்டங்களை வகுப்பதிலும் பல முறை உயர்ந்தவன். பரமேசுவரவர்மனைவிடப் போர் நுணுக்கங்களை நன்றாக அறிந்தவன். அவனை நீ சந்திக்கும் போது என் யோசனை உனக்குத் தேவையாயிருக்கும்'' என்று குரலிலும் வருத்தம் துலங்கச் சொன்னார்.

விக்கிரமாதித்தன் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''தந்தை தனயனைப் பற்றி விசாரப்படும் நிலை தங்களுடையது, பிள்ளையினிடம் உள்ள பாசத்தால் தந்தை தனயனைக்குறைவாக மதிப்பிடுவதும் உலக இயல்பு'' என்றான் விக்கிரமாதித்தன்.

''என் நிலை அதல்ல. எதிரியின் பலத்தைக் கண்டு, அடுத்து வரும் ஆபத்தைக் கண்டு, அச்சமடைந்துள்ள அமாத்யனின் நிலை'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''அச்சமென்பது தங்கள் *அமரகோசத்தில் கிடையாதென்பது எனக்குத் தெரியும். என்னிடமுள்ள வாஞ்சை என் வீரத்தைக் குறைத்து மதிப்பிடுகிறது.'' இதை அழுத்திச் சொன்னான் விக்கிரமாதித்தன்.

''இல்லை மன்னவா! உன்னிடமுள்ள வாஞ்சை என் கண்களை மறைக்கவில்லை. எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தை என் அகக் கண்கள் இப்பொழுதே காண்கின்றன. உரகபுரிக்கும் வாதாபிக்கும் இடையேயுள்ள நெடுந்தூரத்தை நான் காண்கிறேன். பல்லவர் படையுடன் நமது படை இன்னும் நேருக்கு நேர்மோதவில்லையென்பதையும் நினைத்துப் பார்க்கிறேன். நாம் காஞ்சியை அணுகு முன்பாகவே தனது படையின் பெரும்பாகத்தைப் பிரித்துவிட்டு, அதிக சேதமில்லாமல், காஞ்சியை விட்டுச் சென்ற பல்லவ மன்னனைப் பற்றிச் சிந்திக்கிறேன். சிதறிவிட்ட படை ஒன்று சேர்க்கபட்டால், சரியான தளபதியின் கீழ் இயங்கினால், சாளுக்கிய நாட்டையும் நம்மையும் துண்டித்துவிட்டால், ஏற்படக்கூடிய விளைவை நினைக்கிறேன். நினைக்க நினைக்க எனக்கே அச்ச மேற்படுகிறது. அதுவும் உனக்குத் துணை நிற்க நானுமில்லையென்பது அந்த அச்சத்தை அதிகப்படுத்துகிறது'' என்று கூறிக்கொண்டே பூஜாசனத்தைவிட்டு எழுந்திருந்தார்.

''எனக்குத் துணை நீங்கள் நிற்கல்லையென்று நினைப்பது தவறு. நீங்கள் காஞ்சியில் இருப்பதால், காஞ்சிக்கு வரும் சாலைகளை அடைத்துப் பல்லவர்களை இவ்வழி வரவொட்டாமல் தடுக்கலாம். உரகபுரியில் எனக்குத் துணை இல்லாமலும் இல்லை. பாண்டியர்கள் துணையிருக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் துணையின்றியே நமது படைகள் வெற்றி வாகை சூடும். பாண்டியன் துணையும் சேரும்போது விளைவைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். என்னை ஆசீர்வதியுங்கள். மேலும் ஆட்சேபணை சொல்லாமல் என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று தலை வணங்கினான் விக்கிரமாதித்தன்.

சில வினாடிகள் சிலையென நின்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர். பிறகு பெருமூச்சுவிட்டு, ''மன்னவா! நீ வாழி'' என்று ஆசீர்வதிக்கவும் செய்தார்.

* *அமரகோசம்-சமஸ்கிருத அகராதியின் பெயர்*



அதைப் பெற்றுக்கொண்டு அரண்மனை திரும்பிய விக்கிரமாதித்தன். தளபதியை அழைத்து, முந்திய நாள் மந்திராலோசனையில் முடிவு செய்தபடி படைகளைப் பிரிக்கும்படியும் நகரச் சித்தமாகும்படியும் உத்தரவிட்டான். அத்துடன் சொன்னான், ''ஸ்ரீராமபுண்யவல்லபர் காஞ்சியிலேயே தங்குவார்'' என்று.

இதைக்கேட்ட தளபதி திகைத்தான். ''அவர்...'' என்று. ஏதோ இழுத்தான்.

''உரகபுரிக்கு வரப்போவதில்லை'' என்று திட்டமாக அறிவித்துவிட்டு அரண்மனையில் தனது அந்தரங்க அறைக்குச் சென்றுவிட்டான் சத்யாச்ரயன்.

அடுத்த மூன்று நாட்களில் சாளுக்கியப் படைகள் போர்க்கோலம் பூண்டன. சாலைகள் அடைக்கப்பட்டன. காஞ்சி வலுப்படுத்தப் பட்டது. ஒரு சிறு படையால் காஞ்சியின் பாதுகாப்பை, காலாட் படைகளின் ஒரு பகுதியின் நிர்வாகத்தை ஸ்ரீராமபுண்யவல்லபரிடம் ஒப்படைத்த விக்கிரமாதித்தன் உரகபுரி செல்லத் தயாரானான். ஒரு வாரத்திற்குள் சுக்லபக்ஷ சப்தமியன்று, படைகள் பின்தொடர, சித்ராங்கதமெனும் தனது போர்ப் புரவி மீது அமர்ந்து, தென் திசை விஜயத்தைத் தொடங்கினான் சாளுக்கியபூபதி, அவன் செல்வதை, காஞ்சியின் தெருக்கள் வழியாகப் பெரும்படை நகருவதை எதிரும் புதிருமாயிருந்த மாளிகைகளின் உப்பரிகை களிலிருந்து ஸ்ரீராமபுண்ய வல்லபரும், தண்டி மகாகவியும் கவனித்தனர். ஸ்ரீராமபுண்ய வல்லபரின் வதனத்தில் வருத்தத்தின் சாயையும் கவலையும் விரிந்து கிடந்தன. தண்டி மகாகவியின் முகத்தில் விவரிக்க இயலாத குழப்பம் இருந்தது.

## 79. அவர் கேட்ட கேள்வி

மகாகவியும், காவ்யாதர்சம் இயற்றிக் காவிய இலக்கணத்தை நிரந்தரமாக வகுத்துவிட்டவரும், அம்பிகையின் அருள் பெற்றவரும், அதனை விளைவாக 'தண்டினப் பதலாலித்யமத்' (ஊஞ்சலாடும் சொல்லோவியர்) என அவரது கவிதைகளின் சொல் நயத்தை உலகம் புகழும் அளவுக்கு உயர்ந்துவிட்டவரும், மகதாசார்யரென்றும் மஹனீயரென்றும் மன்னர்களாலும், மற்ற மாமேதைகளாலும் தலை தாழ்த்தி வணங்கப் பெற்ற வருமான தண்டி, கவிகளைப் பொழிவதில் எந்தக் குழப்பத்தையும் அடையாதவர் என்றாலும், அன்று உப்பரிகை

யில் நின்று விக்கிரமாதித்த மன்னன் படைகள் அணிவகுத்துப் பின்தொடர அந்த ராஜ வீதியில் சென்றதைக் கண்டதும், என்றும் அடையாத குழப்பத்தை அடைந்தார். உவமைகளின் லட்சணத்தை விளக்கிய அவர் விக்கிரமாதித்தன் அன்று காஞ்சியைவிட்டுப் புறப்பட்ட கோலத்திற்கும் வீரத்துக்கும் உவமையோ காரணமோ காட்ட முடியாமல் நின்றார். படைகளுக்கு முன்னணியில் தூரிய வாத்யங்களை முழங்குவோர் நால்வர் நால்வராக இரு வரிசைகளில் செல்ல, பின்னால் எட்டு உபதளபதிகள் இரண்டு வரிசைகளில் தொடர, இடையே சித்ராங்கதம் என்ற வெண்புரவி மீதமர்ந்து பூரணப் போர்க் கவசமணிந்து சாளுக்கிய மகாப்பிரபு சென்றது. கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது. கவீச்வரர் கண்களுக்கு. உபதளபதி களுக்குப் பின்னால் அணிவகுத்து வந்துகொண்டேயிருந்த புரவிப்படைக்கு முடிவேயில்லாததுபோல் தெரிந்ததால், விக்கிரமாதித் தன் பெரும்படை காஞ்சியை விட்டுச் செல்வதை உணர்ந்த கவிசார்வபௌமரான தண்டி, எதிர் உப்பரிகையில் நின்றிருந்த ஸ்ரீராமபுண்யவல்லபரைக் கண்டதும், ''மன்னனுடன் போர் மந்திரி சொல்லாமல் எதற்காக உப்பரிகையில் நின்று வேடிக்கை பார்கிறார்?' என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார். ஒரு வேளை ஸ்ரீராமபுண்யவல்லபர் இரண்டுநாள் கழித்துக் காஞ்சியைத் திடப்படுத்திவிட்டு, மன்னனிருக்குமிடத்திற்கு விரைவாரோ? என்ற சந்தேகம் எற்பட்டது. அவருக்குச் சாதாரணமாகப் போர் மந்திரி திட்டம் வகுத்து முன்பு சென்று ஆயத்தம் செய்வதும், பிறகு மன்னனின் படை எதிரிகளைத் திட்டமிட்டபடி தாக்குவதும் முறையாயிருக்க இந்தத் தலைக்கீழ்ப்பாடம் எதற்கு என்றும் தம்மை வினவிக்கொண்ட தண்டி விடை காணாமல் தவித்தார். அத்தகைய நினைப்புகளுடன் உப்பரிகையிலிருந்து இறங்கிக் கீழே சென்று ஆசார்யர் தமது அறைக்குச் சென்று மஞ்சத்தில் உட்கார்ந்து தீவிர யோசனையில் இறங்கினார்.

அவரது யோசனைகளை அடிக்கடி அறுத்தன வாயிலில் சென்ற படைகளின் ஒலிகள். காலையில் ஆரம்பமான அந்தப் பவனி, படைகளின் எண்ணிக்கை காரணமாக நாள் பூராவும் நடந்து கொண்டிருந்ததால், புரவிகளின் குளம்பொலிகளுடனும், கனைப்பு களுடனும், வீரர்கள் உறையிலிருந்த வாட்களும், புரவிகளின் முதுகின் மேல் தங்கிய கேடங்களும், வலது கரத்தில் அவர்கள் தூக்கிப் பிடித்திருந்த வேல்களும் உராய்ந்ததால் 'டங் டங்' கென்றும், 'கணகண' வென்றும் 'கிரீச்கிரீச்' சென்றும் பலவிதமாக் கிளம்பிய ஒலிகள் தண்டி மகாகவியின் காதுகளில் சதா விழுந்துகொண்டிருந்த தால், எதையும் ஆழ்ந்து யோசிக்க வல்லமையற்றவரானார் மகாகவி. சாதாரணமாக



தியான நிஷ்டையில் உட்கார்ந்துவிடும் சமயங்களில் பேரிரைச்சலும் காதில் விழாத திடத்தை உடைய ஆசார்யர், அன்று விக்கிரமாதித்தன் படை நகர்ந்ததால் தொடர்ந்து எதையும் சிந்திக்கும் சக்தியை இழந்தார்.

அன்று மாலை விளக்கு வைக்கும் வரையில் சென்று கொண்டிருந்த புரவிப் படையை அடுத்து யானைப் படை விரைந்ததை, முன்னதாக வந்த மணியோசைகளாலும், சில யானைகளின் பிளிறல் களாலும் பவனியில் அடுத்தபடி காலாட்படையும், ரதப்படையும் வருமென்று எதிர்பார்த்த மகாகவி, அன்றிரவின் இரண்டாவது சாமத்துக்கு முன்பு யானைப் படையோடு பவனி முடிந்துவிட்டதை வாசலில் நின்று பார்த்து, காலாட்படை என்னவாயிற்றென்று வியக்கவே செய்தார். யானைப்படை முழுவதும் செல்லாததாலும், காலாட்படை அடியோடு காணாததாலும், அவை வேறு திசையில் சென்றிருக்க வேண்டுமென்ற முடிவுக்கும் வந்தார். அதுபற்றி தகவல்களை அறியத் தமது சீடர்களிருவரை அன்றிரவு நடுச்சாமத்தில் அழைத்து ஊர் நிலவரத்தை அறிந்து வரும்படி ஆக்ஞாபித்தார். அவர்கள் கடிகை வழியில் செல்வதாகப் பாசாங்கு காட்டி மெள்ள மெள்ள விஷயங்களை விசாரித்துக் கொண்டு மாளிகை திரும்பும்வரை விழித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார் மகாகவி தண்டி.

சீடர்களில் ஒருவன் அவரை நமஸ்கரித்துவிட்டுச் சொன்னான். ''விக்கிரமாதித்த மன்னர் மட்டும் தமது படையின் பெரும் பகுதியுடன் தென்திசை நோக்கி விரைந்திருக்கின்றார். ஒரு சிறு பகுதி காஞ்சியிலிருக்கிறது. இவ்வளவுதான் அறிய முடிந்தது.''

''ஸ்ரீராமபுண்யவல்லபர்?'' என்று வினவினார் தண்டி.

''மாளிகையிலேயே தங்கியிருக்கிறார். அவருடன் இரண்டு உபதளபதிகளும் தங்கியிருக்கிறார்கள்'' என்று இன்னொரு சீடன் கூறினான்.

''அதுமட்டுமல்ல...'' என்று முதலில் சொன்ன சீடன் கூறினான்.

''வேறு என்ன விசேஷம்?'' என்று கவி கேட்டார் கவலையுடன்.

''பெரிய கொல்லன் சந்துகன் வீட்டுப்பக்கம் சென்றோம்.''

''உம்.''

''இத்தனை நாள் அந்த வீட்டில் விளக்கு இல்லை.''

''இன்று எரிந்ததா...?''

''ஆமாம்.''

''உள்ளே யாரிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவில்லையா?''

''பார்த்தோம்!''

''யார்?'

''ஒரு முனிவர் இருந்தார்.''

''முனிவரா! இந்த காலத்தில் முனிவர் ஏது?'' என்று வெகுண்டு கேட்டார் ஆசார்யர்.

''நாங்கள் சாளரத்தின் வழியாக நோக்கினோம். தாடி மீசைகளுடன் காஷாயம் தரித்து உடலிலெல்லாம் விபூதி பூசிய ஒரு மகான், கையில் திரிதண்டம் வைத்திருந்தார்'' என்று விளக்கினான் சீடர்களில் ஒருவன்.

''முனிவர் என்ன நிஷ்டையில் இருந்தாரா?'' என்று கேட்டார் தண்டி மகாகவி.

''இல்லை...'' என்றான் ஒரு சீடன் தயக்கத்துடன்.

''ஏன் தயங்குகிறாய்?'' என்று வினவினார் தண்டி.

சீடன் மற்றொரு சீடனை நோக்கினான். இருவரும் கைகட்டிவாய் புதைத்து ஆடு திருடிய கள்ளர்கள் போல் விழித்தனர். அதைக்கண்ட தண்டி மகாகவி சந்தேகப் பார்வையுடன் சீடர்களைப் பார்த்தார். ''என்ன விழிக்கிறீர்கள்? வேறென்ன கண்டீர்கள் அங்கே?'' என்று அதட்டிக் கேட்கவும் செய்தார்.

''ஆசார்யர் சந்நிதானத்தில் அபசாரப்பட இஷ்டமில்லை'' என்றான் முதல் சீடன்.

''அபசாரத்திற்கு என்ன இருக்கிறது இதில்?'' மகாகவியின் கேள்வியில் கோபம் மாறி வியப்பு ஒலித்தது.

''முனிவர்களைப் பற்றி அவதூறு சொல்வதல்ல நோக்கம்'' என்று கூறிய் முதல் சீடன் மற்றவனை நோக்கினான்.

''இல்லை. நோக்கம் அது இல்லை'' என்று ஒத்துப் பாடினான் இரண்டாவது சீடன்.

முதல் சீடன்: ''ஆசார்யர் மன்னிக்கவேண்டும். நாங்கள் பார்த்தபோது சந்துகன் வீட்டில் முனிவர் மட்டும் இல்லை.''

இரண்டாவது சீடன்: ''மற்றொருவரும் இருந்தார்.''

முதல் சீடன்: ''அவருடன் இருந்தது...''



இரண்டாவது சீடன்: ''ஆணல்ல...''

முதல் சீடன்: ''பெண்...''

இரண்டாவது சீடன்: ''முனிவர் கீழே தரையில் அமர்ந்திருந்தார். அவள் மட்டும் ஓர் ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருந்தாள்.''

முதல் சீடன்: ''அதுவும் வெகு அலட்சியத்துடன் உட்கார்ந் திருந்தாள்.''

இந்த விருத்தாந்தத்தைக் கேட்டு இரு சீடர்களையும் மாறி மாறிப் பார்த்த தண்டி மகாகவி. ''அவள் எப்படியிருந்தாள்?'' என்று வினவினார்.

இதற்குப் பதில் சொல்ல முடியாமல் இரு சீடர்களும் தவித்தனர். அவர்கள் தவிப்பைக்கண்டு, ''அச்சப்படாதீர்கள். சொல்லுங்கள்'' என்று தைரியமூட்டினார் தண்டி.

''வயதுப் பெண்தான்'' என்றான் முதல் சீடன் சங்கடத்துடன்.

''முக்காடிட்டிருந்ததால். முகம் தெரியவில்லை'' என்றான் இன்னொருத்தன்.

''முக்காடிட்டு முகத்தை மறைத்திருந்தாளே தவிர, நம் பெண்களைப் போலத்தான் சேலை கட்டியிருந்தாள்'' என்றான் முதல் சீடன்.

அதற்குமேல் அவர்களிடம் ஏதும் கேட்டுப் பயனில்லை என்பதை அறிந்துகொண்ட மகாகவி, அவர்களைப் படுக்கச்சொல்லி அனுப்பினார். தாமும் உறங்க எண்ணி மஞ்சத்தில் படுத்துக் கொண்டும், உறக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்தார். சந்துகன் வீட்டிலிருந்த முனிவர் அனேகமாக சந்துகனாயிருக்கலாமென்று தீர்மானித்த தண்டி மகாகவி, 'சந்துகன் இளவரசனை விட்டு வரமாட்டானே தவிர பல்லவர் மீண்டும் போரிலிறங்குவதானால் சந்துகனைப்போல் வாட்களும், ஈட்டிகளும் பட்டறையில் அடிக்கும் திறமை வேறு யாருக்கும் காஞ்சி மண்டலத்தில் கிடையாதே. அப்படியிருக்க சந்துகனை இங்கு எப்படி ராஜசிம்மபல்லவன் அனுப்புவான்?' என்று தம்மைத்தாமே கேட்டுக்கொண்டார். 'அப்படி வந்தவன் சந்துகனாகவே இருந்தாலும் சதா சாளுக்கிய ஒற்றர்களால் கண்காணிக்கப்படும் சொந்த வீட்டிற்கு எப்படிப்போவான்? தவிர அவனுடனிருக்கும் பெண்யார்?' என்றும் வினவிக்கொண்டு விடை காணாமல் படுத்துப் பஞ்சணையில் புரண்டார். படையெடுப்புக்களால் கடிகையில் வித்தியாப்யாசம் பெரிதும் பாதிக்கப்படுவதால், இந்தத் தலைவலி எப்பொழுது நீங்கும்

என்ற எண்ணமும் சித்தத்தை அலைக்கழிக்கவே, தண்டி மகாகவி படுக்கையிலிருந்து எழுந்து முன்கட்டுக்கும், பின்கட்டுக்குமாக நடக்கலானார். அப்படி அவர் பின்கட்டுக்குச் சென்ற சமயமொன்றில், அவர் பின்வாசல் மெல்லத் தட்டப்பட்டது. ''யாரது'' என்று வினவினார்.

உடனடியாக வெளியிலிருந்தவர் பதில் சொல்லவில்லை. ''கதவைத் திறவுங்கள்'' என்ற மெல்லிய பெண் குரலொன்று கவியின் காதில் விழுந்தது. அந்தக் குரலைக் கேட்டதும் விளக்கொன்றை அவசர அவசரமாக எடுத்துக்கொண்டு வந்த தண்டி, கதவுத் தாழ்பாள்களைத் திறந்தார். முதன்முதலில் முனிவரொருவர் நுழைந்தார். அவரைத் தொடர்ந்து கட்டழகியொருத்தியும் வந்தாள்.

''மைவிழி! நீயா?''

நின்ற இடத்திலேயே, அந்த நாலாங் கட்டிலேயே விழுந்து ஆசார்யரை வணங்கினாள் அந்த அழகி. முன்னால் வந்த முனிவர் தமது தாடிமீசைகளை எரிச்சலுடன் நீக்கி எதிரேயிருந்த முற்றத்தில் வீசி எறிந்தார். ''ஆசார்யர் அனுக்கிரகிக்க வேண்டும்.'' என்று முனிவர் வேடம் நீங்கிய சந்துகனும் வணங்கினான்.

''சந்துகா! உன் வீட்டில் விளக்கு காணப்பட்டதாகவும் ஒரு முனிவரும் ஒரு பெண்ணுமிருந்ததாகவும் சற்று முன்புதான் எனது சீடர்கள் கூறினார்கள். முனிவர் நீயாகத்தானிருப்பாயென்று ஊகித்தேன். அதிலும் சிறிது சந்தேகமிருந்தது. உன்னைப் போன்ற கொல்லனைப் பல்லவ இளவல் எப்படி விட்டான் என்று யோசித்தேன். தவிர உன் இல்லம் கண்காணிக்கப்படும் என்று அறிந்திருந்தும், அங்கு ஏன் சென்றாய் என்றும் புரியவில்லை'' என்றார் மகாகவி.

சந்துகன் சொன்னான்: ''நான் இங்கு வந்து இரண்டு நாட்களாகின்றன. இந்திரவர்மன் மகள் இன்று மாலை ரதத்தில்வந்து சேர்ந்தார்கள். ஆனால் நகருக்குள் வருவது கஷ்டமாகி விட்டது சாளுக்கிய மன்னன் படைகள் தொடர்ந்து சென்றதால். ஆகையால் குறுக்குத் தெருக்கள் வழியாக ரதத்தைச் செலுத்தி என் இல்லம் வந்தார்கள் மைவிழிச் செல்வியார். நான் காஞ்சியைவிட்டு அகன்றதும் என் இல்லத்தைக் கண்காணிப்பதை எதிரிகள் நிறுத்திவிட்டார்கள் யாரும் திரும்பவும் நான் அங்கு வருவேனென்று எதிர்பாராததால் அங்கேயே சென்று தங்கினேன். இவர்கள் வந்ததும் அங்கேயே நிறுத்திக் கொண்டு படைகள் போனபின்பு, பின்புறவீதிகளின் வழியாக ரதத்தைச் செலுத்தித் தங்களிடம் அழைத்து வந்தேன்.



புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த தண்டி மகாகவி, ''சந்துகா, ரதத்தைக் கொட்டடியில் நிறுத்து. புரவிகளையும் அங்கேயே கட்டிவிட்டு வா'' என்று உத்தரவிட்டு, ''வா மைவிழி'' என்று மைவிழிச் செல்வியை அழைத்துக்கொண்டு, தமது அறையை அடைந்தார். அடைந்ததும் முக்கியமாக ஒரு கேள்வி கேட்டார். அதற்கு என்ன பதில் சொல்வதென்று அறியாமல் திகைத்தாள் இந்திரவர்மன் மகள்.

# 40. 'அம்பிகே! உனக்கொரு விண்ணப்பம்!'

ஆண்கள் பெண்கள் ஆகிய இருபாலரையும் பூமி தேவியே ஈன்றெடுத்தாலும், சங்கடமோ சங்கோஜமோ ஏற்படும் சமயங்களில் பூமியை நோக்கும் மரபு பெண்களுக்கே இருந்து வருகிறது. தாய் பக்கத்திலில்லாத சமயத்தில் பூமிப்பிராட்டியே தாயாகிறாள் பாவைகளுக்கு. ஆகவே, தண்டி மகாகவி கேட்ட தர்மசங்கடமான கேள்வியைக் காதில் வாங்கியதும் மைவிழிச் செல்வி நிலத்தை நோக்கியதில் விந்தை என்ன இருக்கிறது?'

தன் உள்ளத்தைத் தொடும், நாணத்தை உச்சிக்குக் கொண்டு செல்லும், அத்தகைய கேள்வியை ஆசார்யர் கேட்பாரென்று அவள் எதிர்பார்க்கவில்லை. விளிந்தையில் பல்லவ இளவல் சொன்ன அதே வார்த்தை தொலைவில் காஞ்சியிலுள்ள ஆசார்யருக்கு எப்படித் தெரியவந்தது என்று சிந்தித்து. நாணத்துடன் பெருவியப்பையும் அடைந்தாள் அப்பெண்ணரசி. அவள் மௌனமாயிருந்தது மட்டுமின்றி, தலை நிமிர்ந்து தன்னைப் பாராமலுமிருக்கவே தண்டி மகாகவி ''பல்லவ பேரரசின் பிற்கால ராணியைத் தன்னந்தனியாகச் சத்ருக்கள் அடங்கிய இந்த நகருக்கு ஏன் அனுப்பி வைத்தான் பல்லவ இளவல்?'' என்று மீண்டும் வினவினார்.

இரண்டாவது முறை ஆசார்யர் வினவிய பிறகு, தான் வாளாவிருப்பது மரியாதைக் குறைவென்பதை உணர்ந்த மைவிழி வாய் திறந்து பேசினாளானாலும் நேராகக் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''ஆசார்யர் திடீரென்று இந்த அடியவளுக்குப் பெரும் பட்டத்தை அளிக்கிறார்'' என்று கூறினாள்.

தண்டி மகாகவி அவளை நோக்கி, மெல்லப் புன்முறுவல் கொண்டார். ''பட்டம் பெரிதாயிருக்கலாம். ஆனால் தகாதபட்ட மல்ல'' என்று கூறினார் அன்புடன்.

''நான் ஒரு ஒற்றன் மகள்'' என்று துவங்கிய அவளது பேச்சை அங்கேயே கத்திரித்த தண்டி மகாகவி, ''அது புதிய செய்தி அல்லவே'' என்று சொன்னார் சர்வசாதாரணமாக.

''ஒற்றன் மகள் எப்படி ராணியாக முடியும்?'' என்று கேட்டாள் மைவிழி உண்மையை மறைத்து.

''ஒற்றன் மகள் ராணியாவது கஷ்டந்தான்...''

''உணருகிறீர்களா ஆசார்யரே?''

''ஆம், உணருகிறேன். ஆனால் அதை மாத்திரம் உணரவில்லை.''

''வேறெதை உணர்ந்தீர்கள்?''

''எனது சீடனின் கண்ணியத்தை, பல்லவ மரபின் நீதியை.''

''தங்கள் சீடனின் கண்ணியத்தையா?''

''ஆம் பெண்ணே? உன்னை மணக்க இஷ்டமில்லாவிட்டால் ராஜசிம்மன் உன்னிடம் நெருங்கிப் பழகியிருக்கமாட்டான்.'' என்று சுட்டிக் காட்டினார் மகாகவி.

''ஏன், ரங்கபதாகா தேவியிடம் அவர் நெருங்கிப் பழக வில்லையா?'' என்று வினவினாள் மைவிழி சற்றே தலை நிமிர்ந்து.

''ஆம். பழகினான். அவளும் ஒரு ராணியாகப் போகிறாள் இந்த சாம்ராஜ்யத்துக்கு'' என்ற தண்டி மகாகவி, ''இந்த இரண்டு ராணி களுடன் என் சீடன் நிறுத்துக்கொள்ள அம்பாள் அருள்புரிய வேண்டும்.'' என்று கூறிநகைத்தார் மெல்ல.

பிறகு நிதானப்பட்ட ஆசார்யர் மேலும் சொன்னார்: 'விக்கிமாதித்தன் தென்திசை விஜயத்துக்குச் சென்றுவிட்டான். இந்த சமயத்தில் பல்லவ இளவல், உன்னை இங்கு அனுப்பி யிருக்கிறான் அதிகத்துணையேதுமில்லாமல். அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய் மைவிழி? அவன், உன்னைவிட இந்தக் காஞ்சியை- பல்லவப் பேரரசை அதிகமாக நேசிக்கிறான். தனது குடிமக்களை சாளுக்கிய ஆதிக்கத்தி லிருந்து மீட்கப் பிரயத்தனப்படுகிறான். ஆகவே, உன்னை வேவு பார்க்க இங்கு அனுப்பியிருக்கிறான். அதுவும் என் மாளிகைக்கு. அரசியலில் தலையிட இஷ்டமில்லாத இந்தக்கவியின் மாளிகைக்கு. அம்பாளின் இந்த அருள்கிருகத்துக்கு அனுப்பியிருக்கிறான்'' என்றார். அத்துடன், ''ராஜசிம்மன் என்னையும் வேவு பார்க்க உபயோகப்படுத்த இச்சிக்கிறானே?'' என்றும் கேட்டார்.



இதைக் கேட்டதும் மைவிழியின் முகம் நன்றாக உயர்ந்தது. ஆசார்யரை நோக்கி, ''இல்லை ஆசார்யரே, அதல்ல அவர் நோக்கம். சந்துகனும் மற்றோரும் வேவு பார்ப்பார்கள். அவர்கள் கொடுக்கும் செய்திகளை ஓலையில் தீட்டியனுப்பத்தான் குருநாதரையும், அடியவளையும் எதிர்பார்க்கிறார் இளவரசர்'' என்றாள் சற்றுக் கணீரென்ற குரலில்.

தண்டி மகாகவி, தமது அழகிய முகவாய்க்கட்டையை வலது கையால் மெல்லத் தடவிக்கொண்டார் ஒரு விநாடி. ''வேவுக்கு உடந்தையாயிருப்பதும் வேவு பார்ப்பதைப்போலத் தான்'' என்று கூறினார் தீர்க்கசிந்தையுடன். ''அது கிடக்கட்டும். விளிந்தையில் பரமேசுவரவர்மன் கங்கனால் முறியடிக்கப்பட்டதைக் கேள்விப் பட்டேன். பல்லவனைப் பாதுகாக்க ரங்கபதாகா தேவியும், இளவரசனை மீட்க நீயும் சென்றீர்கள் இந்த மாளிகையிலிருந்து. பிறகு என்ன நடந்தது?'' என்றார்.

''ரங்கபதாகாதேவி தனது தந்தையிடம் சென்றாள். பிறகு தந்தையை அழைத்துக்கொண்டு கங்கநாடு சென்று விட்டாள். என்னை இங்கு அனுப்பிவிட்டார் இளவரசர். விளிந்தையின் பாதுகாப்பைப் பலப்படுத்தியும் விட்டார்'' என்று கூறினாள்.

''பரமேசுவர வர்மன் தோல்வியால் நெஞ்சுருகி உறுதி குலைந்து இருக்கிறானா?'' என்று வினவினார் தண்டி.

''படுகாயம் அடைந்தார் போரில். அவர் புரவி அதிசயம் அவரைத் தப்புவித்து அரண்மனைக்குக் கொண்டு வந்தது. நான் வேட்டுவ மாளிகைக்குச் செல்லுமுன்பே அங்கிருந்து தப்பிவிட்ட இளவரசர் மருத்துவவேடம் பூண்டு விளிந்தைக்கு நுழைந்து தந்தைக்குச் சிகிச்சை செய்தார்'' என்றாள் மைவிழி.

''இளவரசன் மருத்துவத்திலும் கைதேர்ந்தவன்'' என்றார் தண்டி மகாகவி பெருமையுடன்.

''சீடரைப்பற்றி அதிகப்பெருமைப் படவேண்டாம்'' என்ற மைவிழி புன்சிரிப்புக் கொண்டாள்.

''ஏனோ?''

''அவரால் ஏற்படவில்லை மன்னருக்குக் குணம்''.

''வேறு யாரால்?''

''மரண காயமடைந்தவரை ஒரே நாளில் நடக்க வைக்க யாரால் முடியும்?''

''யாராலும் முடியாது.''

''முடியுமென்று செய்து காட்டினார் ஒருவர்.''

''இளவரசரின் நண்பர் யாங்சின்.''

தண்டி பேரதிர்ச்சியடைந்தார் இந்தப் பதிலைக்கேட்டு, ''அந்த சீனனா?'' என்று வியப்புத் ததும்பிய குரலில் வினவவும் செய்தார்.

''ஆம்'' என்றாள் மைவிழி.

''என் சீடனைவிடச் சீனன் மருத்துவம் தெரிந்தவனா?''

''உங்கள் சீடர் மட்டுமல்ல. அவனைவிட மருத்துவம் தெரிந்தவர் இந்த பாரதத்திலேயே கிடையாதென நிரூபித்துக் காட்டினான் சீனன்'' என்றாள் மைவிழி.

''அப்படி என்னதான் செய்துவிட்டான்?'' என்று மேலும் கேட்டார் தண்டி மகாகவி ஆவலுடன்.

''ஊசிகளைச் செருகினான்.''

''காயத்திலா?''

''இல்லை. கைகளிலும், கால்களிலும், பிறகு மார்புக் காயத்திற்கு நான் இதுவரை காணாத சிகிச்சை செய்தான். மன்னர் அன்றே எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டார்.''

மகாகவி தண்டி மயங்கிநின்றார் பல விநாடிகள். 'இதென்ன வித்தையா, விந்தையா! தெரியவில்லையே?'' என்று கேட்டார்.

''தங்களுக்கென்ன, எங்களுக்கும் தெரியவில்லை. ஏதோ மாயாஜால வித்தை போலிருந்தது அவன் சிகிச்சை. ஆனால் அதை சர்வ சகஜமாகச் செய்தான். மன்னவர் மரண காயப்பட்டதாக நினைத்த மற்றவர்கள் காயம் ஆறி மன்னர் நடக்க நாள் பத்தாகுமென்றார்கள். இல்லையென்பதைச் சீனன் நிரூபித்தான்.''

''அப்படியானால் மன்னர் இப்பொழுது பூரண சுகமடைந்து விட்டார் என்று சொல்'' என்று வினவினார் தண்டி மகிழ்ச்சியுடன்.

மைவிழிச் செல்வி மிகுந்த பெருமையுடன் சொன்னாள், ''நான் இங்கு வருவதற்கு முன்பு நடந்த மந்திரலோசனையில் மன்னரும் கலந்து கொண்டார். இரண்டொரு நாளில் ஆந்திர நாடு செல்லவும் சித்தமாகி விட்டார்'' என்று.

நம்ப முடியாத இந்த விசித்திரத்தைக் கேட்டதும் தண்டி மகாகவி மட்டுமல்லாமல், சந்துகனும் பிரமித்துப் போனான். ''ராணி! தாங்கள் இதைச் சொல்லாமல் வேறு யார் சொல்லியிருந்தாலும் பொய்யென்று நினைத்திருப்பேன். சீனன் மந்திரவாதியாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இது சாத்தியமே அல்ல'' என்று கூறினான் சந்துகன்.



''என்ன பெரிய கொல்லரே, புதுப்பட்டம் சூட்டி அழைக்கிறீர்கள்?'' என்று வினவினாள் மைவிழி.

''பல்லவ ராணியென்று மகாகவியின் வாயிலிருந்து வந்த பிறகு வேறு எப்படி அழைக்க முடியும் தேவி! கவி வாக்குப்பொய்க்குமா?'' என்றான் சந்துகன்.

நேரிடையாக அதற்குப் பதில் சொல்லவில்லை, மைவிழிச் செல்வி. ''சீனன் மந்திரக்காரனல்ல, எந்த மந்திரமும் போடவு மில்லை. நமக்குப்புரியாத ஒரு ரண சிகிச்சை அது. அவர்கள் நாட்டில் அந்தச் சிகிச்சை சர்வ சகஜமாம். தொன்றுதொட்டு இருந்து வருகிறதாம்'' என்று கூறினாள்.

அதற்குப் பிறகு நின்ற இடத்திலேயே வார்த்தைகளை வளர்த்த விரும்பாத மகாகவி, மைவிழியை அவள் முன்பிருந்த அறைக்கு அனுப்பிவிட்டு, சந்துகனையும் சிறிது நேரம் உறங்கப்பணித்தார். கிட்டத்தட்ட வெள்ளி முளைக்கும் நேரத்தில் அவரும் சென்று கண் அயர்ந்தார் தமது கட்டிலில். மறுநாட்காலையில் எழுந்து பூஜை புனஸ்காரங்களை முடித்துக்கொண்டதும், தமது சீடர்களில் முக்கியஸ்தர்களான இருவரையும், சந்துகனையும் மைவிழியையும் தமது அறைக்கு வரும்படிப் பணித்தார்.

அவரது அறையில் வந்து குழுமிய பிறகு தண்டி மகாகவி அவர்களைப் பார்த்துச் சொன்னார்: ''இப்பொழுது நமது தலையில் பெரும் பாரம் சுமந்திருக்கிறது பல்லவ மன்னனும், அவன் மகனும் நம்மை நம்பியிருக்கிறார்கள் இங்கிருக்கும் விவரங்களை அறிந்தனுப்ப. இந்த அலுவலைச் சந்துகன் மேற்கொள்ள வேண்டும் காஞ்சியின் நிலை என்னவென்று எனக்குப்புரியவில்லை. திடீரென்று விக்கிரமாதித்தின் தென் விஜயத்திற்குக் கிளம்பிவிட்டான். தவிர தனது போர் மந்திரியை இங்கு நிறுத்திவிட்டுப் போயிருக்கிறான். ஆகவே, அவனில்லாததால் காஞ்சியைக் கைப்பற்றலாமென்பது வீண்கனவு. ஸ்ரீராமபுண்யவல்லபர் இங்கிருப்பது காஞ்சிக்குப் பாதுகாப்பு. காஞ்சியின் காவலனான பல்லவனுக்கு ஆபத்து, இவற்றையெல்லாம் தீர விசாரிக்க வேண்டும். ஸ்ரீராமபுண்யவல்லபர் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்கிறார்? காஞ்சியைக் காப்பாற்ற சைன்யத்தின் எந்தப் பகுதி, எத்தனை படைவீரர் இங்கு இருக்கிறார்கள்? வேறெங்கெங்கு இருக்கிறார்கள்?

இதையெல்லாம் அறிய வேண்டும். சந்துகா, நாளை முதல் விவரங்களை நீ விசாரித்துக்கொள். உன் ஒற்றர்களை நகரெங்கும் திரிய விடு பல வேடங்களில். இரவில் தகவல் சொல். மைவிழி ஒலை தீட்டுவாள். அதை அனுப்பும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்.''

மகாகவி சொன்னதை மைவிழியும், மற்றோரும் ஏற்றுக் கொண்டு, தலைதாழ்த்தித் தங்கள் ஆமோதிப்பைத் தெரியப் படுத்தினார்கள்.

அன்று மாலையே சந்துகன் பின்புற வழியாக, முனிவர் வேடம் தாங்கி, அந்த மாளிகையிலிருந்து மறைந்தான். இரண்டு மூன்று நாட்கள் அவன் திரும்பவேயில்லை.

நான்காம் நாள் திரும்பியபோது, நள்ளிரவில் பழையபடி உள்ளே நுழைந்தான் பின்புற வழியாக. காஞ்சியின் நிலையையும், சாலைகளை ஸ்ரீராமபுண்யவல்லபர் அடைத்துவிட்டதையும் விளக்கினான்.

''அப்படியானால், எந்தப் பாதையில் பல்லவர் வந்தாலும் போரிருக்கிறது என்று சொல்'' என்று வினவினார் தண்டி.

''ஆம் ஆசார்யரே'' என்றான் சந்துகன் தீனமான குரலில்.

மகாகவி தண்டி கூட, விக்கிரமாதித்தினனின் ஏற்பாடுகளைக் கண்டு திகைத்துப்போனார்.

மறுநாள் காலை நீராட்டம் முடிந்து பூஜை அறைக்குச் செல்லுகையில், மைவிழியையும் அழைத்துச் சென்று சில ஒலை நறுக்குகளைக் கொடுத்து, ''சந்துகன் தெரிவித்த செய்திகளை எழுத்தாணியால் பொறித்துவிடு'' என்று கட்டளையிட்டார்.

''யாருக்கு எழுதட்டும்?'' என்று கேட்டாள் மைவிழி.

''அவனுக்குத்தான்?' என்றார் தண்டி.

நறுக்கு ஒலைகளையும் எழுத்தாணியையும் அவளிடம் கொடுத்துவிட்டு, ''ஒலை எழுதி அம்பிகையின் திருவடியில் வை. சீக்கிரம் வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார் ஆசார்யர்.

ஒலைகளையும், எழுத்தாணியையும் எடுத்துக் கொண்ட மைவிழி, அம்பிகையின் அருள்முகத்தை நோக்கினாள், ஒலையையும் நோக்கினாள். ''எப்படி ஆரம்பிப்பேன் ஒலையை? என்னவென்று அழைப்பேன் அவரை? என்று எண்ணியதால், ஓர் எழுத்துக்கூட ஒலையில் ஓடவில்லை, நாணத்தால் அந்த நங்கைக்கு.



'இங்கு யாருமில்லை. இருப்பினும் அவருக்கு எழுதுவ தென்றால், வெட்கமாயிருக்கிறதே' என்று சற்று வாய்விட்டும் சொல்லிக்கொண்டாள். 'அம்பிகே! உனக்கு ஒரு விண்ணப்பம். இந்தக் கை ஒட மாட்டேனென்கிறது. சகலத்துக்கும் சக்தி கொடுக்கும் தாயே!' இதைச் சற்று அசையச் சொல்லேன்' என்று மனத்துள் கேட்டுக் கொண்டாள்.

பிறகு எழுத முற்பட்டு நான்கைந்து ஒலைகளை வீணாக அடித்தாள். முடிவில் துணிவு கொண்டு, 'அன்பரே!' என்று துவங்கினாள்.

கை ஒடியது வேகத்துடன். மார்பும் அடித்துக்கொண்டது வேகத்துடன் உணர்ச்சிகள் அவளை ஆட்கொண்டன.

## 81. 'மரமே, நீ சொல்!'

**உ**ணர்ச்சிகள் ஆட்கொண்டது மைவிழிச் செல்வியை மட்டுமல்ல. விளிந்தையின் அரண்மனையில் ஒரு வாரம் கழித்து அந்த ஒலையைப் படித்த இளவரசனையும் உணர்ச்சி அலைகள் வளைத்துக் கொண்டன. அந்த ஒலையில் மற்றவர் கூறிய அரசியல் செய்தி களுடன், அவள் மனம் அள்ளிச் சொரிந்த காதல் மலர்களும் கலந்து கிடந்தன. ''அன்பரே!'' என்ற துவக்கமே இளவரசன் இதயத்தை இளகச் செய்ததென்றால் அதற்கு அடுத்தபடி வந்த சொற்களும், சொற்கள் கூட்டிய வரிகளும், ஏன், வரிகளைத் தாங்கிய மஞ்சள் நிற ஒலை நறுக்குகள் கூட, அவன் நெஞ்சத்தை அவளை எண்ணி எண்ணிக் கெஞ்சவும் செய்தன, கொஞ்சவும் செய்தன.

'அன்பரே!' என்று துவங்கி அவள் மேலும் எழுதியிருந்தாள். ''அங்கு தொலைவில் சூரியன் இருக்கிறான், இங்கு தாமரை தத்தளிக்கிறது. நீரிருந்தால் தாமரை வாட அவசியமில்லையே. ஆனால் வாடுகிறதே, இங்கு தண்ணீர் இருந்தும். தடாகத் தண்ணீரைவிட, கண்ணீர் சுடுகிறது என்ற காரணத்தினாலா? இருக்காதே, சூரிய வெப்பத்தைவிடக் கண்ணீர் குறைந்த வெப்பந்தானே? புரியாத புதிராயிருக்கிறதே. உஷ்ணத்தினால் உஷ்ணம் ஆறுகிறது. (உஷ்ணம் உஷ்ணேன சாம்யதே) என்று வைத்தியர்கள் சொல்வார்கள். ஆகவே கண்ணீரின் உஷ்ணத்தைத்துடைக்க, நெஞ்சத்தின் தீயைச்சாந்தப்படுத்த, கதிரவன்தான் தலை காட்ட வேண்டும் போலிருக்கிறது. அவன் எப்பொழுது காட்டுவான், எங்ஙனம் கமலத்தை ஊடுருவுவான்? இதற்கு நான் கற்ற சாத்திரங்களில் பதில்லை. வேறு எந்தச் சாத்திரத்தில்

இருக்கிறது? ஒரு வேளை காம... சேச்சே... ஏதோ உளறுகிறேன்... பெண் நெஞ்சத்தின் பிதற்றல்... அதை விட்டுவிடுங்கள். ஆசார்யர் சொன்னதை எழுதுகிறேன்...'' என்று துவங்கி, தன் எண்ணத்தை உணர்த்தியிருந்தாள். உணர்ச்சி, ஓலைகளின் ஆரம்ப நறுக்குகளில் அலை பாய்ந்ததால், அந்த நறுக்குகளில் அவள் எழுத்து சரியாக இல்லாததையும், அடிக்கடி வாசகங்கள் தடைப்பட்டிருப்பதையும் இளவரசன் கண்டான். அதன் காரணத்தையும் புரிந்து கொண்டான். அந்தக் கனவில் பூரணமாக அழுந்தியும் விட்டான். பரமேசுவரவர்மன் கேள்வியொன்றை வீசாதிருந்தால், அந்தக் கனவும் நீங்கியிருக்காது.

எதிரே மஞ்சத்திலுட்கார்ந்து கொண்டு ஓலையின் முத்திரைகளை உடைத்த ராஜசிம்மன், நாலைந்து நறுக்குகளைப் படிக்க அவசியத்துக்கு மேற்பட்ட விநாடிகளை எடுத்துக் கொண்டதையும் அந்த நாலு நறுக்குகளையும் பட்டுக் கயிற்றின் பின்னால் துரிதமாகத் திருப்பி மறைத்துவிட்டதையும் கண்ட பரமேசுவரவர்மன், அதன் காரணத்தை அறிந்தாலும் அறியாததுபோல் நடித்து, ''ஏன் உணர்ச்சி வசப்பட்டு விட்டாய் ராஜசிம்மா? ஓலையில் நமக்கு ஒவ்வாதது, அபாயத்தை விளைவிப்பது ஏதாவது இருக்கிறதா?'' என்று வினவினான்.

தந்தையின் கேள்வியால் ஒரு விநாடி திணறிச் சங்கடமும் அடைந்த இளவரசன், ''இருங்கள், முழுவதையும் படித்து விட்டுச் சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டு, மற்ற எட்டு ஓலை நறுக்குகளையும் விடுவிடு என்று படித்து முடித்தான். பிறகு தந்தையைத் தலை நிமிர்ந்து நோக்கி, ''நான் எதிர்பார்த்ததுதான் ஓலையில் இருக்கிறது அநேகமாக. ஆனால் எதிர்பாராததும் ஒன்றிருக்கிறது'' என்று கூறினான் மேலுக்கு அலட்சியத்தைக் காட்டி.

''நீ எதிர்பார்த்தது என்ன? எதிர்பாராதது என்ன?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.

''முன்னமே நாம் பேசிக் கொண்டதுதான். விக்கிரமாதித்தன் பெரும் படையுடன் தெற்கு நோக்கிச் சென்று விட்டான். காஞ்சியை அடையும் மூன்று பிரதான சாலைகளையும் அடைத்து விட்டான்'' என்று கூறிய இளவரசன், ''முன்னமே உங்களை ஆந்திர நாடு செல்ல வேண்டிக் கொண்ட நான் ஒரு வாரம் தாமதிக்கச் சொன்னதும் நல்லதாயிற்று'' என்றும் சொன்னான்.

''என்ன நல்லதாயிற்று? படை திரட்டுவது தாமதிக்கப் படுகிறது. ஆந்திர நாடு சென்றதும் படை நம்மைப் பின்தொடரத் தயாராயிருக்கு மென்று எதிர்பார்க்கிறாயா?'' என்று கேட்டான் பல்லவ பூபதி.



''அப்படி நான் எதிர்பார்க்கவில்லை தந்தையே! நீங்கள் சென்று ஆந்திர நாட்டிலுள்ள கீழைச் சாளுக்கியர்களிடம் பேசிப் படை திரட்டி வரும்போது, விளிந்தையின் நிலை இன்றிருப்பது போல் திடமாயிருக்க வேண்டும். இப்பொழுது அதை அதிகமாகத் திடப்படுத்த அவசியமிருக்கிறது. பிரதான சாலைகளைச் சாளுக்கிய மன்னன் அடைத்துவிடப் போவதால், முதலில் நான் தயாரித்த திட்டத்தை நிறைவேற்றுவது கடினம். விளிந்தையிலிருந்து ஒரு படையும் மேற்குக் காடுகளிலிருந்து ஒரு படையும் கிளம்பி, இரண்டும் இணைந்து தெற்கே செல்வது நமது முதல் திட்டம். இப்பொழுது பிரதான சாலைகள் அடைக்கப்பட்டிருப்பதால், ஆங்காங்கு படைகளுடன் போரிட்டே செல்ல வேண்டியிருக்கும். இந்தப் படைகளை நாம் முறியடிக்க முற்பட்டால், நாம் திரட்டும் படை அனாவசியமாகச் சேதப்படும். ஆகவே வேறு வழி யோசிக்க வேண்டும். அதையோசித்துக் கொள்ள அவகாசமிருக்கிறது. ஆனால் இந்தப் படை திரட்டும் விஷயம் அத்தனை பிரதானமாக எனக்குப் படவில்லை. நம்மை எதிர்க்கப் போகும் ஒரே மனிதரைப் பற்றித்தான் சிறிது அச்சப்படுகிறேன்'' என்று விளக்கிய பல்லவ இளவல் முகத்திலும் அந்த அச்சம் சிறிதே தெரிந்தது.

அவன் யாரைக் குறிப்பிடுகிறான் என்பதை உணர்ந்தாலும் அதை அவன் வாயாலேயே அறிய முயன்ற பல்லவ மன்னனான பரமேசுவரவர்மன், ''யாரந்த மனிதர்?'' என்று வினவினான்.

''என்னைச் சோதிக்கக் கேட்கிறீர்கள், நீங்கள் ஊகிக்க முடியாததல்ல அவர் பெயர்'' என்றான் ராஜசிம்மன்.

''உன் வாயால்தான் வரட்டுமே'' என்றான் பரமேசுவரவர்மன்.

இளவரசன் தந்தையை உற்று நோக்கினான். இதழ்களில் இளநகையும், கண்களில் கவலையும் படர. பிறகு சொன்னான் மிக மரியாதையுடன், ''ஸ்ரீராமபுண்ய வல்லபர்'' என்று.

அந்தப் பெயரை ஏற்கெனவே பல்லவ மன்னன் ஊகித்து விட்டாலும் அதைக் கேட்டதும் சிறிது அசந்தே போனான். ''ஸ்ரீராமபுண்யவல்லபரா? விக்கிரமாதித்தன் போர்மந்திரியா?'' என்ற கேள்விகளில் கவலை வெளிப்பட்டது தெளிவாக.

''ஆம்.'' இளவரசன் அந்த ஒற்றைச் சொல்லால் பதில் சொல்லி, உள்ள அபாயத்தைக் குறிப்பாலுணர்த்தித் தனது ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கவும் செய்தான்.

''விக்ரமாதித்தன்?'' என்று விசாரித்தான் பரமேசுவரவர்மன்.

''அவர்தான் தென்திசை மீது படையெடுத்துச் சென்று விட்டாரென்று சொன்னேனே...''

''அப்படியானால்...''

''காஞ்சி, ஸ்ரீராமபுண்யவல்லபரின் ஆட்சியிலிருக்கிறது.''

''அவரைவிட்டுப் பிரிந்தா சென்றுவிட்டான் விக்கிர மாதித்தன்?''

''ஆம்.''

''போர் மந்திரியில்லாமல் மன்னன் மட்டும் செல்வது வழக்கமில்லையே சாளுக்கியர்களுக்கு.''

''புது வழக்கத்தை விக்கிரமாதித்த சத்யாச்ரயர் ஏற்படுத்தி யிருக்கிறார் முதன் முதலாக. அதில் ராஜ தந்திரமும் கலந்திருக்கிறது.''

''என்ன ராஜதந்திரம் ராஜசிம்மா?''

''ஸ்ரீராமபுண்யவல்லபர் காஞ்சியிலிருக்கும் வரை தாம் தென்திசை செல்வது மிகக்கஷ்டம் என்பதை சாளுக்கிய மன்னர் தெரிந்து கொண்டிருக்கிறார். தவிர சமீப காலமாகப் பல விஷயங்களில் சாளுக்கியப் போர் அமைதி மந்திரிக்கும், சாளுக்கிய மன்னனுக்கும் கருத்து வேற்றுமை இருந்து வந்திருக்கிறது. ஸ்ரீராமபுண்யவல்லபரைக் காஞ்சியைப் பாதுகாக்கும் பொறுப்பில் அமர்த்திவிட்டதால், குருவென்ற முறையில் அவருக்குத் தனது ஸ்தானத்தை அளித்து விட்டார்சத்யாச்ரயர். தவிர, தனது படையெடுப்பாலோ, அடுத்து வரும் போர்களிலோ தனது புஜபலத்தினால் மட்டும் வெற்றி வாகை சூடமுடியும் என்பதை உணர்த்தவும் முயல்கிறார் சாளுக்கிய மன்னர்'' என்ற ராஜசிம்மன், ''இதற்குக் காரணம் உங்களுக்குப் புரிகிறதா?'' என்று கேட்கவும் செய்தான்.

''புரிகிறது'' என்றான் பரமேசுவரவர்மன்.

''இதுவரை நடந்த போர்களில்...'' என்று துவங்கினான் ராஜசிம்மன்.

''பெரு வெற்றிகளை அடைந்திருக்கிறான் விக்கிரமாதித்தன். ஆனால் அவன் அடைந்த வெற்றிகளுக்கு அவன் வீரத்தைவிட ஸ்ரீராமபுண்யவல்லபரின் சீரிய கூரிய அறிவே காரணமென்று சாளுக்கிய மக்களும், வீரர்களும் நினைக்கிறார்கள்.''

''அந்த எண்ணத்தை அறுக்க, விக்கிரமாதித்த மன்னர் தம்மிடமிருந்து ஸ்ரீராமபுண்யவல்லபரை பிரித்துவிட்டார்.''

''ஆகையால்...?''



''விக்கிரமாதித்தர் படையை நாம் அணுகு முன்பு ஸ்ரீராமபுண்ய வல்லபரின் வலையை அறுக்க வேண்டும்.''

''எப்படி அறுப்பாய்? சாலைகள் மூடப்பட்டுவிட்டால்...''

''அதைப் பற்றி யோசிக்கிறேன். சாளுக்கியப் போர் மந்திரிக்குத்தான் தந்திரமும், போர் முறையும் தெரியுமா? ஏன் பல்லவ வட்டாரங்களில், கோட்டங்களில் அவற்றுக்கு மாற்றுக் கண்டு பிடிக்கும் மதியுள்ளவர்கள் இல்லையா?'' என்று கேட்ட பல்லவ இளவல். ''தந்தையே! இன்றே நீங்கள் கிளம்புகிறீர்கள் ஆந்திர நாட்டை நோக்கி'' என்று திட்டமாகச் சொல்லிவிட்டு அந்த அறையைவிட்டு வெளிக் கிளம்பினான்.

அப்பொழுது காலை நேரம். கதிரவன் உதித்துச் சில நாழிகைகளே ஆகியிருந்தன. அதிக உஷ்ணம் ஏறாத காலைக் கிரணங்களையும் சிறிது சிறிது ஆங்காங்கு மறைந்து விட்ட மாளிகைச் சோலையை நோக்கித் தீவிர சிந்தனையுடன் சென்றான் இளவரசன் ராஜசிம்மன். ஆங்காங் கிருந்த மலர்ச் செடிகளும் சரி, ஆகாயமளாவிய பெருமரங்களும் சரி, அவனுக்கு ஆத்ம சாந்தியை அளிக்கவில்லை. தந்தையுள்ள போதே பல்லவ சாம்ராஜ்யத்தின் பெரும் சுமை தன்மீது இறங்குவதை அவன் உணர்ந்தான். அந்த உணர்வு அவன் கண்களின் முன்பாகத்திரும்பத் திரும்ப ஸ்ரீராமபுண்யவல்லபரையும் கொண்டு வந்து நிறுத்தியதால், எங்கு போகிறோமென்பதை அறியாமலும், புஷ்பங்களைத் தாங்கிக் காற்றிலாடி அழைத்த செடிகளைக் கவனிக்காமலும், கால்போன வழியே சோலைக்குள் சென்றான் ராஜசிம்மன். திடீரென்று ஓரிடத்தில் நின்ற பிறகுதான், தான் எங்கு வந்திருக்கிறோமென்பதை உணர்ந்து கொண்டு, சோலையைப் பார்த்தான். மைவிழியும் தானும் படுத்துக் கிடந்த மரகதப் பாயும் சற்றுத் தள்ளியிருந்த மரமல்லி மரமும் கண்ணெதிரே தென்படவே அவன் கவலை சிறிது குறைந்தது.

அங்கிருந்த மரகதப் பாயில் மல்லாந்து படுத்து, மரமல்லி மரத்தை அண்ணாந்து பார்த்தான் பல்லவ இளவல். அன்றும் மரமல்லி மரகதப் பாயின் மீது வெண்மலர் தூவியிருந்தது. சில மலர்களை அவன் மீதும் உதிர்க்கலாயிற்று. அவற்றில் ஒன்றை எடுத்து, நீளமான காம்பில் பாதியைக் கிள்ளியெறிந்து, வாயில் வைத்து மெள்ள ஊதினான்.

அந்த மலரிலிருந்த வெளிக் கிளம்பிய மெல்லிய கானம், அவன் மனத்தை அரசியலிருந்து சிறிது விலக்கவே, அன்றொரு நாளிரவு தானும் அவளும் படுத்திருந்த நிலையை எண்ணிப் பார்த்தான்.

பிறகு படுத்தபடியே அவள் எழுதிய ஓலையின் காதல் பகுதிகளை மட்டும் திரும்பப் படித்தான். 'மைவிழி, நீ எப்பொழுது கவியானாய்? நீ எப்பொழுதும் கவிதை கற்றதாக எனக்குச் சொல்லவில்லையே. பாவம்! இதை எழுத நீ என்ன சிரமப் பட்டிருப்பாய்? எத்தனை கஷ்டப்பட்டிருப்பாய்? உன் நாணமே கவிதையாயிற்றா? அல்லது மகாகவியின் மாளிகைக்குள் நுழைந்தால் எல்லாருக்குமே கவி புனைய வருமா?' என்று பித்தன் போல் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

'ஆமாம், இங்கு படுத்திருந்தபோது, நான் அருகிலிருந்த போது அத்தனை நாணத்தைக் காட்டவில்லையே நீ? பிரிந்த பின்பு, தனிமையிலிருந்தபோது ஏன் இத்தனை நாணப்பட்டிருக்கிறாய். உன் எழுத்தாணி தடுமாறியிருக்கிறதே? பிரிவில் வருவதுதான் நாணமா? கூடியிருப்பது நாணத்தை மீறிய நிலையா?' என்றும் வினவிக் கொண்டான்.

கேள்விகளுக்கு அவனுக்கே விடை புரியவில்லை. மகாகவி தண்டியின் மாளிகையில், ஏதோ ஓர் அறையில் தனிமையில் அவள் சொற்களைத் தீட்டுவது போன்ற பிரமை அவனுக்கு ஏற்பட்டது.

மீண்டும் மீண்டும் அவன்மீது உயர்ந்த மரமல்லி மலர்கள் காமத் தீயை விசிறவே தொடங்கின.

அவன் மனம் அவளைக் காஞ்சியிலிருந்து அந்த இடத்துக்கே இழுத்து வந்தது. அப்பொழுதும் தன் பக்கத்தில் அவள் உட்கார்ந் திருக்கும் பிரமை அவனுக்கு ஏற்பட்டது. அவள் மலர்க் கை அவன் மார்பைத் தொட்டதாகக்கூட அவனுக்குத் தோன்றியது.

ஒரு வாரத்துக்கு முன்பு அவளிருந்த அதே கோலத்தில் அன்று மிருந்தாள் மைவிழி. அந்த முத்துச் சரமும், மல்லிகைச் சரமும் பழையபடி அவனை அலைக்கழித்தன.

'ஆம், ஆம், நான் குழந்தைதான்' என்று சொல்லிக் கொண்டான் பல்லவ இளவல். ''குழந்தை என்ன செய்யும்?'' என்று கேட்டு இன்பநகை கொண்டான். எதையோ செய்ய வேண்டியதற்குப் பதில் எதையோசெய்து கொண்டிருக்கிறேன், மைவிழி. உன்னையும் தேவியையும் போல் காதல் சிலைகளால் கைலாசநாதர் கோயிலை அழகுபடுத்த எண்ணினேன். என் எண்ணங்களையெல்லாம் அள்ளி உணர்ச்சிக் குருதியைப் பெருக்கிக் கைலாசநாதர் பாதங்களில் போடவும். கலையை வளர்க்கவும் எண்ணினேன். சிற்றின்பத்தைக் காட்டிப் பேரின்பத்தைக் காட்டவேண்டும் என்ற பெரியோர்



சொல்லைக் கோவிலில் மெய்ப்படுத்த விரும்பினேன். ஆனால் காலம் செலவழிகிறது. போரில், நமது பிரிவில், செலவழிகிறது. போரிலேற் படும் மரணங்களை மனம் சிருஷ்டிக்கிறது. நான் என்ன செய்யட்டும்?'' என்று அங்கலாய்த்தான் இளவரசன்.

பிறகு மரமல்லி மரத்தையும் அதிலேறிய கொடியையும் பார்த்தான். 'உங்களிருவருக்கும் பிரிவில்லை. இருவரும் ஆனந்த பாஷ்பமெனும் மலரைச் சொரிகிறீர்கள் என்மீது. உங்களுக்கு அவை ஆனந்த பாஷ்பம், எனக்கோ அவை இதயத்தை ஊடுருவும் ஊசிகள். விக்கிரமாதித்தன் பாணங்களுக்கு நான் அஞ்சவில்லை. ஆனால் உங்களுக்கு அஞ்சுகிறேன். இத்தனைக்கும் உங்களிடம் பஞ்ச பாணங்களில்லையே. எங்கிருந்து உங்களுக்கு இத்தனை சக்தி வந்தது? மரமே, உனக்குக் கொடியளித்த சக்தியா அல்லது கொடிக்கு நீ அளித்த சக்தியா? இருவரும் கூடியதால் உண்டான இன்ப அம்புகளா? எனக்குப் புரியவில்லை. மரமே, நீ தான் சொல்லேன். கொடி உன்னைத் தழுவியதால் வெட்கப்படுகிறது. கொழு கொம்பான உனக்கேன் வெட்கம்?' என்று பலவாறு சிந்தித்தான், பிறகு ஓலைகளின் முதல் நான்கு நறுக்குகளைத் தனியாகப் பிரித்துக் கச்சையில் செருகிக் கொண்டான். மற்றவற்றைப் பட்டுக்கயிற்றால் கட்டி இன்னொரு புறத்தில் செருகிக் கொண்டான்.

''அரசாங்கச் செய்தியை ஏன் இரண்டாகப் பிரிக்கிறாய்?'' என்று யாரோ கேட்ட கேள்வி அவனைத் திடுக்கிடச் செய்தது. அந்தத் திகைப்பில் எழுந்து உட்கார்ந்தான் பல்லவ இளவல். எதிரே பரமேசுவரவர்மன் புன்னகையுடன் நின்றிருந்தான். ''அதைக் கொடு பார்ப்போம்'' என்று கையையும் நீட்டினான்.

# 82. மனோவேகம்

பல்லவர்கோனை அந்த இடத்தில் எதிர்பார்க்காத பல்லவ இளவல் தந்தையைக் கண்டதும் ஒரு கணம் திகைத்துப் போனாலும் அடுத்த விநாடி திகைப்பை உதறிக் கொண்டு நன்றாக எழுந்து நின்று பட்டுக் கயிற்றால் கட்டிய ஓலை நறுக்குகளைத் தந்தையிடம் நீட்டினான். அதை வாங்கிக் கொண்ட பரமேசுவரவர்மன், ''அந்த இன்னொரு பகுதி?'' என்று வினவினான்.

''அது அரசியலைப் பற்றியதல்ல'' என்று கூறிய பல்லவ இளவல் காரணமில்லாமல் ஆகாயத்தை அளாவியிருந்த மரமல்லி மரத்தை அண்ணாந்து பார்த்தான்.

''வேறு என்ன இயலைப்பற்றியது?'' என்று வினவிய பரமேசுவரவர்மன்மெல்ல நகைத்துவிட்டு, ''நான் எப்பொழுது புறப்படலாம் ஆந்திர நாட்டுக்கு?'' என்று பேச்சை மாற்றிக் கேட்டான் மகனின் சங்கடத்தை உணர்ந்து.

''இன்று பிற்பகலில் புறப்படலாம்'' என்று கூறிய பல்லவ இளவல், அந்த இடத்தில் மேலும் நிற்காமல் சரேலென்று திரும்பி மாளிகையை நோக்கி நடந்தான் வேகமாக.

அவன் வேகத்திற்கு அந்த முதல் நான்கு ஓலை நறுக்குகளும் அசந்தர்ப்பமான தனது கேள்விகளுமே காரணமென்பதைப் புரிந்துகொண்ட பரமேசுவரவர்மன், இதழ்களில் படர்ந்த புன்முறுவல் சிறிதளவும் விலகாத நிலையில் மகனை நிதானமாகப் பின் தொடர்ந்தான். தனது நடை பழையபடி உறுதியாகவும், மார்புக் காயத்தில் காலடியின் அதிர்ச்சி இம்மியும் உறைக்காமலிருந்ததையும் கண்ட பரமேசுவரவர்மன், சீனனான யாங்சின்னை உள்ளத்தே பெரிதும் பாராட்டிக் கொண்டான். மார்பிலே ஏற்பட்ட மரணகாயத்தை ஒரே நாள் சிகிச்சையால் சீனன் சரிப்படுத்திவிட்டதையும், அடுத்த ஒரு வாரத்தில் அந்தக் காயத்தின் வடுவைத் தவிர வேறெவ்வித இம்சையும் இல்லாததையும் எண்ணிய பல்லவ பரமேசுவரன், சீனனிடம் பெரும் சக்தி இருப்பதை உணர்ந்து கொண்டான். அத்தகைய சீனன் சீன அரச பரம்பரையைச் சார்ந்தவனென்று தனது மகன் சொல்லக் கேட்டிருந்தானாதலால் அப்பேர்பட்ட ஒருவன் ஒரு கோயிலைக் கட்டுவதற்காகத் தனது மகனிடம் அடிமை போல் நடந்து கொள்வதையும் நினைத்துப் பார்த்து, தனது மகனிடமுள்ள சிற்பத் திறன் உலகத்திலுள்ள யாரையும் வசீகரிக்க முடியும் என்பதையும் உள்ளூரச் சொல்லி உவகை கொண்டான். அப்பேர்ப்பட்ட தனது மகன் சிற்பத் திறமையை காட்டுவதற்குப் பதில் போர்திறமையைக் காட்டவேண்டிய நிலை ஏற்பட்டதை நினைத்துப் போர்களையே வெறுத்துக் கொண்ட பல்லவ மன்னன். மாளிகையை மெல்ல மெல்ல அடைந்தான். அங்கு பல்லவ இளவல் தனது அறையில் பலபத்ரனையும், சீனனையும் இருத்திக் கொண்டு தீவிர தர்க்கத்தில் திளைத்திருப்பதையும் கண்டான்.

மன்னனின் வரவைக் கண்ட பல்லவ இளவலும் மற்றோரும் எழுந்து பணிந்ததும், இளவரசன் தந்தையை நோக்கிச் சொன்னான் : ''தந்தையே! இன்று பிற்பகல் தாங்கள் இரண்டு உபதளபதிகளுடன் ஆந்திர நாடு செல்கிறீர்கள் படைதிரட்ட. ஓர் உபதளபதியும் சீனனும் இங்குள்ள படையின் ஒரு பகுதியை அழைத்துக் கொண்டு சாளுக்கிய நாட்டு எல்லையை நோக்கிச் செல்லுகிறார்கள். பலபத்ரவர்மர் விளிந்தையிலேயே தங்கியிருப்பார்.''



பரமேசுவரவர்மன் தன் மஞ்சத்திலமர்ந்து மற்றவர்களையும் அமரச் சொல்லிவிட்டு, ''இப்பொழுது உனது திட்டம் சற்று மாறியிருக்கிறது'' என்று கூறினார் மைந்தனை நோக்கி.

''விக்கிரமாதித்தன் தனது திட்டத்தை மாற்றிவிட்டதால் நாமும் நமது திட்டத்தை மாற்ற வேண்டியிருக்கிறது. சாலைகளை விக்கிரமாதித்தர் அடைத்துவிட்டார். சாலைகளையும் காஞ்சியையும் பாதுகாக்கும் பொறுப்பு ஸ்ரீராமபுண்ய வல்லபரிடம் அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த நிலையில் விளிந்தை சரியாகப் பாதுகாக்கப் படாவிட்டால், இதைக் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் சாளுக்கியப் போர் மந்திரி விழுங்கிவிடுவார். பிறகு தாங்கள் திரட்டும் படையை வரவேற்பதற்கும் அணிவகுப்பதற்கும் இடமிருக்காது. ஆகையால்தான் பலபத்ரவர்மரை இங்கு நிறுத்தத் தீர்மானித்தேன்'' என்று விளக்கினான்.

''சீனனைத் தனியாக எதற்காக அனுப்புகிறாய் சாளுக்கிய நாட்டுக்கு?'' என்று வினவினான் பலபத்ரவர்மன்.

''நான் வேறு இடத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. எப்படியும் சீனன் சாளுக்கிய நாட்டு எல்லையை அணுகு முன்பே அவனுடன் நான் சேர்ந்து கொள்வேன். நான் வர ஓரிரண்டு நாட்களானாலும் சீனன் நமது படைகளைச் சாளுக்கிய நாட்டு எல்லைக் காடுகளில் மறைத்து வைப்பான்'' என்று கூறினான் ராஜசிம்மன்.

''நீ எந்த இடத்திற்குப் போகிறாய்?'' என்று கேட்டான் பரமேசுவரன்.

''கங்க நாட்டுத் தலைநகர் தழைக்காடுக்கு'' என்று பதில் சொல்லிய பல்லவ இளவல் தந்தையை உற்று நோக்கினான்.

''கங்க நாட்டுக்கா!'' பரமேசுவரன் கேள்வியில் அதிர்ச்சியிருந்தது.

''ஆம்'' என்ற பல்லவ இளவலின் பதிலில் எந்தவித உணர்ச்சியு மில்லை.

''கங்கன் நமது எதிரி. நம்மை முறியடித்தவன். அவன் தலை நகரில் தலையை நீட்டுவது அவ்வளவு விவேகமா?'' என்று வினவினான் பரமேசுவர வர்மன்.

''நான் போவது போருக்காக அல்ல.''

''வேறு எதற்கு?''

ராஜசிம்மன் தந்தையிடம் மகன் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசத் தொடங்கி, ''தந்தையே! நாடு தத்தளிக்கும் போது அந்நாட்டு அரசனோ இளவரசனோ தனி உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்கக்கூடாது என்பதை நான் உணருகிறேன். நான் கங்க நாட்டுக்குச் செல்வது ரங்கபதாகாதேவியைப் பார்ப்பதற்கல்ல, சாளுக்கியர்களுடன் ஏற்படும் நமது போர்களில் கங்கன் மீண்டும் தலையிடா திருக்க ஒப்பந்தம் செய்துகொள்ள'' என்று கூறினான்.

இதைக் கேட்டதும் பரமேசுவரவர்மன் விழிகளில் சினத்தின் ஒளி பளிச்சிட்டது. ''ராஜசிம்மா! கங்கன் நம்மை இரு முறை முறியடித்திருக்கிறான்'' என்றான் சீற்றத்துடன்.

''எப்படி இருமுறை?''

''முதலில் ரகசியமாகத் தளவாடங்களைச் செய்து விக்கிரமாதித்தனுக்குக் கொடுத்தான். இல்லையேல் சாளுக்கியர் திடீர்ப் படையெடுப்பு பல்லவ நாட்டு மீது ஏற்பட்டிருக்காது. நாமும் காஞ்சியை விட்டு வெளிக் கிளம்ப அவசியமிருந்திருக்காது. ஆகவே விக்கிரமாதித்தன் வெற்றியில் கங்கனுக்கும் பங்கு உண்டு. அது ஒரு தோல்வி. இரண்டாம் முறையாக நேருக்கு நேர் விளிந்தைச் சமவெளியில் நம்மை முறியடித்திருக்கிறான். இது இரண்டாவது தோல்வி. அவனிடம் சமாதான ஒப்பந்தம் நமக்கு மானக்கேடு.''

தந்தை சொன்னதையெல்லாம் நிதானமாகக் காதில் வாங்கிக் கொண்டான் பல்லவ இளவல். சிறிது நேரம் சிந்தனையிலும் இறங்கினான். கடைசியில் மெள்ளப் பேசத் தொடங்கினான். ''தாங்கள் கூறிய விஷயங்களை நான் ஆலோசிக்காமலில்லை. ஆனால் எதுவும் போரின் கடைசி முடிவுகளைப் பொறுத்திருக்கிறது. நேற்றைய தோல்வி, இன்று வெற்றியாக முடியும். எதிரியை நண்பனாகச் செய்து கொள்வதிலும் தவறில்லை. சந்திரகுப்தருக்காகப் போராடி, நவ நந்தர்களை அழித்த கௌடில்யர் கடைசியில் நவ நந்தர்களின் மந்திரியும் அவர்கள் சார்பில் பலமாகப் போரிட்டுச் சந்திரகுப்தன் படைகளுக்குப் பெரும் சேதத்தை விளைவித்த வனுமான ராக்ஷஸனையே சந்திரகுப்தனுக்கு மந்திரியாக்க வில்லையா? உண்மையில் கங்கன் நமக்கு நேர் எதிரியில்லை. விக்கிரமாதித்த மன்னனின் நண்பன் என்ற முறையில் நம்மை எதிர்த்தான். அவனை விக்கிரமாதித்தனுக்கு எதிராக நாம் திருப்பாவிட்டாலும் நடுநிலை வகிக்கச் சொல்லலாம். அப்படி அவன் நடுநிலை வகித்தால் இந்த விளிந்தைக்கு எந்தவித அபாயமுமில்லை. இல்லையேல் நாமிருவரும் சீனனும் சென்றதும் குறைந்த படையுள்ள இந்த இடத்தைக் கங்கன் மீண்டும் தாக்கலாம்.''



''இதைத் தாக்க வேண்டாமென்றும் திரும்பிச் செல்லுமாறும் விக்கிரமாதித்தன் ரங்கபதாகாதேவியிடம் ஓலை கொடுத்தனுப்ப வில்லையா?'' என்று வினவினான் பல்லவ மன்னன்.

''ஆம், அனுப்பினார்.''

''அப்படியிருக்க கங்க மன்னன் திரும்ப நம்மை எப்படித் தாக்குவான்?''

''காஞ்சி மண்டலத்தை இப்பொழுது ஆள்வது விக்கிரமாதித் தரல்ல, ஸ்ரீராமபுண்யவல்லபர். மீண்டும் தாக்கச் சொல்லி அவர் ஓலை அனுப்பமாட்டாரென்பது என்ன நிச்சயம்? அப்படி ஓலை அனுப்பினால், சாளுக்கிய மன்னர் உத்தரவை அவர் மாற்றினால், கங்கன் அதற்குப் பணியாதிருக்க முடியுமா?''

''விக்கிரமாதித்தன் உத்தரவை மீறி......''

''ஏற்கெனவே உத்தரவுகளைப் பிறப்பித்தவர்தானே ஸ்ரீராமபுண்யவல்லபர்?''

அது உண்மைதானென்பதை உணர்ந்த பரமேசுவரவர்மன் சற்றுக் குழம்பவே செய்தான். மைந்தன் சொன்னதில் பொருள் புதைந்திருப்பதை உணர்ந்தும் பூவிக்ரமனிடம் ஒப்பந்தம் செய்து கொள்வதை அவன் விரும்பவில்லை. அவன் விருப்பமின்மையை முகம் தெளிவாகக்காட்டியது. அதைக் கவனிக்கவே செய்த பல்லவ இளவல், ''தந்தையே! உங்கள் உள்ளம் எனக்குப் புரியவில்லை. எதிரியிடம் பிச்சை கேட்க நான் கங்க நாட்டுக்குப் புறப்படவில்லை. அவன் மனத்தை மாற்ற, அவனை நடுநிலை கொள்ளச் செய்யச் செல்கிறேன். அவன் மறுத்தால் அவனை வழிக்குக் கொண்டு வர மார்க்கமிருக்கிறது'' என்று கூறினான்.

''என்ன மார்க்கம்?'' பரமேசுவர வர்மன் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

''கங்க நாடும் சாளுக்கிய நாடும் அண்டை நாடுகள்...'' என்று சுட்டிக் காட்டினான் பல்லவ இளவல்.

''ஆம்'' என்றான் பல்லவ அதிபதி.

''சாளுக்கிய நாட்டு எல்லையில் நமது படைகளைச் சீனன் நிறுத்தி வைக்கப் போகிறான்.''

''உம்.''

''அந்தப் படைகளை அவசியமானால் கங்க நாட்டு மீதும் திருப்ப முடியும்.''

''அப்படியா உன் திட்டம்?''

''ஆம்.'' சாளுக்கிய எல்லையிலிருந்து படையைத் திருப்பினால், கங்க நாட்டைச் சூறையாடுவோம். அங்கும் நமக்கு வேண்டிய பொருள் கிடைக்கும்.''

''கங்கனைக் கொள்ளையடிப்பதை ரங்கபதாகாதேவி விரும்புவாளா?'' என்று கேட்டான் பரமேசுவரவர்மன். தேவியின் பெயரை உச்சரித்தபோது அவன் குரலில் குழைவு இருந்தது நன்றாகப் புலனாயிற்று பல்லவ இளவலுக்கு.

அதன் காரணத்தை அவன் உணர்ந்தே இருந்தான். தனக்கு முதலில் சிகிச்சையும் சிசுருஷையும் செய்த தேவிக்கு, தன் வருங்கால மருமகளுக்கு, மனக்கஷ்டத்தைச் சிறிதளவும் அளிக்கத் தந்தை இஷ்டப்படவில்லை என்பதை நன்றாகப் புரிந்து கொண்ட ராஜசிம்மன், ''தந்தையே, தனி மனிதர் உணர்ச்சிகளை மன்னர்கள் கவனிப்பதில்லை, மக்களின் நலனை முன்னிட்டு. தவிர, நாம் அடிக்கப் போவது கொள்ளையுமல்ல. எல்லைப் பகுதிகளைப் பிடிக்கப் போகிறோம். அங்கு கப்பம் வசூலிக்கப் போகிறோம், மேலும் படை திரட்ட. கங்க மன்னன் நடுநிலை வகித்தால், நான் அவனிடம் அணுகப் போவதில்லை. உள்ள நிலையை விளக்கினால் கங்க மன்னனும் புரிந்து கொள்வான். நம்மிடம் விரோதம் கொள்வதும் விரோதத்தை நீடிப்பதும் கங்க நாட்டுக்கு நன்மை பயக்காதென்பதை கங்க மன்னனுக்கு உணர்த்தப் போகிறேன். நான் முதலில் அங்கு செல்லப் போவது தங்கள் தூதன் என்ற முறையில். தூதனை அவன் சிறைப்படுத்த முடியாது'' என்று விளக்கினான்.

பரமேசுவரன் அதற்கு மேல் எவ்வித ஆட்சேபணையையும் தெரிவிக்கவில்லை. ''சரி, நான் புறப்பட ஏற்பாடு செய்'' என்று மட்டும் கூறினான்.

அதற்குப் பின் மன்னன் அறையிலிருந்து கிளம்பி மற்றவர்களுடன் தனது அறைக்கு வந்த ராஜசிம்மன் உத்தரவுகளை மளமளவென்று பிறப்பித்தான் : ''யாங்சின்! இங்குள்ள படையில் பாதியை அழைத்துக் கொண்டு, சாளுக்கிய நாட்டு எல்லையில் துங்கபத்ராவின் காட்டுப் பகுதியில் தங்கியிரு. அந்தக் காட்டுப் பகுதிதான் கங்க நாட்டையும் சாளுக்கிய நாட்டையும் பிரிக்கிறது வடமேற்கில். நான் கங்க நாடு சென்று, அங்கிருந்து நீ இருக்குமிடம் வருகிறேன். பிறகு செய்வதென்னவென்பதை யோசித்துக் கொள்வோம். பலபத்ரவர்மரே, யாங்சின்னுடன் ஓர் உபதளபதியும், மன்னருடன் இரு உபதளபதிகளும் செல்லட்டும் இங்குள்ள இரும்புப் பட்டறைகளில் போதிய ஆயுதங்களை உற்பத்தி செய்யுங்கள் மீதிப் படையைத் தோட்டப்பகுதிகளில் படுக்க விடவேண்டாம். தினந்தோறும் போர்ப் பயிற்சிகளில் ஈடுபடுத்துங்கள். எல்லைகளில் இப்பொழுதுள்ளதைப் போலவே காவல் மும்முரமாயிருக்கட்டும். தூதர்கள் சிலரை அனுப்பிக் காஞ்சியின் எல்லைகளில் மறைந்து பிரிந்து கிடக்கும் பல்லவ வீரர்களை மெல்ல மெல்லத் திரட்டவும் அவர்களை மேற்குத் தொடர் மலையில் சேரவும் ஏற்பாடு செய்யுங்கள். நான் சாளுக்கிய நாட்டிலிருந்து திரும்பும் வரை வேறு எந்தப் போர்ச் செயலிலும் இறங்க வேண்டாம்.''



இப்படி உத்தரவிட்ட இளவரசன் தான் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தான். இருபெரும் பைகளில் துணிகளையும் திணித்துக் கொண்டான். அன்று பிற்பகல் பரமேசுவரவர்மனும், இரு உபதளபதிகளும் சென்ற பிறகு, மாலையில் அவனும் புறப்பட்டான் கங்க நாடு நோக்கி. போகு முன்பு, தன்னைப் பிரிய மனமில்லாமல் தனித்து, தன் புரவியின் கடிவாளத்தைப் பிடித்து நின்றிருந்த சீனனைப் பார்த்து, ''யாங்சின்! உன்னைப் பிரிய எனக்கும் விருப்பமில்லை. ஆனால் தந்திரமாகப் படைகளை அழைத்துச் செல்ல உன்னைத் தவிர வேறுயாரும் இல்லை. எப்படியும் ஒரு வாரத்திற்குள் உன்னைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் புரவியைத் தட்டிவிட்டான்.

புரவி நகர்ந்தது விளிந்தை மாளிகையை விட்டு, நகர எல்லை வரையில் நிதானமாகச் சென்ற பல்லவ இளவல், அதற்குப் பிறகு புரவியை வாயு வேகத்தில் செலுத்தினான். ஆனால் அதைவிட மனோவேகம் அதிகமாகி, கங்கர்களின் தலைநகரான தழைக் காட்டையும் அங்கிருந்த அந்தப் புரத்தையும் அணுகிக் கொண்டிருந்தது!

## 83. கங்கன் கவலை

குடமலைத் தொடரிலிருந்து கிடுகிடுவென்று சிறுமி போல் துள்ளி இறங்கி, சமவெளி வந்ததும், நித்திய யௌவனத்தை அடைந்தவளும், கோடிக் கோடிக் கணக்கான மக்களுக்குக் கரும்பினும் இனிய நீரை அளித்ததால் தாயானவளும், தாய்மையிலும் இளமை குன்றாததால் இனிய நோக்குடையவளும், என்றும் பால் சுரக்கும் காமதேனுவைப் போல் வெப்ப காலத்தில் மணல் மட்டும் தெரிந்தாலும் மணலைச் சிறிது தள்ளிய மாத்திரத்தில் நீர் சுரக்கும் தன்மையுடையவளும், அப்படி அடியிலோடும் பிரவாகத்தைச் சதா பெற்றதால்

கங்கையும் யமுனையும் சேருமிடத்தில் அந்தர் வாகினியாக வந்து சேர்ந்து கொள்ளும் சரஸ்வதி நதியைப் போன்றவளும், கங்கையினுள் புனிதமாய் காவிரியென்று மங்களாசாஸனம் பெற்றவளுமான காவிரித்தாயின் தென்கரை யிலிருந்த தழைக்காடு எனும் மாநகர், பழம் பெரும் மரங்களின் செழிப்புத் தழைகளாலும், புதிய செடி கொடிகளிலும் துளிர்களாலும் சூழப்பெற்றிருந்ததால் தழைக்காடு என்ற காரணப் பெயரையும், சிறு அருவியாகத் தலைநீட்டிய இடத்துக்குச் சற்று தூரத்திலேயே இருந்ததால் தலைக்காடு என்ற பெயரையும், பெற்று இருவிதச் சிறப்புக்களை அடைந்திருந்ததன்றிக் கங்க நாட்டு மன்னர்களின் தலைநகரமாகி வரலாற்றுச் சிறப்பையும் அடைந்திருந்தது. அந்த நகரைச் சுற்றிலும் காடுகளை அப்படியே விட்டு இடையே சக்கர வட்டமாகத் தலை நகரத்தைக் கங்கர்கள் அமைத்திருந்ததாலும், பெரும் மதிள் சுவர்களை எழுப்பியிருந்ததாலும் தழைக்காடு இயற்கை அரண்களான காடுகளையும், செயற்கை அரண்களாகத் தடமதிள் களையும் உடைத்தாய், யாரும் நெருங்க முடியாத பலமான நகரமாயிருந்தது. வளைந்து வளைந்து ஓடிய மதிள்களுக்குள் ஆங்காங்கு இருந்த வீதிகளிலிருந்த கட்டிடங்கள் பெரிதானாலும், வெளியிலிருந்த பெருமரங்களின் காரணமாக அக்கட்டிடங்களும் வீதிகளும் கண்ணுக்கு வெகுதூரம் வரையில் தெரியாமலே இருந்தவன வாகையால், அந்நகரம் மறைந்துறையும் புலிபோலக் காட்சியளித்தது. நகரத்தை அணைத்திருந்த காவிரியும் அந்த நகரத்திலிருந்து வந்த பசுக்களுக்கு மட்டுமின்றி, பக்கக் காடு களிலிருந்த புலிகளுக்கும் நீரை அளித்ததால் கங்கர்களின் ராஜ்யம் தர்ம ராஜ்யமாகவே இருந்தது.

அந்தத் தர்மராஜ்யத்தின் தலைநகரத்தின் நடுமத்தியில் வளைந்த வீதிகளின் வீட்டு வைரங்களுக்கு இடையில் மரகதப் பச்சையென அமைந்திருந்த மன்னன் அரண்மனை, மிகப்பெரியதாயும் இரண்டு மூன்று அரண்களை ஒன்றுக்குள் ஒன்று வளைந்த தோடும் முறையில் அமைக்கப் பெற்றிருந்ததாலும் பார்ப்பதற்கு மிகக் கவர்ச்சியாகவும், அணுகுவதற்கு மிகக் கஷ்டமானதாகவும் இருந்தது. நகரத்தின் ஆரம்ப வீதிகளில் காணப்பட்ட மதிள்களிலும் அரசன் அரண்மனை மதிள்களிலும் புரவி வீரர் சதா நடமாடிக் கொண்டிருந்ததாலும், நகரத்தின் ஒரு புறத்தில் பெரிதாகத் தூண்போல் எழும்பியிருந்த பார்வைக் கட்டிடத்திலிருந்து வீரர் இருவர் எப்பொழுதும் வெளிப்புறங்களைக் கண்காணித்து வந்ததாலும் அந்த மாநகரைத்



தெரியாமல் அணுகுவதோ, சுலபமாக வெற்றி கொள்வதோ முடியாதென்பது சந்தேகமறப் புலனாயிற்று.

இத்தகைய பாதுகாப்பிலிருந்த கங்கர் தலைநகரின் மன்னனுக்குத் திடீர் படையெடுப்பின் பயமோ வேறுவிதக் கவலையோ இருக்க காரணமில்லையென்றாலும், அன்று காலையில் பூவிக்ரமன் முகத்தில் கவலை அதிகமாகவே படர்ந்து கிடந்தது.

யாரும் துணிந்து உள்ளே வரமுடியாத தனது அந்தரங்க அறையில், தீவிரக் கவலையுடனும் சிந்தனையுடனும் நீண்டநேரம் உலாவிக் கொண்டிருந்த பூவிக்ரமன் அங்கிருந்த ஒரு சாளரத்தின் மூலம் வெளியே தலை நீட்டிப் பார்த்தான். அந்த அரண்மனையில் அரசாங்க மண்டபத்தைத் தாங்கிய அந்த மாளிகைக்கும் சற்று எட்ட இருந்த அந்தப் புரத்திற்கும் இடையிலிருந்த பகுதியில், பூஞ்செடிகளின் பக்கத்தில் மயில்கள் சில தோகையை நீளவிட்டு கொண்டும், தலையைத் திருப்பி அப்புறமும் இப்புறமும் திடீர் திடீரெனப் பார்த்துக் கொண்டும் நடமாடின. புள்ளிமான்கள் சிலவும், புள்ளியற்ற மான்கள் சிலவும் துள்ளித் துள்ளி ஓடிக் கொண்டிருந்தன. தூர இருந்த இரண்டொரு மரங்களில் மயிலைப்போல் அழகில்லாவிட்டாலும் தீங்குரலுடைய குயில்கள் இசையால் உலகத்தை மயக்க முடியும் என்பதை நிரூபிக்க இனிமையாகக் கூவிக் கொண்டிருந்தன. எதிரேயிருந்த அந்தப் புர மாளிகையின் சின்னஞ்சிறு மாடங்களிலிருந்த பச்சைக் கிளிகள் அடிக்கடி பறந்து அடுத்திருந்த மரங்களில் தாவி உட்கார்ந்தன. அந்தக் காலை நேரத்தில் பொன்னிற ஆதவன் கிரணங்களால் அந்த நந்தவனமும் அந்தப் புரமும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தன. ஆனால் என்ன காரணத்தாலோ, மன்னன் கண்கள் அத்தனை அழகையும் ரசிக்கச் சக்தியற்றவாயின. ஏதோ நினைத்துக் கொண்ட மன்னன் கவலை குடிகொண்ட வதனத்துடன் வெகுவேகமாகத் தன் அறையிலிருந்து கிளம்பிப் படிகளில் தடதடவென்று இறங்கி நந்தவனம் வந்து சேர்ந்தான். நந்தவனத்தை வெகுவேகமாகத் தாண்டி அந்தப் புரத்துக்குள் நுழைந்தான்.

மன்னன் வரக்கண்ட அந்தப் புரக்காவலர் சிரம் தாழ்த்தி வழிவிட, முதல் கட்டிலிருந்த பணிப்பெண்கள் பூத்தொடுப்பது சந்தனம் அரைப்பது முதலிய பணிகளை விட்டு எழுந்துவணங்க, இரண்டாவது கட்டை அடைந்த பூவிக்ரமனை அவன் பட்ட மகிஷி எதிர்கொண்டாள். ''இத்தனை அவசரமாக எங்கு வந்தீர்கள்?'' என்று வினவி இளநகையும் கூட்டினாள். நடுவயதை அடைந்த நிலையிலும் சிறிதும் அழகை

இழக்காதவளும், ரம்பை போல் நின்றவளுமான பட்ட மகிஷியின் அழகைப் பற்றிய ஆர்வமில்லை, எழுந்த எழிலகங்களைப் பற்றிப் இச்சையுமில்லை கங்கனுக்கு. அவன் வாயிலிருந்து வந்த சொற்களில் இனிமையுமில்லை. ''தேவி எங்கிருக்கிறாள்?'' என்று முரட்டுத்தனமாக வினவினான் மன்னவன் பட்டமகிஷியை நோக்கி.

''எந்தத் தேவியைக் கேட்கிறீர்கள்? இதோ இருக்கிறேன். தங்கள் முதல் தேவி. மற்ற இரு தேவிகள் வேண்டுமானால், நீங்களே தேடிச் செல்வதுதான் நல்லது'' என்று நகைச்சுவையைக் காட்டினாள் பட்டமகிஷி.

''இங்கு இந்த அந்தப் புரத்தில் தேவியென்பவள் ஒருத்திதான், என் ராணிகளை நான் அப்படி அழைப்பதில்லை. இத்தனை நாள் இங்கிருந்தும் அது உனக்கேன் தெரியவில்லை?'' என்று கேட்டான் பூவிக்ரமன். அவன் சொற்கள் உஷ்ணத்துடன் உதிர்ந்தன.

உல்லாசத்துக்காக வரவில்லை மன்னவன் என்பதைப் பட்டத்து அரசி உணர்ந்து கொண்டாள். அவன் முகத்தில் கவலை படர்ந்திருப்பதைக் கண்டதும், அவன் தேடுவது தனது மகளைத்தான் என்பதையும் புரிந்து கொண்டாள். எந்த முக்கியமான அரசியல் விஷயத்தைப் பேசுவதானாலும் சில நாட்களாக அரசன், தன்னைவிட, அமைச்சர்களைவிட, தன் தலைமகளான ரங்கபதாகாதேவியிடமே கலந்து ஆலோசிப்பதை அவள் கண்டிருக்கும் காரணத்தால் மகளிடம் சிறிது பொறாமையும் கொண்டாள். 'அந்தக் குழந்தைக்கு என்னைவிட என்ன தெரியும்? காஞ்சியிலிருந்து அவள் வந்தது முதல் எப்பொழுதும் தனிமையில் அவளுடனேயே பேசிக் கொண்டிருக்கிறாரே! அவளென்ன அரசியலில் பெரிய அறிவை அடைந்து விட்டாளா?' என்று அடிக்கடி பட்டத்தரசி சென்ற சில நாட்களில் தன்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். 'சரி, தந்தையாயிற்று, பெண்ணாயிற்று, எனக்கென்ன?' என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறாள் இப்படிச் சொல்லிக் கொண்டாலும் பிறர் ரகசியத்தை அறிவதில் பெண்களுக்கு இயற்கையாயுள்ள குணத்தால், ''மகளை இப்பொழுது எதற்காகப் பார்க்க வேண்டும்?'' என்று கேட்டாள் கணவனை நோக்கி.

''முக்கிய காரியம்'' என்றான் மன்னவன்.

''எனக்குத் தெரியாத காரியமா?'' பட்டத்தரசியின் கேள்வியில் சற்றே பதட்டம் ஒலித்தது.



''உனக்குப் புரியாத காரியம்'' என்றான் மன்னவன் சற்று கோபத்துடன்.

அதற்குமேல் பட்டத்தரசி ஏதும் பேசவில்லை. ''தேவி பூஜை அறையிலிருக்கிறாள்'' என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு கோபத்துடன் அகன்றாள்.

பூவிக்ரமன் மனம் எங்கோ உழன்று கொண்டிருந்ததால், அவன் அவள் கோபத்தைக் கவனிக்காமலே இரண்டாவது கட்டின் கோடியிலிருந்த ரங்கபதாகாதேவியின் பூஜை அறையை நோக்கி விரைந்து சென்றான். அங்கிருந்த சாந்நித்தியம் அவன் கோபத்தையும், கவலையையும் ஓரளவு பறக்கடித்திருக்க வேண்டும். இதழ்களில் சற்றே புன்முறுவல் படர, கண் மூடித் தியானத்திலிருந்த தன் மகளை நோக்கியவாறு மௌனமாகப் பல விநாடிகள் நின்றான் தந்தை பூவிக்ரமன்.

தனது தலைநகர் வந்த பிறகு, ரங்கபதாகாதேவி தனது பூஜை அறையை ஆசார்யரின் அறை போல் மாற்றியிருந்தாள். ஓர் அம்பாள் விக்கிரகத்தையும் பிரதிஷ்டை செய்திருந்தாள். காஞ்சியிலிருந்த அதே சூழ்நிலை. அதே புஷ்பங்கள், அதே வித விளக்கு, அதேவித சிக்குப் பலகை எல்லாம் இருந்தன அங்கே. ஓலைச் சுவடி ஒன்றுகூடச் சிக்குப் பலகையில் இருந்தது. ஏற்கனவே தான் கற்று மனப்பாடம் செய்திருந்ததால், காவ்யாதர்சத்தின் சில பகுதிகளை ஓலையில் தன் கைப்பட நாகரி லிபியில் பதித்திருந்தாள் பூவிக்ரமன் புதல்வி. 'நாளுக்குப் பத்து சுலோகம் எழுதினால், உன்னிடமும் ஒரு காவ்ய தர்சம் இருக்கும்' என்று தண்டி மகாகவி எப்பொழுதோ சொல்லியதை நினைவு வைத்துக் கொண்டு, தந்தையுடன் வந்த நாள் முதலாய் சுலோகங்களை ஓலைகளில் பொறித்து வந்தாள் கங்க மன்னன் செல்வி.

அன்று வெள்ளிக்கிழமையாதலால் ஸ்நானம் செய்து, பரிமள கந்தங்களை எழுப்பும் புகையில் தலையை உலர்த்தி, முற்றும் பின்னாமல் குறுக்குப் பின்னலுடன் குழலைக் கட்டி ஒரே ஒரு மாலதிப் புஷ்பத்தை மட்டும் செருகியிருந்த போதிலும், அதிக ஆபரணங்களை அணியாதிருந்த போதிலும், அவள் வெண்மைக் கழுத்தும் கருத்த குழலும், கண்களைக் கவருவனவாகவே இருந்தன. அவள் கண் மூடித் தியானத்திலிருந்த நிலை வேதகாலப் பெண்களை நினைவுக்குக் கொண்டு வந்தது. அதை எண்ணி மகளின் பக்தியையும் எண்ணி வியந்து வெகுநேரம் நின்ற மன்னவன் அவள் பூஜையில் குறுக்கிட்டானில்லை. தியானம் முடிந்ததும் பூஜைக்குப் புஷ்பத் தட்டை எடுத்தபோதே சற்றுப்

பக்கத்தில் வந்துவிட்ட தந்தையைப் பார்த்த ரங்கபதாகாதேவி, ''நீங்கள் வந்ததை நான் பார்க்கவில்லையே?'' என்றாள் மன்னிப்புக் கேட்கும் பாணையில்.

''நீ தியானத்திலிருந்தாய்'' என்றான் பூவிக்ரமன்.

''ஆம், ஆசார்யர் சொல்லிக் கொடுத்தது'' என்றாள் தேவி.

பூவிக்ரமன் அதற்குப் பதில் சொல்லவில்லை. அடுத்திருந்த சிக்குப் பலகையையும் அதிலிருந்த சுவடியையும் பார்த்தான். ''ஆசார்யர் உனக்குப் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறார்'' என்றான் சிறிது தாமதித்து.

''ஆம்'' என்ற தேவி, புஷ்பங்களை எடுத்து அர்ச்சனை தொடங்கினாள். அர்ச்சனையை முடித்துவிட்டு ஆரத்தியும் எடுத்தாள் அம்பிக்கைக்கு. பூஜை முடிந்ததும், அம்பிகையின் திருவடிகளி லிருந்து தானொரு புஷ்பத்தை எடுத்துத் தலையில் செருகிக் கொண்டு தந்தைக்கும் ஒரு புஷ்பத்தைக் கொடுத்தாள். அதை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்ட பூவிக்ரமன், ''தேவி! தண்டியின் மாளிகையில் பூஜை அறையைப் பார்த்திருக்கிறேன். அதைவிடச் சிறப்பாக அமைத்து விட்டாய் இந்த அறையை'' என்று பாராட்டினான் மகளை நோக்கி.

''ஒன்றைப் பார்த்து ஒன்றைச் செய்வது எளிது. ஆனால் மூலத்துக்கும் தழுவலுக்கும் வேறுபாடு இருக்கிறது'' என்றாள் தேவி.

''என்ன வேறுபாடு?''

''ஒன்றில் உயிர்த் துடிப்பு இருக்கும். மற்றதில் உயிர்த்துடிப்பு ஓரளவு இருந்தாலும் பூர்ண வேகம் இருக்காது.''

''அதைப் போல?''

''இது ஆசார்யரின் பூஜை அறையைப் போலிருக்கிறது. ஆனால் ஆசார்யர் அம்பிகையின் அருள் பெற்றவர். வரப் பிரசாதி, எண்ணிய மாத்திரத்தில் கவிதை பொழியைக் கூடியவர். நான் சாதாரணப் பெண். அத்தனை சக்தி இல்லாத பேதை.'' இதைச் சொன்ன தேவி பெருமூச் செறிந்தாள்.

அது உண்மை என்பதை அறிந்திருந்தாலும் பூவிக்ரமன் மகளை நோக்கி, ''உன்னுடைய இந்த பக்தி காலத்தில் பலனளிக்கும் குழந்தாய். நான் முக்கியமாய் ஒரு விஷயம் பேச வந்தேன். உன்னிடம்'' என்று வந்த காரியத்தைச் சொல்லத் துவங்கினான்.

''சொல்லுங்கள்'' என்றாள் தேவி.



''இங்கேயா...?''

''ஆம்.''

''இது...?''

''தேவியின் சந்நிதானம். இங்கு எந்த உண்மையையும் பேசலாம். எந்தக் கவலைக்கும் அம்பாள் அருமருந்து'' என்று குறிப்பிட்டாள் தேவி.

''முக்கியமான ஒரு விஷயம் பேச வந்தேன்'' என்று கிளிப் பிள்ளை போல் சொன்னதைச் சொன்னான் பூவிக்ரமன்.

''சொல்லுங்கள்'' என்று மீண்டும் பதில் கூறினாள் தேவி.

''விளிந்தையில் நிலைமை மாறி விட்டதாக ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்றான் பூவிக்ரமன்.

''என்ன செய்தியோ?'' தேவியின் கேள்வியிலும் கவலை ஒலித்தது.

''போர்த் திட்டங்களைப் பல்லவ இளவரசன் ஏற்றுக் கொண்டு விட்டானாம்.''

''அதனாலென்ன? பரமேசுவரவர்மர் உங்களால் மரண காய முற்றுவிட்டார். தந்தையால் முடியாததைத் தனயன் ஏற்க வேண்டியது தானே?''

''அது சரி. பல்லவர் சம்பந்தப்பட்டவரை.''

''நாம் எப்படிப் பாதிக்கப்படுகிறோம் இதனால்?''

''போர் தந்திரத்தில் இளவரசன் நிகரற்றவனென்று ஸ்ரீராமபுண்ய வல்லபரே சொல்லியிருக்கிறார்.''

''எனக்கும் தெரியும்.''

''இளவரசன் நம்மீது படையெடுத்து வந்தால்?''

''வரமாட்டார்.''

''எப்படி உனக்குத் தெரியும் திட்டமாக?'' என்று வினவினான் பூவிக்ரமன்.

ரங்கபதாகாதேவி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அந்தச் சமயத்தில், ''மன்னிக்க வேண்டும்'' என்று குரல் கொடுத்துக் கொண்டே ஒரு பணிப் பெண் உள்ளே நுழைந்தாள்.

''எங்கு வந்தாய்?'' என்று சீறினான் பூவிக்ரமன்.

''அவசரச் செய்தி கொண்டு வந்தேன்'' என்றாள் பணிப் பெண் தலை வணங்கி.

''என்ன அத்தனை அவசரமான செய்தி?'' என்று கேட்டான் மீண்டும் கங்க மன்னன், கண்களில் பொறி பறக்க.

''பல்லவ இளவரசர் தங்களைக் காண வந்திருக்கிறார். வாசலில் காத்திருக்கிறார்'' என்று பணிவுடன் பதில் கூறினாள் பணிப்பெண்.

## 84. சொந்தப் பணி

**ப**ணிப்பெண் கூறிய செய்தியைக் கேட்டதும், கங்க நாட்டுப் பார்த்திபனான பூவிக்ரமன் மட்டுமின்றிப் பூவையான ரங்கபதாகா தேவியும் வியப்பை எய்தியதால், இருவரும் ஏதும் பேசாமல் சில விநாடிகள் மௌனமே சாதித்தனரென்றாலும், இருவர் மனத்திலும் இருவித உணர்ச்சிகள் அலைபாய்ந்து, இருவரையும் இரண்டு திக்குகளில் இழுக்கத் தொடங்கின. முற்றும் எதிர்பாராத விதமாய், எதிர்பாராத சமயத்தில், எதிர்பாராத இடத்தில் திடுதிப்பென்று ராஜசிம்ம பல்லவன் வந்து முளைத்ததனை எண்ணியதால் ஓரளவு நாணமும் வேட்கையும் ஒருங்கே எய்திய கங்கன் மகள் தகப்பனைப் பார்த்த கண்களை அம்பிகைமீது ஓட்டினாள். சாளுக்கியர் நண்பரான தனது தந்தையின் தலைநகருக்குள் சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பது போல் இளவரசன் வந்த துணிவையும் எண்ணி, இதனால் என்ன விளைவு ஏற்படுமோ என்று ஏங்கவும் செய்தாள் கங்கநாட்டு இளவரசி.

பூவிக்ரமன் மனமோ பல்லவ இளவரசன் வந்திருப்பதைக் கேட்டதும் கோபத்தால் உள்ளூரத் துடித்ததன்றி, மகளைப் போலவே ராஜசிம்மன் துணிவைப்பற்றியும், வியந்தான் உள்ளூர. அப்படி வந்த இளவரசன் தன்னந்தனியாகத்தான் வந்திருக்கின்றானா அல்லது வேறு ஏதாவது தற்காப்பு ஏற்பாட்டுடன் வந்திருக்கிறானா என்ற சந்தேகமும் அவனுக்கு ஏற்படலாயிற்று. எல்லாவற்றுக்கும் மேலாக அவன் வாசலில் காத்திருப்பதாகச் சொன்னது, அரண்மனையின் முன் மாளிகை வாயிலா, அந்தப்புர வாயிலா என்பதைப் பற்றியும் எண்ணியதால், சிறிது குழம்பவும் செய்தான் கங்க மன்னன். எப்படியும் போர் மர்மங்களை அறிந்தவனும், ராஜ தந்திரியுமான பல்லவ இளவல் தகுந்த பாதுகாப்பின்றித் தனது தலைநகருக்குள் நுழையமாட்டானென்று திண்ணமாக நம்பியதால் பணிமகளைப் பார்த்துக் கேட்டான் ''பல்லவ இளவரசருடன் யார் வந்திருப்பது?'' என்று.



''யாரும் வரவில்லை. வந்திருந்தாலும் இங்கு வரவில்லை'' என்றாள் பணிமகள் மிகப் பணிவு நிரம்பிய குரலில்.

பூவிக்ரமன் புருவங்கள் சற்றே உயர்ந்தன பணிப்பெண்ணை நோக்கி ''இங்கு வரவில்லையென்றால்?'' என்று வினவினான் அவன், வியப்பு லேசாகத் தொனித்த குரலில்.

''அந்தப்புர வாயிலுக்கு வரவில்லை'' என்றாள் பணிப்பெண்.

''அப்படியானால்...?'' வாசகத்தை முடிக்கவில்லை. பூவிக்ரமன் இதயத்தில் எழுந்த சினத்தால்.

''அந்தபுர வாயிலில் இளவரசர் மட்டும் காத்திருக்கிறார்.''

''இங்கு யார் வரவிட்டது அவரை? காவலர் என்ன உறங்குகிறார்களா ஆசார வாசலில்?''

''தெரியவில்லை''

''அந்தபுரத்துக்கு அருகாமையில் கூட யாரும் அணுகக் கூடாதென்ற விதி உனக்குத் தெரியுமல்லவா?''

''எனக்குத் தெரியும் அவருக்கும் தெரியும் போலிருக்கிறது. மாளிகை வாயிலுக்குப்புறம்பே தான் நின்று கொண்டிருக்கிறார்.''

பூவிக்ரமன் சிறிது யோசனையில் இறங்கினான். பல்லவ இளவரசன் அரண்மனை ஆசார வாசலையும் இதர வாசல்களையும் கடந்து எப்படி அந்தப்புரத்தை அணுகினானென்பது அவனுக்குப் புரியாத புதிராயிருந்தது. கங்க ராஜ்யத்தில் அதுவரை நடக்காத விந்தையாயிருந்தது. ஆகவே அவன் பணிப்பெண்ணை நோக்கி, ''இளவரசனை அழைத்துப் போய் வெளிநாட்டு அரசர்கள் வந்தால் தங்கும் மாளிகையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யக் காவலருக்கு நான் உத்தரவிட்டதாகச் சொல். இளவரசரைப் பிற்பகல் சந்திப்பதாகத் தெரிவி'' என்று உத்தரவிட்டான்.

அவன் உத்தரவை நிறைவேற்றுவதற்காகத் திரும்பிச் செல்ல முயன்ற பணிப்பெண்ணை, ''சற்று இரு'' என்ற தேவியின் குரல் தடுத்தது.

பூவிக்ரமன் விழிகளில் கோபம் தாண்டவமாடியது. ''ஏன் அவளை இருக்கச் சொல்கிறாய்?'' என்று மகளை நோக்கி வினவினான் கோபம் குரலிலும் ஒலிக்க.

ரங்கபதாகாதேவி தந்தையை நோக்காமல் அம்பிகையின் விக்ரகத்தில் கண்களைப் பதிய விட்டுக்கொண்டே சொன்னாள்,

''பல்லவ இளவரசரை இந்த இடத்துக்கே அழைக்கலாமே'' என்று. அவள் குரலில் சங்கடம் ஏதும் இல்லை. திடமே இருந்தது.

''இந்த இடத்துக்கா?'' என்ற பூவிக்ரமன் மகளை எரித்துவிடுவது போல் பார்த்தான்.

''ஆம்'' ரங்கபதாகா தேவி சர்வ சாதாரணமாகப் பதில் கூறினாள்.

''இது அந்தப்புரம்...'' பூவிக்ரமன் எரிச்சலுடன் வார்த்தையை முடிக்காமல் திணறினான்.

''அது தெரியாதா எனக்கு?''

''இங்கு ஆண் மக்கள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லையென்பது உனக்குத் தெரியாதா?''

''அதுவும் எனக்குப் புதிதல்ல''

''அப்படியானால் எந்தத் துணிச்சலில் இளவரசனை இங்கு அழைக்கச் சொல்லுகிறாய்.''

ரங்கபதாகாதேவி ஒரு விநாடி மௌனம் சாதித்தாள். பிறகு சொன்னாள், ''ஆசார்யரிடம் சில விஷயங்கள் கற்றேன்'' என்று

''என்ன விஷயங்கள்?''

''அம்பிகையின் சந்நிதானத்தில் யாரும் உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்ல முடியாதென்று ஆசார்யர் சொல்லியிருக்கிறார்.''

''அதனால்...''

''நீங்கள் இளவரசருடன் பேசவேண்டிய விஷயங்களை இங்கேயே, இந்த பூஜை அறையிலேயே, அம்பிகையின் முன்பாகவே பேசுவது நல்லது. அது ராஜரீகமாயிருந்தாலும் இளவரசர் இங்கு மனம் விட்டுப் பேசுவார்.''

இதைக் கேட்ட பூவிக்ரமன் இதழ்களில் இகழ்ச்சியும், சீற்றமும் கலந்த இளமுறுவல் துளிர்த்தது. முகத்திலும் அதன் சாயை படர்ந்தது. ''பல்லவ இளவரசனை நீ நன்றாக அறிந்திருக்கிறாய்.'' என்ற அவன் சொற்களில் இகழ்ச்சி ஒலி தெரிந்தது.

''ஆம். நன்றாக அறிவேன் என்று விளிந்தைச் சமவெளி யிலேயே கூறியிருக்கிறேன். ஆசார்யர் பூஜை அறைக்குச் சீடர்களுடன் அவரும் வருவார். என்பதையும் தெரியப்படுத்தியிருக்கிறேன்'' என்றாள் தேவி.

''வேறு என்ன செய்வார்?''



''காவ்யாதர்சத்தை நான் படிக்கும்போது, மற்றவர்களுடன் கேட்பார்''

''கேட்பாரா?''

''ஆம், கேட்பார்.''

''கேட்ட பிறகு என்ன செய்வார்?''

''எனக்கெப்படித் தெரியும்?''

''இவ்வளவு தெரிந்து கொண்டவள் அதையும் தெரிந்து கொள்வதுதானே?'' என்ற பூவிக்ரமன் கோபத்துடன் எழுந்திருக்க முற்பட்டான்.

''பொறுத்தவர் பூமியாள்வார் என்ற ஒரு பழமொழி இருக்கிறது'' என்று கூறிய ரங்கபதாகா தேவி, ''சற்றுப் பொறுமையுடன் உட்காருங்கள்'' என்றும் சொன்னாள். ''தந்தையே விளிந்தைச் சமவெளியில் தங்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் இன்னும் போகவில்லை போலிருக்கிறது. தங்கள் மகளை ஆண் மக்களின் கண்களில் படாமல் வைத்திருக்க வேண்டுமானால் நீங்கள் என்னை வளர்த்திருக்க வேண்டிய முறையே வேறு. இந்த அந்தப்புரத்தை விட்டு வெளியே அனுப்பியிருக்கக்கூடாது. மகாகவி தண்டியிடம் பாடம் கேட்கவும் காஞ்சிக்கு அனுப்பியிருக்கக் கூடாது. நீங்கள் அப்படி அனுப்பியபோது உங்கள் மகளிடத்தில் பெரும் நம்பிக்கையை வைத்திருக்க வேண்டும். நான் இந்த நாட்டின் இளவரசி என்பதை அறியாதவளுமல்ல, என் கடமையையும் உணராதவளல்ல. படிக்காதவளுமல்ல, படிப்பின் பயனை, பண்பை, பெறாதவளுமல்ல,ஆசார்யரின் சீடப் பெண் நான். பல்லவ இளவரசரை இங்கு வரவழையுங்கள். எதுவும் தலை முழுகி விடாது'' என்று அதிகாரத்துடனும், நிதானத்துடனும், உறுதியுடனும் பேசவும் செய்தாள். தந்தையின் ஆணைக்கு காத்திராமல் ''பெண்ணே, இளவரசரை இந்த அறைக்கு அழைத்து வா'' என்று உத்தரவும் இட்டு தான் அரசி என்பதையும் காட்டினாள்.

விளிந்தைச் சமவெளியில் அன்றொரு நாள் கூடாரத்தில் பேசிய அதேவித ஆவேசப் பேச்சை மகளிடம் அன்றும் கேட்ட பூவிக்ரமன், திகைத்து உட்கார்ந்து விட்டான். ''மகளின் ஆணையைத் தான் ஏன் மாற்றவில்லை, மகளைக் கடிந்து ஏன் அடக்கவில்லை என்பதுகூட அவனுக்குப் புரியவில்லை. தன்னையும் மீறிய சக்தியொன்று அந்தப் பூஜை அறையில் சுழலுவதாகத் தோன்றியது அவனுக்கு. ஆகவே யாரும் நுழைய முடியாத அந்தப்புரத்துக்குள் நுழைந்து பணிப்பெண்களையும்,

தன் ராணிகளையும் தன்னையும் தவிர யாரும் வர முடியாத பூஜை அறைக்குள் வந்து, தன்னை நோக்கிப் புன்முறுவலுடன் நின்ற பல்லவ இளவலைக் கண்ட பின்பு பூவிக்ரமன் மௌனத்தையே கடைப் பிடித்தான். ஆனால் அவனை நோக்கிச் சிரம் தாழ்த்திய பல்லவ இளவல் கூறினான். ''கங்க நாட்டு மன்னரே! ஆசார்யருக்கும், ஸ்ரீராமபுண்ய வல்லபருக்கும் என் தந்தைக்கும் தவிர வேறு யாருக்கும் வணங்காத என் தலை தங்களுக்கு வணங்குகிறது'' என்று.

பூவிக்ரமன் பதில் கூறாமல் தன் விழிகளை உயர்த்தி, பல்லவ இளவலை நோக்கினான். ''அப்படியானால் தலைதாழ்த்த வேண்டிய அவசியம்?'' என்றும் வினவினான் வெறுப்புக் கலந்த குரலில்.

''அவசியம் என்ற இச்சொல்லுக்குப் பதில் காரணம் என்ற சொல்லை உபயோகப்படுத்துங்கள்'' என்றான் ராஜசிம்மன்.

''சொல்லில் என்ன இருக்கிறது. என்று சீறினான் பூவிக்ரமன்.

''சொல்லில் இல்லாதது வேறெதிலுமில்லை. சொல்லின் மாற்றம் கருத்தை மாற்றும்'' என்றான் ராஜசிம்மன் பணிவுடன்.

''சரி, காரணத்தைத்தான் சொல்லுங்கள்'' பூவிக்ரமன் வேண்டாவெறுப்பாகக் கேட்டான்.

பல்லவ இளவல் சிறிது சிந்தித்தான் பிறகு மெல்லக் கூறினான். ''என் தந்தையைப் போர்க்களத்தில் கொல்லாமல் விட்டீர்கள். அதற்காகத் தலை வணங்குகிறேன்.'' என்று.

''உங்கள் படையை அழிக்காமல் விட்டேன், அதை ஏன் சொல்லவில்லை?'' என்று வினவினான் கங்க மன்னன்.

''படை போவதும் இருப்பதும் போரில் சகஜம். படை போனால் வேறு படை திரட்டி உங்களுடன் போருக்கு வந்திருப்பேன். என் மூதாதை நரசிம்மவர்மர் சாளுக்கியர் படையை வெற்றி கொண்டார். இப்பொழுது பதிலுக்கு விக்கிரமாதித்தர் எங்களை வெற்றி கொள்ளவில்லையா தங்கள் உதவியால்? ஆகையால் படை நாசம் போரில் சகஜம். வீரன் என்ற முறையில் என் தந்தை போர்க்களத்தில் போயிருந்தாலும் நான் கவலைப்படமாட்டேன். ஆனால் மயக்க முற்றிருந்த நிலையில் அவரை அழிக்காதது உங்கள் பெருந்தன்மையை, வீரத்தை, பண்பைக் காட்டுகிறது. படையிழந்தால் படை திரட்டலாம், தந்தையை இழந்தால் திரும்பிப் பெற முடியாதே'' என்ற பல்லவ இளவல், ''நான் வந்துள்ள காரியம் முக்கியமானது, அவசரமானது. ஆகையால் உங்கள் வீரர்கள் தடுத்ததையும் மீறி வரக்கூடாத இந்த அந்தப்புரத்துக்கு வந்தேன்'' என்றும் குறிப்பிட்டான்.



''ஏன் நிற்கிறீர்கள்? உட்கார்ந்துகொண்டு பேசலாமே'' என்ற ரங்கபதாகாதேவி எட்ட இருந்த வெள்ளிப் பூக்கள் மூலைகளில் மின்னிய மணையொன்றைக் காட்டினாள்.

பல்லவ இளவல் அவள் சுட்டிக்காட்டிய மணையில் அமர்ந்தான். ''நான் தங்களிடம் பேச வேண்டியது இருவகைப்பட்டது. ஒன்று என்னைப் பற்றியது. இன்னொன்று என் பணியைப் பற்றியது'' என்று கூறினான்.

''இரண்டும் அவசரமா?'' என்று வினவினான் பூவிக்ரமன்.

''அவசரமில்லாவிட்டால் அந்தப்புர வாயிலுக்கு வந்திருக்க மாட்டேன். வந்த பணி அரசாங்கப் பணியாக மட்டுமிருந்தால், தூதர்கள் தங்குமிடத்தில் தங்கி, பிரதானியைத் தங்களிடம் அனுப்பியிருப்பேன்.

''தூதர்கள் தங்குமிடத்திலா?''

''ஆம்.''

''அப்படியானால் தூது வந்திருக்கிறீர்கள்?''

''ஆம்.''

''பல்லவ மன்னர் சார்பிலா?''

''ஆம்.''

''தூதின் விஷயம் என்ன?''

''பிறகு சொல்கிறேன். முதலில் சொந்தப் பணியைச் சொல்லி விடுகிறேன். அதுவும் அம்பாளின் சந்நிதானத்தில் சொல்லி விடுவது நல்லது'' என்று கூறிய பல்லவ இளவல், பூவிக்ரமனைக் கூர்ந்து நோக்கினான்.

''சொல்லுங்கள்'' என்றான் பூவிக்ரமன், அப்படியென்ன சொந்தப் பணியிருக்க முடியும் பல்லவ இளவரசனுக்குக் கங்க நாட்டில் என்பதை உணராததால் மனம் குழம்பி.

சொந்த பணியைக் கூறினான் பல்லவ இளவல். அதைக் கேட்ட பூவிக்ரமன் சித்தம் மிதமிஞ்சிய கோபத்தால் பெரும் அதிர்ச்சிக்கு உட்பட்டு நாலாபுறமும் சிதறவும் முற்பட்டது. விவரணத்துக்கு அப்பாற்பட்ட உணர்ச்சிகள் அவனை ஆட்கொண்டன. அவன் தேகம் ஒருமுறை நடுங்கவும் செய்தது.

# 85. காதலும் போரும்

அப்படியொரு சொந்தப் பணியைப் பல்லவ இளவரசன் கூறுவானென்றோ, அதைத் தன் பெண் முன்பாகக் கூற அவனுக்குத் துணிவு வருமென்றோ, சற்றும் எதிர்பாராத பூவிக்ரமன், சிறிதும் சஞ்சலமின்றியும் சர்வ சாதாரணமாகவும் ராஜசிம்மன் வெளியிட்ட அந்தச் சொந்தப் பணியைக் கேட்டதும் திக்பிரமையும் அதிர்ச்சியும் அடைந்தானென்றால், அதற்குத் தகுந்த காரணம் இருக்கவே செய்தது. பூவிக்ரமன் அன்று வரை கேள்விப்படாத, தென்னாட்டு மன்னர்களின் வரலாற்றில் பல தலைமுறைகளாக ஏற்பட்டதாக ஏடுகளில் கூட இல்லாத, பொதுவான மன்னர்குல விதிக்கோ பண்புக்கோ பொருந்தாத சொற்களைப் பல்லவ இளவல் உச்சரிப்பானென்று கங்க மன்னன் எதிர்பார்க்காததால், அவன் அடியோடு நிலை குலைந்து போனான். ரங்கபதாகாதேவியின் நிலை அவன் நிலையை விட அதிக சங்கடத்திலிருந்தது. ஒருமுறை தந்தை அறியாமல் அவன் மீது கடைக்கண் வீச்சொன்றை வீசிய அவள் அதற்குப் பிறகு தலை குனிந்தவண்ணமே இருந்தாள். என்ன செய்வது, ஏது சொல்வது என்பதை அறியாததால், அப்படியொரு சொந்தப் பணியை உறுதி நிரம்பிய திடமான குரலில் சொன்னான் பல்லவ இளவல். ''தேவியைப் பெண் கேட்க வந்தேன்'' என்ற சொற்களை ஏதோ கடமையை நிறைவேற்றுபவன் கூறுவதுபோலக் கூறினான்.

இதைக்கேட்டதும் நீண்டநேரம் சிலையென உட்கார்ந்து விட்ட பூவிக்ரமன் தன்னை மெள்ள சமாளித்துக்கொண்டு விழிகளை உயரத் தூக்கிப் பல்லவ இளவலைக் கூர்ந்து நோக்கினான். பிறகு கேட்டான். ''உனக்குப் பைத்தியம் ஏதும் இல்லையே?'' என்று.

கங்க மன்னன் பார்வையிலேயே அந்தச்சந்தேகமிருந்ததைக் கவனித்த பல்லவ இளவல் அவன் பேச்சைக் கேட்டதும் புன்முறுவல் கொண்டான். பிறகு பூவிக்ரமன் கண்களைத் துணிவுடன் சந்தித்து, ''அப்படி நிச்சயமாகச் சொல்ல முடியாது'' என்றான்.

பூவிக்ரமன் கண்களில் மிதமிஞ்சிய சீற்றம் துளிர்த்தது அந்தப் பதிலைக் கேட்டதும். சீற்றத்துடன் இகழ்ச்சியும் கலந்து உறவாடியது மடிந்த அவன் இதழ்களில்.

''உனக்கு ஏதோ சித்தப் பிரமை இருக்க வேண்டுமென்று நினைத்தேன்... அதை நீயும் ஒப்புக் கொள்கிறாய்.''

''ஆம்''



''என்ன விளையாடுகிறாயா?''

''விளையாட்டு இதில் ஏதுமில்லை. வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயம் இது''

''அது புரிகிறது எனக்கு அதனால்...?'' கங்கன் கேள்வி பாதியில் நின்றது.

இளவரசன் எதற்கும் அசையாமல் பேசினான். ''தேவியின்மீது எனக்குப் பைத்தியம் பிடித்து நீண்ட நாளாகிறது. ஆனால் உங்கள் அனுமதியில்லாமல், ஆசியில்லாமல் அந்தப் பைத்தியத்தைப் போக்கிக் கொள்ள வழி தேடவில்லை நான்.'' என்ற இளவரசன் கங்க மன்னனின் பதிலுக்கு எதிர்பார்த்திருந்தான்.

''வேறு வழிகள் இருக்கின்றனவா?'' என்று கேட்டான் கங்கன் வெறுப்புடன்.

''சாஸ்திரங்களில் இருக்கின்றன'' என்றான் இளவரசன்.

''சாஸ்திரம் உனக்கு உபயோகப்படுகிறது.''

''அது எல்லோருக்கும் உபயோகப்படும். அதை மதிக்காததால் ஏற்படும் அவதிகள் அனந்தம்.''

''உனக்கு எந்த வழிகளில் உபயோகப்படுகிறது?'' என்று கேட்டான் பூவிக்ரமன். இத்தனை நாழிகைகளின் உரையாடலால், அவன் மனமும் குரலும்கூட ஒரு நிதானத்துக்கு வந்து விட்டன.

இளவரசன் சிறிதுநேரம் அம்பிகை மீது கண்களை ஓட்டினான். பிறகு கங்கனை நோக்கிச் சொன்னான்: ''மன்னவா! ராக்ஷச விவாகம், காந்தர்வ விகாகம் இரண்டையும் மன்னர் குலத்தாருக்கு சாஸ்திரம் அனுமதிக்கிறது. இரண்டுக்கும் வசதியிருந்தது எனக்குக் காஞ்சியிலும் விளிந்தையிலும். ஆனால் அந்த வசதிகளை உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை. பெண்களை அவர்கள் இருப்பிடங்களிலிருந்து தூக்கிச் சென்று மணம் புரிவது ராக்ஷஸ விவாகம், யாருமறியாமல் ரகசியமாக மணம் புரிவது காந்தருவம். ஆனால் நான் மன்னர் குலத்தவனாயிருந்தாலும் இரண்டிலும் ஈடுபடவில்லை.''

''ஏன் ஈடுபடாமல் நிறுத்திவிட்டாய்? உன்னைப் போலப் பண்பாடுடையவன் ஈடுபட்டிருக்கலாமே?'' என்ற கங்கன் இளவரசனைப் பார்த்து மகளையும் நோக்கினான். இதே காந்தருவ விவாகத்தைப் பற்றித் தன் மகளே தன்னை எதிர்த்து விளிந்தைச் சமவெளிக் கூடாரத்தில் பேசியதையும் எண்ணிப் பார்த்தான். 'இவர்களுக்குள் கண்டிப்பாய் மனவொற்றுமை இருக்கிறது.

இல்லாவிட்டால் இவன் இங்கு துணிவுடன் வரமாட்டான். வந்தாலும் இதைப் பற்றிப் பிரஸ்தாபிக்க மாட்டான்' என்று உள்ளூரச் சொல்லியும் கொண்டான்.

கங்கமன்னன் மனத்திலோடிய எண்ணங்களைப் பல்லவ இளவலும் ஊகித்திருக்க வேண்டும். ஆகவே நிதானமாக அடக்கமான குரலில் பதில் கூறலானான். ''நாங்கள் அந்த இருவித விவாகங்களில் ஈடுபடாததற்குக் காரணம், அவை தர்ம சாஸ்திரத்துக்கு விரோத மானவை யென்பதாலல்ல. எங்களிருவருக்கும் மனவொற்றுமை யிருந்தும் உங்கள் மனத்தைப் புண்படுத்த விரும்பவில்லை. பழைய புராண உண்மைகளைத் தற்கால நிகழ்ச்சிகளுக்கு உபயோகப்படுத்தவும் இஷ்டப்படவில்லை. அது மட்டுமல்ல. மன்னர்குல விவாகங்களில் இரண்டு நாடுகளின் நன்மை தீமைகள் கலந்து விடுகின்றன. அதை உத்தேசித்தும் தாமதித்தோம்...'' இங்கு பல்லவ இளவல் சிறிது பேச்சை நிறுத்தினான்.

''உன் பேச்சு இரண்டுவிதமாக இருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான் கங்க மன்னன்.

''ஆம்! தேவியின் எண்ணங்களும் அப்படித்தானிருக்கின்றன. உங்கள் மனத்தைப் புண்படுத்த அவள் விரும்பவில்லை. உங்கள் நாட்டு நலனைத் தியாகம் செய்யவும் அவள் இஷ்டப்படவில்லை'' என்றான் இளவரசன்.

கங்க மன்னன் தேவியை நோக்கினான். அவள் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள். அவள் உட்கார்ந்த நிலையே அவள் சம்மதத்தைத் தெரிவிப்பதாய் இருந்ததால், என்ன செய்வதென்று அறியாமல் தத்தளித்தான் கங்க மன்னன். இருப்பினும் வீரனாதலால், பல்லவ இளவரசனின் வீரத்தையும் துணிவையும் உள்ளூரப் பாராட்டிக் கொண்டான். அதை வெளிக்குக் காட்டாமல் கேட்டான்: ''சாஸ்திரம் சரி. புராணமும் சரி. ஆனால் இன்றைய மன்னர் குலப் பழக்கம் வேறு.''

''ஆம்.'' இளவரசனின் பதில் அடக்கமிருந்தது.

''மன்னவர்கள் தூதுவர்களை அனுப்பிப் பெண் கேட்பார்கள் பெண்ணின் தந்தையிடம். தந்தை சம்மதித்தால் திருமணம் நடக்கும். இந்தக் காலத்தின் விதி இப்படித்தான்.''

''ஆம், சந்தேகமில்லை.''

''மணமகனே வந்து பெண் கேட்பது வழக்கமில்லை.''

''இல்லை.''



''ஆனால் நீ கேட்கிறாய்?''

''கேட்கிறேன். காலத்தை முன்னிட்டு, இதை ஒத்திப்போட அவகாசமில்லை. கங்க நாடும் பல்லவ நாடும் விரோதிகளாயிருக்கும் வரை தூதன் வந்து பெண் கேட்க முடியாது. கேட்டாலும் உங்களிடமிருந்து அனுகூலமான பதில் வராது.''

''இப்பொழுது மட்டும் வருமென்பது என்ன நிச்சயம்?''

''ஒரு நிச்சயமிருக்கிறது.''

''சொல்.''

''தேவி என்னைத் தவிர வேறு யாரையும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாள்.''

''இந்தப் பதில் கங்க மன்னனுக்கு முன்பே தெரிந்திருந்தாலும், அந்தச் சமயத்தில் அந்த உண்மை அவனுக்கு வேப்பங்காயாயிருந்தது. ''இதைத் தேவி முன்பு பேசுவது சரியா?'' என்று வினவினான் கங்கன்.

''சாதாரண சமயத்தில் சாதாரண இடத்தில் பேசுவது உசிதமல்ல. ஆனால் இன்னொரு தேவியும் இங்கிருக்கிறாள். ஜகத்துக்கெல்லாம் அண்ட சராசரங்களுக்கெல்லாம் தேவியான அம்பாளிருக்கிறாள். அவள் சந்நிதானத்தில் எந்த உண்மையையும் பேசலாம். உண்மை, தர்மத்தின் அடிப்படையிலிருந்தால் அவள் அருள் கிடைக்கும். இல்லையேல் பேசுபவன் அழிந்து போவான்'' என்று கூறிய பல்லவ இளவல் மேலும் சொன்னான் : ''கங்க நாட்டு மன்னரே! நான் தன்னந்தனியாக உங்கள் நாட்டுக்குள் நுழைந்ததிலிருந்தும், இந்த அந்தப்புரத்துக்கு வந்ததிலிருந்தும் என் மன உறுதியை நீங்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். கங்கர் பல்லவர் பூசலை, பூசலால் விளையும் போர்களை, நானும் விரும்பவில்லை. தங்கள் மகளும் விரும்பவில்லை. தங்களிடம் திருமணப் பரிசையும் சமாதான பரிசையும் விரும்பி வந்தேன். ஒன்று சொந்தப் பணி, இன்னொன்று நாட்டுப் பணி. ஒன்று பல்லவ இளவரசன் உங்களிடம் கை நீட்டிக் கேட்கும் பரிசு. இன்னொன்று, பல்லவ மன்னன் தூதன் தெரிவிக்கும் செய்தி. இரண்டுக்கும் பதிலை எதிர்பார்க்கிறேன். அதுவும் இந்த அம்பாளின் சந்நிதானத்திலேயே!''

கங்க மன்னன் சிந்தனையில் இறங்கினான். பிறகு ஒரு கேள்வி கேட்டான். ''இரண்டையும் மறுத்தால் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று.

இளவரசன் மெதுவான குரலில் சொன்னான். ''மறுப்பதில் சில கஷ்டங்களிருக்கின்றன'' என்று.

''என்ன கஷ்டங்கள்?''

''முதலாவதாக உங்கள் மகளின் வாழ்க்கையைப் பாழ் செய்தவர்களாவீர்கள்...''

''இரண்டாவதாக...?''

''உங்கள் நாட்டிற்கு அவசியமில்லாத ஆபத்தை விளைவிப்பவர் களாவீர்கள்...''

பூவிக்ரமன் கண்களில் சற்றுக் கனல் பறந்தது. ''அப்படி என்ன ஆபத்து நேரிடும் எனது நாட்டுக்கு? அதுவும் சாளுக்கியர்களாலும், கங்கர்களாலும் முறியடிக்கப்பட்ட உங்களால் என்ன விபரீதத்தை விளைவிக்க முடியும்?''

''போர்களில் வெற்றியும் தோல்வியும் சகஜம். இப்பொழுது பல்லவ நாடு வெற்றி மார்க்கத்துக்குத் திரும்புகிறது'' என்றான் இளவரசன் சற்றுப் பெருமை துளிர்த்த குரலில்.

''காரணம்?''

''இனி நானே போர்த்திட்டங்களை வகுக்கப் போகிறேன். வகுத்துக் கொண்டுமிருக்கிறேன்'' என்ற இளவரசன் குரலில் அடக்கமிருந்தது.

''உங்கள் தந்தையைவிட நீங்கள் பெரிய வீரரா?''

''இல்லை.''

''அப்படியானால் வெற்றியை எப்படித் தீர்மானிக்கிறீர்கள்?''

''என் குருநாதர் சொன்னபடி இனி போர் முறைகள் நடைபெறும்.''

''தண்டி மகாகவி சொற்படியா?''

''ஆம். சாஸ்திரங்களை அவரிடந்தான் பயின்றேன். இனி சாஸ்திர முறைப்படி போர்த் தந்திரங்கள் அமைக்கப்படும்.''

இதைக் கேட்ட கங்க மன்னன் மெல்ல நகைத்தான். ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' என்று கூறினான்.

''பழமொழிகளைக் காலமறிந்து உபயோகப்படுத்த வேண்டும். இப்பொழுதுள்ள நிலைக்கு அது உபயோகப்படாது. போர்த் தந்திரங்களைப்பற்றி சாஸ்திரங்களும் புராணங்களும் கூறுகின்றன. அவற்றை நாம் புறக்கணிப்பதால், அவை வெறும் ஏடுகள் என்று நினைப்பதால், வாழ்வில் தோல்வியடைகிறோம்.''



''அப்படியானால் பல்லவ இளவரசன் ஆதிக்கத்தில் புராணப் போர்கள் நடக்கும்?''

இளவரசன் ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். ''ஆம். அந்த முறைகள் இனி கையாளப்படும். ஆயுதத்தினால் ஏற்படும் வெற்றியைவிட அறிவினால் ஏற்படும் வெற்றி குறைந்த நாசத்தையும் நிறைந்த பலனையும் அளிக்கும். இதுவரை விக்கிரமாதித்த மன்னரின் வெற்றிகள் ஸ்ரீராம புண்யவல்லபரின் சாஸ்திர அறிவால் ஏற்பட்டவை. அவரைக் காஞ்சியில் விடுத்து, அவர் இஷ்ட விரோதமாகத் தென்திசை சென்றிருக்கிறார் விக்கிரமாதித்த மகாராஜா. இதன் பலன்களை வெகு சீக்கிரம் காண்பீர்கள்.''

''விவரியுங்கள்'' என்று கேட்டான் கங்கன்.

உங்களிடம்கூட எனது போர்த் திட்டங்களைக் கூற முடியாது. ஏன், என் மனத்தை ஆளும் தங்கள் மகள் கேட்டால் கூடச் சொல்ல முடியாது. பல்லவ ராஜ்யத்தின் பிற்காலம் இந்தத் திட்டங்களில் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒன்று சொல்ல முடியும், அதை விவரிக்கவும் முடியும்.''

''சொல்லுங்கள் பார்ப்போம்.''

''தற்சமயம் சாளுக்கிய நாட்டு எல்லைகளைத் தாக்க எங்கள் சிறு படையொன்று சென்றிருக்கிறது.''

''அதனாலென்ன?''

''தங்கள் நாட்டு எல்லையும், சாளுக்கிய நாட்டு எல்லையும் அருகாமையிலிருக்கின்றன.''

''இருந்தால்?''

''நீங்கள் என் தூதுக்கு இணங்கா விட்டால் அந்தப் படைகளை உங்கள் எல்லையில் நுழைய உத்தர விட்டிருக்கிறேன்.''

இதைக் கேட்ட கங்கன் சிறிது அசந்து போனான். ''உங்கள் படைப் பலம் அத்தனை வலுவுள்ளதா, பெரிதா?'' என்று கேட்கவும் செய்தான்.

''இல்லை. ஆனால் அதை நடத்திச் செல்பவன் அசகாய சூரன். தந்திரத்தில் வல்லவன்'' என்றான் இளவரசன்.

''யாரவன்?''

''சீனனான யாங்சின்.''

இதைக் கேட்டதும் பிரமித்தான் கங்க மன்னன். ஆனால் இளவரசன் தன்போர் முறையைச் சிறிது விளக்க முற்பட்டதும் சிறிது அதிர்ச்சியும் அடைந்தான். ''சீனன் அவர்கள் நாட்டு அரச குலத்தைச் சேர்ந்தவன். போர்களைக் கண்டவன். நான் மூன்று நாட்களுக்குள் அவனிருக்குமிடம் போகாவிட்டால் அவன் உடனடியாக உங்கள் எல்லைகளைத் தாக்குவான். தாக்குவான் என்று சொல்வதைவிடச் சூறையாடுவான் என்று சொல்வது பொருந்தும்...'' என்ற இளவரசன், ''சீனனை எந்த விதத்திலும் குறைவாக மதிப்பிட வேண்டாம்'' என்று எச்சரித்தான். பிறகு தன் தூதைப் பற்றி விளக்கவும் முற்பட்டான். காதலும் போரும் கலந்த கதை அது.

# 86. வேதாந்தமும் வேண்டுகோளும்

**கா**தலும் போரும் கலந்த அந்த விசித்திரக் கதையை - தன் சொந்த வாழ்வையும் பல்லவ நாட்டுப் பிற்காலத்தின் வளர்ச்சியையும் பற்றிய விந்தைக் கதையைச் சொல்லத் துவங்கு முன்பு அம்பிகையின் அருள் கண்கள்மீது தனது கண்களை ஓட்டிய பல்லவ இளவல், ''அம்பிகே! உன் சாட்சியாக, உன் வரப்பிரசாதம் பெற்ற எனது குருநாதர் சாட்சியாக உள்ளதை உள்ளபடி கங்கநாட்டு மன்னனுக்குச் சொல்கிறேன். உன் சந்நிதானத்தில் உண்மையை மறைக்கக் கூடாதென்று ஆசார்யர் எங்களுக்கு வற்புறுத்தியிருப்பதால் உன் சந்நிதானத்தில் சொல்லக்கூடியது. சொல்லக் கூடாதது என்ற இருவித பிரிவினைகள் கிடையாது. மனத்தை மறைக்கத் திரை கிடையாது நாவைக் கட்டக் கபட கங்கணமும் கிடையாது'' என்று முறையிட்டு அம்பாளின் மங்கள விக்ரகத்தைப் பார்த்தபடியே மேலும் சொன்னான்: ''கங்க நாட்டு மன்னரே! பல்லவநாடு தோற்று விட்டதாகத் தாங்கள் நினைப்பது தவறு. பல்லவர் தலைநகரம் காஞ்சியின் சிற்பச் செல்வங்கள் போரினால் அழியக் கூடாது என்ற எண்ணத்தால், என் தந்தை போர் நகரை அணுகு முன்பே அம்மா நகரை விட்டு அகன்றார். போரில் விக்கிரமாதித்தனுக்கு வெற்றியை அளிப்பதற்காக காஞ்சியின் பிரதான வாசல்களில் மட்டும் சிற்சில வீரர்களை நிறுத்தி வைத்தார். தங்கத் தாம்பாளத்தில் வைத்து ஏதோ பரிசு கொடுப்பது போல், காஞ்சியைச் சாளுக்கிய மன்னரிடம் ஒப்படைத்தார். பல்லவர் படைக்கும் சாளுக்கியர் படைக்கும் இதுவரை நிர்ணயமான போர் எதுவும் ஏற்படவில்லை. என் தந்தை காஞ்சியைத் துறந்ததும் வெளியிலிருந்து தமது படைகளைக் கலைந்து செல்லுமாறு



உத்தரவிட்டார். ஒரு சிறு படையுடன் மேற்குத் தொடர்மலைக் காடுகளில் நுழைந்தார். அந்தச் சிறு படையுடன் தான் உங்களுடன் போருக்கு வந்தார். ஆனால் அந்தப் படை உங்களால் விளிந்தையில் முறியடிக்கப்பட்டது. பல்லவர் பெரும் படை வீரர்கள் இன்னும் பல்லவ நாட்டுக் கோட்டங்களில் மறைந்துறைகிறார்கள். கோட்டத் தலைவர்களுக்குச் செய்தி கிராமங்களில் விடுவித்தால், அந்தப் படையைத் திரட்டுவது கடினமல்ல. தவிர, வேறு இடங்களிலும் படை திரட்டத் திட்டமிட்டிருக்கிறோம். ஆகவே, நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன் - பல்லவர் சக்தி இன்னும் உடைக்கப்படவில்லையென்பதை. இந்த உண்மையை ஸ்ரீ ராமபுண்ய வல்லபரும், விக்கிரமாதித்த மன்னரும் உணருவார்கள். என் தந்தை இன்னும் விக்கிரமாதித்தரால் முறியடிக்கப்படவில்லை. உங்களால் முறியடிக்கப்பட்டிருக்கிறார். நிலைமை இப்படியிருந்தாலும், பல்லவர் சக்தி அழியாதிருந்தாலும், எங்கள் முன்பாகப் பெரும்போர்கள் நிகழ இருந்தாலும் நான் உங்கள் தலைநகருக்கு வந்திருக்கிறேன். ஏன் வந்திருக்கிறேன்? போர்கள் முடிந்த பின்பு வெற்றிக் கொடியுடன் படை பலத்துடன் பேச ஏன் வரவில்லை?'' இந்த இடத்தில் சற்றுப் பேச்சை நிறுத்தினான் இளவரசன்.

பேச்சைச் சற்று நிறுத்தினாலும் இளவரசனின் கண்கள் அம்பிகை மீதே நிலைத்திருப்பதையும், தன்னை நோக்கித் திரும்பாததையும் கண்டான் கங்க மன்னன். இளவரசன் கண்கள் மட்டுமின்றி, தன் மகளின் கண்களும் அம்பாளின் கண்கள் மீதே நிலைத்து விட்டதையும் கூடப் பார்த்தான் பூவிக்ரமன். இதனால் எல்லையற்ற பிரமிப்பை அடைந்த கங்க மன்னன். ''ஆசார்யர் தண்டி உண்மையில் அமானுஷ்ய சக்தியைப் பெற்றவராயிருக்க வேண்டும். இல்லையேல் இளவயதுடைய இவ்விருவரையும் இவ்வளவு பக்திமான்களாக எப்படிச் செய்ய முடியும்? தவிர, இந்த இரு காதலரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவே இல்லையே. அம்பிகையையே பார்க்கிறார்களே. அம்பிகை மூலமாக ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்கிறார்களா? அது சாத்தியமா?'' என்று உள்ளூரக் கேட்டுக் கொண்டான். இருப்பினும் அந்த உண்மைகளை வெளியிடாமல், ''ஆம். ஏன் வரவில்லை படை பலத்துடன்? தன்னந்தனியே வரக்காரணமென்ன?'' என்று கேட்கவும் செய்தான்.

பல்லவ இளவல் பராசக்தியைப் பார்த்தபடியே பதில் சொன்னான். ''காரணம் உங்கள் புதல்வி'' என்று.

''என் புதல்வியா?'' என்று வியப்பில்லாவிட்டாலும் வியப்பு ஒலித்த குரலில் கேட்டான் கங்க மன்னன்.

''ஆம் மன்னவா! உங்கள் புதல்விதான் காரணம். எது கடல் மல்லையென்றும் மாமல்லபுரமென்றும் புகழுடையதோ, எந்தத் துறைமுக மலைப்பாறைகளில் என் மூதாதை நரசிம்ம வர்மர் கோயில்களையும் அற்புதச் சிற்பச் சின்னங்களையும் குடைந் தெடுத்தாரோ, அந்த மாநகரிலிருந்து தப்பிக் காஞ்சியை அடைந்த போது, ஆசாரியரின் மாளிகையில் கதவைத் தட்டிய போது கதவைத் திறந்தது பணி மக்கள் யாருமல்ல. பார் வியக்கும் பார்வையை ஈர்க்கும் பாவையொருத்தி திறந்தாள். அவள்தான் தங்கள் புதல்வி. நான் வருவதை எதிர்பார்த்துக் கதவைத் திறக்கத் தங்கள் புதல்வியையே நியமித்திருந்தார் தண்டி மகாகவி. அன்று கண்ட அந்தச் சுவர்ணச்சிலை, ஆசார்யாரின் அருளுக்குப் பாத்திரமான அந்த அழகுச் சிலை, என்னை அந்த இரவிலேயே ஆட்கொண்டது. உங்கள் முன்பு உங்கள் மகளைப் புகழ்வது உங்களுக்கு விசித்திரமாயிருக்கலாம். ஆனால் உள்ளதை உள்ளபடியே பேசுகிறேன். அன்று நாங்களிருவரும் சந்தித்ததை விதியென்று தான் சொல்ல வேண்டும். அந்த விதியின் வசப்பட்ட நாங்களிருவரும் நான் அங்கிருந்த சொற்ப காலத்தில் இரண்டொரு முறைதான் சந்தித்தோம். பிறகு பிரிந்தோம். ஆனால் மனங்கள் பிரியவில்லை. உங்கள் மகள்தான் என்னைத் தண்டி மகாகவியின் மாளிகையிலிருந்து சுரங்கப் பாதை வழியாகக் கடிகைக்கு அனுப்பினாள்...'' என்று சொல்லிக் கொண்டு போனவனைச் சிறிது தடுத்து கங்க மன்னன். ''இரு. இரு. ஆசார்யர் உன்னைத் தப்புவித்ததாகவல்லவா சொன்னாள் இவள்?'' என்று தன் மகளைச் சுட்டிக்காட்டினான்.

நாணத்தால் தேவி விஷயத்தைச் சிறிது மாற்றச் சொல்லி யிருக்கிறாளென்பதைப் புரிந்து கொண்டான் இளவரசன். ஆகையால், அவளைத் தப்புவிக்கச் சொன்னான். ''ஆசார்யர் கருத்து உங்கள் புதல்வியின் கருத்துக்குப் புறம்பானதல்ல'' என்று.

''இருப்பினும் பொய் பொய்தானே?'' என்று வினவிய கங்க மன்னன், ''நீங்களிருவரும் பக்தர்களாயிற்றே! அம்பாள் முன்பு சத்தியத்தைத்தானே பேசுவீர்கள்?'' என்றும் கேட்டான்.

இதைக் கேட்ட இளவரசன் சிறிதும் மசியாமலே பதில் சொன்னான். ''அப்படி தேவி சொல்லியிருந்தால், அது அவள் பண்பைக் காட்டுகிறது. பாரதப் பெண்களின் இயற்கையான நாணத்தைக் காட்டுகிறது. சில இடங்களில் பொய் சொல்வதும் தவறல்ல.''



''எந்த இடங்கள் அவை? தெய்வச் சந்நிதானமும் அந்த இடங்களில் ஒன்றா?'' கங்கன் கேள்வியில் இகழ்ச்சி நன்றாக ஒலித்தது.

''மகாலட்சுமியான சீதா பிராட்டியே பொய் சொன்னாள், அசோக வனத்தில். அனுமனை யார் என்று தெரியாதென்று கூறினாள். அது அனுமதிக்கப்படுகிறது. தெய்வப் பிறப்பே அதைச் சொல்லலா மென்றால், தேவி ஏன் சொல்லக் கூடாது?'' என்று வினவினான் இளவரசன்.

இந்தப் பேச்சை வளர்த்தால் புராணப் பிரசங்கத்தைத்தான் நாழிகைக் கணக்கில் கேட்க வேண்டியிருக்குமென்று பயந்த கங்க மன்னன், ''சரி, மேலே சொல்'' என்றான்.

இளவரசன் தன் கதையைத் தொடர்ந்தான். ''உங்கள் புதல்வியால் கடிகைக்குச் சென்றபோதும் ஸ்ரீ ராமபுண்யவல்லபர் என்னைச் சிறை செய்ய முயன்றார். அதிலிருந்தும் என்னைத் தப்புவிக்க உங்கள் புதல்வியையும் மைவிழியையும் கடிகைக்கு வரச்சொன்னார் தண்டி மகாகவி. பிறகு, தனக்கு அதைப்பற்றித் தெரியாததுபோல் நடித்தார். தந்திரத்தால் என்னைத் தப்புவித்தார். அந்தக் கடிகையிலும் ஆசார்யர் அறையில் நாங்கள் சந்தித்தோம். அதோடு மட்டுமல்ல, மீண்டும் விளிந்தையிலும் சந்தித்தோம். விதி எங்களைத் திரும்பத் திரும்ப மோதவிட்டது. இத்தனையிலும் பண்பாடு எங்களைவிட்டு அகலவில்லை. பெரியவர்கள் அனுமதிக்காகக் காத்திருந்தோம். என் தந்தை தங்கள் மகளைத் தமது பெண்போல் நினைக்கிறார். உங்களிடம் தோல்வியுற்றவரே உங்கள் நாட்டுக்கு நான் வரப் போவதாகச் சொன்னதும் தடுக்கவில்லை. அவர் சம்மதம் அப்படி தங்கள் சம்மதம் எப்படி?''

இதற்குக் கங்க மன்னன் உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. ''அம்பிகையையே கேள்...'' என்றான் கங்கன். அதே அம்பிகை மீது தனது கண்களையும் நாட்டினான் மிதமிஞ்சிய குழப்பத்தால். அம்பிகையின் அருள்விழிகளின் நோக்கு அவன் மனத்தையும் ஊடுருவிச் சென்றதாகத் தோன்றியது அவனுக்கு. இளவரசன் எடுத்துச் சொன்ன பதிலில் தவறேதுமில்லையென்றும் பட்டது அவனுக்கு.

அந்தச்சமயத்தில் இளவரசன் பேசினான்: ''அம்பிகை அருளின்றி எதுவும் இந்த உலகத்திலே நடப்பதில்லை. அம்பிகை, சொல்லைப் போல் சக்தி வாய்ந்தவள் என்று காளிதாச மகாகவி ரகுவம்ச

மகாகாவியத்தில் சொல்கிறார். *அண்ட சராசரங்களெல்லாம் சொல்லொலியால், அதாவது, உள் சக்தியான பராசக்தியால் இயங்குகின்றன. பிரளய காலத்தில் கடல்களும் சூறாவளிகளும் சேர்த்து எழுப்பும் ஓசையில் எழுந்திருந்த 'ஓம்' என்ற பிரணவ சப்தத்திலிருந்து வேதங்கள் பிறந்தன. ஆகவே சொல்மயமான அம்பிகை எல்லா ஒலிகளிலும் பரவியிருக்கிறாள். ஆத்மாக்களிலும் பரவியிருக்கிறாள். அவள் வேறு, நீங்கள் வேறு, ஆசார்யர் வேறு, தேவி வேறு என்பதல்ல. நாம் அனைவரும் ஒன்றான சக்தியின் பிரதிபிம்பங்கள். தத்துவம் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். உண்மையைப் பேசுகிறேன். அம்பிகை எங்களைப் பிணைத்தாள். அதை நீங்களோ நானோ மாற்ற முடியாது.''

''அப்படியானால் என் அனுமதி எதற்கு?'' என்று வினவினான் பூவிக்ரமன்.

''உலக நீதி என்பது ஒன்று இருக்கிறது.''

''அதற்காக அனுமதி கேட்கிறாய்?''

''ஆம். எல்லோரும் வேதாந்திகளாக முடியாது. நானும் பெரிய வேதாந்தியல்ல. உலக நீதிக்குக் கட்டுப்பட்டவன். இல்லையேல் உங்கள் மனத்தைப் புண்படுத்தாதிருக்க இங்கு ஏன் வருகிறேன்? உங்கள் சம்மதத்தை ஏன் கேட்கிறேன்?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை.''

''புரியச் சொல்லுகிறேன், கேளுங்கள், அம்பிகையால் இந்த உலகம் ஆட்டப்பட்டாலும், நமது அறிவீனத்தால்போர்களில் ஈடுபடுகிறோம். நாசத்தில் ஈடுபடுகிறோம். அவை இரண்டும் தவிர்க்கத்தக்கவை. அவற்றைத் தடுப்பதற்கு நட்பும் காதலும் சிறந்த ஔடதங்கள். இரண்டின் பூர்த்தியையும் நாடித் தங்களிடம் வந்தேன்.''

''உம்'' என்று உறுமிக்கொண்டான் கங்க மன்னன். ''ஒன்று என் கையை விட்டு மீறிவிட்டது. இன்னொன்றை, அதாவது எனது நட்பை ஏன் விரும்புகிறாய்? எப்படி விரும்புகிறாய்? பரம்பரையாக எங்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் உள்ள நட்பை உடைக்க நினைக்கிறாயா? அவர்களது எதிரிகளாகச் சொல்கிறாயா?'' என்றும் வினவினான் அம்பிகையின் கண்களிலிருந்து தனது கண்களை இளவரசன் மீது திருப்பி.

* *சொல்லும் பொருளும் போலிருப்பவர்களும் ஜகத்துக்கெல்லாம் தாய் தந்தையருமான பார்வதி பரமேசுவரர்களை நமஸ்கரிக்கிறேன்.*

*- ரகுவம்சம், முதல் சுலோகம்*



''அதல்ல என் தூதின் நோக்கம்'' என்றான் இளவரசன்.

''வேறென்னவோ?'' கங்கன் கேள்வியில் சந்தேகத்தின் சாயை தெரிந்தது.

இளவரசன் சாமர்த்தியத்துடன் சொற்களை உதிர்த்தான். ''இரண்டு பேருக்கும் நீங்கள் எதிரியாக இருக்க வேண்டாம்'' என்ற சொற்களை உதிர்த்தான் கங்க மன்னனை நோக்கித் தன் கண்களைத் திருப்பி.

இளவரசனின் நோக்கத்தைக் கங்கன் புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளாதவன் போல் நடித்தான். ''அது எப்படி முடியும்?'' என்று வினவினான்.

''நீங்கள் மட்டும் நடுநிலை வகித்தால் போதும். பல்லவ நாட்டுக்கும் சாளுக்கிய நாட்டுக்கும் இடையிலிருக்கிறது உங்கள் நாடு. இரண்டு நாட்டுப் போர்களிலும் நீங்கள் சம்பந்தப்படா திருப்பதில் தவறில்லை'' என்று விளக்கினான் இளவரசன்.

''அதாவது...?''

''கங்க நாடு இனி வரும் போர்களில் பல்லவர்களுக்கும் உதவாது, சாளுக்கியர்களுக்கும் உதவாது. ரகசியமாக ஆயுதங்களையும் செய்யாது. தவிர, கங்க மன்னர் மாபெரும் வீரரானாலும் கங்க நாடு மாபெரும் நாடல்ல. சிறிய நாட்டைப் பெரும் பெரும் வல்லரசுகளின் போர்களில் சம்பந்தப்படுத்தாதிருப்பது நல்லது.''

''யாருக்கு நல்லது?''

''இப்பொழுது எங்களுக்கு நல்லது.''

''அப்படியானால் உன் தூது சுயநலத் தூது.''

''ஆம். சந்தேகமில்லை. நான் வந்திருக்கும் இரண்டு விஷயங்களிலும் சுயநலம் கலந்திருக்கிறது. அது தங்கள் நலத்துக்கும் புறம்பானதல்ல.''

''இப்பொழுது உன் சுய சொரூபம் வெளியாகிறது.''

''எப்பொழுதுமே அதை நான் மறைத்ததில்லை. தங்கள் மகளைக் கைப்பிடிக்க விரும்புவதில் புதிது ஏதுமில்லை. தங்களை நடுநிலை வகிக்கக் கேட்டதிலும் தவறில்லை.''

கங்கன் நீண்ட நேரம் தீவிர சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான்: ''என்னிடமிருந்து என்ன பதிலை எதிர்பார்க்கிறாய்.''

தங்கு தடங்கலின்றி வந்தது ராஜசிம்மனின் பதில். ''சாதகமான பதிலை.''

''சிந்திக்க அவகாசம் வேண்டும் எனக்கு. நாட்டின் பிரச்சினை இதில் கலந்திருக்கிறது'' என்றான் கங்க மன்னன்.

''நாளைக் காலை வரை நான் இங்கு தங்க முடியும்'' என்றான் இளவரசன்.

''நாளைக் காலையில் பதில் சொல்லுகிறேன்'' என்றான் பூவிக்ரமன்.

''பதில் மங்களமானதாயிருக்கட்டும். என் இரு கோரிக்கைகளிலும் மங்களமிருக்கிறது'' என்று கூறி ஆசனத்தை விட்டு எழுந்திருந்தான் இளவரசன்.

கங்கன் எழுந்திருக்கவில்லை. தனது மகளை நோக்கி, ''தேவி, உன் பணிப் பெண்ணொருத்தியை அழைத்து, பல்லவ இளவலை எனது அரண்மனையில் தங்க ஏற்பாடு செய்'' என்று கூறினான்.

திக்பிரமையடைந்தாள் தேவி. தனக்கு அந்தப் பணியைத் தந்தை இடுவாரென்று அவள் கனவிலும நினைக்கவில்லை. இருப்பினும் இருந்த இடத்தைவிட்டு நகராமல் பூஜை மணியை எடுத்து அசைத்தாள். அதைக் கேட்டு ஓடி வந்த பணிப்பெண்ணை நோக்கி, ''பல்லவ இளவரசர் தங்க தந்தையின் இருப்பிடத்தில் ஏற்பாடு செய்'' என்று உத்தரவிட்டாள்.

பணிப்பெண் ஒரு விநாடி விழித்துக் கொண்டு நின்றாள். பிறகு இளவரசனை நோக்கி, ''வாருங்கள்'' என்று பணிவுடன் கூறி அழைத்துச் சென்றாள்.

அவன் கண்ணுக்கு மறைந்ததும் சற்றுப் பெரிதாகவே நகைத்தான் கங்க மன்னன். அந்த நகைப்பைக் கேட்ட தேவி அச்ச முற்றுக் கண்களை அவன் மீது திருப்பினாள். ''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்றும் வினவினாள்.

காரணத்தைச் சொன்ன மன்னவன் மீண்டும் நகைத்தான்.

## 87. இனிப்புக்கு மேல் இனிப்பு

தங்கள் காதலைப் பற்றித் தன்னெதிரிலேயே தன் தந்தையிடம் பல்லவ இளவல் பேச முற்பட்டதால் நாணத்தால் ஒடுங்கிப் போய் உடல் குறுகி உட்கார்ந்துவிட்ட ரங்கபதாகாதேவி, இளவரசன் அறையைவிட்டு அகன்றதும் தனது தந்தை வாய்விட்டுப் பெரிதாக நகைத்துவிட்டதைக் கண்டதும் தனது கண்களை உயரத்தூக்கி அதன் காரணத்தை அறிய முயன்றதைப் புரிந்து கொண்ட கங்க மன்னன் மீண்டும் ஒருமுறை நகைத்தான். இரண்டாவது முறை அவன் நகைத்தபோது ரங்கபதாகாதேவியின் கண்களை நேருக்கு நேர் சந்தித்தான். தந்தையின் நகைப்பினாலும், இளவரசன் போய் விட்டதாலும் நாணத்திலிருந்து விடுபட்டுத் துணிவு கொண்ட ரங்கபதாகாதேவி மீண்டும் கேட்டாள். ''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்று.



பூவிக்ரமனும் நகைப்பதை நிறுத்தி, ''பல்லவ இளவரசனின் பணிகளைப் பற்றி நகைத்தேன்'' என்று கூறினான்.

''அவற்றில் நகைப்பிற்கு என்ன இருக்கிறது?'' என்று வினவிய தேவியின் அழகிய விழிகளில் சற்றே கோபம் துளிர்த்ததைக் கண்டான் பூவிக்ரமன்.

''பல்லவ இளவரசன் இத்தனை நேரம் வேதாந்தம் பேசினான்'' என்று குறிப்பிட்டான் பூவிக்ரமன்.

''அதனாலென்ன?''

''அவன் பேசியதைப் பார்த்தால் பெரிய துறவிபோலிருக்கிறது.''

''துறவிகள்தான் வேதாந்தம் பேச வேண்டுமா?''

''அப்படி அவசியமில்லையென்பதை இளவரசனே நிரூபித்து விட்டான்.''

''என்ன நிரூபித்தார்?''

''அவன் ஒரு சந்நியாசி யென்பதை.''

''துறவி வேறு, சந்நியாசி வேறா?''

''இல்லை.''

''அப்படியானால் ஒரு சமயத்தில் ஏன் அவர் துறவியல்லவென்று உட்பொருள் வைத்துப் பேசுகிறீர்கள்? இன்னொரு சமயம் அவரைச் சந்நியாசியென்று ஏன் அழைக் கிறீர்கள்?'' இதைக் கேட்ட ரங்கபதாகாதேவியின் குரலில் குழப்பமிருந்தது.

''இளவரசனும் சந்நியாசிதான். இப்பேர்பட்ட சந்நியாசிகள் புராணங்களில் உண்டு'' என்று விளக்கிய கங்க மன்ன் இம்முறை லேசாக நகைத்தான்.

''இளவரசன் பேசிய பிறகு உங்களுக்கும் புராணங்களில் நம்பிக்கை வந்துவிட்டது போலிருக்கிறது?'' என்று கேட்ட தேவி தன் அழகிய உதடுகளில் இகழ்ச்சிப் புன்முறுவல் கோட்டினாள்.

''ஆம். நம்பிக்கை வந்து விட்டது.''

''ஏனோ?''

''முன்னொரு காலத்தில் சந்நியாசி ஒருவன் இருந்தான்...?''

''உம்...''

''அவன் பெயர் அர்ச்சுன சந்நியாசி. அவனுக்குப் பணி புரிய சுபத்திரையை நியமித்தார்கள். நடந்த விஷயம் உனக்குத்

தெரிந்திருக்கவேண்டும். நீயும் புராணம் படித்தவளாயிற்றே'' என்ற கங்கனும் புன்முறுவல் கோட்டினான்.

அதற்குமேல் தந்தையைப் பார்க்கச் சக்தியற்றவளானாள் ரங்கபதாகாதேவி. அவன் குறிப்பிடுவது என்ன என்பதை அவள் சந்தேமற அறிந்திருந்ததால், வாய்விட்டுக் கேட்கவுமில்லை, உறுதி குலைந்ததால் கண்ணெடுத்துப் பார்க்கவுமில்லை தலையை மீண்டும் குனிந்து கொண்டாள். கங்க மன்னன் மீண்டும் சொன்னான் : ''மகளே, புராணம் பொய்யென்று சொல்ல முடியாது. சொல்பவன் உண்மை அறியாதவன். என்னைப்போல் அனுபவமில்லாதவன்'' என்று.

இதற்குப் பதில் சொல்லாமல் மௌனமே சாதித்தாள் ரங்கபதாகாதேவி. அவள் மன நிலையைப் புரிந்து கொண்ட கங்கனே மேலும் பேசத் துவங்கி, ''தேவி! அங்கு அர்ச்சுனன் சந்நியாசி வேடம் போட்டான். சுபத்திரைக்கும் உன்னைப்போல் ரதம் ஓட்டத் தெரிந்திருந்தது. எல்லாவற்றிலும் ஒற்றுமை இருந்தது. ஓர் ஒற்றுமை மட்டுமில்லை'' என்று.

''அது என்னவோ?'' தீனமான குரலில் கேட்டாள் ரங்கபதாகாதேவி.

''பலராமன் கண்களில் மண்ணைத் தூவ அங்கு கண்ணனிருந் தான். இங்கு என் கண்களில் மண்ணைத் தூவ யாருமில்லை'' என்று பதில் சொன்னான் பூவிக்ரமன்.

ரங்கபதாகாதேவிக்குத் தந்தையின் சொற்கள் பாதி மகிழ்ச்சியையும் பாதி கோபத்தையும் விளைவித்தாலும் இரண்டில் மகிழ்ச்சியைக் காட்டாமல் கோபத்தை மட்டுமே குரலில் காட்டி, ''வேறு வித்தியாசமுமிருக்கிறது'' என்றாள் மெள்ள.

''என்ன வித்தியாசம் தேவி?'' என்று கேட்டான் பூவிக்ரமன்.

''அங்கு அர்ச்சுனனுக்குப் பணிவிடை செய்ய சுபத்திரை நியமிக்கப்பட்டாள், இங்கு யாரும் என்னை அப்படி நியமிக்கவில்லை'' என்று பதில் கூறினாள் சினம் குரலில் ஒலிக்க.

இதற்குப் பதில் கூறவில்லை பூவிக்ரமன். வேண்டிய பணி விடைகள் தண்டியின் மாளிகையிலும், விளிந்தை மாளிகையிலும் நடந்திருக்கும் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாலும், அதை வெளிக்குக் காட்டவில்லை அவன். 'சந்தர்ப்பம் அகப்பட்டால் இவள் இளவரசனைக் கண்டிப்பாய்ச் சந்திப்பாள்' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு எழுந்திருந்தான். எழுந்தபின் அவன் பேசிய பேச்சில் கவலையுமிருந்தது. லேசான மகிழ்ச்சியும் ஒலித்தது. ''இளவரசனின்



பணிகளைப் பற்றி நான் ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டும். பல்லவர்களின் சம்பந்தமும் நமக்கு அற்பமானதல்ல. பெரிய வல்லரசுடன் சம்பந்தம் செய்கிறோம். ஆனால் பல தர்ம சங்கடங்கள் இதில் இருக்கின்றன எனக்கு. இளவரசனுடன் தனிமையில் பேசிவிட்டு, ஒரு முடிவுக்கு வருகிறேன்'' என்று கூறி விட்டு அந்த அறையை விட்டுவெளியேறினான். வெளியேறியவன் மிகுந்த சிந்தனையுடன் அந்தப்புரத்தைவிட்டு வெளியேறித் தனது மாளிகைக்கு வந்து அங்கிருந்த காவலரை அழைத்து இளவரசனைத் தன்னைப் போல் பாவித்துச் சகல சௌகரியங்களையும் செய்து கொடுக்கும்படி உத்தரவிட்டான். பிறகு அந்தரங்க அறைக்குச் சென்று சிந்தனையில் திளைத்து ஆசனத்தில் உட்கார்ந்து விட்டான் நேரம் போனது தெரியாமல்.

சிந்தனையில் திளைத்தது அவன் மட்டுமல்ல, அரசன் அறைக்கு நாலைந்து அறைகளுக்கு அப்பாலிருந்த அறையில் மஞ்சத்தில் படுத்துக் கிடந்த இளவரசன் மனமும் ஆழ்ந்த சிந்தனையில் திளைத்துக் கிடந்தது. பல்லவர்களின் படைத் திறனையும் போர்த் திறனையும் விவரித்தும், பெரும்போர்கள் நிகழ இருப்பதைத்தான் விளக்கியும் கங்க மன்னன் சிறிதும் கவலைப்படாததை நினைத்து அவன் பெரிதும் வியப்படைந் திருந்தான். மகா வீரனான கங்கனை மசியவைக்க வேண்டுமென்றால் தனது ராஜதந்திரம் பூராவும் பயன்படாதென்பதையும், எந்த நிபந்தனைக்கு மன்னன் ஒப்புக் கொண்டாலும் அது ரங்பதாகாதேவியை முன்னிட்டுத் தானிருக்க வேண்டும் என்றும் தீர்மானத்துக்கு வந்தான். ஆனால் ரங்பதாகாதேவியின் நிலையைப் பற்றி அவனுக்குச் சந்தேகம் ஏதுமில்லை.

பல்லவர்களுக்கும் கங்கர்களுக்கும் இனிப்போர் கூடாதென்று அவள் திட்டமாக விளிந்தையில் சொல்லிவிட்டது நன்றாக நினைப்பிலிருந்தது அவனுக்கு. விளிந்தையில், அங்கு தேவி காட்டிய உறுதியை தந்தைக்கு அவள் செய்த பணிவிடையை நினைத்தால் அவன் மனத்தில் மகிழ்ச்சி வெள்ளம் புரண்டது. அவன் நினைப்பெல்லாம் போர்களிலிருந்து மாறி விளிந்தை உப்பரிகைக்கும் செண்பக மரக்கிளைக்கும் சென்றது. அந்த இடங்களில் வட்டமிட்ட பின்பு மீண்டும் சற்று முன்பு அம்பிகையின் சந்நிதானத்தில் அவள் இருந்த காட்சியைப் பற்றி வட்டமிடலாயிற்று. அவள் நீராடிக் குறுக்குப் பின்னலிட்டிருந்த அழகையும், மாலதி புஷ்பம் அவள் கருங்குழலுக்கு நடுவில் தனி நட்சத்திரம்போல் காட்சியளித்த விந்தையையும், அவன் சிந்தை எண்ணிப் பார்த்தது. அவள் அப்பொழுது கட்டியிருந்த சிவப்புச் சேலையும், அந்தப் புரமாதலால் அதிக அணிகள் ஏதுமில்லாமலும்

கச்சையைக் கூட தளரக் கட்டியிருந்ததையும் எண்ணிப் பார்த்த மனம் கேட்டது அவனை, 'நீ பார்த்தது அம்பிகையையா அல்லது ரங்கபதாகா தேவியையா?' என்று. 'கங்கமன்னனுக்கு நீ செய்த உபதேசமெல்லாம், அம்பிகையின் சக்தியைப் பற்றிய காவிய உவமைகளெல்லாம், மேலுக்குச் சொன்னதா உண்மையாகப் பேசியதா?' என்றும் வினவிற்று மனம். சில சமயங்களில் மனமும் தனக்கு எதிரியாகும் என்று நினைத்தான் பல்லவ இளவல். அத்துடன் நிற்கவில்லை அவன் நினைப்பு. 'கிளம்பு முன் தேவியை ஒருமுறை சந்திக்க முடியுமா தனிமையில்?' என்று வேட்கையும் உள்ளூர ஒரு கேள்வியை எழுப்பியது.

அந்தக் கேள்வி எழுந்ததும் மஞ்சத்தைவிட்டு எழுந்து அறைச் சாளரத்தின் மூலம் அந்தப் புரத்தையும் இடையிலிருந்த நந்தவனத்தையும் நோக்கினான். சாதாரண சமயங்களில் நந்தவனத்தின் அழகையும் செடிகளின் மலர்களையும், மயில்களையும், மான்களையும் ரசிக்கும் சக்தி அவன் கண்களுக்கு அப்பொழுது இல்லை. நந்தவனத்தில் இருந்த இரண்டு மூன்று கொடி வீடுகள் மட்டுமே அவன் திருட்டுக் கண்களுக்குப்பட்டன. 'அந்தக் கொடி வீடுகளில் ஒன்றுக்கு ரங்கபதாகா தேவி வர முடியுமா?' என்று தன்னைத்தானே வினவிக் கொண்டாலும் அது சாத்தியமில்லை என்பதை இளவரசன் சந்தேகமற உணர்ந்து கொண்டான். அம்பிகையின் சந்நிதானத்தில் ரங்கபதாகாதேவிக்கும் தனக்குமுள்ள விருப்பத்தை வெளிப்படையாகச் சொன்ன பின்பு கங்க மன்னன் தன்மீது ஒரு கண்ணை வைத்திருப்பானென்பதில் அவனுக்கு எந்தவிதச் சந்தேகமுமில்லை. வேண்டுமானால் புறப்படுவதற்கு முன்னால் அரசன் உடனிருக்க ரங்கபதாகாதேவியிடம் அரசாங்க தோரணையில் விடைபெறலாமேயொழிய வேறு சந்திப்புக்கு வழியில்லையென்பது அவனுக்குப் புரிந்தே இருந்தது.

அது சரியென்பதற்கு அன்று பூராவும் அவனுக்கு அத்தாட்சிகள் பல கிடைத்தன. அவன் அறை வாயிலில் சதா இரு வீரர் காவல் இருப்பதையும், அவர்கள் தனது பணிவிடைக்காகவும், இன்னொரு நாட்டு இளவரசன் என்ற முறையில் கௌரவிப்பதற்காகவும் இருப்பதாகத் தோன்றினாலும் தானிருக்கும் அறை ஒரு சிறை யென்பதையும் அந்த இரு காவலரும் தன்னை அதிகமாக அறையை விட்டு வெளியேறாமல் பார்த்துக் கொள்ளவும். வெளியேறினால் பின் தொடரவும் நியமிக்கப்பட்டவர்ளென்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான் பல்லவ இளவல்.

அவன் நீராட எண்ணியபோது காவலனை விளிக்கு முன்பாக காவலனே வந்து, ''இளவரசர் நீராடலாமே'' என்று அழைத்தான். அவன் உள்ளே நுழைந்ததும் அவனது அங்கியை இரு பணியாட்களில் ஒருவன் கழற்றிக் கொண்டான். இன்னொருவன் ஸ்நானவஸ்திரம் கொடுத்துச் சல்லடத்தையும் பாதக் குறடுகளையும் நீக்கினான். இளவரசன் ஸ்நான ஆசனத்திலமர்ந்ததும் ஒரு பணிமகள் தைலம் தேய்த்து உடம்பைப் பிடித்து விட்டாள். அங்கியை வாங்கிச் சென்றவன் அவற்றை ஒரு மூலையில் இருந்த ஆசனத்தில் வைத்துவிட்டுத் திரும்பி வந்து வாசனைப் பொடிகளைத் தேய்க்கலானான். ஏதோ சக்கரவர்த்திக்கு நடக்கும் உபசாரத்தைப் போல் அந்த நீராட்டம் நடந்தது இளவரசனுக்கு. இப்படி அவன் பல்லவ ராஜ்யத்தில் தனது மாளிகையில் தான் நீராடியிருக்கிறான். அந்தச் சுகம் நீண்ட நாளைக்குப் பின் இங்கு கிடைத்தது.



நீராடிப் புத்தாடை புனைந்த பின்பு காலை உணவு தயாராயிருந்தது. தங்கத் தாம்பாளத்தில் சிற்றுண்டிகளும் பெரும் தங்கக் குவளையில் நிரம்பப் பாலும் வைத்திருந்தார்கள். பழங்கள் பலவும் குறைவில்லாதிருந்தன. அவற்றை ஒரு பணிமகளே பரிமாறினாள். இளவரசன் மனமெல்லாம் வேறிடத்தில் நிலைத்திருந்ததால் அவன் பழங்களில் இரண்டை அருந்தி விட்டுப் பாலை மட்டும் குடித்தான். போதும் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

பணிமகள் வந்தபோதும் தனது அறைக்கு வெளியில் காவலர் இருந்ததை இளவரசன் கவனிக்கவே செய்தான். அதனால் சிறிது புன்முறுவதும் கொண்டான். அவர்கள் கட்டளை எத்தனை தூரம் செல்லுமென்பதைக் காண அறையை விட்டு வெளித்தாழ் வரையில் சிறிது தூரம் நடந்து சென்றான். நகரத்தை நோக்கியிருந்த வெளித் தாழ்வரையின் எதிரே தழைக்காட்டின் பலமான மதிள் சுவர்களும் தூரத்தே இருந்த காவிரியும் நன்றாகத் தெரிந்தன. வெய்யில் ஏறியதால் காவிரி மணல் வெள்ளி போல் பளபளத்தது. அதன் தூரத்தே ஓடிய நீரருவிகள் இன்பமாகக் காட்சியளித்தன. அவற்றையும் பார்த்துத் தாழ்வரை ஓரத்தையும் பார்த்த இளவரசன் தனது இரு காவலரும் தன்னை அணுகாவிட்டாலும் தன்னையே பார்த்துக் கொண்டிருப் பதைக் கவனித்தான். பிறகு காவலனொருவனை சைகை செய்து அழைத்து, ''எனது புரவியை யாரையாவது கவனிக்கச் சொல்'' என்று கட்டளையிட்டான்.

''புரவி ஏற்கெனவே கவனிக்கப்பட்டுப் புரவிச் சாலையில் இருக்கிறது. அதன் பயணக் களைப்பு தீர அதன் உடலை உருவி விடவும் தீனி வைக்கவும் ஏற்பாடாகிவிட்டது. அதைப் பற்றிக் கவலை வேண்டாம்'' என்றான் காவலன் மிகப் பணிவுடன் தலை தாழ்த்தி.

இந்தப் பணிவான காவல், பகல் போஜனத்தின் போதும் மாலையில் அவன் உலவச் சென்றபோதும் இருந்தது. இராக்காலமும் நெருங்கியது. தளைக்காட்டு நகர வீதிகளில் விளக்குகள் பளிச்சிட்டன. அரண்மனை ஜெகஜ்ஜோதியாயிருந்ததை உலாவச் சென்று திரும்பும்போதே இளவரசன் கவனித்தான். அவனது அறையை அடைந்தபோது அவனது அங்கி முதலிய உடைகள் நன்றாகத் துவைக்கப்பட்டும், சீர் செய்யப்பட்டுமிருந்ததைக் கவனித்தான். காலாகாலத்தில் சகல உபசாரங்களும் நடந்தன. ஆனால் ரங்கபதாகா தேவியை அணுகவும் இடமில்லையென்பதால் பெரும் சோகமும் அவன் மனத்தில் நிரம்பிக் கிடந்தது இரவு ஏறியதும் தங்கத் தாம்பாளத்தில் வழக்கம் போல் பட்டுச் சீலை மூடப்பட்டு உணவை ஏந்தி வந்தாள் பணிமகள் ஒருத்தி. பக்கதில் ஒரு சிறு தட்டும் பட்டால் மூடப்பட்டிருந்தது. ''அதிலென்ன?'' என்று வினவினான்.

''உணவுக்குப் பிறகு அருந்த இனிப்பு?'' என்றாள் பணிப்பெண்.

''அப்படியும் ஒரு பழக்கம் உண்டா இங்கு?'' என்று வினவினான் பல்லவ இளவல்.

''இன்று அம்பிகையின் இராக்காலப் பூஜைக்காகச் செய்யப்பட்ட பிரசாதம்'' என்றாள் அவள்.

அதற்கு மேல் ஏதும் பேசாத இளவரசன் சிறிது உணவை உண்டான். தாம்பாளத்தை எடுத்துச் செல்லக் கையைக் காட்டினான். அதை எடுத்துக் கொண்ட பணிப்பெண், ''பிரசாதத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். இதோ வருகிறேன்'' என்று கூறிச் சென்றாள்.

பிரசாதத்தை மூடியிருந்த பட்டுச் சீலையை விலக்கினான் இளவரசன். உள்ளே சர்க்கரைப் பொங்கல் சம மட்டமாக, அழகாக அமைக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, அதனிடையே ஓர் ஓலையுமிருந்தது. சர்க்கரைப் பொங்கலின் இனிப்புக்கு இணையில்லை என்பது பொதுக் கருத்து. உண்டு என்பதை உணர்த்தியது ஓலை.

## 48. வளைந்த விதானம், வளைத்த கொடிகள்

**ப**யம் வேறு பக்தி வேறுதான். பயம் மனத்தின் உளைச்சலி லிருந்து முளைக்கிறது. பக்தி அன்பின் ஆழத்திலிருந்து ஏற்படுகிறது. இரண்டும் இணைவது கஷ்டமென்றாலும் அப்படி ஏற்படவே செய்கிறது இவ்வுலகத்தில். உலகத்தில் பக்தியைக் காட்டுபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்குப் பயத்திலிருந்தே பக்தி உண்டாகிறது. வியாதியின் பயத்திலிருந்து விடுபடப் பலர் கோயிலுக்குப் போய் அர்ச்சனை முதலியனை செய்து தங்கள் பக்தியைக் காட்டுகிறார்கள் இன்னும், சிலர் பணக் கஷ்டத்தினால் ஏற்படும் பயத்தை நீக்கிக் கொள்ளப் பலவித பிரார்த்தனைகளைச் செய்து பக்தியைக் காட்டுகிறார்கள். தங்களுக்கு ஏற்படும் பலவித கஷ்டங்களுக்குத் தெய்வ அபசாரம் காரணமாக இருக்குமோ என்ற பயத்தால் அதைப் பக்தி மூலம் நிவர்த்திக் கொள்ள முயலுகிறார்கள். இதனால்தான் தெய்வங்களிடத்தும் அவற்றின் அருளுக்கு வழிகாட்டும் பெரியோர்களிடத்தும் பயபக்தி வேண்டும் என்று பயத்தையும் பக்தியையும் இணைத்தே உலகம் கூறுகிறது.



அத்தகைய பய பக்தி அன்றிரவில் ராஜசிம்மனுக்கும் ஏற்பட்டது. அம்பிகையின் மாலை நைவேத்யமான சர்க்கரைப் பொங்கலில், சிறு தட்டின் மீதிருந்த பட்டுச் சீலையை நீக்கி, சமமாகவும் சற்று உயரமாகவும் வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தில் சிறிது எடுத்த வுடனேயே சொறசொறவென்று ஏதோ தட்டுப்படவே, அதை விரல்களால் வெளியே தூக்கிய பல்லவ இளவல் அதைத்தூர எறிந்து விட முயன்றாலும், அது ஓர் ஓலையென்பதைக் கண்டதும் சட்டென்று வெளிவந்து, ஓலையின்மீது ஒட்டியிருந்த பிரசாதத்தைப் பட்டுச் சீலையால் துடைத்தான். ஓலையில் இரண்டே வரிகள் எழுதப்பட்டிருந்தன. சர்க்கரைப் பொங்கலின் நெய்யின் விளைவாக அந்த வரிகள் மிகத் தெளிவாக அந்த அறையின் விளக்கொளியில் தெரிந்தன.

''வடக்கு கோடியில் கொடிவீடு. அர்த்த சாமத்தில் விளக்கிருக்காது.'' இந்த இரண்டே வரிகளைப் படித்த இளவரசன் அவற்றின் இனிப்பின் காரணமாகச் சர்க்கரைப் பொங்கலை அடியோடு மறந்தான்.

இரண்டும் தேவியின் பிரசாதங்கள்தான். ஒன்று சகல புவனங்களையும் ஆளும் சர்வேசுவரியான தேவியின் தெய்வீகப் பிரசாதம். இன்னொன்று தனது மனத்தை ஆளும் மானிடதேவியின் மகா பிரசாதம். இந்த இரண்டாவது பிரசாதத்தால் முந்திய பிரசாதத்தை அடியோடு மறந்து போனான் பல்லவ இளவல்.

அந்த இரண்டு வரிகளில் கண்ட வார்த்தைகளின் இனிப்பு சர்க்கரைப் பொங்கலில் இருக்குமா என்பதில் சந்தேகமில்லை அவனுக்கு. இருக்காது என்ற நிர்ணயம் இருந்தது. மனத்தில் அப்படிக் கருத்து எழுந்ததும் தெய்வ அபசாரம் பொல்லாது என்ற பயத்தால் இளவரசன் அவசரம் அவசரமாக சர்க்கரைப் பொங்கலை எடுத்து உண்டான். ''அநேகம் பேர்களுடைய பக்தி இத்தன்மையதுதான்;

பயத்தினால் உண்டாகிறது பக்தி; அதனால்தான் தெய்வத்தினிடம் பயபக்தி இருக்கவேண்டும்'' என்று பல்லவ இளவல் உள்ளூரச் சொல்லிக் கொண்டான். தாரா நகரத்து மன்னனும், காளிதாசனை ஆஸ்தான கவியாகவும் நண்பனாகவும் கெண்டவனுமான போஜராஜன் தன்னிடம் அண்டும் கவிஞர்களின் கவிதைகள் சிறப்பாயிருக்கு மானால், அக்ஷரத்துக்கு லட்சம் பொன் கொடுப்பானென்று ஆசார்யரிடமிருந்து கேள்விப்பட்டிருந்த பல்லவ இளவல், 'எனக்கு அந்த வசதி இன்றிருந்தால் நானும் தேவியின் இரண்டு வரிகளுக்கு அக்ஷரத்துக்கு லட்சம் பொன் கொடுத் திருப்பேனே' என்று சொல்லிக் கொண்டான் மனத்துள். அந்த வரிகளைப் புதிதாகப் படிப்பவன் போல் திரும்பத் திரும்பப் படித்து மனத்திருப்தியும் கொண்டான். பிறகு பணிப்பெண் திரும்பி வரும் காலடிச் சத்தம் அறைக்கு வெளியே கேட்கவே ஓலையை மடியில் செருகி மறைத்துக் கொண்டு பக்கத்தில் குவளையிலிருந்த நீரில் கை அலம்பிக் கொண்டு கைகளையும் பட்டுச் சீலையில் துடைத்துக் கொண்டு ஏதுமறியாதவன் போல் மஞ்சத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

உள்ளே வந்து சிறிய தட்டை எடுத்துச் செல்ல முயன்ற பணிப்பெண் அவனை நோக்கிக் குறுநகை கொண்டாள். அந்தக் குறுநகை அவனுக்குச் சந்தேகத்தை விளைவிக்கவே, ''ஏன் சிரிக்கிறாய் பெண்ணே?'' என்று வினவினான் பல்லவ இளவல்.

''இன்று காலை நான் பார்த்த பிறகு இப்பொழுதுதான் உங்கள் முகத்தில் சந்துஷ்டி தெரிகிறது. அதனால் நானும் சிறிது மகிழ்ச்சி கொண்டேன். சந்துஷ்டி தொற்றக் கூடியது'' என்றாள் பணிப்பெண் இளநகை கூட்டி.

ஓலை விஷயம் பணிப்பெண்ணுக்கும் ஏதோ தெரியும் போலிருக்கிறது என்று ஊகித்துக் கொண்டான் இளவரசன். எந்த அரச குமாரிக்கும் ஓர் அந்தரங்கத் தோழி இருப்பாள் என்பது இளவரசனுக்குத் தெரிந்திருந்தாலும் இப்பேர்ப்பட்ட ரகசியத்தைத் தேவி யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டாள் என்பதை நினைத்து அவன் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை.

அந்தத் துஷ்டப் பணிப் பெண்ணே, ''ஏதாவது சொல்லப் போகிறீர்களா?'' என்று வினவினாள் முதலில் கொண்ட இளநகை முகம் பூராவும் பரவ.

பல்லவ இளவலுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் போய் விட்டதால், ''எதைப் பற்றிச் சொல்ல வேண்டும்?'' என்று வினவினான்.

''சர்க்கரைப் பொங்கலைப்பற்றி'' என்றாள் பணிப்பெண்.



''அதைப்பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் இளவரசன்.

''தங்களுக்குத் திருப்தியாக இருக்கிறதா?''

''நிரம்பத் திருப்தியாக இருக்கிறது.''

இதற்குமேல் ஏதும் கேட்கவில்லை பணிப்பெண். மெல்ல நகைத்துவிட்டுச் சிறிய தட்டையும் பட்டுச் சீலையையும் எடுத்துக் கொண்டு ஒய்யார நடை நடந்து அறையை விட்டு அகன்றாள். அவள் நடை, சிரிப்பு எல்லாம் சிறப்பாகவே இருப்பதை நினைத்துப் பார்த்த பல்லவ இளவல், ''தேவியைச் சேர்ந்த எல்லோருமே, எல்லாமே, நன்றாகத்தான் இருப்பார்கள், நன்றாகத்தானிருக்கும் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான். இப்படி இன்னொரு பெண்ணைப் பற்றி ஆராய்வது தவறென்றாலும் அதற்கு அஸ்திவாரம் தேவியின் அழகும், அவள் அனுப்பிய ஓலையுந்தானென்பதை அவன் மனத்துள் எண்ணி, தனக்குள் ஒரு திருப்தியையும் விளைவித்துக் கொண்டான். அந்தத் திருப்தியுடன் இன்னும் நள்ளிரவு வரை காத்திருக்க வேண்டுமே என்ற அதிருப்தியும் கலந்துதானிருந்தது. ஆகையால் அந்த அதிருப்தி யுடனேயே அறையின் இன்னொரு பகுதியிலிருந்த அந்தப் புரத்துக்கும் தானிருந்த இடத்துக்கும் இடையிலிருந்த நந்தவனத்தை உற்று நோக்கினான். அதன் இரண்டு கோடிகளிலுமிருந்த கொடி வீடுகள் அவன் கண்களைக் கவர்ந்தனவென்றாலும் வடக்குக் கோடியிலிருந்த கொடி வீடு அவன் கண்ணை மட்டுமின்றிக் கருத்தையும் பறித்துச் சென்றது.

அந்தக் கொடி வீட்டைக் கண்டதும் அங்கு தேவியுடன் ஏற்படக்கூடிய சந்திப்பைப்பற்றி இல்லாத கற்பனைகளையெல்லாம் அவன் மனம் செய்து கொண்டது. கொடி வீட்டுக்குச் செல்ல நாழிகை இன்னும் எத்தனை இருக்குமென்பதை அறிய அவனிருந்த அறையின் இன்னொரு புறத்திலிருந்து வெளித்தாழ் வரைக்கும் சென்று ஆகாயத்தைப் பார்த்தான். சுக்லபட்ச சந்திரன் வெளேரென்று ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்ததால், சந்திரனிருந்த இடத்திலிருந்து நாழிகை எட்டு தானிருக்கு மென்பதைக் கணக்குப் போட்டுக் கொண்டு மீதி காத்திருக்க வேண்டிய நேரம் அதிக மென்பதால் பெருமூச்செறிந்தான். வெளித் தாழ்வாரத்தைத் தாங்கி நின்ற தூணொன்றில் சாய்ந்த வண்ணம். அவன் மீது சதா கண் வைத்துக் கொண்டிருந்த காவலனொருவன் அவன் அப்படி நிற்பதைப் பார்த்ததும் மெல்ல அவனை அணுகி, ''இளவரசருக்கு ஏதாவது தேவையா?'' என்று வினவினான்.

''ஆம்.'' இளவரசன் குரல் உக்ரத்துடன் ஒலித்தது.

''கட்டளையிடுங்கள்.'' மிகமிகப் பணிவுடன் கேட்டான் காவலன்.

''நீங்கள் யாரும் என்னைத் தொந்தரவு செய்யாதிக்க வேண்டும்'' என்ற இளவரசன் குரலில் சீற்றமிருந்தது.

''மன்னிக்க வேண்டும். மன்னர் உத்தரவு'' என்றான் காவலன்.

''என்ன உத்தரவு?''

''தங்களுக்கு எந்தவிதக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளக் கட்டளை.''

''குறைவு ஏதுமில்லை. இருந்தால் நானே கூப்பிடுவேன்'' என்று கூறிய இளவரசன் விடுவிடு என்று நடந்து தனது அறைக்குள் சென்றான் அங்கு வாயிலிருந்த இரு காவலரும் எழுந்திருந்து தன்னை வணங்கினாலும் அது போலி மரியாதை யென்பதையும் புரிந்து கொண்டதால் தலையைக் கூடத் தாழ்த்தாமல் உள்ளே சென்ற ராஜசிம்மன் தனது பஞ்சணையில் படுத்துக் கொண்டான்.

அப்படிப் படுத்துக் கொண்டவன் தன்மீது பலமான காவலை கங்க மன்னன் ஏற்படுத்தியிருந்ததை உணர்ந்ததால், எப்படி அந்த அறையைவிட்டு நந்தவனத்துக்குச் செல்லுவதென்பதையும், கொடி வீட்டை அடைவது எப்படிச் சாத்தியமென்பதையும் நினைத்துப் பார்த்து அது அத்தனை சுலபமல்லவென்பதையும் புரிந்து கொண்டதால் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். எந்தத் துணிவில் தன்னைக் கொடிவீட்டில் சந்திக்கச் சொல்லித் தேவி ஓலை விடுவித்தாள் என்பது புரியவில்லை அவனுக்கு. ஆகவே தீவிர சிந்தனையில் பஞ்சணையில் படுத்துக் கிடந்தான்.

நாழிகைகள் மெல்ல மெல்லவே நகர்ந்தன. 'சில சமயங்களில் அசுர வேகத்தில் ஓடும் நாழிகைகளுக்கு இன்று என்ன வந்து விட்டது கேடு?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் பல்லவ இளவல். தன் மனோ வேகத்துக்கும் மன வேட்கைக்கும் தக்கபடி காலம் ஓடாதது அவனுக்குப் பெரும் கடுப்பை உண்டாக்கியதால் காலத்தையும் வெறுத்தான். கால சிருஷ்டியையும் வெறுத்தான் பல்லவ காவலன் மகன். சாளரத்துக்கு வெளியே வானில் பளிச்சிட்ட வெண்ணிலவின் ஒரு கீற்று அறைக்குள்ளும் பாய்ந்தது. அதைக் கண்டதும் பேராத்திரம் வந்ததால் பல்லவ இளவல் நிலவின்மீது பெரும் சீற்றம் கொண்டான். ''போயும் போயும் சுக்ல பக்ஷத்திலா நான் இங்கு வரவேண்டும்?'' என்று எரிச்சல் பட்டுக் கொள்ளவும் செய்தான். வேட்கையிலிருப்பவனுக்கு



வெண்ணிலவும் கசக்கும், தென்றலும் எரிக்கும் என்ற உண்மை அன்றைக்கு என்றையும் விட அதிகமாகப் புலனானதால் இயற்கையின் இன்ப அம்சங்களிடம் வெறுப்பை அடைந்தான் பல்லவ வேந்தன் மகன். காவலிலிருந்தும் வெண்ணிலாவின் வெளிச்சத்திலும் கங்கன் மகள் எப்படித்தான் கொடிவீட்டை அடைய முடியும் என்ற எண்ணம் அவன் மனத்தை அலைக்கழிக்கவே, பஞ்சணையில் புரண்டு ஒரு முறை படுத்தான். பிறகு ஓலையைத் தூக்கி வலது கையை முட்டுக் கொடுத்துக் கொண்டு ஒருக்களித்துப் படுத்து சாளரத்தின் வெளிப்புறத்தை நோக்கிக் கொண்டிருந்தான்.

இப்படி அவஸ்தைப் பட்டுக் கொண்டு படுத்திருந்தவன் மெள்ள மெள்ள அர்த்த ஜாமம் நெருங்குவதை உணர்ந்தான். அதனால் ஓரளவு உவகைகொண்டு உணர்ச்சிகள் எழுந்து உந்த, எதிர்பார்த்த சந்திப்பு மிகுந்த துணிவை அளிக்க, அறையை விட்டு வெளியே வந்தான். அப்பொழுதும் காவலர் அறைக்கு வெளியே இருந்தனர். ஒருவன் அவனைத் தொடரவும் செய்தான். அதை லட்சியம் செய்யாத இளவரசன் உப்பரிகைப் படிகளில் இறங்கி வந்து நந்தவனத்தில் புகுந்தான். காவலன் மாளிகைப் படியோடு நின்றுவிட்டான். நந்தவனத்துக்குள் வரவில்லை.

மெள்ள மெள்ள உண்மை புலனாயிற்று பல்லவ இளவரசனுக்கு.

அந்தப் புரத்தின் நந்தவனத்துக்குள் எந்த ஆண்மகனும் நுழையக் கூடாதென்று விதியிருப்பதை உணர்ந்ததால் அந்தத் தைரியத்தில்தான் தேவி ஓலை எழுதியனுப்பியிருக்கிறாளென்று அறிந்து கொண்டதால் மிகுந்த மகிழ்ச்சியடைந்து எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள முயன்ற பல்லவ இளவல் ஏதோ நந்த வனத்தைப் பரீட்சிப்பது போல் அங்குள்ள செடிகளுக்கு அடியில் சில விநாடிகள் நின்றான். பிறகு சற்று எட்ட இருந்த மகிழ மரத்துக்குச் சென்று அதன் அடியிலிருந்த பூக்கள் சிலவற்றைப் பொறுக்கியெடுத்து முகர்ந்தான். நந்தவனத்தில் அங்குமிங்குமாகச் சிறிதுநேரம் உலாவிவிட்டு அர்த்த ஜாமம் வந்து விட்டதைச் சந்திரனிருந்த திசையால் ஊகித்து மெள்ள மெள்ள வடக்கு மூலைக்கொடி வீட்டை நோக்கி நடந்தான்.

கொடி வீட்டின் முகப்பு வரையில் கிளைகளை நீட்டிய மகிழ மரம், கொடி வீட்டின் முகப்புக்கு நல்ல இருட்டை அளித்துக் கொண்டிருந்ததால், சற்றுத் துணிவுடனேயே நடந்தான் பல்லவ இளவல் அதை நோக்கி. கொடி வீடும் செயற்கையாக அமைக்கப்படாமல் இயற்கையாக அமைக்கப்பட்டிருந்த படியால் அதன் அழகு இளவரசன் மனத்தைப் பெரிதும் மயக்கியது. அக்கம் பக்கத்திலிருந்த இரண்டு

பெரிய பாரி ஜாதச் செடிகளின் மீது இரண்டு மல்லிகைக் கொடிகள் படர்ந்து கொடி வீட்டை அமைத்திருந்தன. காரணமாகவே அவற்றை மேலும் படரவிட்டுக் கீழும் கொடிகள் பாவித் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் அதன் ஒருபுறத்தில் இயற்கை வாயிலொன்று குறுகலாக அமைக்கப்பட்டிருந்தது. இரு பாரிஜாதச் செடிக்கிளைகளைச் சாமர்த்தியத்துடன் தோட்டக்காரர்கள் இழுத்துக் கட்டி மல்லிகையைப்படர விட்டிருந்ததால், விதானமமைந்த பஞ்சணையைப்போல் காட்சியளித்தது கொடி வீடு. அதன் வாயிலில் தொங்கிய கொடிகளை நீக்கிக் கொண்டு உள்ளே நுழைந்த பல்லவ இளவல் அங்கிருந்த காட்சியைக் கண்டு. அடியோடு பிரமித்துப் போனான்.

உள்ளே மள்ளிகை மலர்கள் *விதானத்தில் விக்கித்துக் கிடந்தன. அதன் ஒரு புறத்தில் சிறிய மேடையொன்றும் போடப்பட்டிருந்தது. செடிகளும் மல்லிகைக் கொடிகளும் சிருஷ்டித்திருந்த இருட்டையும் சிறிது சிறிது கிழித்து உட்புகுந்த வெண்மதி அந்த மேடையை வட்ட வட்டமான வைரங்களால் இழைத்திருந்தது.

அந்தக் கொடி வீட்டின் அழகு கண்ணைப் பறித்தது. மல்லிகை மணம் நாசியைப் பறித்தது. ஆனால் மனத்தைப் பறித்த மாதரசி மட்டும் அங்கு காணாததால் கொடிவீடு சூன்யமாகத் தோன்றியது அவனுக்கு. அதனால் அவன் கோபமும் கொண்டான். இருமுறை கொடி வீட்டில் அப்படியும் இப்படியும் உலாவவும் செய்தான், சீற்றத்துடன் சிங்க நடை போட்ட அந்த அரசகுமாரன், ஏமாற்றத்தை அல்லது தேவியின் தாமதத்தைச் சகிக்கமாட்டாமல் அங்கிருந்த மேடையில் ஒருகணம் உட்கார்ந்தான், பிறகு எழுந்து அந்த மேடைமீது கையிலிருந்த மகிழம்பூக்களைத் தூவினான். மல்லிகை மலர்களையும் சிலவற்றைக் கொய்து விசிறினான். இத்தனைக்குப் பிறகும் தேவியைக் காணாது போகவே அக்கொடி வீட்டின் இருண்ட மூலைக்குச் சென்று பெருமூச்சு விட்டான். அந்தச் சமயத்தில் கொடி வீட்டின் இருண்ட பகுதியிலிருந்து இரண்டு கைகள் அவனுக்குப் பின்புறமிருந்தது அவன் கழுத்தை வளைத்தன. ''ஏற்பாடு பலமாயிருக்கிறது'' என்ற சொற்களும் அவன் செவிகளில் இன்பமயமாக உதிர்க்கப்பட்டன.

* *விதானம் என்பது துணியால் அமைக்கப்படும் பந்தல், சரத் காலத்தில் மேல் உப்பரிகையில் வெண்ணிலவில் படுக்கவும் இன்பம் துய்க்கவும் இத்தகைய விதானங்களை அமைத்துக் கொண்டு அரசர்கள் சயனிப்பார்கள் - ரகுவம்சம் : 19 வது ஸர்க்கம் -39 வது சுலோகம்.*

# 89. குருடர்கள் மூவர்

மேலே மல்லிகைக் கொடி விதானம் இட்டிருக்க, கொடி வீட்டின் இருண்ட பகுதியிலிருந்து இரண்டு கைகொடிகள் கழுத்தை வளைத்துக் கட்ட, புஷ்பம் போன்ற உடலொன்று பின்புறம் அணைத்து இழைய, வெளியேயிருந்த வெண்ணிலவு பார்த்து நகைக்க, எண்ணமெல்லாம் இன்பத்தை எதிர்நோக்கிச் சிந்தனையில் சுழல, உணர்ச்சிகள் பாய்ந்ததால் உடலெல்லாம் புல்லரிக்க, காதில் பாய்ந்த சொற்கள் மிக மென்மையுடன் தடவப்பட்ட வீணை நரம்புகளைப் போல் இசை பாட, காதருகே பேசவந்த உதடுகளை அடுத்து மலர்க் கன்னமொன்று மனக் கண்ணெதிரே மலர்ந்து விளையாட இந்திரலோகத்துக்கே சென்று விட்டவன் பதிலேதும் சொல்ல முடியாமல் பல வினாடிகள் இவ்வுலகை மறந்து நின்றான். வராமல் தன்னை ஏமாற்றி விட்டாளோ என்று சிந்தித்த தன்னை, வந்தும் மறைந்து நின்று ஏமாற்றி மடக்கவிட்ட ஏந்திழையின் இன்பப் பிணைப்பு அவன் நாவைக் கட்டி விட்டதால், 'கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில' என்று கூறிய வள்ளுவர், 'கண்ணோடு கண் கலக்காவிட்டாலும் சொற்களைக் கட்ட முடியும்' என்று ஏன் சொல்லவில்லை என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.

இந்த நினைப்புக்களால் பல்லவ இளவரசன் பதிலேதும் சொல்லாவிட்டாலும் பின்னாலும் அவனுடன் இழைந்த பல்லவம் இப்படியும் அப்படியும் லேசாக அசையவே அந்தப் பல்லவத்தின் மலர்களும் மொட்டுக்களும் அவனைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்தன. முதுகில் அழுந்திய முரட்டு மொட்டுக்களும், தோளுக்குச் சற்றுக் கீழே அசைந்த தோள்களின் முகப்புகளும், கால்களின் பின்புறம் இணைந்த கதலித் தண்டுகளின் வழவழத்த பிரதேசங்களும், தனது குதிகாலைத் தடவிய மென்மையானகால் விரல்களும், புறங்காலிலிருந்த மெட்டியொன்று அழுந்தியதால் ஏற்பட்ட வலியும், சகலமும் அவனைச் சொர்க்கலோகத்துக்குக் கொண்டு சென்றன. ''கேட்டதற்குப் பதிலில்லையே. கோபமா?'' என்று மீண்டும் ஒலித்த சொற்கள் அவனுக்கு இன்ப லாகிரியை அளிக்கவே கழுத்திலிருந்த கைகளை இரண்டு கைகளாலும் பிடித்து அவளது பூவிரல்களைத் தன் கடின விரல்களால் நெறித்தான். வாளையும் கேடயத்தையும் பிடித்ததால் காய்ப்புத் தட்டியிருந்த அவன் கைவிரல்களின் கடினம் அவள் விரல் மலர்களுக்குத் துன்பத்தையே அளித்தன. மேலும் அத்தகைய துன்பத்தையே அவள் எதிர்பார்த்தாள்.

துன்பத்தில் இருக்கும் இன்பம் இன்பத்தில் மட்டும் இல்லை யென்பதையும் உணர்ந்தாள். இரண்டாவது கேள்விக்கும் பதிலில்லாது போகவே அவள் அழைத்தாள் அவனை, 'மகாராஜா!'' என்று.

அந்தச் சொல்லைக் கேட்டதும் சற்றுச் சுயநிலைக்கு வந்தாலும் வேட்கை குறையாத பல்லவ இளவல் அந்த அழகு பிம்பத்தின் கைகளைக் கழுத்திலிருந்து நீக்கி அவளை முன்புறம் இழுத்துத் தன் நீண்ட கைகளுக்குள் வளைத்துக் கொண்டான். அந்த நிலையில் சொன்னான், ''நீயே எனக்கு மகுடாபிஷேகம் செய்து விட்டாயே'' என்று.

அந்த இருட்டில் அவன் இளமுறுவலை அவள் பார்க்க முடியாவிட்டாலும் அவன் முறுவல் கோட்டுகிறானென்பதை நன்றாகப் புரிந்து கொண்டாள் ''மகுடாபிஷேகமா!'' என்று ரகசியமாகக் கேட்கவும் செய்தாள்.

''ஆம்'' என்ற பல்லவ இளவலின் கைகள் அவள் முதுகிலிருந்து இடையில் இறங்கிச் சற்று அழுத்தியே பிடித்தன.

''எங்கு செய்தேன்?'' என்று வினவினாள் ரங்கபதாகாதேவி மெல்ல.

''இங்குதான்''

''என்ன செய்தேன்?''

''அதுதான் சொன்னேனே, மகுடாபிஷேகம்.''

''எப்படி?''

''மகாராஜா என்று அழைத்தாயே?''

''அதில் தவறில்லையே?''

''இளவரசனை மகாராஜா என்று அழைப்பது தவறில்லையா?''

''இல்லை.''

''ஏன்?''

''மகாராஜாவைப் போல் ஏற்பாடுகளைச் செய்தீர்கள்''

''எந்த ஏற்பாடு?''

மெல்ல நகைத்தாள் ரங்கபதாகா தேவி. இடையிலிருந்த இளவரசனின் கைகள் இடையிலிருந்து சற்றே அசைந்தது. அசைந்ததால் அங்கலாவண்யங்கள் அனைத்தும் அவன் உடலில் இணைந்து அசைந்தன அதன் விளைவாக நிதானமிழந்த இளவரசனின் கரங்கள் மேலெழுந்து அவள் கன்னங்களைப் பிடித்தன இருபுறமும். அதனால் மொட்டெனக் குவிந்த அதரங்களை அவன் அதரங்கள் ஒரு விநாடி



தீண்டி மீண்டன. ''சரி, சரி! கையை எடுங்கள் கன்னம் வலிக்கிறது'' என்றாள் தேவி பொய்க் கோபம் காட்டி.

''நீ சொன்னதற்குக் காரணம் சொன்னால்தான் கையை எடுப்பேன்'' என்று பிடிவாதம் செய்தான் இளவரசன்.

''கன்னங்களை அழுத்திப் பிடித்துவிட்டால் எப்படிப் பதில் சொல்வது?'' என்ற குவிந்த உதடுகளால் குழறினாள் தேவி.

கன்னத்திலிருந்து கையை நீக்கினான் இளவரசன். ''சரி இப்பொழுது சொல்'' என்றான். கேள்வியோடு நிற்காமல் அவள் குழலைத் தடவியது வலக்கை.

''அக்னிவர்ணன் என்ற மகாராஜாவைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?'' என்று வினவிய அவள் மெல்ல நகைத்தாள்.

இதைக் கேட்டதும் இளவரசன் இதயத்தில் காமத் தீயும் மூண்டது, கோபத் தீயும் மூண்டது. ரகுவம்சத்தின் கடைசி மன்னன் அக்னிவர்ணன். காமுகன், சதா சரசத்தில் மூழ்கியவன். மனைவியின் தோழிகளைக் கூடக் கொடி வீடுகளில் கற்பழித்தவன். அவனுடன் ரகுவம்சம் முடிந்தது. இதையெல்லாம் நினைத்துப் பார்த்த இளவரசன் வலது கையால் அவள் தோளை இறுகப் பிடித்தான். ''உம், உவமை சரியில்லை'' என்ற சொற்களை அவள் காதுக்கருகில் உதடுகள் இணைத்துக் கூறவும் செய்தான் இளவரசன்.

''ஏன் சரியில்லை?'' என்று வினவினாள் தேவி தன் கைகளை அவன் தோளில் வைத்து, அவன் கைகளிலிருந்த தன்னைச் சிறிது விடுவித்துக் கொண்டு.

''அக்னிவர்ணன் காமுகன்'' என்று குறிப்பிட்டான் இளவரசன்.

''நீங்கள்?'' ரங்கபதாகாதேவியின் குரலில் ஏளனமிருந்தது

''அப்படியல்ல.''

''நீங்கள் இங்கு வந்தது எதற்காக?''

''உன்னுடன் பேசுவதற்காக.''

''பேச்சுடன் நிற்கவில்லையே?''

''வேறென்ன செய்து விட்டேன் இப்பொழுது?''

''ஏற்பாடுகள் செய்தீர்கள்.''

அவள் மெள்ள அவன் பிணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு, ''அதோ'' என்று கொடி வீட்டின் இன்னொரு மூலையிலுருந்த பளிங்கு மேடையைக் காட்டினாள்.

''அதற்கென்ன? நிலவு பாய்ந்திருக்கிறது அங்கே'' என்றான் இளவரசன் மெதுவான குரலில்.

''அது மட்டுமல்ல...'' இடையில் நிறுத்தினாள் பேச்சை இளவரசி.

''வேறென்ன?''

''அதன் மீது மலர்களைத் தூவினீர்கள்...''

''ஆமாம், அதனாலென்ன?''

''அதனாலென்னவா?''

''சொன்னால்தானே தெரியும்?''

''அக்னிவர்ணன் சரசகாலத்தில் மலர்ப் படுக்கையில் படுப்பான். கொடி வீடுகளில் மனைவிமார்களின் தோழிகளைச் சந்தித்து...''

''சந்தித்து?''

''அதைச் சொல்ல வேண்டுமாக்கும்-'' இதைக் கேட்ட கங்கன் செல்வி நன்றாகப் பல்லவ இளவலை விட்டு விலக முயன்றாள்.

ஆனால் அவளை விலகவிடலில்லை இளவரசன். ''தேவி காவியத்தைச் சரியாகப் படிக்கவில்லை நீ. அக்னிவர்ணன் மலர் மஞ்சமமைத்து விதானமமைத்து உப்பரிகையில் வெண்ணிலவில் படுத்தது சரத்காலத்தில். அதுவும் அங்கு மனைவிமார்களுடன் படுத்தான். கொடிவீடுகளில் சந்தித்து, உம்... சந்தித்து... குலாவிய தென்று வைத்துக் கொள்ளேன்... குலாவியது மனைவிமார்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக...'' இளவரசன் தடுமாறித் தடுமாறிக் காவியம் சொன்னான்.

ரங்கபதாகாதேவி நகைத்தாள். அந்த நகைப்பொலி பெரும் இன்பமாயிருந்தாலும் அதை வெளிக்காட்டாத இளவரசன் ''எதற்கு நகைக்கிறாய்?'' என்று வினவினான்.

''கொடி வீட்டில் அக்னிவர்ணன் ரகசியமாக காதலிகளைச் சந்தித்ததாகச் சொன்னீர்கள் அதற்கு'' என்று தேவி அவனிடம் சற்று அதிகமாகவே நெருங்கினாள்.

''காவிய உண்மையைச் சொன்னேன்.''

''நானும் அதைத்தான் சொல்கிறேன்.''

''எதை?''

''நாம் இங்கு சந்திப்பதை.''

''இதற்கென்ன?''



''இதுவும் திருட்டுச் சந்திப்புத்தானே?''

''ஆனால் தோழிகளைச் சந்திக்கவில்லையே நான்?''

''அந்த ஆசையும் இருக்கிறதா?''

''இருந்தால் என்ன தவறு?''

''என்ன தவறா?'' நான் வருகிறேன்.'' என்று கோபத்துடன் அவனிடமிருந்து திமிறிக் கொடி வீட்டு வாசலை நோக்கிச் செல்ல முயன்றாள் தேவி.

இளவரசன் அவள் கையொன்றைப் பிடித்து அவள் வேகத்தைத் தேக்கினான். ''நீ செய்த தவறுக்கு நான் எப்படிப் பொறுப்பாளி?''

''நான் என்ன தவறு செய்தேன்?'' என்றாள் சீற்றத்துடன் தேவி.

''நீதானே அயோக்கியனான அயோத்யாதிபதியுடன் என்னை ஒப்பிட்டாய்?'' என்று கூறி நகைத்த இளவரசன் அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு மலர்கள் உதிர்ந்துகிடந்த பளிங்கு மேடைக் கருகில் நிறுத்தினான்.

அங்கு நிலவு இழைத்த நிலையில் சொர்க்க அணங்காக நின்ற ரங்கபதாகாதேவியின் அழகு அம்சம் ஒவ்வொன்றையும் சற்று எட்ட இருந்தே கண்களால் பருகினான் பல்லவ இளவல். பிறகு பொறுக்கமாட்டாமல் அந்த அழகியை அணுகி இடையில் கையை வளைத்து இறுக்கிப் பளிங்கு மேடைக்கு அழைத்துச் சென்று அவளை உட்காரவைத்துத் தானும் பக்கத்தில் உட்கார்ந்தான். அவளது முகவாய்க்கட்டையை வலதுகையால் உயர்த்திய பல்லவ இளவல் தன் கண்களை அவள் கண்களோடு உறவாட விட்டான். ''இங்கு எதற்காக வரச்சொன்னாய் தேவி?'' என்று மெள்ள வினவவும் செய்தான்.

''தெரியவில்லை'' என்றாள் தேவி அவன் கண்களைத் தன் கண்களின் காந்தத்தால் கவர்ந்து. ''ஆமாம், நீங்கள் எதற்கு வந்தீர்கள்?''

இளவரசன் வலது கை அவள் தோளை இறுகப் பிடித்தது. கழுத்தையும் சற்றே தடவியது. ''எனக்கும் தெரியவில்லை'' என்று அவன் உதடுகள் மெல்ல சொற்களை உதிர்த்தன.

அவள் புன்முறுவல் கோட்டினாள். உட்கார்ந்த நிலையில் வெண்ணிலவின் ஒரு கதிர் அவள் முகத்திலும் பட்டதால் அவள் முறுவலித்தது அவன் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது. அவனும் முறுவல் கொண்டு சொன்னான்: ''நாம் இருவருக்கும் சித்தப்பிரமை ஏற்பட்டிருக்க வேண்டும்'' என்று

''ஏன்?'' என்று கேட்டாள் அவள்.

''இங்கு வந்த காரணம் நம் இருவருக்கும் தெரியவில்லை.'' என்றான் இளவரசன்.

வந்த காரணம் அவனுக்குத் தெரியவில்லை என்பது புரட்டு என்பதைப் புரிந்து கொண்ட ரங்கபதாகாதேவி, ''ஒரு விஷயம் எனக்குப்புரிகிறது'' என்று கூறினாள்.

''என்ன புரிகிறது?''

''உங்களை நீங்களே கேளுங்கள்.''

''என் மனத்தையா?''

''இல்லை, கைகளை!''

இதைக் கேட்டதும் இளவரசன் சற்று ஒதுங்கி அவளை அந்தப் பளிங்கு மேடையில் தான் தூவியிருந்த மகிழமலர், மல்லிகை மலர் மஞ்சத்தில் படுக்க வைத்தான். அவள் பளிங்கு மேடையில் தெய்வ மங்கை போல் படுத்துக்கிடந்தாள். மல்லாந்து கிடந்த அந்த மங்கையின் எழுந்தும் தாழ்ந்தும் இணைந்தும் பருத்துமிருந்த காமாஸ்திரங்கள் இளவரசனின் சித்தத்தைச் சிதற அடித்தன. ''தேவி!'' என்ற சொல் மிக மெதுவாக உதிர்ந்தது அவன் உதடுகளிலிருந்து.

''உம்...'' வேறு சொல் உதிரவில்லை அவளிடமிருந்து.

''என் கைகள் துஷ்டக் கைகள்தான். ஆனால்...'' என்று இழுத்தான் இளவரசன்.

''ஆனால்?'' கண்களை மூடிக்கொண்டாள் தேவி.

''உன் உடலிலெல்லாம் எத்தனை துபிம்பங்கள்!''

''ஒரு வித்தியாசம் உண்டு''

''என்ன?''

''உங்கள் கைகளைப் போல் இவை சுற்றுவதில்லை''

''அவசியமில்லை,சுற்றவில்லை.''

''சுற்றாமல் என்ன செய்ய முடியும்?''

''சுழலச் செய்ய முடியும்.''

''எதை?''

''என் சித்தத்தை'' என்று கூறிய இளவரசன், மெள்ள அவளை நோக்கிக் குனிந்து அவள் கண்களில் தனது இதழ்களைப் புதைத்தான்.

''கண்ணைக் குருடாக்கி விடாதீர்கள்'' என்று முணுமுணுத்தாள் தேவி.



''என் கண்கள் ஏற்கெனவே குருடாகிவிட்டன தேவி'' என்று இளவரசனும் முணுமுணுத்தான். ''உலகமே எனக்குத் தெரியவில்லை இப்பொழுது'' என்று கூறினான்.

அவன் உடல் அவள் உடலுடன் மெல்ல இணைந்தது. ''அத்துடன் நிற்கட்டும்'' என்று எச்சரித்தாள் தேவி. அந்த எச்சரிக்கையை வான்மதியும் கேட்டிருக்கவேண்டும். அவன் கண்களை, மெள்ள நகர்ந்த மேகமொன்று மூடியது. கொடி வீட்டில் மூண்டது முழு இருள். அப்பொழுது ரங்கபதாகாதேவியின் கைகள் அவன் கழுத்தை வளைத்தன. ''இப்பொழுது குருடர்கள் மூவர். நம்முடன் சந்திரனும் சேர்ந்து கொண்டான்'' என்றாள்.

பேச்சு பயனற்ற நிலையை இருவரும் எய்திக்கொண்டிருந்தனர். நேரம் ஓடியது தெரியவில்லை. இன்னொருவன் கவனித்ததும் புரியவில்லை.

# 90. விலாசவதியின் கதை! வேந்தன் வினா!

உணர்ச்சிகள் உச்சியடைந்த நிலையில் வெண்ணிலவு கண்ணை மூடிக்கொண்ட இருளில், கொடி வீட்டின் பளிங்கு மேடையில் பல்லவ இளவலின் கழுத்தை வளைத்த கைகள் திடீரென எச்சரிக்கை அடைந்து சரேலென்று விலகவே செய்தாலும், எழுந்த இழைந்த மார்பு விலக முயன்றாலும், நிலையை மாற்ற இஷ்டப்படாத இளவல் தனது இருகைகளையும் அவளது முதுகுப் புறத்தில் ஒட்டி, பூவுடலை அப்படியே தூக்கினான். ஆனால் அப்படி வாரியெடுக்க முயன்ற பல்லவ இளவரசனை, ''இத்துடன் நிற்க வேண்டும்'' என்ற தேவியின் கடினமான சொற்கள் சற்றே நிற்க வைத்தன. வியப்புடன் வேறு வழியில்லாமல் அவளை மீண்டும் பளிங்கு மேடையில் விட்டு எழுந்து உட்கார்ந்து கொண்ட இளவல், ''இப்போது என்ன நேர்ந்து விட்டது தேவி? எதற்காகக் கோபிக்கிறாய்?'' என்று வினவினான்.

''கோபமில்லை'' என்ற தேவி அவன் கையொன்றுடன் தன் கையைப் பிணைத்தாள். அவன் கை தன் கையை அழுத்துவதைத் தடுக்கவும் இல்லை அவள்.

''கோபம் இல்லாவிட்டால் வேறென்ன?'' என்று கேட்டான் இளரவசன் அவள் விரல்களை நெறித்து.

''எச்சரிக்கை'' என்ற தேவி இளமுறுவல் கோட்டினாள்.

''எதற்கு எச்சரிக்கை?'' இளவரசன் கேள்வியில் வியப்பு ஒலித்தது. ஒரு கை கையின் பிடியிலிருந்தாலும் இன்னொரு கை அவள் கன்னத்தைத் தடவியது.

''அத்துமீறாதிருக்க'' என்றாள் தேவி.

''அதற்காகத் தடையா?'' என்றான் இளவரசன்.

''ஆம்.''

''இதில் அத்து என்பது உண்டா?''

''உண்டு. சொன்னால் உங்களுக்குப் புரியாது''

''தேவி! காளிதாசன் கதை உனக்குத் தெரியுமா?'' என்று பேச்சை மாற்றினான் இளவரசன்.

''சொல்லுங்கள். உங்களுக்கு அனுகூலமான கதையா யிருக்கும்'' என்று தேவி நகைத்தாள்.

''தேவி! காளிதாசன் மகாகவி என்பது உனக்குத் தெரியும்.''

''ஆம்.''

''நன்றாகவே அவன் காவியங்களைப்படித்திருக்கிறாய்.''

''சுமாராகப் படித்திருக்கிறேன்.''

''நன்றாகவே படித்திருக்கிறாய். இப்பொழுதுதானே அக்னிவர்ணன் கதையைப்பற்றிக் கூறினாய்?''

''இருக்கட்டும், அதனாலென்ன?''

''ரகுவம்ச காவியத்தை எழுதிய காளிதாசனின் சொந்தக் கதை உனக்குத் தெரியவேண்டும்.''

''சொல்லுங்கள்.''

சற்று நிதானித்தான் இளவரசன். அவள் கன்னத்தை நெருடிய வலது கை கழுத்தில் இறங்கியது. ''அத்துடன் நிற்கட்டும். கதையைச் சொல்லக் கை இறங்க வேண்டியதில்லை'' என்றாள் தேவி கோபக் குரலில். அதற்காக அவன் கையை அகற்ற அவள் முயலவில்லை.

மெள்ள மெள்ளக் கதையைச் சொல்லத் துவங்கிய பல்லவ இளவல், ''மகாமாயையாகிய காளியினால் நாக்கில் பஞ்சாட்சரம் எழுதப்பெற்றுக் கவி மழை பொழியத் தொடங்கினான் காளிதாசன். போஜ மகராஜா ஆண்ட தாரா நகரத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்த இரவில் பூரண நிலவு காய்ந்து கொண்டிருந்து. அந்தத் தெருவின் வீடொன்றின் வெளித் தாழ்வரையில், கூரையில்லாத இடத்தில் நிலவின் வெளிச்சத்தில் விலாசவதி என்பவள் உலாவிக்



கொண்டிருந்தாள் சேடிகளுடன். அந்த விலாசவதி யார் தெரியுமா?'' என்று கேட்டுச் சற்றுப் பேச்சை நிறுத்தினான்.

''தெரியும். ஒரு வேசை'' என்றாள் கங்கன் மகள்.

அவளுக்கு அந்தக் கதை தெரியும் என்பதைப் புரிந்து கொண்டான் பல்லவ இளவல் வேண்டுமென்றே தன் வாயால் அதைக் கேட்க இஷ்டப்படுகிறாளென்ற காரணத்தால் மேலும் சொன்னான்: ''வேசையல்ல, காளியின் அருள் பெறாமல், காளிதாசனாகாமல், மூடனாயிருந்தபோது அவன் மணந்த அரச குமாரியே விலாசவதி யெனும் பெயர் பூண்டு வேசைகளின் வீதியில் வசித்து வந்தாள் காளிதாசனை எதிர்பார்த்து. அவள் எதிர்பார்த்தது அன்று தான் பூர்த்தியாயிற்று...''

''எப்படி?'' என்று கேட்டாள் தேவி.

''அங்கு வந்த காளிதாசன் வான்மதியையும் நோக்கி அவளையும் நோக்கிவிட்டுச் சொன்னான்: 'பெண்ணே, உள்ளே சென்றுவிடு. உன்முகம் களங்கமற்ற சந்திரன் போலிருக்கிறது. கிரகணம் பிடிக்கும் வேளையில் ராகு உன் முகத்தையும் பார்த்து, களங்கமுள்ள சந்திரனையும் பார்த்தால் அவனைப் பிடிப்பதற்குப் பதில் உன்னைப் பிடித்துக் கொள்வான்' என்று சொன்னான்''

''உம்'' என்றாள் தேவி.

''அந்த உவமையால் மனம் நெகிழ்ந்த விலாசவதி அவனை அருகில் அழைத்து 'நீ யார்?'' என்று கேட்டாள். அவன் யாரென்பதை அறிந்திருந்தும், அவன் காளிதாசன் என்ற பெயரைச் சொன்னான்'' என்றான் பல்லவ இளவல்.

''பிறகு?'' என்று வினவினாள் தேவி.

பிறகு விலாசவதி சொன்னாள் தன் ஒரு கவிதைக்கு நான்காவது வரியை இயற்றியிருப்பதாக. ''முதல் மூன்று வரிகளை இயற்றக் காளிதாஸ மகாகவியால் தான் முடியும். நீ காளிதாஸனாயிருந்தால் உன்னால் முடியும்'' என்றும் கூறினாள் ''சொல்'' என்று கேட்டான் காளிதாஸன்...''

''அவன் என்ன சொன்னான்?'' என்று கேட்டாள் தேவி.

''யானையையே விற்றுவிட்ட பிறகு அங்குசத்திற்கு ஏன் விவாதம் என்ற பொருள்பட்ட வடமொழி வரியொன்றைச் சொன்னாள்.

''அதற்குமுதல் மூன்று வரிகளைச் சொன்னானா காளிதாஸன்.''

''சொன்னான் இப்படி: கட்டழகியை ஒருவன் தழுவுகிறான். அதரங்களைச் கவைக்கிறான். அவள் ஆடையும் நீங்குகிறது. ஆனால்

இன்பம் துய்க்க முயலுகையில் அவள் அடம்பிடித்தால் யானையையே விற்ற பிறகு அங்குசத்திற்கும் விவாதம் எதற்கு? இப்படிப் பொருள் கெண்ட கவிதையைச் சொல்லி மற்ற மூன்று வரிகளைப் பூர்த்திசெய்து நான்காவது வரியுடன் இணைத்தான் காளிதாஸன்'' என்று கதையை முடித்தான் இளவரசன்.

''நல்ல அழகு!'' என்று அலுத்துக் கொள்வதுபோல் பாசாங்கு செய்தாள் தேவி.

''அழகுக்கு என்ன குறைவு? உவமைக்கு காளிதாஸன் என்று கேள்விப்பட்டதில்லையா நீ?''

''கேட்டிருக்கிறேன். அவள் சொன்னதற்குப் பதில் இப்படித்தானோ?''

''வேறு எப்படி? பல உரிமைகளையும் கொடுத்துவிடும் ஒரு பெண் கடைசியில் இடக்கு செய்தால் யானையை விற்றவன் அங்குசத்திற்குச் சண்டை போடுவது போலத்தானே?''

உங்களுக்கு அனுகூலமாயிருக்கிறது கதை!'' என்று சொல்லி நகைத்தாள் தேவி.

''*சுலோகத்தை முழுக்கச் சொல்லட்டுமா?'' என்று கேட்டான் இளவரசன்.

''ஐயையோ! வேண்டாம்! வேண்டாம்!'' என்றாள் தேவி.

''ஏன் தேவி? அந்தச் சுலோகம்...'' என்று இழுத்தான் இளவல்.

''எனக்குத் தெரியும்! மூடுங்கள் வாயை!'' என்றாள் தேவி. இருப்பினும் அந்தச் சுலோகத்தை நினைத்ததால் காவிய உலகத்துக்குச் சென்றாள் ''பிறகு நடந்ததையும் சொல்லுங்கள்'' என்று மெல்ல வினவவும் செய்தாள்.

இளவல் சொன்னான்: ''அப்பொழுது அவன்மீது விழுந்த விலாசவதி தோழிகளுக்கு எதிரில் தன் அதரங்களை அவன் அதரங்களோடு இழைக்க முயன்றாள். தோழிகளிருந்த காரணத்தால் காளிதாசன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டான். 'ஏன் முகத்தைத் திருப்புகிறாய்? வெட்கமா? என்று வினவினான் விலாசவதி. 'இல்லை. என் முன்பு உன்முகமாகிய பூரண சந்திரன் இருக்கிறது. சந்திரன் முன்னாலிருந்தால் பின்னால் நிழல் விழவேண்டுமே, விழுகிறதா? எனறு பார்த்தேன்' என்று சமாளித்துக் கொண்டான் காளிதாசன்.''

''என்ன உவமை! என்னை கற்பனை!'' என்ற ரங்கபதாகா தேவி எழுந்து அவனை விட்டு விலகி உட்கார்ந்தாள்.

''ஏன் விலகி விட்டாய்?'' என்று கேட்டான் இளவரசன்.

''கதையின் கடைசிப் பகுதி நிகழக் காலமிருக்கிறது'' என்றாள் தேவி

''இதற்கும் காலமுண்டா?''

''உண்டு.''

''எத்தனை காலம்?''

''நீங்கள் போர்களில் வெற்றி பெற்று, உங்கள் தந்தை மீண்டும் ராஜ்யாதிபதியாகி, நீங்கள் எங்களைக் கைப்பிடிக்கும் வரையில்.''

எங்களை என்று அவள் சொன்னதில் யாரைச் சேர்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தே இருந்தது. ''ஆமாம், விளிந்தையில் நீ கேட்டதும் மைவிழி சத்தியம் செய்ததும் எனக்கு நினைப்பிருக்கிறது'' என்றும் கூறினான் இளவரசன்.

''அவளைச் சத்தியத்தில் கட்டிப்போட்டு நான் நிலை மீறுவது தவறல்லவா?'' என்று கூறிய தேவி எழுந்திருந்தாள் பளிங்கு மேடையை விட்டு.

வெளியிலிருந்த நிலவின் அளவிலிருந்து ஒரு ஜாம காலம் ஒடிவிட்டத்தை அப்பொழுது தான் உணர்ந்தான் பல்லவ இளவல். அவளை மீண்டும் தொட அவன் விரும்பவில்லை. தொட்டால் காமாக்னி தன்னை மீண்டும் எரிக்கத் தொடங்கும் என்பதைப் புரிந்துகொண்டதால் கீழே தொங்கப் போட்ட நீண்ட கைகளை அவன் உயர்த்தவே இல்லை. இருவரும் அப்புறம் பேசவுமில்லை பல விநாடிகள். ''வருகிறேன்.'' என்ற ஒற்றைச் சொல்லிச் சொல்லி விட்டு, தேவி கொடி வீட்டின் மறுபுறமாகவெளியே நடந்தாள். அவள் செல்வதைப் பார்த்துக்கொண்டு பிரிவால் பெருமூச்சு விட்ட பல்லவ இளவல் எதிர்புறமாக இருந்த கொடி வீட்டு வாசலைவிட்டு வெளியேறி மீண்டும் நந்தவனத்தில் உலாவினான். உலாவினான் என்பதை விட உலாவுவது போல் பாசாங்கு செய்தான் என்பது பொருந்தும். பழையபடி மகிட மரத்தை அணுகினான். அங்கு அப்பொழுதும் தன்னைப் பின் தொடர்ந்த காவலன் நிற்பதைக் கண்டு அவனை ஏறெடுத்துப் பார்க்காமல் உப்பரிகைப்படிகளில் ஏறித் தன் அறையை அடைந்தான். அடைந்ததும் அறைக் கதவை மூடாமல் பஞ்சணையில் தொப்பென

* ஸம்பீதே அதரமதுனி ஸ்தனே க்ருஹீதே
ஸஞ்சாதே கதவஸனே தவோர்யுக்மே
ஸம்போகே தருணி கருதாஹட:
விக்ரீதே கரிணி கிம் அங்குசே விவாத:

விழுந்தான். விழுந்து கையிலிருந்து மகிடப் பூக்களைத் தன் மார்புமீது வைத்துக்கொண்டான். ''இவை இருக்கவேண்டிய இடம் வேறு' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

கண்ணை மூடியும் உறக்கம் வரவில்லை அவனுக்கு. ரங்கபதாகாதேவி அவன் நினைப்பில் எழுந்து நகைத்தாள். உறக்கம் நான்காம் ஜாமத்தில் தான் வந்தது அவனுக்கு. அவனை மீறிய நிலையில், இரவின் மூன்று ஜாமங்களை விழிப்பில் கடத்திவிட்ட காரணத்தால் கண்கள் உறக்கத்தில் மூடின. உறக்கமும் ஆட்கொண்டது.

அந்த உறக்கத்தில் கனவே வந்தது அவனுக்கு. ரங்கபதாகாதேவி அவனைத் திரும்ப வந்து அணைத்தாள். 'நான் வருகிறேனென்றால், விடை பெற்றால், நீங்கள் விட்டுவிட வேண்டுமா?' என்று வினவினாள். தன் மலர்விழிகளாலும் அதர விரிவாலும் மோகன நகை கூட்டினாள். அவன் சொன்னான்: ''நீ தானே ஓடி விட்டாய்! கடமையைப்பற்றி உபதேசம் செய்தது நீதானே!'' 'நான் பல சொல்வேன். ஆண்பிள்ளை யான நீங்கள் ஏன் கேட்கவேண்டும்?'' என்று தேவி கேட்டாள். ''பெண்பிள்ளை சொல்லைக் கேட்பவர் ஓர் ஆண்பிள்ளையா?'' என்றும் வினவினாள். இப்படிக் கேள்விகளைக் கேட்டாள். வளைந்தாள், வளைந்து வளைந்து அழகுகளைக் காட்டினாள், அழைப்புக் கணைகளைத் தொடுத்தாள்.

இத்தகைய கனவைக் கண்ட இளவல் உறக்கத்திலும் முகத்திலும் சிரிப்பைப் படரவிட்டுக் கொண்டான் தன்னை மறந்த நிலையில். கடைசியில் நன்றாக நேரம் போவது தெரியாமல் உறங்கவும் செய்தான். கதிரவன் உதித்து நாழிகைகள் நாலு ஓடிய பின்பு காவலனொருவன் அவனை எழுப்பிய பின்பே எழுந்திருந்தான். ''நான் சீக்கிரம் நீராட வேண்டும்'' என்று கூறினான் அவசர அவசரமாக.

''எல்லாம் சித்தமாயிருக்கிறது'' என்றான் காவலன்.

''சரி, இதோ வருகிறேன்.'' என்று கூறினான் இளவரசன்.

''சீக்கிரம் நீங்கள் நீராட வேண்டும்'' என்று காவலன் குரலில் பணிவும் எச்சரிக்கையும் கலந்திருந்தன.

''என்ன அத்தனை அவசரம்?'' சீற்றத்துடன் கேட்டான் பல்லவ இளவல்.

''தங்களை சந்திக்க மன்னர் ஆஸ்தான அறையில் காத்திருக் கிறார்'' என்று உணர்த்தினான் காவலன்.

இதைக் கேட்ட இளவரசன் ஸ்நானபானாதிகளை வெகு விரைவில் முடித்துக்கொண்டு தனது பழைய பயண உடை அணிந்து,



கச்சைக் கட்டி, வாளும் கச்சையில் தொங்க, ராஜரீதியில் கங்க மன்னன் ஆஸ்தான அறையை அடைந்தான். அங்கிருந்த சிங்காதனத்தில் அமர்ந்திருந்தான் பூவிக்ரமன். உள்ளே இருந்த உணர்ச்சிகள் ஏதும் அவன் கண்களில் துலங்கவில்லை இளவரசனைச் சற்று எட்ட இருந்த ஆசனத்தில் அமரச்சொல்லி, சுற்றி வளைக்காமல் நேராகக் கேள்வியில் இறங்கினான். அவன் முதல் கேள்வி இளவரசனைத் திடுக்கிடச் செய்தது. ''என் மகள் விஷயமாக உன் உத்தேசம் என்ன?'' என்பது கங்க மன்னனின் ஆரம்பக் கேள்வி.

# 91. காலைப் பிரசாதம்

கங்க மன்னனின் ஆரம்பக் கேள்வி, எதற்கும் அசையாத பல்லவ இளவலை ஒரு கலக்குக் கலக்கிவிட்டதாகையால் அவன் உடனடியாக அதற்குப் பதில் சொல்லாமல் ஆஸ்தான அறையின் கூரையையும், அக்கம் பக்கச் சுவர்களையும் கவனிக்கலானான். சின்னஞ்சிறு கண்டிக் கற்களாலும், நன்றாக இழைத்த சுண்ணக் கலவையாலும் பளிங்கு போலும் வளைந்தும் காட்சியளித்த ஆஸ்தான அறையின் செங்கற் கூரையில் பற்பல போர்க்காட்சிகளின் ஓவியங்களும், நடுநடுவில் சுவர்களை இணைத்து நின்ற தூண்கள் பற்பலவித வீரப்பிரதிமை களாகவும் காட்சியளித்தன. சில தூண்களில் புரவி இரண்டு கால்களால் எழுந்து பாய அவற்றின் மீது வீரர்கள் அமர்ந்திருந்தார்கள். இன்னும் சில தூண்களில் வாளேந்திய வீரப் பெண்மணிகள் காட்சியளித்தனர். எந்தத் தூணிலோ சுவரிலோ காதற் காட்சி மருந்துக்குக் கூடக்கிடையாது. இவற்றையெல்லாம் கவனித்த பல்லவ இளவல் இந்த ஆஸ்தான அறை அரசனின் மந்திராலோசனைக்கு மட்டுமே ஏற்பட்டது என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அரசன் ஆசனத்திலிருந்த சிங்கக் கைகள் போலவே தான் அமர்ந்திருந்த ஆசனத்திலும் சிங்கக் கைகளிருந்ததைப் பார்த்த பல்லவ இளவல், இன்னொரு நாட்டு அரசனுக்குச் செய்யும் மரியாதை தனக்கும் செய்யப்படுவதை உணர்ந்தான்.

இப்படிப் பலபடி எண்ணிப் பல்லவ இளவரசன் மோட்டு வளையையும் சுவர்களையும் பார்ப்பதையும், தனக்கு பதில் சொல்லாதையும் கண்ட கங்கமன்னன், ''நான் கேட்டேன் ஒரு கேள்வி'' என்று சற்று அழுத்திச் சொற்களை உச்சரித்து இரண்டாம் முறையாகக் கேள்வியை வீசினான்.

பல்லவ இளவல் சற்றுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டாலும் முதல் நாளிரவு தான் அறையிலில்லாத விஷயத்தைக் காவலன் மன்னனுக்கு உணர்த்தியிருப்பானென்பதைச் சந்தேகமறப்

புரிந்து கொண்டதால் ''ஆம். கேட்டீர்கள்'' என்று மெதுவான குரலில் பதில் கூறினான்.

''அதற்கு இன்னும் நேரிடையான பதில் இல்லை'' என்று சிற்றம் தொனித்த குரலில் சுட்டிக்காட்டினான் கங்க மன்னன்.

ராஜசிம்ம பல்லவன் தனது தலையை நன்றாக உயர்த்தி பூவிக்ரமன் கண்களைத் தைரியமாகவே சந்தித்தான். ''பதிலில் புதுமை ஏதுமில்லை'' என்றும் கூறினான் சர்வசாதாரணமாக.

''நீ கூறுவது எனக்குப் புரியவில்லை.'' கங்கமன்னன் குரல் சற்று நிதானப்பட்டு விட்டது இளவரசன் காட்டிய துணிவின் விளைவாக.

கங்கன் புத்தி அதன் இயற்கையான ஆழத்துக்குச் சென்று விட்டதை இளவரசன் புரிந்துகொண்டான். அவனும் சர்வ சாதாரணமாகவே கூறினான், ''புரிந்து கொள்ள இஷ்டப்பட்டால் புரியாத விஷயம் ஏதுமில்லை. கேள்விக்கு விடை முன்பே கொடுத்து விட்டேன்'' என்று

''என்ன கொடுத்து விட்டாய்?''

''நீங்கள் கேட்ட கேள்விக்கு விடை.''

''எப்பொழுது?''

''நேற்றே கொடுத்துவிட்டேன் மன்னவா! உங்களைப் பெண் கேட்க வந்ததாகக் கூறினேன்'' என்று குறிப்பிட்ட பல்லவ இளவல் வேந்தனை உற்று நோக்கினான்.

பூவிக்ரமன் இந்தப் பதிலால் மகிழவில்லை. அவன் கண்களில் இனம் புரியாத ஒளி ஒன்று பளிச்சிட்டது. ''பெண் கேட்க வந்தாய், ஆனால் நான் இன்று தான் பதில்சொல்வதாகச் சொன்னேன்'' என்றான் கங்க மன்னன்.

இளவரசன் சிறிது சிந்தித்தான். ''இன்று நீங்கள் பதில் சொல்வதாகக் கூறியது என் தூதுக்காக, சாளுக்கிய பல்லவ பூசல்களில் கங்கநாடு தலையிடக் கூடாது என்ற கோரிக்கைக்காக'' என்றான் இளவரசன் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

கங்கமன்னன் கண்களில் சிறிது வியப்பு படர்ந்தது. ''ஒன்றை இன்னொன்று பொறுத்திருக்கிறதல்லவா?'' என்று வினவினான் கங்க மன்னன்.

''ஆம்.'' பல்லவ இளவல் பதில் சொன்னபோது குரலில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை.



''தேவியை உனக்குக் கொடுக்க நான் ஒப்புக்கொண்டால் பல்லவர் மீது போர் தொடுக்க முடியாது'' என்று சுட்டிக்காட்டினான் பூவிக்ரமன்.''

''உண்மை.''

''அண்டையிலுள்ள சாளுக்கிய நாடு கங்க நாட்டை விடப் பெரிது.''

''ஆம்.''

''மூன்று மடங்கு அதிகப் படை வலுவுள்ளது.''

''ஆம்.''

''ஆகவே, அவர்களுடனும் பூசல்கூடாது கங்க நாட்டுக்கு.''

''ஆம்.''

''ஆகவே, நடுநிலைமை வகிப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்று கூறிய கங்க மன்னன், ''இப்பொழுது புரிகிறதா உன் சொந்தப் பணிக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்பு?'' என்றும் வினவினான்.

பதில் கூறப் பல்லவ இளவல் ஒரு விநாடி கூடத் தயங்கவில்லை. ''அதை அறிந்துதான் இங்கு வந்தேன். நடுநிலை வகிக்கத்தானே கேட்டேன்'' என்றான் பல்லவ இளவல், தேவியைப் பற்றித் திட்டமாக எதுவும் குறிப்பிடாமல்.

''ஆகவே நானும் கேட்டேன், தேவியை என்ன செய்வதாக உத்தேசம் என்று, பெண் கேட்டாய். அதுசரி. அதற்கு நான் ஒப்புக்கொண்டால் அவள் நிலை என்ன?'' என்று வினவினான் பூவிக்ரமன்.

அவன் எதற்காக அந்தக் கேள்வியைக் கேட்கிறானென்பது பல்லவ இளவலுக்குத் தெரிந்திருந்தும் தெரியாததுபோல் நடித்து, ''திடீரென அந்தச்சந்தேகம் வரக் காரணமென்னவென்பது எனக்குப் புரியவில்லை. தேவியை நான் கைப்பிடிப்பேன், எனது ராணியாக்குவேன்'' என்றான் கண்களைத் தரையில் ஓட்டி.

''அது எனக்கும் தெரியும். ஆனால் சந்தேகம் வரக் காரணமும் இருக்கிறது'' என்றான் பூவிக்ரமன்.

''என்ன சந்தேகம்'' கண்களை உயரத் தூக்கிக் கங்கன் கண்களைச் சந்தித்தான் பல்லவ இளவல்.

கங்கன் மெல்லக் கூறினான்: ''இளங்கன்று பயமறியாது.''

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினான் இளவரசன் சற்றுச் சங்கடம் தெரிந்தது குரலில்.

இதற்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை பூவிக்ரமன். சிங்காதனத்தை விட்டு எழுந்திருந்து ஆஸ்தான அறையில் சற்று உலாவினான். கடைசியில் இளவரசன் முன்பாகச் சற்று எட்ட நின்று, ''நேற்றிரவு நீ உன் அறையை விட்டுச் சென்றதாகக் காவலன் சொன்னான்'' என்று கூறினான்.

காவலன் கூறியிருப்பானென்பதை இளவரசன் உணர்ந்து கொண்டாலும், எப்பொழுது கூறியிருப்பான் என்று சந்தேகமிருந்தாலும், அதனால் மன உணர்ச்சிகள் அதிகப்படி எழுந்தாலும், அவை எதையும் வெளிக்குக் காட்டாமல் சர்வ சாதாரணமாகச் சொன்னான், ''ஆம், சென்றேன்'' என்று.

''எங்கு?'' பூவிக்ரமன் கேள்வியில் கோபமேதுமில்லை. உள்ளேயிருந்தாலும் அது கேள்வியில் ஒலிக்கவில்லை.

''நந்தவனத்திற்கு'' என்றான் இளவரசன்.

''ஏன்? உறக்கம் பிடிக்கவில்லையா?''

''ஆம்.''

''எதனால்? சௌகரியக் குறைவு ஏதேனுமிருந்ததா?''

''எதுவும் இல்லை.''

''காரணம்?''

''இயற்கை'' என்று பதில் கூறினான் இளவரசன். அத்துடன் நிற்காமல் மேலும் சொன்னான் : ''வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. நந்தவனம் அழகாயிருந்தது. காற்றும் இன்பமாயிருந்தது. பல்லவ ராஜ்யத்தின் தற்கால நிலை மனத்திற்குப் பெரும் பளுவை அளித்திருந்தது...'' வாசகத்தை முடிக்காமலே நிறுத்தினான் இளவரசன்.

''அந்தச் சுமையை அகற்றிக் கொள்ள நந்தவனம் சென்றாய்?'' கங்க மன்னன் கேள்வியில் பெரும் இகழ்ச்சி இருந்தது.

இளவரசன் அந்த இகழ்ச்சியைக் கவனிக்கவே செய்தாலும் அதைப்பற்றி லட்சியம் செய்யாமல் எதிரே நின்ற கங்க மன்னனை நோக்கி, ''உட்கார்ந்து பேசலாம். கேட்க வேண்டியது எதுவானாலும் உணர்ச்சிகளுக்கு இடங்கொடாமல் கேட்கலாம்'' என்றான்.

''பாதகமில்லை. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்'' என்றான் கங்க மன்னன்.

''தாங்கள் நிற்கும் போது நான் உட்கார்ந்திருப்பது முறையல்ல'' என்று கூறிய இளவரசன் தானும் மஞ்சத்தைவிட்டு எழுந்திருந்தான்.



அன்று வரை எதிரிகளாயிருந்த இருவரும் இரண்டு சிங்கங்கள்போல் ஒருவரையொருவர் எதிர்நோக்கிக் கொண்டு நின்றனர். நின்ற நிலையில் பதில் சொன்னான் பல்லவ இளவல். ''ஆம், மனச்சுமையை அகற்றிக் கொள்ளவே நந்தவனம் சென்றேன். அங்கு நீண்ட நேரம் உலாவவும் செய்தேன். நேற்றே நீங்கள் விடை கொடுத்திருந்தால் நான் இரவு தங்க நேர்ந்திருக்காது. நந்தவனத்தில் உலாவவும் அவசியமிருந்திருக்காது'' என்று சொன்னான்.

''நந்தவனம் அந்தப்புரத்தைச் சேர்ந்தது.''

''இருந்தாலென்ன?''

''அங்கு ஆடவர் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை.''

''அப்படியா?''

''ஆம், அங்கு செல்பவர்களுக்கு மரணதண்டனையளிக்கிறோம்.''

''இயற்கையின் அழகைப் பருகுகிறவனுக்கு மரண தண்டனையா! அழகுக்கும் மரணத்துக்கும் நிரம்பச் சம்பந்தமிருக்கிறது உங்கள் நாட்டில்'' என்றான் இளவரசன்.

''அழகைப் பருக இடமுண்டு, ஏவலுமுண்டு பல்லவ இளவரசனே!''

''ஏதோ கோபத்தில் பேசுகிறீர்கள்'' என்ற இளவரசன் சற்று வருத்தத்தைக் குரலில் காட்டினான்.

கங்க மன்னன் கண்களில் கனல் பறந்தது. பதிலில் பொறிகள் சிதறின. ''நீ கொடி வீட்டுக்குச் சென்றதும் எனக்குத் தெரியும். எனது மகளை அங்கு சந்தித்ததும் தெரியும். உன் துணிவை விட என் மகள் துணிவை எண்ணி வியக்கிறேன். வியந்தும் பயனில்லை, வினையை நொந்தும் பயனில்லை இப்பொழுது. என் மகளை உன் ராணியாக்குவதாகக் கூறுகிறாய். இவளைச் சந்திக்கு முன்பே இன்னொருத்தியை அழைத்துக் கொண்டு காஞ்சி வந்திருக்கிறாய். அவளுக்கும் உனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கேள்வி. அவளை என்ன செய்யப் போகிறாய்?''

இளவரசன் அசைவற்று நின்றான். பிறகு தீனமான, ஆனால் திடமான குரலில் சொன்னான், ''அவளும் எனக்கு ராணியாவாள்'' என்று.

''இரண்டு ராணிகளா?'' என்று சீறினான் கங்கன்.

''மன்னர் குலப் பழக்கத்துக்கு விரோதமில்லை'' என்றான் இளவரசன். ''தசரதனுக்கு மூன்று ராணிகள், ஜீவகனுக்கு...'' என்று

இளவரசன் கூறிக் கொண்டு போனதை இடைமறித்த கங்கன், ''நிறுத்து நிறுத்து! காவியத்தைக் கேட்க உன்னை அழைக்கவில்லை நான். உன்னால் எனக்குக் காவியமே கசந்து விட்டது. ஆகையால் இதற்குப்பதில் சொல். என் மகள் உனக்கு மூத்த ராணியா அல்லது இரண்டாவது ராணியா?'' என்று கேட்டான்.

''ரங்கபதாகாதேவி என் பட்டத்து ராணியாவாள். இது முன்பே முடிவு செய்யப்பட்ட விஷயம்'' என்றான் இளவரசன்.

''முடிவு செய்தது யார்?'' கங்கன் குரலில் சற்றுச் சமாதானம் இருந்தது, மேலுக்குக் கோபத்துடன் ஒலித்தது.

இளவரசன் மெள்ளக் கூறினான், ''மைவிழி'' என்ற ஒற்றைச் சொல்லை.

கங்கன் கண்களில் வியப்பு தெரிந்தது. ''அந்த மாமல்லபுரத்துப் பெண்ணா?'' என்று வினவினான் கங்கன்.

''ஆம்'' என்றான் இளவரசன்.

கங்கன் தீவிர சிந்தனையில் இறங்கினான். அவனுடைய பரம்பரைக் குணம் மேலோங்கித் தன் மகளையும் மறந்தது. ''மைவிழி பண்புள்ள பெண்ணாயிருக்க வேண்டும். தியாகியாகவுமிருக்க வேண்டும். தனது காதலனின் பட்டத்து ராணி அரச குலத்தவளாயிருக்க வேண்டும் என்ற உத்தம யோசனை வேறு யாருக்கும் வராது'' என்று பெருந்தன்மையுடன் கூறினான். மேலும் சொன்னான், ''கங்கநாடு இனி பல்லவர் சாளுக்கியர் போர்களில் நடுநிலைமை வகிக்கும். போர்கள் முடிந்ததும் திருமண ஒலை அனுப்பு இளவரசனே! உனக்கு **ராஜ திலகம்** தீட்ட என் மகள் வருவாள் காஞ்சிக்கு'' என்று.

''போர்களில் நாங்கள் தோற்றுவிட்டால்? எங்கள் அரசே போய்விட்டால்?'' என்று வினவினான் இளவரசன்.

''என் மகளால் மாளிகையிலும் வாழ முடியும். நீ இருக்கும் குடிசையிலும் வாழ முடியும். ஆனால் உங்களுக்கு வெற்றியே எதிர்பார்க்கிறேன். என் மகளின் நல்வாழ்வுக்காக. நீ இனி கிளம்பலாம். உன் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் சித்தமா யிருக்கின்றன'' என்று கூறினான் கங்கன்.

''மன்னவா! இந்த உங்கள் பெருந்தன்மையைப் பல்லவர்கள் மறக்க மாட்டார்கள். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு, மன்னனை வணங்கி வெளியே செல்ல முயன்றான் இளவரசன்.

கங்க மன்னனின் அடுத்த சொல் மீண்டும் இளவரசனை பிரமிக்கச் செய்தது. ''இப்பொழுது தேவி பூஜையை முடிக்கும் சமயம். காலைப் பிரசாதத்தை வாங்கிக் கொண்டு போகலாம் வா'' என்று காலை என்ற சொல்லை அழுத்தியே கூறிவிட்டு, சிங்காதனத்தி லிருந்து எழுந்த பூவிக்ரமன் வெளியே நடந்தான். பூவிக்ரமன் அறியாமல் அந்த அரண்மனையில் எதுவும் நடவாதென்பதை உணர்ந்த பல்லவ இளவல் அவனைத் தொடர்ந்தான் காலைப் பிரசாதம் வாங்கிக் கொள்ள. அந்தப் பிரசாதத்தோடு தேவியின் முகதரிசனமும் கிடைக்குமென்ற எண்ணம் அவனைச் சொர்க்கலோகத்துக்கு இழுத்துச் சென்றது.



# 92. சீதனம்

பூவிக்ரமனைப் பின் தொடர்ந்து அந்தப்புரப் பூஜை அறைக்கு வந்த பல்லவ இளவல், அங்கு ரங்கபதாகாதேவி பூஜையை முடித்துக் கொண்டு தங்களை வரவேற்கத் தயாராயிருந்ததைக் கண்டு சற்றுப் பிரமிப்பையே அடைந்தான் முந்திய நாளிரவு மூன்றாம் ஜாமம் முடியத் தன்னுடன் கொடி வீட்டில் தங்கிய கங்கன் மகள் அதற்குள் எழுந்து பூஜையையும் முடித்துக் கொண்டது அவனுக்கு ஆச்சரியமாக இருந்ததென்றாலும், அவள் குனிந்த தலை நிமிராமல் நின்ற நிலை கண்டு, அவள் எழுந்ததிலும் பூஜையை முன்னதாக முடித்ததிலும் கங்க மன்னன் ஏற்பாடும் கலந்திருக்கிறதென்பதை இளவரசன் புரிந்து கொண்டதன் விளைவாக, முந்திய நள்ளிரவு தங்களுக்குள் ஏற்பட்ட சந்திப்பின் விவரங்களை மன்னன் எத்தனை தூரம் அறிந்திருப்பான் என்ற சந்தேகமும் ஏற்பட்டது அவனுக்கு. ஆஸ்தான அறையில் கொடி வீட்டுச் சந்திப்பு தனக்குத் தெரியுமென்பதைக் கங்கன் நேர்முகமாகவே தெரிவித்துவிட்டாலும், தங்கள் உரையாடலை ஒட்டுக் கேட்கும் அளவுக்குக் கங்க மன்னன் கீழிறங்கியிருக்க மாட்டான் என்ற நிச்சயம் மட்டும் ராஜசிம்மனுக்கு இருந்ததால், தன்னெதிரில் தலை குனிந்து நின்ற தேவியைச் சிம்ம தோரணையில் நோக்கவும் துணிந்தான். அந்தத் துணிவே அவனுக்கு ஓரளவு தீங்கையும் கங்க மன்னனுக்குச் சந்தேகத்தையும் விளைவித்தது.

தேவியின் குனிந்த தலையின் கருங்குழலுக்கு முன்னணியில் தொங்கிய சுட்டியைத் தாங்கி நின்ற தலை வகிட்டுக் குறுக்கு வைரச்சரம் குழலின் கருமை காரணமாக வெளேரென்று சில விநாடிகள் ஜொலித்தும், நானாவித வர்ணங்களை, - முக்கியமாக நீலவர்ணத்தை - சாளரத்தின் மூலம் உள்ளே வந்த கதிரவன் வெளிச்சத்தில் சில விநாடிகள் வெளியிட்டும் அவன் சித்தத்தைக் கலக்கவே செய்தது. அதற்குப் பின்னால் நன்றாக வாரிப் பின்னலிட்டு எடுத்துக் கட்டப்பட்டிருந்த

குழலின் திருகுப் பூவும், பின்னல் கட்டைச் சுற்றியிருந்த மல்லிகைச் சரமும் அவன் கண்களை மயக்கின. குனிந்த நிலையிலும் அவளிருந்த சிங்கார நிலை அவளைச் சிற்பச் சிலையாக ஆக்கியிருந்தது. நன்றாக இழுத்து மூடப்பட்ட சேலையின் மேற்புறத் தலைப்பு இடுப்பில் இறுகச் செருகப் பட்டிருந்ததன் காரணமாகவோ என்னவோ ஒடிந்து ஒதுங்கிய இடைப்பகுதியும், அதைச்சுற்றியிருந்த *காஞ்சி குணஹேம சூத்திரமும் அவளுக்கு அரசாங்கத் தோரணையையும், பெண்மையையும் இணைத்த கம்பீரத்தையும் அளித்தன. அவள் மார்பில் புரண்ட முத்தாரம் கழுத்தில் அழுந்தியும் சற்றுக் கீழே வந்தவுடனே எழுந்தும் விளை யாடியதால் அவள் உடலமைப்பு உவமைக்கு அப்பாற்பட்டதா யிருந்தது. சாளர வெளிச்சத்தில் பளபளத்த வழவழத்த கன்னங்கள் நல்ல பத்தரை மாற்றுப் பொன்னை அவமதிக்கும் முறையில் மஞ்சளாயிருந்தன. அந்த மஞ்சளின் ஊடே சிறிதளவு வெட்கச் சிவப்பும் தெரிந்தது. மாலை நேர மஞ்சளை அடுத்து வரும் அந்திச் சிவப்பை நினைவூட்டியது.

இப்படி அவள் தந்தை இருப்பதையும் மறந்து அவளழகைப் பருகிய பல்லவ இளவலின் கால்களின்மீது அந்தக் காரிகையும் கண்களை ஒட்டி நின்றாள். உயரமாகத் தெரிந்த பாதங்களும் உறுதியாக விரிந்து நின்ற விரல்களும், ஒரு பாதத்தில் தெரிந்த காயத் தழும்பும் இளவரசன் வீரத்துக்குச் சான்று கூறின. தான் அணிந்த ஆபரணங் களனைத்தும் அந்த ஒரு வீரத் தழும்புக்கு இணையாகுமா என்று எண்ணிப் பார்த்தாள். அந்த ஏந்திழை இணையாகா என்று தானே பதில் சொல்லிக் கொண்ட கங்கன் மகள், 'இவர் உடம்பில் இன்னும் எத்தனை தழும்புகள் இருக்குமோ?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டதன்றி', அத்தனை தழும்புகள் எத்தனை கடுமையாகவும் முரடாகவும் இருக்கும்?' என்ற ஊகத்திலும் இறங்கினாள். இந்த நினைப்புகளின் காரணமாகக் கையில் தட்டிலிருந்த பிரசாதத்தைக் கொடுக்கவும் மறந்தாள்.

அவர்கள் இருவர் நிலையையும் கவனிக்கவே செய்தான் கங்க மன்னன். இருவரும் மௌனத்திலாழ்ந்த நேரம் சில விநாடிகளே யென்றாலும் பூவிக்ரமனுக்கு மட்டும் பல நாழிகைகள் ஓடிவிட்ட பிரமை ஏற்பட்டதால், ''தேவி! பல்லவ இளவரசரைப் பிரசாதம் பெற அழைத்து வந்தேன்'' என்று உணர்த்தினான் மெதுவான குரலில்.

---

* காஞ்சீ குண ஹேம சூத்திரம் - புடவையை அணைத்து இறுக்கப் பெண்கள் அணியும் தங்கக் கயிறு போன்ற ஆபரணம். 'காஞ்சீ குண ஹேம ஸுத்ரா' என்று வால்மீகி கிஷ்கிந்தா காண்டத்தில் கூறுகிறார்.



சிறு கல் விழுந்தால் கலைக்கப்படும் தடாக நீரைப் போல மயக்கத்திலிருந்து கலைந்த அவ்விருவர் சித்தங்களும் சற்றுத் திகிலுக்கும் உட்பட்டன. வேந்தனும் உடனிருக்கிறானென்ற நினைப்பால். ஆகவே மெள்ளத் தட்டிலிருந்த குங்குமத்தையும் புஷ்பங்களையும் எடுத்து இளவரசர் கையிலும் தந்தையின் கையிலும் கொடுத்தாள் தேவி. குங்குமத்தை இளவரசனுடன் தானும் நெற்றியில் தீட்டிக் கொண்ட பூவிக்ரமன், புஷ்பத்தைக் கண்களிலொற்றிக் கொண்டு மடியில் செருகிக் கொண்டான். இளவரசன் பயண உடை அணிந்திருந்த காரணமாகக் கச்சையில் வைத்துக் கொண்டு, ''வருகிறேன் மன்னவா!'' என்று கூறினான் விடை பெறும் தோரணையில்.

பூவிக்ரமன் பதில் திடமாக வெளிவந்தது. ''தேவியிடமும் சொல்'' என்று.

முந்திய நாளிரவில் கொடி வீட்டு விளைவுக்குப் பிறகு அவள் தந்தையின் முன்பு பேசத் தயங்கிய பல்லவ இளவல் கங்க மன்னன் பட்டவர்த்தனமாகக் கூறிய பதிலின் விளைவாகச் சிறிது சங்கட மடைந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''வருகிறேன் தேவி'' என்று கூறினான்.

''இந்தத் தேவியிடம் மட்டுமல்ல, அந்தத் தேவியிடமும் விடை பெறு ராஜசிம்மா! நீ ஆஸ்தான அறையில் செய்த பிரமாணத்துக்கு அம்பிகையும் சாட்சியாகட்டும்'' என்றான் பூவிக்ரமன்.

''எந்தப் பிரமாணம் மகாராஜா?'' என்று கேட்டான் பல்லவ இளவல் சிறிது வியப்புடன்.

''அதற்குள் மறந்து விட்டாயா?''

''எதை?''

''என் மகளைப் பல்லவ நாட்டுப் பட்ட மகிஷியாக்குவதாகச் சொன்னாயே அந்த விஷயத்தை.''

''அதுதான் முடிந்து போன விஷயமாயிற்றே?''

''அம்பிகையின் சந்நிதானத்திலும் முடியட்டும் அது.''

இதைக் கேட்ட பல்லவ இளவல், ''பல்லவ இளவரசன் அளித்த உறுதி போதாதா? மானிடர்களின் சாதாரண வாழ்க்கை பற்றிய விவரங்களுக்கெல்லாம் தெய்வத்தைச் சம்பந்தப்படுத்த வேண்டுமா?'' என்று வினவினான்.

பூவிக்ரமன் அவனை நோக்கி உறுதியான குரலில் சொன்னான் : ''பல்லவ இளவரசனே! இந்த நாட்டில் இன்னும் மனிதர்களுக்குத்

தெய்வத்திடம் பயமிருக்கிறது. கலி வந்த பின்பும் அதன் முழு வேகம் இன்னும் மனிதர்களைப் பற்றவில்லையென்று நினைக்கிறேன்.''

இதைக் கேட்ட பல்லவ இளவல் இதழ்களில் இளநகை கூட்டினான். ''சொர்க்கம் கிட்டும் போது பிரமாணம் தேவையா?'' என்றும் வினவினான்.

''கிட்டும்வரை பிரமாணம் தேவைதான்'' என்று பதில் கூறிய பூவிக்ரமன் அம்பிகையையும் காட்டி இளவரசன் வாளையும் காட்டினான்.

இளவரசன் மேற்கொண்டு பதில் ஏதும் பேசாமல் அம்பிகையை நோக்கி, ''அம்பிகே! உன் சாட்சியாகத் தேவியை நான் பல்லவ நாட்டின் பட்டமகிஷியாக்குவேன். உன் மேல் ஆணை, என் வாளின் மேலும் ஆணை'' என்று கூறி, அம்பிகைக்குக் கை குவித்து வாளையும் உருவி விக்ரகத்தின் பாதத்தில் வைத்து மீண்டும் எடுத்து உறையில் போட்டான்.

''இனி காலை நிவேதனத்தையும் கொடு இளவரசனுக்கு'' என்று உத்தரவிட்டான் பூவிக்ரமன் மகளை நோக்கி.

ரங்கபதாகாதேவி மெல்லத் திரும்பி அம்பிகையின் பீடத்தில் பூஜைத் தட்டை வைத்தாள். பிறகு சுவர்ண பாத்திரத்தின் மீதிருந்த இலையைத் திறந்து அந்தப் பாத்திரத்தை ஏந்தி வந்தாள். அப்படி வந்தபோது அவள் நடையிலிருந்த அழகு இளவரசன் சித்தத்தைக் கலக்கியதென்றால் பாத்திரத்திலிருந்த பிரசாதம் அவனைத் திகைக்க வைத்தது. பாத்திரத்திலிருந்தது, முந்திய நாள் மாலைப் பிரசாதம் போல் சர்க்கரைப் பொங்கலேதான்!

அதைப் பொற்கரண்டியால் எடுத்து இளவரசன் கையில் கொடுக்கும் சமயத்தில் ரங்கபதாகாதேவி சிறிது கண்களை உயர்த்தினாள். இருவர் கண்களும் விநாடி சந்தித்து விலகின. பிரசாதத்தை வாங்கி வாயில் போட்டுக் கொண்ட இளவரசன் சற்றுத் திரும்பி அதே பிரசாதத்தைக் கையில் வாங்கிய கங்க மன்னனை நோக்கினான். பூவிக்ரமன் கண்கள் அவனை நோக்கி நகைத்தன. ''சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் உனக்கு விசித்திரமாயிருக்கலாம்'' என்றான் பூவிக்ரமன்.

''இதில் விசித்திரத்திற்கு என்ன இருக்கிறது?'' என்று வினவினான் இளவரசன்.

''மனிதன்தான் விரும்புவதைத் தெய்வத்திற்குப் படைக்கிறான். தனக்கு வேண்டியதைத் தெய்வத்திற்கும் வேண்டுமென்று நினைக்கிறான்'' என்றான் பூவிக்ரமன்.



''அது தவறா?'' என்று வினவினான் பல்லவ இளவல்.

''தவறல்ல, நோக்கம் தெய்வ நிவேதன மட்டுமாயிருந்தால்.''

''வேறு எது தவறு?''

''தெய்வ நிவேதனத்தைத் தங்கள் தேவைக்கு உபயோகப் படுத்திக் கொள்வது.'' இதைச் சர்வசாதாரணமாகச் சொன்ன பூவிக்ரமன், ''தேவி! அந்தத் தட்டையும் எடுத்து வா'' என்று கட்டளையும் இட்டான் தன் மகளை நோக்கி.

அந்தக் கட்டளையை நிறைவேற்ற பூஜை அறையிலிருந்து தேவி வெளியே சென்றதும் கங்கனும் பல்லவனும் ஒருவரையொருவர் உற்று நோக்கிக் கொண்டு நின்றனர். அந்த நிலையில் கங்கன் கூறினான், ''கங்க மன்னன் குருடனல்ல'' என்று.

அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை பல்லவ இளவல். தன் நடவடிக்கை ஒவ்வொன்றையும் பணிமக்களைக் கொண்டு மன்னன், கவனித்திருக்கிறானென்பதைப் புரிந்த கொண்டான். ஆகவே, மெதுவாகச் சொன்னான், ''ஆம்'' என்று

''சில வேளைகளில் மன்னர்கள் தங்கள் நலனையும் தங்கள் குடும்பத்தின் நலனையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது'' என்றான் பூவிக்ரமன்.

''நியாயம்.''

''அதற்காக ஒற்றர்களாகவும் வேண்டியிருக்கிறது.''

''புரிகிறது எனக்கு.''

''புரிந்து கொள்ளச் செய்வதற்குத்தான் இங்கே அழைத்து வந்தேன்'' என்ற கங்க மன்னன் சட்டென்று பேச்சை நிறுத்தினான், ரங்கபதாகாதேவி பட்டுச் சீலையால் மூடப்பட்ட ஒரு கட்டுடன் திரும்பியதால்.

தட்டில் என்னதானிருக்கும் என்று பல்லவ இளவல் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் கங்க மன்னனே சீலையை அகற்றினான். தட்டிலிருந்த பொருளைக் கண்டு திகைத்தான் இளவரசன். ''இது எதற்கு?'' என்றும் வினவினான்.

''இது உக்ரோதயம். உங்கள் ராஜ குடும்பத்தில் பரம்பரையா யிருப்பது'' என்று கூறினான் பூவிக்ரமன்.

''நீங்கள் போரில் கைப்பற்றிய பரிசு'' என்று கூறிய இளவரசனின் உதடுகள் சற்றே துடித்தன.

''அதைத் திரும்பவும் தருகிறேன்'' என்றான் பூவிக்ரமன்.

இளவரசன் தனது குலப் பொக்கிஷமான உக்ரோதயத்தை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் நடுவிலிருந்த அந்தப் பெரிய மாணிக்கம் நெருப்புத் துண்டம்போல் அவன் இதயத்தைச் சுட்டது. 'தந்தையைத் தோற்கடித்த எதிரியிடம் என்னைப் பிச்சை வாங்கப் போகிறாயா?' என்று அது கேட்பது போலும் தோன்றியது இளவரசனுக்கு. ஆகவே, நீண்ட நேரத்திற்குப் பிறகு கூறினான், ''மகாராஜா, இதை நான் பெற்றுக் கொள்ள முடியாது'' என்று.

''ஏன்?''

''போரில் போனது திரும்பப் போரில்தான் வரவேண்டும் எங்களுக்கு'' என்றான் பல்லவ இளவரசன்.

''இனிமேல் போர்தான் கிடையாதே நமக்குள்'' என்றான் பூவிக்ரமன்.

''நமது சந்ததிகள் என்றாவது போரிட்டால் அப்பொழுது வரட்டும் இது திரும்ப'' என்றான் இளவரசன்.

''இதைவிடச் சிறந்த மாணிக்கத்தை உனக்குத் தருகிறேனே'' என்ற கங்கன் தன் மகள்மீது கண்ணைத் திருப்பினான்.

''ஆகையால் இது தேவையில்லை. இதைப் பெறுவதை என் தந்தையும் விரும்ப மாட்டார்.'' இளவரசன் பதில் திட்டமாயிருந்தது.

''இது ஸ்திரீதனமாகக் கொடுக்கப்பட்டால்?'' கங்கன் கேள்வியில் நிதானமிருந்தது.

''ஸ்திரீயே சிறந்த தனம். வேறு அத்துடன் விரும்புபவன் விவரம் புரியாதவன்'' என்ற இளவரசன் அதைத் தட்டிலிருந்து எடுத்துக் கொள்ளாமலே கங்கனுக்குத் தலை வணங்கிவிட்டு தேவியின் மீதும் ஒரு பார்வையை வீசிவிட்டு வெளியேறினான்.

அவன் போவதை மற்ற இருவரும் பார்த்துக் கெண்டே நின்றார்கள். இருவர் மனநிலையும் விவரிக்க இயலாததாயிருந்தது.

## 93. அடவிப் பாதை! அம்பு காட்டிய வழி!

கங்கர்கோன் தலைநகரான தழைக்காட்டிலிருந்து புறப்பட்ட பல்லவ இளவலின் கலை இதயம் இயற்கையை ரசிக்கும் திறனை அடியோடு இழந்து கிடந்ததால், இடையில் எதிர்ப்பட்ட இன்பக் காட்சிகளெல்லாம் அவன் கண்களில் படவே இல்லை. அப்படியே பட்டாலும் அவற்றை ரங்கபதாகாதேவியின் எழிலுடனும் பல்லவ சாம்ராஜ்யத்தின் நிர்க்கதியான நிலையுடனும் அவன் இணைத்தே



பார்த்ததால் இதயம் ரசனையற்றுக் கிடந்தது. எழுத்தோ, சிற்பமோ, ஓவியமோ எப்படி தனித்தனிக் கலையோ அப்படி ஒரு தனிக் கலை ரசிப்பும். மற்ற கலைகளைச் சுவைக்க இதயம் எப்படி மற்ற பந்தங்களை மறக்க வேண்டுமோ அப்படி மறந்த நிலையில்தான் ரசிப்புக் கலையும் தலையெடுக்கும் மனித இதயத்தில்.

ஆனால் காம பந்தங்களும் அரசியல் பந்தங்களும் பல்லவ இளவரசனின் இதயத்தில் இணைப்பட்டுக் கிடந்ததால் அவன் வழியில் கண்ட இயற்கைச் செல்வங்களையெல்லாம் ஏறிட்டுப் பார்த்தாலும் இதயத்தை அவை ஊடுருவவில்லை. தழைக் காட்டைவிட்டுக் கிளம்பிய அவன், நேர் மேற்கே சென்றால் மேற்குத் தொடர் மலை வரும். அதன் அடிவாரத்தில் சிறிது தூரம் சென்றால் கங்கர் நாட்டுக்கும் மேலை சாளுக்கியர் நாட்டுக்குமுள்ள எல்லை வரும். அந்த எல்லை முழுவதுமே மலையும் காடும் நிரம்பிய வனப்புப் பிரதேசம். ஆனால் அந்த வழியில் செல்லாத பல்லவ இளவல் காவிரியைத் தலைக் காட்டிலேயே தாண்டி அக்கரை சென்று, அங்கிருந்து நேர் மேற்கே சென்று அதிலிருந்து நேர் வடமேற்கி லிருந்த துங்கபத்ரா நதியை நோக்கிச் சென்றான். இயற்கை மட்டும் சற்றும் இடம் கொடுத்திருந்தால் துங்கபத்திரையும் காவிரியும் ஆரம்பத்திலேயே முத்தமிட்டிருக்கும். இரண்டும் தனித்தனி நதிகளாகப் பிரிய பிரமேயமிருந்திருக்காது. அப்படி இரண்டையும் இணைக்க மறந்த மேற்குத் தொடர்மலைப் பகுதி இடையே புகுந்ததால் சுமார் இரண்டரை காத தூரமே இருந்த இடைப் பகுதியில் காட்டுப் பிரதேசம் அடர்த்தியாயிருந்தது. அந்தக் காட்டுப் பகுதி கங்கர் நாட்டையும் சாளுக்கியர் நாட்டையும் பிரித்து இரண்டுக்கும் எல்லைக் காடாக இருந்தது. அந்தக் காட்டை நோக்கியே பயணம் செய்தான் பல்லவ இளவல்.

போகும் வழியெல்லாம் - அதாவது காவிரியை அடுத்த வடமேற்குப் பகுதிகளிலெல்லாம் - அழகிய சோலைகளால் சூழப்பட்ட சிற்றூர்களும் சிறு நகரங்களுமிருந்ததால் பல்லவ இளவலின் பயணத்தில் எந்தவிதத் தடங்கலோ, ஆயாசமோ ஏற்படவில்லை. தவிர, தழைக்காட்டைத் தாண்டியதுமே புரவியின் இருபுறங்களிலும் மான் தோலில் சுற்றப்பட்டுத் தொங்கிய இரண்டு சிறு மூட்டைகளில் ஒன்றை அவிழ்த்துத் தன் அரச உடையை மாற்றிச் சாதாரண வீரன் உடையை இளவரசன் அணிந்து கொண்டதால் அவனை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவும் இயலாது போயிற்று. இருப்பினும் கண்ணையும் காதையும் சதா நீட்டி வைத்துக் கொண்டே பயணம் செய்த பல்லவ இளவல், சில வேளைகளில் சிற்றூர்களின் பண்டக சாலைகளில் சிற்றுண்டிகளை வாங்கி உண்டான். சிறு

நகரங்களில் சத்திரங்களின் உணவருந்தி, புரவியைத் தானே தேய்த்துவிட்டு, தீனி வைத்து அதற்கும் இளைப்பாற அவகாசம் கொடுத்தான். இப்படி மூன்று நாள் பயணத்துக்குப் பிறகு மெள்ள மெள்ள கங்கர் நாட்டுக்கும் சாளுக்கிய நாட்டிற்கும் இடையிலிருந்த அடர்த்தியான மேற்குத் தொடர்மலைக் காட்டுக்கு வந்து சேர்ந்தான். காடு மிகப் பெரியதாயிருந்ததாலும் ஆட்கொல்லி விலங்குகளின் நடமாட்டம் அதிகமிருந்ததாலும், இளவரசனுக்கு அந்தக் காட்டின் எந்தப் பகுதியில் தனது படையிருக்கும் என்று திட்டமாகத் தெரியாததாலும், காட்டின் ஆரம்பத்திலேயே ஓர் இரவைக் கழித்தான் பல்லவ இளவல்.

அந்தப் பயங்கரக் காட்டிலும் அந்த இரவில் இயற்கையின் அழகு தாண்டவமாடவே செய்தது. விளக்கொளியில்லாவிட்டாலும் வான விளக்கான வெண்மதியின் ஒளி பல இடங்களில் புகுந்து இளவரசன் பயணப்படுவதற்கே வழி காட்டுவனபோல் நீண்டும் வட்டமாகவும் காணப்பட்டது. இருப்பினும் புரவி மிகவும் களைத்திருந்ததன் காரணமாக அதை ஒரு தேவதாரு மரத்தில் கட்டிவிட்டு மரத்தடியில் தானும் சாய்ந்து கொண்டான். அருகில் நின்ற அவன் புரவி அவனை நோக்கி இருமுறை கனைத்ததன்றி மெள்ள அவன் முகத்தருகே தன் மூக்கையும் கொண்டு வந்து முகர்ந்தது. அது ஏதோ சேதி சொல்ல முயலுவதுபோல் தோன்றவே, பல்லவ இளவல் அதன் கறுத்த மூக்கைத் தடவிக் கொடுத்தான். அதன் விளைவாக அதன் மூச்சு சற்றுப் பலமாக வந்தது, அது வாயைத் திறந்தபோது, பற்கள் வெளேரென்று தெரிந்தன. ''இரு இரு! நாளைக் காலை நாம் படைத் தளத்தை அடைந்து விடுவோம்'' என்று சமாதானப் படுத்தினான் பல்லவ இளவல்.

அந்த மாநிறப் புரவி அவன் சொன்னதை உணர்ந்து கொண்டது போல் காதைச் செங்குத்தாக உயர்த்தி, தலையையும் ஒருமுறை அசைத்தது. ''நான் சொல்வது உனக்குப் புரிகிறது. ஆனால் பதில் சொல்ல முடியவில்லை உன்னால். நல்ல வேளை, எல்லோருடனும் பேசும் திறனை உனக்கு ஆண்டவன் அளிக்கவில்லை. அளித்திருந் தால் மானிடர்களைப்போல் உன் வர்க்கத்திலும் வீண் வம்பும் பூசலும் போர்களும் விளைந்திருக்கும்'' என்று இரைந்தே பேசினான் பல்லவ இளவல். புரவி உடலை ஒரு முறை நன்றாக அசைத்தது. முன்னங்கால் குளம்பொன்றையம் நீட்டித் தரையில் வைத்தது. ''சரி சரி. பேசாதே. உறக்கம் வருகிறது எனக்கு'' என்று கூறிய இளவரசன் மரத்தின் அடித் தண்டில் நன்றாக சாய்ந்துகெண்டு இரண்டு காலையும் நீட்டினான். வெளியில் மரத்தடியில் தலைமாட்டிலிருந்த பெரிய வேர்கள் மரத்தின் கிளைகளைப் போலவே இணைந்து கிடந்ததால் இளவரசன்



உட்கார்ந்திருந்த இடத்தில் தரையை முக்கோண ஆசன மணை அமைத்திருந்ததன் விளைவாக, இளவரசன் தான் ஏதோ அரண்மனை மஞ்சத்தில் படுப்பதைப் போன்ற பிரமையை அடைந்தான். இந்த மாதிரி ஓர் இடமும் இப்படி ஒரு புரவியுமிருந்தால் மனிதனுக்கு வேறென்ன தேவை என்று தன்னுள் வினவிக் கொண்டு கண்களை மூடினான்.

கண்கள் மூடினவே யொழிய கருத்து மூடவில்லை. சிந்தை உறங்க முற்பட்டதைச் சிந்தனை கிழித்தது. அக்கண் முன்பாக மைவிழியும் தோன்றினாள், ரங்பதாகாதேவியும் தோன்றினாள். இருவரும் நகைத்தனர். அழகிய கால்களைக் கொண்டு அவன் இதயத்தின்மீது நடந்தனர். அவர்கள் காற்சிலம்பின் பரல்கள் அவன் மனத்தில் நன்றாக ஒலித்தன. இருவர் சிரிப்பொலியும் இருவகைப் பட்ட ஜலதரங்கங்கள் போல் சப்தித்தன. ''காட்டு மரத்தடியில் ஏன் தங்கிவிட்டீர்கள்?'' என்று மைவிழி கேட்டாள் அவனை. 'துறவியாகி விட்டீர்களா' என்றாள் ரங்கபதாகாதேவி. 'துறவிக்குத் தனிப்பட்ட உறுதி வேண்டுமே. அத்தகைய உறுதியில்லையே உங்களுக்கு?' என்றாள் மைவிழி. 'நீங்கள் முனிவராகி விட்டால் எங்கள் கதி என்ன?' என்று வினவினாள் தேவி.

பிறகு இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். 'தேவி! இவர் முனிவராகிவிட்டாரே, நம்மைக் கைவிட்டு விட்டார்' என்று மைவிழியைப் பார்த்துச் சொன்னாள் தேவி.

'போ அக்கா! இவர் முனிவரானால்தான் நல்லது' என்றாள் மைவிழி.

''ஏன் மைவிழி?''

'முனிவர்களைப் பற்றி உனக்குத் தெரியாதா?'

'முற்றும் துறந்தவர் முனிவர்.'

'அங்குதான் தவறு செய்கிறாய் அக்கா. உன் புராணப் படிப்பெல்லாம் எங்கு போயிற்று?'

'அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?'

'இவர் சில வேளைகளில் விசுவாமித்திரர், சில வேளைகளில் பராசரர், சில வேளைகளில்......

'நிறுத்து மைவிழி, நிறுத்து. பெரியோர்களை நிந்திக்காதே மகாபாவம்!'

'பாவமிருக்கட்டும் அக்கா! விசுவாமித்திரர் மேனகையைக் கைவிட்டாரா? ரம்பைக்காகத் துறவறத்தை அறுத்துவிடவில்லையா?'

'ஆம்.'

'பராசரர் கங்கையின் நடுவில் படகில் மச்சகந்தியை அணைய வில்லையா?'

'அவர்கள் சக்தி அபரிமிதம். பிறகு அவர்கள் புலன்களை அடக்கவில்லையா? கடவுளையே காணவில்லையா?'

'இங்குதான் வித்தியாசமிருக்கிறது, அக்கா!'

'என்ன வித்தியாசம்?'

'இவர் ஒரு பகுதிதான் முனிவர்...'

'எந்தப் பகுதி?'

'எந்தப் பகுதியால் நம்மை இழுத்தாரோ அந்தப் பகுதி?'

பிறகு இரு மங்கையரும் இரைந்து நகைக்கவே, கோபங் கொண்டான் பல்லவ இளவல். திடீரென விழித்துக் கொண்டான். விழித்துக் கொண்டவன் தனக்குத் தானே நகைத்தும் கொண்டான். தன் மனம் எத்தனை சபலமுடையது என்பது அவனுக்கே புரிந்ததால், 'இதற்குத்தான் கங்க மன்னன் என்னை அன்னை முன்பு ஆணையிடச் செய்தானா?' என்றும் தன்னுள் வினவிக் கொண்டான்.

இத்தகைய கனவிலும், வினாவிலும் இரவை ஓட்டிய பல்லவ இளவல், விடிந்ததும் சற்று எட்ட இருந்த காட்டு ஓடையில் பல்துலக்கி, முகமும் கழுவி, நீராடி, புரவியையும் நீராட்டி மரத்தழைகளைக் கொண்டு அதன் உடலை உருவிவிட்டுச் சேணம் பிடித்து மீண்டும் பயணத்தைத் துவங்கினான். கால் காத தூரம் மலைப் பாறையிலும் காட்டிலும் மாறி மாறிப் பயணம் செய்த பிறகு, கதிரவன் உதித்த மூன்ற நாழிகைக்குள் காட்டின் நடுப்பகுதியை அடைந்ததாக நினைத்துச் சற்றுப் புரவியை நிறுத்தி, 'படை எங்கு இருக்கும்?' என்று சிந்திக்கலானான். அவன் சிந்தனையை எட்டக் கேட்ட ஒலிகள் சில அறுத்தன. 'படை அருகில் தானிருக்கிறது, நட' என்று புரவியிடம் கூறிய இளவல், சேணத்தை இழுத்துவிட்டு அதன் கழுத்தையும் தடவிக் கொடுத்தான். எசமான் உத்தரவைப் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த புரவியும் அவன் செலுத்திய பக்கத்தில் துரிதமாக நடக்கத் துவங்கியது. போகப் போக அடர்த்தி அதிகமாகத் தொடங்கிய அடவி மரங்கள் மீது படாமல் ஒதுங்கியும் வளைந்தும் சென்றது இளவலின் புரவி. அதன் போக்கைக் கண்ட இளவரசன் வியந்தான். ''தந்தையின் பட்டத்துக் குதிரைக்கு அதிசயம் என்று பெயர். ஆனால் நீயும் ஓர் அதிசயம் தான். என்னை நன்றாகப் புரிந்துகொள்கிறாய்' என்று பாராட்டிய பல்லவ இளவல், அந்தப் புரவியைத் தனக்குத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தவன் சீனன் என்பதையும் நினைத்து,



'யாங்சின்னுக்குத் தெரியாதது உலகத்தில் எதுவுமில்லை' என்று அவனையும் பாராட்டினான்.

இப்படி மீண்டும் கால் காதம் பயணம் செய்த பிறகு, அடர்த்தியான காட்டின் மரம் ஒன்றில் அம்பு ஒன்று புதைந்து கிடந்தது. அதன் முனைக்கும் மரத்தண்டிற்கும் இடையில் ஓலை ஒன்றும் புதைந்து தொங்கிக் கொண்டிருந்தது. 'இந்த அம்பு போல் பத்து மரங்களுக் கொருமுறை ஒரு மரத்தில் அம்பிருக்கும். இளவரசர் அடையாளம் கண்டு கொள்வது கஷ்டமல்ல. யாங்சின்' என்று ஓலையில் எழுதப்பட்டிருந்தது. அந்தக் குறிப்புப் படி தொடர்ந்து சென்ற பல்லவ இளவல் மீண்டும் கால் காதம் பயணம் செய்த பிறகு, தனது படைத்தளத்தின் முகப்பை அடைந்தான். தன் வரவை அறிவிக்க, ''யாரங்கே?'' என்று கூறினான் இரைந்து. அடுத்த விநாடி எங்கிருந்தோ ஒரு புரவிமீது திடீரென முளைத்து யாங்சின் இளவரசரைப் புன்முறுவலுடன் வரவேற்றான். அவனுடன் நான்கு புரவி வீரர்களும் நின்றிருந்தார்கள். புரவியிலிருந்து இறங்க முற்பட்ட பல்லவ இளவலிடம், ''வேண்டாம்! பயணம் இன்னும் சற்றுத் தூர மிருக்கிறது'' என்று யாங்சின் கூறவே, நான்கு புரவி வீரர்களும் இளவரசனுக்கு முன்னால் செல்ல இளவரசனின் புரவியுடன் தன் புரவியைச் செலுத்தினான் யாங்சின். பயணத்தின் முடிவிலிருந்த படைத் தளத்தைக் கண்ட பல்லவ இளவல் பெரும் பிரமிப்பை அடைந்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை இருந்தது படைத்தளம். ''ஏது இத்தனை படைபலம் நமக்கு?'' என்று வினவினான் பல்லவ இளவல். இளவரசனின் வியப்பையும் சந்தேகச் சாயையும் கவனித்த யாங்சின், ''பிறகு, பேசுவோம், தங்கள் மாளிகைக்கு வாருங்கள்'' என்றழைத்தான்.

''மாளிகையா!'' இளவரசனின் கேள்வியில் வியப்பு அதிகமாகத் தெரிந்தது. ''இந்தக் காட்டின் மத்தியிலா?''

''ஆம்.''

மேற்கொண்டு கேள்வி கேட்காமல் புரவியை நடத்தினான் பல்லவ இளவல். கடைசியில் மாளிகையைக் கண்டதும் பிரமித்துப் போனான். மாளிகை மரங்களாலும், மரக் கிளைகளாலும், வெட்டப்பட்ட கொடிகளாலும் இணைக்கப்பட்டிருந்தது. அதை அமைப்பதற்காக யாங்சின் பெரும் பிரயாசை எடுத்துக் கொண்டிருந்ததையும், அதற்காகவே பக்கத்திலிருந்த நான்கைந்து கொடிகளையும் வெட்டிச் சக்கர வட்டமான பெருங்குடிசை ஒன்றை இயற்கையும் செயற்கையும் கலந்த திறனால் அவன் அமைத் திருந்ததையும் கண்டான் பல்லவ இளவல். குடிசைக்குள் நுழைந்தான். உட்புறம் வெளிப்புறத்தைவிட அழகாயிருந்ததையும், உள்ளே தெரிந்த

இரண்டு மரத்தண்டுகளையும் இணைத்த நீண்ட பிரம்புத் தூளியொன்று அமைக்கப்பட்டிருந்ததையும், கீழே உட்காருவதற்கு ஒரு கூடாரச் சீலை விரிக்கப்பட்டிருந்ததையும் கண்டான் இளவரசன். இத்தனையும் கண்டதால் பின்னால் நின்ற யாங்சின்னை நோக்கி. ''மாளிகை மிக இன்பமாயிருக்கிறது, தூங்குவதற்கு நாம் இங்கு வந்திருந்தால்'' என்று புன்முறுவலும் செய்தான்.

''பல்லவ இளவரசர் பஞ்சணையில் படுத்தவர், மாளிகையில் உறைந்தவர், இங்கு முடிந்தவரை வசதி செய்திருக்கிறேன்'' என்றான் சீனனும் சிறிது நகைத்து.

''அப்படியானால் இங்கேயே தங்கிவிடட்டுமா?''

''இரண்டு நாட்கள் தங்கத்தான் வேண்டும்.''

''காரணம்?''

''தாங்களே புரிந்து கொள்வீர்கள் படையை பார்வையிட்ட பிறகு'' என்று கூறிய சீனன் மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்ய வெளியே சென்றான். சீனன் மனத்தில் என்ன இருக்கிறதென்பது இளவரசனுக்கு அப்போது புரியவில்லை. புரிந்தபோது எதற்கும் குழம்பாத அவன் மனம் கூடக் குழம்பியது.

## 94. படையில் ஒரு புதுமை

சீனன் நேரங்கடத்தாமல் மிகத் துரிதமாக இளவரசனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதில் முனைந்து குடிசையின் வெளிப்பகுதியை அடைந்ததும் விடுவிடுவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தான். சிறிது நேரத்திற்குள் இரண்டு காவலர்கள் குடிசைக்குள் நுழைந்து இளவரசனுக்கு விசிறினார்கள். இன்னும் இருவர் தயாராயிருந்த உணவைக் கொண்டு வந்து பரிமாறினார்கள். கைகழுவப் பாத்திரத்தை ஒருவன் ஏந்தி நின்றான். இளவரசன் உண்டு முடித்த பிறகு, கையைத் துடைக்க ஒருவன் துண்டு எடுத்துக் கொடுத்து இளவரசன் கை துடைத்த பின்பு அதை வாங்கிக் சென்றான். பல்லவ காஞ்சி அரண்மனை யிலிருந்தால் எத்தனை கச்சிதமாகவும் நிமிடம் தவறாமலும் பணிவிடைகள் நடக்குமோ அத்தனை கருத்துடன் அந்தக் குடிசையிலும் பணிவிடைகள் நடந்தன. இளவரசன் உண்டு முடித்ததும் இரண்டு நாழிகை நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு உள்ளே வந்த யாங்சின் கூறினான். ''அதற்குள் உங்கள் புரவியும் இளைப்பாறும். கதிரவன் கொடுமை சற்றுக் குறைந்ததும் படைகளைப் பார்வையிடத் தாங்கள் புறப்படுகிறீர்கள்'' என்று அறிவித்தான் சீனன் இளவரசனை நோக்கி.



இளவரசன் புருவங்கள் சற்றே மேலெழுந்தன உள்ளத்தில் ஏதோ கேள்வி எழுவதைக் குறிக்க. கண்களின் கூரிய பார்வையிலும் அந்தக் கேள்வி தெரிந்தது. அதைக் கவனித்த சீனன், ''ஏதோ கேட்க விரும்புகிறீர்கள்?'' என்று கூறினான்.

''ஆம்'' என்றான் இளவரசன்.

''கேளுங்கள்.'' சீனனுடைய ''தலைகீழ்ப் பகர மீசை'' சிறிது அசைந்தது இளமுறுவலின் விளைவாக.

இளவரசன் சீனனை உற்று நோக்கினான் இருவிநாடிகள். பிறகு துவங்கினான் கேள்வி கேட்க ''யாங்சின்'' என்று

''காத்திருக்கிறேன்.''

''எதற்கு?''

''பதில் சொல்ல''

''இங்கு யார் அதிகாரி?''

''தாங்கள் தான்.''

''அப்படித் தெரியவில்லையே?''

''ஏன்?''

''என்னை உண்ணச் சொல்கிறாய். எத்தனை நேரம் இளைப்பாற வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கிறாய். உன்னிஷ்டப்படி என்னை ஆட்டுவிப்பாய் போலிக்கிறதே'' என்ற இளவரசன் நகைத்தான்.

யாங்சின் தலை தரையையே தொட்டுவிடும் போல் பணிந்தது. அவன் குரலில் பணிவோ சொல்ல முடியாத அளவுக்குக் குழைந்தது. ஆனால் கருத்திலோ அந்த அடக்கம் தெரியாமல் உள்ளூர உத்தரவு ஒலித்தது. ''தாங்கள் பல்லவ இளரவசர்'' என்று சுட்டிக் காட்டினான் யாங்சின் மிகப் பணிவான குரலில்.

''அதில் புதுமை என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் இளவரசன்.

''புதுமை அதில் இல்லை, பழக்கத்திலிருக்கிறது.''

''யார் பழக்கம்''

''எங்கள் ஊர்ப் பழக்கம்.''

''உங்கள் ஊரில் என்ன பழக்கம்?''

''அந்தரங்க ஊழியனின் இஷ்டப்படித்தான் மன்னர்கள் இயங்க வேண்டும். மன்னர் உண்ணும் வேளை, உறங்கும் வேளை, பவனி வரும் வேளை, உல்லாசவேளை எல்லவாற்றையுமே அந்தரங்க ஊழியன் தான் தீர்மானிப்பான்.''

''அப்படியானால் உங்கள் சக்ரவர்த்தி பொம்மையா?''

சீனன் நகைத்தான் மெல்ல. ''அல்ல இளவரசே அல்ல. சீன சக்ரவர்த்தியைவிட வலுவுள்ள, அதிகாரமுள்ள மன்னர்கள் பூதலத்தில் யாருமில்லை. அவர் நா அசைந்தல் படைகள் நடக்கும். நாடுகள் நடுங்கும். விசாரணையில்லாமல் அவர் யாரையும் சிரச்சேதம் செய்ய உத்தரவிடலாம். மக்களின் உயிரும் வாழ்வும் அவர் கையிலிருக்கிறது. ஆனால்...'' என்று சொல்லிக் கொண்டுபோன யாங்சின் பேச்சைச் சிறிது நிறுத்தினான்.

''ஆனால் என்ன? விளக்கிச் சொல்'' என்று கேட்டான் இளரவசன் வெறுப்புடன்.

சீனன் அர்த்தபுஷ்டி நிரம்பிய பார்வையொன்றை இளரவசன் மீது வீசினான். ''இத்தனையிலும் எங்கள் சக்கரவர்த்தியின் உயிர் சதா அபாயத்திலிருக்கிறது. அவரை விஷம் வைத்து மாய்க்கப் பல மாற்றரசர் சித்தமாயிருக்கிறார்கள். அவர்கள் காணிக்கையாக அனுப்பிய கணிகையர் பலர் அரண்மையில் இருக்கிறார்கள். ஆகையால் அவர் உணவை முதலில் சிறிது சுவைத்துச் சோதிக்கவும், கணிகையரைக் கண்காணிக்கவும், ஏன் அரசுக்கு ஆசைப்படக்கூடிய மந்திரிகள், இளவரசர்கள், இவர்களை வேவுபார்க்கவும் ஒற்றர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் கவனிக்க, மன்னருக்காக உயிரையும் அளிக்க ஓர் அந்தரங்க ஊழியன் உண்டு. மன்னரை அவன் கண்ணைப் பாதுகாக்கும் இமைபோல் பாதுகாக்கிறான்'' என்று கூறினான்.

''அம்மாதிரி?''

''உங்களைக் கவனிப்பது என் கடமை''

''இங்கு யார் எனக்கு விஷம் வைக்கப் போகிறார்கள்?''

''அது எனக்குத் தெரியாது. ஆனால் இங்கு வந்த பிறகு பக்கத்துக் கிராமத்திலிருந்து சில பணியாட்களைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன். அவர்களை முன்பின் தெரியாது எனக்கு. அவர்கள் சாளுக்கிய ஒற்றர்களா என்பதும் தெரியது. அழைத்தவுடன் எதிர்ப்பது போல் பாசாங்கு செய்தார்கள். பலவந்தமாக நமது வீரர்களைவிட்டுத் தாக்க முற்பட்டதும் எதிர்க்க முயன்றார்கள். அதுவும் புரட்டு. ஆகையால் எச்சரிக்கையாக இருக்கிறேன்.''

''அவர்களை எதற்காக அழைத்து வந்தாய்? நமது வீரர்கள் போதாதா பணிவிடைக்கு?''

''வீரர்கள் போரிட ஏற்பட்டவர்கள், பணிவிடை செய்வதற்காக அல்ல'' என்று சுட்டிக்காட்டிய அவன் மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் வெளியே சென்றான்.



வேறு வழியில்லாமல் மரங்களில் ஊஞ்சலாடிய தூளியை உபயோகிக்காமல் தரையிலிருந்த விரிப்பில் படுத்தான் பல்லவ வேந்தன் மகன். அவன் கால்களை நீட்டியதும் இரு பணிமக்கள் உள்ளே நுழைந்து அவன் கால்களைப் பிடிக்கலாயினர். வேண்டாமென்று இளவரசன் கையால் சைகை செய்தும் அவர்கள் விடவில்லையாததால் வேறு வழியில்லாமல் கண்களை மூடினான். எப்பொழுது கண் விழித்தானென்று அவனுக்கே தெரியாது. கண் விழித்த சமயத்தில் யாங்சின் எதிரே நின்றிருந்தான். பணி மக்கள் கால்களை அழுத்துவதை அப்பொழுதும் விடவில்லை.

''உம்'' என்று சீனன் கை காட்டியதுமே இருவரும் பறந்தனர் வெளியே.

இளவரசன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். ''வெளியே முகம் கழுவ குளிர்ந்த நீர் இருக்கிறது'' என்று உணர்த்திய சீனனைத் தொடர்ந்து புன்சிரிப்புடன் சென்ற இளரவசன் முகம் கழுவிக் கழுத்திலும் சிறிது நீரை ஊற்றிக் கொண்டான் கோடையின் கடுமை காரணமாக. அப்பொழுது கதிரவன் உச்சி காலத்தைத் தாண்டி மேற்கு நோக்கிப் பாயவும் வந்து விட்டானென்பதைப் புரிந்துகொண்டான் இளவரசன் மரங்களின் நிழல்கள் விழுந்திருந்த நிலை கண்டு.

''தாங்கள் சித்தமானால் படைகளைப் பார்வையிடலாம்'' என்று கூறி வணங்கினான் சீனன்.

''நான் சித்தம்'' என்றான் இளவரசன்.

அவன் அதைக் கூறிய மறுவிநாடி இரு பணிமக்கள் குடிசைக்குப் பின்னிருந்து முளைத்து உள்ளே சென்று இளவரசனின் அங்கி, கச்சை, கத்தி முதலியவற்றைச் சித்தப்படுத்தினார்கள். உடை கச்சைகளை அணிந்து வாளையும் தரித்துக் கொண்ட இளவரசன், வீரனொருவன் புரவியை இழுத்துக் கொண்டு வந்து வெளியில் நிறுத்த அதன்மீது தாவி ஏறினான். அடுத்த விநாடி சற்று எட்ட இருந்த புரவியை நாடி அதன்மீது தாவிய சீனன் இளவரசனுக்கு முன்பு வழிகாட்டிச் சென்றான்.

வழி முழுவதும் இருபுறமும் நான்கு நான்கு சாரியாக வீரர்கள் பூரண கவசத்துடனும் ஆயுதங்களுடனும் அணிவகுத்து நின்றிருந் தார்கள். ஒவ்வொரு வீரனையும் அடுத்துப் புரவியொன்றும் நின்றிருந்தது. எந்த விநாடியிலும் அவர்கள் கிளம்பச் சித்தமா யிருந்ததைக் கவனித்தான் இளவரசன்.

இப்படி அணிவகுத்த வீரர்களைக் கவனித்துக்கொண்டே கால் காதம் தூரம் சென்றதும் பல்லவ உபதளபதி நடுவழியில் இளவரசனைக் கண்டதும் தலைதாழ்த்தி ''வாருங்கள்'' என்று தனது புரவியைத் திருப்பி

முன் நடத்தினான். சீனன் அந்த இடத்திலேயே தங்கி விட்டதைக் கவனித்த இளவரசன் காரணத்தை வெகு சுலபத்தில் புரிந்து கொண்டான். பல்லவர் படை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிற தென்பதையும், ஒரு பிரிவுக்குச் சீனனும் இன்னொரு பிரிவுக்கு உபதளபதியும் தலைமை தாங்குகிறார் ளென்பதையும் உணர்ந்து கொண்டதால் உபதளபதியைக்கூட ஏதும் கேட்காமல் பின் தொடர்ந்தான். அந்தக் காட்டுப் பாதை அந்த இடத்தில் திடீரென வேறு வழியில் திரும்பியது. அந்த வழியிலும் வீரர்கள் முன்பு போலவே அணி வகுத்து நின்றார்கள். புரவிகளும் இருந்தன. ஆனால் முதல் பகுதிக்கும் இரண்டாவது பகுதிக்கும் ஒரு வேறுபாடு மட்டுமிருந்தது. முதல் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் வாட்களையும் வேல்களையும் மட்டுமே ஏந்தி நின்றார்கள். இந்தப் பகுதியிலிருந்தவர்கள் வாட்களையும் விற்களையும் தரித்திருந்தார்கள். அவர்கள் முதுகுகளில் கட்டப் பட்டிருந்த அம்பறாத்துணி களில் கூரிய பயங்கரமான அம்புகள் தலை நீட்டிக் கொண்டிருந்தன. இப்படி கால் காதம் கடந்த பிறகு அதிகபடி ஆயுதங்கள் கட்டுக்கட்டாக மரங்களின் அடிகளில் போடப் பட்டிருப்பதையும் அவற்றைத் தாங்கிச் செல்லக் கொழுத்த புரவிகள் சிலவும் தயாராயிருப்பதையும் இளவரசன் கவனித்தான்.

படை அணிவகுப்பு மிகக் கச்சிதமாகவும் எந்த விநாடியிலும் புறப்படத் தயாராயுமிருப்பதைப் புரிந்துகொண்ட இளவரசன், ''அணிவகுப்பு சிறப்பாக இருக்கிறது'' என்று உபதளபதியைப் பாராட்டினான்.

''இந்தப் பாராட்டுதலுக்கு உரியவர் தங்கள் நண்பர்'' என்றான் உபதளபதி.

இளவரசன் பதில் கூறவில்லை உடனடியாக. பிறகு சொன்னான். ''உபதளபதி! படையின் ஒவ்வொரு வீரனும் பாராட்டுக் குரியவன். ஆனால் சரித்திரம் அவர்கள் பெயர்களைப் பொறிப்ப தில்லை. ஏடுகளில், மன்னர்கள் பிரபாவம்தான் எழுதப்படுகிறது. உண்மை அதல்ல. ஒரு நாட்டு மக்களால், அவர்கள் சிறப்பால், உழைப்பால், சீரிய சிந்தனையால், சிந்தனையை நிறைவேற்றும் திறனால், தியாகத்தால், வரலாறு படைக்கப்படுகிறது'' என்று அதற்குமேல் எதுவும் பேசாமல் திரும்பினான் தான் வந்த வழியை நோக்கி.

அந்தி வேளையில் தனது பாசறையெனும் குடிசைக்கு வந்த பல்லவ இளவல் மீண்டும் பாதி வழியில் கலந்துகொண்டு உடன் வந்த சீனனை நோக்கி, ''இன்றிரவு இங்கு வரும்படி உபதளபதிக்குச் சொல்லியனுப்பு. படையெடுப்பு விவரங்களைக் கவனிப்போம்'' என்று உத்தவிட்டுக் குடிசைக்குள் சென்றான்.



அந்தி வேளை வந்தது. ஆங்காங்கு மரங்களில் ஒவ்வோரிடங் களில் செருகப்பட்டிருந்த தீப்பந்தங்கள் எரியத் தொடங்கின. குடிசையிலிருந்த சாளுக்கிய நாட்டு சரவிளக்கு ஒன்றைப் பணி மகன் ஒருவன் ஏற்றினான். அந்த வெளிச்சத்தில் சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான் இளவரசன். விளக்கு வைத்து ஒரு நாழிகைக்குள் உணவு கொண்டு வந்தான் ஒரு பணிமகன். ''இதற்குள் எதற்கு உணவு?'' என்று கேட்டான் சிந்தனை கலைந்த இளவரசன்.

''இரவு ஏறியதும், அவரும் உபதளபதியும் இங்கு தங்களைச் சந்திக்கப் போகிறார்களாம். அதற்குள் நீங்கள் உணவை முடித்துக் கொள்ள வேண்டுமாம்'' என்றான் பணிமகன்.

'அவர்' என்று அவன் குறிப்பிட்டது யாங்சின்னை என்பதை அறிந்ததும் இளமுறுவல் கொண்டான் இளவரசன். யாங்சின்னைக் கண்டு பணி மக்களும் படை வீரரும் நடுங்குவதை எண்ணி 'இத்தனை சீக்கிரம் இத்தனை பெரும் படையை எப்படி வெளிநாட்டானான சீனன் காட்டுக்குள் கொண்டு வந்தான்? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அப்படிக் கேட்டுக் கொண்டானே தவிர அவனும் சீனன் சொற்படி அவசரமாக உணவை உண்டு சித்தமாயிருந்தான்.

அஸ்தமித்து ஐந்து நாழிகைக்குப் பிறகு சீனன் உபதளபதியுடன் குடிசைக்குள் நுழைந்தான். பிறகு இளவரசன் காட்டிய இடத்தில் தரையில் இருவரும் அமர்ந்ததும் இளவரசன் கேட்டான். ''நான் விளிந்தையிலிருந்து அனுப்பிய படையைவிட இது பெரியதா யிருக்கிறது. எப்படி?'' என்று.

உபதளபதி ஏதோ குற்றம் செய்துவிட்டவன் போல் யாங்சின்னைப் பார்த்தான்.

யாங்சின் உபதளபதியையோ இளவரசனையோ பாராமல் தரையில் கண்களை ஒட்டிய வண்ணம், ''நடு வழியில் சில படைவீரர்களை அமர்த்திக் கொண்டேன்'' என்றான்.

''யாரவர்கள்?'' என்று வினவினான் இளவரசன்.

சீனன் சொன்ன பதில் இளவரசனை அதிர்ச்சியுறச் செய்யவே அமைதியை இழந்த இளவரசன், ''இதன் விளைவு உனக்குப் புரிகிறதா?'' என்று இடியென ஒலித்த குரலில் கேட்டான்.

''புரிகிறது'' என்ற சீனன் குரல் நிர்ப்பயமாயிருந்து.

''அணிவகுப்பிலேயே கவனித்தேன்'' என்றான் இளவரசன்.

''கவனிப்பீர்களென்பது தெரியும்.''

''சேர்ந்திருப்பவர்கள் கங்க நாட்டவர்.''

''ஆம்.''

''அவர்கள் நடுநிலைமை வகிக்க நான் அவர்கள் மன்னனிடம் கேட்டு வந்திருக்கிறேன்.''

''அப்படியா!''

''தெரியாதது போல் பாசாங்கு செய்யாதே. நான் தழைக்காடு சென்ற கதையும் காரணமும் உனக்குத் தெரியும்.''

''தெரியும்.''

''அப்படியானால் என் தூது என்ன ஆவது?''

சீனன் ஒரு விநாடி மௌனமாயிருந்தான். முடிவில் ''இது போர்'' என்று கூறினான்.

''அதனால்?'' என்று வினவினான் இளவரசன்.

''கட்டுத் திட்டங்களை அதிகமாக வைக்கமுடியாது'' என்றான் சீனன்.

இளவரசன் சினம் அதிகமாயிற்று. ''இது சீன நாடல்ல, பாரத பூமி, இங்கு தர்ம யுத்தந்தான் பழக்கம். அரசர்களோ, இளவரசர்களோ இடும் ஆணையை, செய்யும் பிரமாணத்தை யாரும் மீற முடியாது. கங்கர்களைத் திருப்பி அனுப்பிவிடு'' என்று சீற்றத்துடன் உத்தர விட்டான். ஆனால் அந்த உத்தரவை யாராலும் நிறைவேற்றமுடியா தென்பதை மறுநாளே புரிந்தும் கொண்டான் பல்லவ இளவல்.

# 95. இளவரசன் திண்டாட்டம்

சீனனான யாங்சின் விளிந்தையிலிருந்து வரும் வழியில் அகப்பட்ட கங்க வீரர்களையும் தங்கள் படையில் சேர்த்துக் கொண்டுவிட்டதை அன்று பிற்பகல் படையைப் பார்வையிட்டபோதே இளவரசன் புரிந்து கொண்டானாதலாலும், அந்த விஷயத்தைக் கங்க மன்னன் உணர்ந்துகொண்டால் தனக்கு ஏற்படக்கூடிய அவப்பெயரை அறிந்திருந்தானதலாலும், அதனால் கங்கமன்னனுக்கும் பல்லவருக் கும் மீண்டும் ஏற்படக்கூடிய பூசல்களையும் அப்பூசல்கள் தன் வாழ்விலும் ரங்கபதாகாதேவியின் வாழ்விலும் விளைவிக்கக்கூடிய விநாசத்தையும் எண்ணிப்பார்த்த காரணத்தாலும், அவன் கங்கர் பகுதியைத் தன் படையிலிருந்து பிரித்துத் திரும்ப கங்க நாட்டுக்கு அனுப்பிவிட உறுதி கொண்டான். போரின்போது கங்க வீரர்கள் தன் படையில் இயங்குவது எதிரிகளுக்கு முதலில் தெரியாவிட்டாலும் போர் முடிந்ததும் கிடக்கும் சடலங்களின் உடல்களிலுள்ள ராஜ



சின்னங்களும் வாட்பிடிச் சின்னங்களும், ரகசியத்தைக் கண்டிப்பாய் உணர்த்திவிடுமென்பதும், அப்படி உணர்த்தினால் சிறிய நாடான கங்க நாட்டின் மீது சாளுக்கிய நாடு பாயத் தயங்காதென்பதும் திட்ட வட்டமாகத் தெரிந்தது பல்லவ இளவலுக்கு. ஆகவே, சீனனுடனும், உபதளபதியுடனும் கலந்து யோசித்த பிறகு, இக்கட்டான புது நிலைமைபற்றி யோசித்துக் கொண்டே தரையில் படுத்துக் கிடந்தான் பல்லவ இளவல்.

அன்றிரவு அவன் சிந்தனை படையின் புதுமை பற்றிய பல கோணங்களையும் ஆராய்ந்து பார்த்து எப்படியும் கங்கர்களைப் பிரித்துவிட வேண்டுமென்ற முடிவுக்கும் வந்தது. ஆகவே, விடியற்காலையிலேயே எழுந்துவிட்ட ராஜசிம்மன். சீனனை வர வழைத்து, படை அமைப்பைப் பற்றிக் கேள்விகளை விடுத்தான். ''எத்தனை படை வீரரை அழைத்துக்கொண்டு விளிந்தையிலிருந்து கிளம்பினாய்?'' என்று வினவினான் முதன் முதலாக.

விடியற்காலையில் தன்னை அழைத்த காரணத்தையும் இளவரசன் முதல் கேள்விக்குப் பின்னாலிருந்த கருத்தையும் புரிந்து கொண்ட யாங்சின், சர்வ சாதாரணமாகப் பதில் கூறினான். ''விளிந்தைச் சமவெளிப் போருக்குப் பிறகு மிஞ்சியதே பத்தாயிரம் வீரர் கொண்ட படை. அதில் மூவாயிரம் பேர்களை விளிந்தைப் பாதுகாப்புக்கு நிறுத்திவிட்டு மீதி ஏழாயிரம்பேரை அழைத்து வந்தேன்'' என்று.

இளவரசன் கண்கள் சீனன் முகத்தை ஊடுருவிப்பார்த்தான. உதடுகள் விரிந்து, ''இப்பொழுது இந்தப்படையில் சுமார் பன்னீராயிரம் வீரர்கள் இருக்கிறார்கள்'' என்ற சொற்களை உதிர்த்தன கவலையுடன்.

சீனன் நேரடியாக அதற்குப் பதில்சொல்லவில்லை. ''இந்தக் காட்டைத் தாண்டியதும் சாளுக்கிய நாடு இருக்கிறது.'' என்று சுட்டிக்காட்டினன்.

''அது எனக்குத் தெரியும்'' என்று நிதானம் தவறாத குரலிலேயே சொன்னான் இளவரசன்.

''உங்களுக்குத் தெரியாதது ஒன்றிருக்கிறது.?'' சீனன் குரலில் பணிவுமிருந்தது, கண்டிப்புமிருந்தது.

''எதைச் சொல்லுகிறாய் யாங்சின்?''

''நாம் இந்தக் காட்டிலிருப்பதைச் சாளுக்கிய இளவரசன் விநயாதித்தன் உணரவில்லையென்று நினைக்க வேண்டாம்.''

''இதற்குள் எப்படித் தெரியும் அவனுக்கு? நாம் இந்தக் காட்டில் ரகசியமாகத்தானே தங்கியிருக்கிறோம்?''

''நாம் ரகசியம் என்று நினைப்பதெல்லாம் உலகத்திற்குப் பகிரங்கம். நாம் வரும் வழியிலெல்லாம் சாளுக்கிய ஒற்றர்கள் கவனித்துக் கொண்டுதானிருந்தார்கள். உங்கள் நாட்டின் வீண்பண் பாட்டினால் நான் பிடித்த இருவரைக் கொல்லவும் முடியவில்லை. ஆனால் அவர்கள் விஷயத்தைக் கக்க வைத்தேன்.''

சீனன் சொற்களைக் கேட்ட இளவரசன் கண்களில் சற்று அச்சம் தெரிந்தது. சீன நாட்டில் ஒற்றர்களைச் சித்திரவதைசெய்யும் முறைகளைப் பற்றி இளவரசன் யாங்சின்னிடமிருந்தே பல முறை கேட்டிருந்தானாதலால், அவன் அகப்பட்ட ஒற்றர்களை என்னபாடு படுத்தினானோ என்ற சிந்தனையும் உள்ளூர எழுந்தது அச்சத்தின் விளைவாக. ஆகவே கேட்டான் ராஜசிம்மன்:'' அவர்களை என்ன செய்தாய்?''

''எங்கள் நாட்டின் முறைகளை அதிகமாகக் கையாளவில்லை. இரண்டொரு சிறு பரீட்சைகளை அவர்களால் தாங்க முடியவில்லை'' என்று கூறினான் சீனன்.

''அந்தச் சிறு பரீட்சைகள் என்னவோ?''

''எனக்குத் தெரிந்த இரண்டொரு நரம்பு அடிகள். அதிக வலி தெரியாதவை. சிறிது நேரம் மயக்கத்தை மட்டும் அளிக்கும். கண் திறப்பவன் மீண்டும் அந்தப் பரீட்சைக்கு ஆளாக இஷ்டப்பட மாட்டான். ஆகவே, உண்மையைக் கக்கி விடுவான்.''

''உன்னிடம் அகப்பட்டவர்கள் என்ன சொன்னார்கள்?''

''நமது படை புறப்பட்ட இரண்டாவது நாள் விநாயதித்தனுக்கு விஷயத்தை அறிவிக்கத் தூதர்கள் கிளம்பிவிட்டதாகச் சொன்னார்கள்''

இப்படி ஒரு நிலைமையை அத்தனை சீக்கிரத்தில் எதிர்பாராத இளவரசன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். விநயாதித்தன் எப்படியும் தன்னைச் சந்திக்கச் சித்தமாயிருப்பானென்பதையும், சாளுக்கிய நாட்டு எல்லைகளில் மும்முரமான எதிர்ப்பு இருக்கு மென்பதையும் புரிந்துகொண்டதால் தனக்குக் கூடியவரை பெரும் படையிருந்தாலொழிய தான் விநயாதித்தனை அவன் நாட்டிலேயே தாக்கி மீள்வது சுலபமல்லவென்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான். இந்த காரணங்களாலேயே சீனன் வரும் வழியில் கிடைத்த தனிப்பட்ட வீரர்களையும் சேர்த்துக் கொண்டானென்பதையும் அறிந்து கொண்டான். இருப்பினும் கங்கநாட்டு வீரர்களை இந்தப் போரில் சம்பந்தப்படுத்த அவன் இஷ்டப்படாததால் யாங்சின்னை நோக்கி, ''கங்க மன்னன் இல்லாவிட்டால் நாம் எதிரியை வெற்றி கொள்ள



முடியாதா?'' என்று வினவினான், சீனன் கருத்து அந்தக் கொள்கைக்கு விரோதமென்பதை அறிந்தும்.

ஆனால் சீனன் வியக்கத்தக்க பதிலை அளித்தான். ''முடியும்'' என்று.

''அப்படியிருக்க இவர்கள் எதற்கு?''

''தேவையில்லை. எங்கள் நாட்டுப் போர் முறைக்கு நீங்கள் ஒப்புக் கொண்டால். அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்.

''எப்படி?''

''எதிரியை நேரில் சந்திக்காதிருக்கலாம். சின்னஞ்சிறு ஊர்களை யும் நகரங்களையும் மாற்றி மாற்றித் தாக்கலாம். தாக்கிச் சில ஊர்களைக் கொளுத்த வேண்டியிருக்கும். பயிர் பச்சைகளை அழிக்க வேண்டி யிருக்கும். சிறு நகரங்களைச் சூறையாடவும் அங்குள்ள வீரர்களை அடிமைகளாக்கி நமது படைக்கு அடிமைத்தொழில் புரியும்படி ஏற்பாடு செய்யவும் வேண்டியிருக்கும்.''

இந்தப் பதிலைக்கேட்ட இளவரசன் அதை எதிர்பார்த் திருந்தாலும் கூட வெறுப்பையே முகத்தில் காட்டினான். ''இதைவிட அக்கிரமம் வேறு என்னசெய்ய முடியும் நாம்? சாதாரண மக்கள் நம்மை என்ன செய்தார்கள் அவர்களை அழிக்க?'' என்று சீறினான் பல்லவ இளவல் கோபத்துடனும் வெறுப்புடனும்.

''எதிரி வீரர்கள் மட்டும் நம்மை என்ன செய்துவிட்டார்கள்?'' என்று பதிலுக்கு வினவினான் சீனன். இளவரசனிடமிருந்து பதில் வராதிருக்கவே அவனே மேலும் கூறினான்: ''இளவரசே! சாளுக்கிய நாட்டு வீரனுக்கும் பல்லவ நாட்டு வீரனுக்கும் எந்த வித விரோதமும் கிடையாது. அவர்கள் நெடுந்தூரத்துக்கு அப்பால் வசிக்கிறார்கள். போர்களைத் தீர்மானிப்பவர்கள் மன்னர்கள். மன்னர்கள் உயர்வுக்காகவும், கீர்த்திக்காகவும் போர்கள் நடக்கின்றன. அந்தப் போர்களில் இரு தரப்பு வீரர்களும் சாதாரண மக்களும்கூடச் சிக்கிக் கொள்கிறார்கள். வீரர்கள் காரணமின்றி எதிரி வீரர்களைக் கொல்கிறார்கள். சாதாரண மனிதர்கள் தங்கள் பொருள்களைக் கொடுத்து எதிரி நாட்டு மக்களை அழிக்க உதவுகிறார்கள். நடப்பது இதுதான். இதில் அறம் என்கிற பேச்சுக்கே இடமில்லை. வெற்றி கிடைப்பது தான் முக்கியம், பலியிடப்படுவது யார் என்பதில்லை.'' இதை மிகச் சாதாரணமாகக் கூறிய சீனன் மேலும் ஒரு வார்த்தை சொன்னான்: ''இது புத்தர் பிறந்த நாடு'' என்று.

வியப்பு ததும்பிய விழிகளைச் சீனன் மீது திருப்பினான் ராஜசிம்மன். சீனன் பேச்சில் தத்துவம் ஒலித்ததையும் அவை எத்தனை

உண்மை என்பதையும் புரிந்துகொண்டான். இருப்பினும், ''புத்தர் பிறந்த நாடுதான் அதற்கென்ன?'' என்று வினவினான்.

''உங்கள் நாட்டில் அந்த மகான் அவதரித்தார். கீழ்த்திசை எங்கும் அவர் உபதேசம் பரவியது. 'புத்தம் சரணம் கச்சாமி' என்று கீழ்த்திசை எங்கும் ஒலிக்கிறது. ஜீவஹிம்சை கூடாது என்றார் பிரபு சித்தார்த்தர். ஆனால் உங்கள் நாட்டிலும் சரி, எங்கள் நாட்டிலும் சரி போர்களுக்குக் குறைவில்லை. இம்சைக்குக் குறைவில்லை. கொலைகளுக்கும் அடிமை வாழ்வுக்கும் குறைவில்லை. அவர் செய்த உபதேசத்தை உதட்டால் கூறுகிறோம். அதே உதடுகள் போர்களை விளைவிக்க உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றன. புத்த ஆலயங்களைக் கட்டிக் கொடுத்த உங்கள் பாட்டனார் மாமல்லர் என்ன செய்தார்? வாதாபியை அழித்தார், சாளுக்கிய நாட்டை எரித்தார்...'' என்றான் சீனன்.

இளவரசனுக்குப் புரிந்தது சீனன் கூறிய அனைத்தும் உண்மை என்பது. இருப்பினும் அந்த உண்மையை நாட்டுப் பற்று, குலப்பற்று என்ற திரைகள் மூடின. ஆகவே கேட்டான் கோபத்துடன், ''இப்பொழுது என்ன செய்யச் சொல்கிறாய்? திரும்பிவிடுவோமா விளிந்தைக்கு?'' என்று.

''திரும்பினால் அதை அழிக்க ஸ்ரீராமபுண்யவல்லபருக்கு நான்கு நாட்கள் கூடப் பிடிக்காது.''

''அதனால்?''

''முன்னேறுவதைத் தவிர வேறு வழியில்லை.''

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த இளவரசன் முகத்தில் துன்பரேகை படர்ந்தது. இருப்பினும் தனது படையெடுப்புக் காரணம் சொன்னான். ''இந்த போரை நாம் துவங்கவில்லை. விக்கிரமாதித்தன் துவங்கினான்'' என்று.

''விக்கிரமாதித்தன் துவங்கியதற்குக் காரணம் தன் தந்தை மாமல்லரிடம் அடைந்த தோல்வியின் இழிவைத் துடைக்க. உங்கள் தந்தை அடைந்த தோல்வியைச் சரிப்படுத்த நீங்கள் இப்பொழுது படையெடுக்கிறீர்கள். உலகத்தில் இது முடியாத கதை இதைப்பற்றி நாம் யோசித்துப் பயனில்லை'' என்றான் சீனன்.

''நடக்க வேண்டியது என்ன?'' சுரணையற்று ஒலித்தது இளவரசன் கேள்வி.

''நடக்க வேண்டியது இருவகைப்பட்டது. கங்கர்களை இருத்திக்கொண்டு உங்கள் நாட்டு வழக்கப்படி நீங்கள் நினைக்கும் அறவழியில் எதிரியை நோக்கி நேருக்கு நேர் சந்திப்பது ஒரு வழி. கங்கர்களை அனுப்பிவிட்டு மீதியுள்ள பகுதியைத் திசை மாற்றி மாற்றி



இயக்கி எதிரி நாட்டின் விளிம்புகளைச் சூறையாடுவது இரண்டாவது முறை. இதில் எது சௌகரியமோ அதைச் செய்யலாம்.''

''உன் கருத்து?''

''இரண்டையும் செய்யலாம். ஆனால் நீங்கள் கொலைக்கும் கொள்ளைக்கும் இஷ்டப்பட மாட்டீர்களென்பது எனக்குத்தெரியும். ஆகையால்தான் கங்கர்களைச் சேர்த்துக் கொண்டேன். இந்தப் படையைச் சரியாக இயக்கினால் நாம் எதிரியுடன் திறமையுடன் மோதமுடியும். தவிர, இந்திரவர்மனும் செய்தி அனுப்பியிருக்கிறார் வாதாபியிலிருந்து.

இதைக் கேட்டதும் தரையில் உட்கார்ந்திருந்த இளவரசன் எழுந்துவிட்டான். ''இந்திரவர்மரா! என்ன செய்தி அனுப்பியிருக்கிறார்?''

''நாளைக்குள் நேரில் வருவதாகச் செய்தியனுப்பியிருக்கிறார்'' என்றான் சீனன்.

''இந்திரவர்மர் வந்தால் எதிரி நிலை தெரியும்'' என்று குறிப்பிட்டான் இளவரசன் சிறிது சந்துஷ்டி தெரிந்த குரலில்

''எதிரி நிலை எப்படியிருந்தாலும் நமது நிலை ஒன்றுதான். கங்கர்கள் வேண்டுமா வேண்டாமா என்பதை நீங்கள் உடனடியாகத் தீர்மானிக்க வேண்டும்'' என்றான் சீனன் திட்டவட்டமாக.

இளவரசன் ஒரு விநாடி யோசித்தான். பிறகு கேட்டான், ''கங்க வீரர்களுக்குத் தனித்தலைவன் யாராவது உண்டா?'' என்று.

''உண்டு'' என்றான் சீனன்.

''அவனை வரச்சொல்'' என்றான் இளவரசன் முடிவாக.

சீனன் புன்முறுவல் கொண்டான். ''வாயிலில் காத்திருக் கிறான்'' என்றான் புன்முறுவலின் ஊடே.

இளவரசன் வியப்பு மேலிட்ட விழிகளைத் திருப்பினான் சீனன் மீது. ''எல்லாவற்றையும் முன்கூட்டியே யோசித்திருக்கிறாய்'' என்று பாராட்டவும் செய்தான்.

''உங்களுடன் ஓராண்டு காலமாகப் பழகி வருகிறேன்.'' என்று குறிப்பிட்ட சீனன், இளவசரனுக்குத் தலை தாழ்த்தி வெளியே சென்றான்.

அடுத்த சில விநாடிகளில் கங்கர் போருடை தரித்த வீரனொருவன் உள்ளே நுழைந்து இளவரசனுக்கு சற்று எட்டவே நின்று தலை தாழ்த்தினான்.

''நீ கங்க நாட்டவனா?'' என்று இளவரசன் வினவினான் அவன் யாரென்பதை அறிந்திருந்துங்கூட.

''ஆம்'' என்ற கங்கவீரன் மீண்டும் தலையைத் தாழ்த்தினான்.

''விளிந்தையில் போரிட்டிருக்கிறாயா?'' என்றான் இளவரசன்.

''இல்லை. நானும் என்னைச் சேர்ந்த வீரர்களும் கங்க நாட்டுக் கிழக்குப் பகுதிகளில் இருக்கிறோம். போர்வன்மை பெற்றிருந்தாலும் மிக அவசியமாயிருந்தாலொழிய கங்க தளபதி எங்களைத் திரட்டி அழைக்கமாட்டார் போருக்கு'' என்றான் கங்க வீரன்.

''உன்னோடு எத்தனைப் பேர் இந்தப் படையில் சேர்ந்திருக்கிறார்கள்?''

''இரண்டாயிரம் பேர்.''

''எல்லோரும் புரவி வீரர்களா?''

''ஆம். வில்வீரர்.''

''எதிரிப் படையுடன் நீங்கள் சேரக் காரணம்?''

வீரன் கூறிய பதில் திகைக்க வைத்தது இளவரசனை ''இப்பொழுது கங்க நாட்டுக்கும் பல்லவ நாட்டுக்கும் விரோதம் கிடையாது'' என்று தைரியமாகக் கூறினான் வீரன்.

இளவரசன் பிரமிப்பு நிரம்பிய விழிகளை வீரன்மீது திருப்பினான். ''எப்படித் தெரியும் உனக்கு?'' என்றும் கேட்டான்.

''செய்தி துரிதமாகப் பரவுகிறது எங்கள் நாட்டில். விளிந்தைச் சமவெளியில் தங்கள் படையை முறியடித்த பின்பும் விளிந்தை நகருக்குள் எங்கள் மன்னர் நுழையவில்லை. போரையும் தொடர்ந்து நடத்தவில்லை. திரும்பிவிட்டார் தலைநகருக்கு. இதற்குப் பல காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன'' என்றான் வீரன்.

''பல காரணங்களா?''

''ஆம், ஆனால் ஒரு காரணம் முக்கியம்.''

''என்ன அது?''

''எங்கள் இளவரசியார் தான் எங்கள் மன்னரைத் திருப்பித் தலைநகர் அழைத்து வந்தாராம்...''

இளவரசனின் புருவங்கள் எழுந்தன நுதலின் மேற்புறம் நோக்கி. ''அதனால்?''

வீரன் வெகு சாமர்த்தியமாகச் சமாளித்தான். ''அப்படி இளவரசியார் தந்தையைத் திருப்பியதற்குத் தாங்கள் காரணமென்று வதந்தி உலாவுகிறது'' என்றான்.

வியப்பு விளிம்பை மீறியது இளவரசன் இதயத்தில். வீரன் சொற்களில் விஷமமும் கலந்திருப்பதைக் கவனித்தான். இருப்பினும் எந்த உணர்ச்சியையும் காட்டாமல், ''சாளுக்கியர் பல்லவர் போரில் கங்கநாடு நடுநிலை வகிக்க வேண்டும் என்று நானும் உங்கள் மன்னரும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்'' என்று கூறினான்.



''அது எங்களுக்குத் தெரியாது.''

''இப்பொழுது தெரிகிறதல்லவா?''

''தெரிகிறது.''

''இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?''

''இந்த படையுடன் சேர்ந்து என் வீரர்கள் இயங்குவார்கள்.''

''ஏன்?''

''என் வீரர்களின் விருப்பம் அது.''

''விபரீதமான விருப்பம்.''

''அல்ல.''

''ஏன்?''

''இளவரசியாரை நாங்கள் உயிருக்கும் மேலாக நேசிக்கறோம்... என்று மெல்லக் கூறிய வீரன் தரையில் கண்களை ஒட்டினான்.

அவன் குறிப்பிடுவது என்னவென்பதை அறிந்தும் இளவரசன் கேட்டான்.: ''அதற்கும் இங்கு நீங்கள் சேருவதற்கும் என்ன சம்பந்தம்?''

வீரன் வெகு விஷமமாகக் கூறினான். ''எங்கள் இளவரசிக்கு எது விருப்பமோ அதுதான் எங்கள் விருப்பம்.''

இதைச் சொன்ன பிறகு இளவரசனின் பதிலை எதிர்பார்த்து நின்றான் வீரன். பதிலேதும் வரவில்லை இளவரசனிடமிருந்து. அவனை வெளியே செல்லும்படி சைகை மட்டும் செய்தான் கையால். அவன் சென்ற சில விநாடிக்கெல்லாம் உள்ளே நுழைந்த சீனன் இளவரசனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு நின்றான். ''என்ன சிரிக்கிறாய்?'' என்று சீறி விழுந்தான் இளவரசன்.

# 96. இளஞ்சிங்கம் பயமறியாது

இளவரசன் சீறி விழுந்ததைப் பற்றி சீனன் சிறிதும் கவலைப்படாதது மட்டுமின்றி மேலும் சில கேள்விகளை வீசவும் தொடங்கி, ''கங்கவீரர் தலைவன் என்ன சொன்னான்?'' என்று வினவினான்.

''நீ எதிர்பார்த்ததைத்தான் சொன்னான்'' என்று கூறிய இளவரசன் சொற்களில் கடுங்கோபமிருந்தது. உள்ளே எழுந்த உணர்ச்சிப் போராட்டங்களின் விளைவாக அவன் பேச்சும் உஷ்ணத்துடன் வெளி வந்தது.

சீனன் அந்தக் கோபத்தைக் கண்டு சிறிதும் அதைக் கவனிக்காதவன் போல் பாசாங்கு செய்து, ''வேறுவிதமாக அவன் சொல்லியிருக்க முடியாது'' என்று பணிவுடன் பதில் சொன்னான்.

அவன் பதிலிலிருந்த பணிவா அல்லது ஏளனமா என்பதைப் புரிந்துகொள்ளாதபடி சீனன் முகம் உணர்ச்சியற்றுக் கிடந்ததை இளவரசன் பார்க்கவே செய்தான். சீனனைத் துருவி ஏன்ன கேள்விகளைக் கேட்டாலும் பதில் இரண்டுங்கெட்டானாகத் தான் வருமென்பதை உணர்ந்துமிருந்த இளவரசன், ''அவன் ஏன் வேறு விதமாகச் சொல்லியிருக்க முடியாது?'' என்று வினவினான். இந்த இரண்டு மூன்று கேள்வி பதில்களுக்குள் இளவரசன் தனது உணர்ச்சிகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து விட்டதால், அவன் குரல் சர்வ சாதாரணமாகவே ஒலித்தது.

சீனன் ஒரு முறை கீழ்நோக்கிக் கிடந்த தனது மீசையில் ஒரு புறத்தை இழுத்து விட்டுக் கொண்டான். ''அவர்கள் யாரையும் நான் இஷ்டப்பட்டு இழுக்கவில்லை நமது படைக்கு'' என்று கூறினான் இளவரசனை நோக்கி.

''அவர்களாகச் சேர முன்வந்தார்களா?'' இளவரசன் கேள்வி சாதாரணமான, பதட்டமில்லாத குரலில் வெளிவந்தது.

''ஆம்.''

''எங்கு? எப்பொழுது?''

''நான் விளிந்தையிலிருந்து கங்க நாட்டுக்குள் நுழைந்தவுடன் இப்பொழுது தங்களைச் சந்தித்தவன் என்னையும் சந்தித்தான். உதவி தேவையென்றால் தானும் சில வீரர்களை நமது படையில் சேர்க்க முடியும்'' என்றான்.

''உம்''

''முதலில் எனக்குச் சந்தேகமாயிருந்தது. தானாக வலிய வந்து அவன் சேர முற்பட்டதால் ஒரு வேளை கங்க நாட்டுக்காக வேவு பார்க்க வந்திருப்பானோ என்று எண்ணினேன். இருப்பினும் அவனையும் அழைத்து வந்து பத்துப்பதினைந்து பேரையும் சேர்த்து அவர்களைக் கண்காணிக்கவும் செய்தேன். ஆனால் அவர்களிடம் எந்தவிதக் குறைபாடும் தெரியவில்லை எனக்கு. இதே கங்கர் தலைவன் வழியிலிருந்த கங்க நாட்டுக் கிராமங்களிலிருந்தெல்லாம் வீரர்களைத் திரட்டி வந்தான் பத்து கிராமங்களையும் இரண்டு மூன்று சிறு நகரங்களையும் தாண்டுவதற்குள் இரண்டாயிரம் வீரர்கள் கொண்ட தனிப்படையை அமைத்துக் கொண்டான். அதற்கு அவனே தலைவனாகவும் ஆகிவிட்டான்.''



''இத்தனை பரிவு அவனுக்கு நம்மிடம் ஏற்படக் காரணமென்ன என்று விசாரித்தாயா?''

''விசாரித்தேன். தங்களிடம் சற்று முன்பு கூறிய காரணங் களையே என்னிடம் கூறினான். காரணங்கள் பொருத்தமாக இருந்தன. சந்தேகப்படுவதற்கு ஏதுமில்லை.''

இதைக் கேட்டதும் இளவரசனின் கூரிய கண்கள் சீனனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தன. ''ஒட்டுக் கேட்க எத்தனை நாளாகப் பழகிக் கொண்டாய்?'' என்று வினவினான் சற்று கடினப்பட்ட குரலில்.

''மனித சுபாவம்'' என்றான் சீனன் இதழ்களில் இளமுறுவல் கொண்டு: அதனால் அவன் மீசை கன்னத்தின் கோடிகளுக்கு இழுபட்டது.

''மனித சுபாவமா!''

''ஆம். எப்பொழுதும் வீரர்கள் தங்கள் காதுகளையும் கண்களையும் தீட்டிவைத்துக் கொள்ளவேண்டுமென்று எங்கள் நாட்டில் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதுவும் வீரனாயிருப்பவனுக்கு அது மிக முக்கியமென்பதும் எங்கள் கோட்பாடு.''

''அந்தக் கோட்பாடு இந்த நாட்டில் கோளாறாகக் கருதப் படுகிறது. பண்பாட்டுக்குக் குறைவென நினைக்கப்படுகிறது.''

''அவரவர் நாட்டுப் பழக்கமும் பண்பாடும் அவரவர்களைச் சேர்ந்தது. அதை மாற்ற முடியாது.''

சீனன் எதைச் செய்தாலும் தன் நலத்தை உத்தேசித்துத்தான் செய்திருப்பானென்று அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும் ரங்கபதாகாதேவியின் இஷ்டத்தைப் பற்றிக் கங்கநாட்டு வீரன் சொன்னதைச் சீனன் ஒட்டுக் கேட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை யென்பதை அவன் முகம் வெகுதெளிவாகக் காட்டியது.

சீனன் மிக மெதுவாகச் சொன்னான். ''கங்க வீரன் சொன்னதை நான் ஒட்டுக்கேட்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்று.

இளவரசன் புருவங்கள் சற்றே எழுந்தன மேல்நோக்கி. ''என்ன அத்தனை முக்கியம்?'' என்றான்.

''கங்க நாட்டு வீரர்கள் தாங்களாகப் படையில் சேர்ந்திருக் கிறார்கள். அவர்கள் கூறிய காரணமும் சரியாக இருந்தது. ஆனால் அவர்கள் நோக்கத்தை திட்டமாகப் புரிந்துகொள்ள முடியாது. உறவாடிக் கெடுத்தவர்கள் கதை சரித்திரத்தில் நிரம்ப உண்டு. ஆகவே நான் எப்பொழுதும் எச்சரிக்கையாயிருக்கிறேன். தவிர, கங்க வீரர்களின் தலைவன் தாங்கள் தனிமையிலிருக்கும் சமயத்தில், சற்று

அசட்டையாயிருக்கும் சந்தர்ப்பத்தை எதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே அவன் உள்ளே வந்ததும் நான் வெளியே சென்றாலும் வாயிலுக்கு வெகு அருகிலேயே நின்றிருந்தேன். உள்ளே ஒரு கண்ணையும் வைத்திருந்தேன். அவன் எந்தத் தீய செயலில் இறங்க முற்பட்டாலும் பூநாகம் அவன் மீது பாய்ந்திருக்கும்'' என்று சீனன் தனது மன நிலையை விளக்கினான்.

சீனனுக்குத் தன்னிடமிருக்கும் பற்றும் பக்தியும், தன்னைக் காக்க அவனுக்கிருந்த உறுதியும் புரிந்தே இருந்தது இளவரசனுக்கு. இருப்பினும் தன்னையும் ரங்கபதாகா தேவியையும் பற்றிக் கங்க வீரன் கூறியதைச் சீனன் கேட்டுவிட்டானே என்ற அனாவசியமான சீற்றமுமிருந்தது அவனுள்ளே. அதை வெளிக்குக் காட்டாத இளவரசன், ''அது கிடக்கட்டும். மேற்கொண்டு என்ன திட்டமிட்டிருக்கிறாய் போருக்கு?'' என்று வினவினான்.

''இந்திரவர்மன் வந்த பிறகுதான் எதிரியின் உண்மை நிலை நமக்குப் புரியும். அதற்குப் பிறகுதான். திட்டம் வகுக்க முடியும். திட்டங்களைத் தாங்கள் தான் வகுக்கவேண்டும்'' என்றான் சீனன்.

''ஏன்? உன்னால் வகுக்க முடியாதா?''

''முடியும், உங்களுக்குப் பிடிக்காது.''

''பிடிக்காதா?''

''பிடிக்காது. எங்கள் நாட்டுப் போர்முறை வேறு. அதை ஏற்கனவே கூறினேன். நீங்கள் ரசிக்கவில்லை அதை.''

''யாங்சின்!''

''உம்.''

''நீ கூறிய போர் முறையில் சாதாரண மக்கள் அழிக்கப் படுவார்கள். நாசம் அதிகமாகும்.''

''போரின் வழியே நாசம்தான். நல்லதுக்காகவா நாடுகள் போரிடுகின்றன?''

''படையுடன் படை மோதும் போர் முறை வேறு.''

சீனன் அதை ஒப்பவில்லையென்பதைக் குறிக்கத் தலையை இருபுறமும் அசைத்தான். ''போர் எப்படி நடந்தாலும் கடைசியில் பாதிக்கப்படுபவன் சாதாரணப் பிரஜைதான். அழிவையும், பஞ்சத்தையும் போர்தான் விளைவிக்கிறது. மோதுவது படைகளா யிருக்கலாம். அந்தப் படைகளுக்கு ஆயுதங்களைச் செய்பவன் சாதாரணக் குடிமகன் உணவுப் பொருள்களை அளிப்பவன் விவசாயி. உடைகளைத் தயாரிப்பவன் தையல் வேலை செய்பவன். ஆனால் போர் முடிந்ததும் இந்த ஊழியர்களுக்கு நற்பயன் விளைவது மிகவும் துர்லபம். ஒரு போர் முடிந்ததும் ஒரு நாடு மீண்டும் பழைய நிலை அடையப் பல ஆண்டுகளாகும். உடனே விளைவது மங்கலமிழந்த பெண்களும் தந்தையிழந்த குழந்தைகளும் தான்.'' இதைச் சீனன் திட்டமாகவே சொன்னான்.



''யாங்சின்!'' என்று அன்புடன் அழைத்தான் இளவரசன்.

''இளவரசே!''

''நீ பெரிய தத்துவ சாஸ்திரியாகிவிட்டாய்.''

''உள்ளதை உரைப்பவன் சாஸ்திரியென்றால் நான் சாஸ்திரிதான்.''

சீனன் போர் விஷயங்களில் திட்டமான கொள்கைகளை உடையவனென்பதை முன்னமே உணர்ந்திருந்த இளவரசன், அந்த உரையாடலை மேலும் வளர்த்த இஷ்டப்படவில்லை, சீனனுக்குச்சற்று இடங்கொடுத்தால் படைகள் உடனடியாக எல்லையைத் தாண்டிக் கிராமங்கள் மீது பாய்ந்துவிடுமென்பதைப் புரிந்து கொண்டதாலும், உயிர் சேதத்தைப் பற்றிச் சீனன் அதிகமாகக் கவலைப்பட மாட்டானென்பதை உணர்ந்து கொண்டாலும், முடிவாகச் சொன்னான் பல்லவ இளவல் ''எதற்கும் இந்திரவர்மர் வரட்டும்'' என்று.

சீனன் தலை வணங்கி வெளியே செல்ல முயன்றதும் அவனை ''இரு, இரு'' என்று நிறுத்திய இளவரசன், ''இன்னொரு சந்தேகமும் இருக்கிறது எனக்கு'' என்றான்.

''சீனன் மீண்டும் திரும்பினான் இளவரசனை நோக்கி. ''மீண்டும் கணக்குப் போட்டுவிட்டீர்கள்'' என்றும் கூறினான்.

''ஆம்'' என்றான் இளவரசன்.

''நான் விளிந்தையிலிருந்து ஏழாயிரம் பேரை அழைத்து வந்தேன்.''

''சரி''

''கங்க வீரன் இரண்டாயிரம் வீரர்களைச் சேர்த்துக் கொண்டதாகச் சொன்னான்.''

''ஆம்''

''ஆகவே ஒன்பதினாயிரம் வீரர்கள் இருக்க வேண்டும். ஆனால் உங்கள் மதிப்பு பன்னீராயிரம் வீரர்கள். இந்த அதிகப்படி மூவாயிரம் எங்கிருந்து வந்ததென்று கேட்கிறீர்கள்?''

சீனன் தன் மனத்தை அக்கு அக்காக அலசி விட்டதை இளவரசன் உணர்ந்தான். ''ஆம். அந்த அதிகப்படி வீரர்கள் யார்?'' என்றும் வினவினான் சீனனை வியப்புடன் நோக்கி.

சீனன் விவரித்தான். ''இளவரசே! தாங்கள் சுமாராகக் கணக்குப் போட்டிருக்கிறீர்கள் படையின் அளவைப் பார்த்து. ஆனால் இப்பொழுது படையிலிருப்பவர்கள் சரியாகப் பதினோராயிரம் பேர்தான். நான் அழைத்து வந்த படை,கங்கர் திரட்டிய படை, இரண்டையும் விட, இரண்டாயிரம் வீரர்கள் தான் அதிகப்படி. எந்த நாட்டிலும் பணத்திற்காகப் போரில் சேரும் வீரர்கள் உண்டு. போரை எண்ணியே தோள்தினவு எடுத்துப்போரை எதிர்பார்த்து நிற்கும் வீரர்களும் உண்டு. இப்படி உதிரியாக கங்க வீரன் உதவியின்றி கலந்துவிட்டேன். அவர்கள் பல்லவ சின்னங்களைத் தரித்திருக் கிறார்கள். ஆகையால் பல்லவர் படை வீரர்களாகக் காட்சியளிக் கிறார்கள். நமது உபதளபதியின் பிரிவில் பாதிப்பேரும் என் பிரிவில் மீதிப் பாதிப் பேரும் இருக்கிறார்கள்.

இதைக் கேட்டதும் ஒரு புது யோசனை பிறந்தது இளவரசனுக்கு. கங்கர்தலைவன் கீழுள்ள படைவீரர்களை இப்படிக் கலைத்து, பல்லவர் படையின் இருபிரிவிலும் சேர்த்துவிட்டால் என்ன என்று தன்னுள் வினவிக்கொண்டான். அப்படிச் செய்துவிட்டால் கங்கர் பிரிவொன்று தனியாக இயங்குவது சாளுக்கியர்களுக்குத் தெரியாது. அப்பொழுது கங்கநாடு இப்போரில் பங்கு கொண்டதாகவும் ஆகாது என்று முடிவுக்கு வந்தான் இளவரசன். அப்படியே ஓர் உத்தரவையும் பிறப்பித்தான் சீனனை நோக்கி.

அதற்குச் சீனன் சொன்னான், ''எசமான்! என் உத்தேசமும் அதுதான், ஆவலுடன் தங்களுக்காகப் போராட வந்திருக்கும் கங்கர் பகுதியை உடனடியாகக் கலைத்தால் அவர்களுக்குக் கசப்பு ஏற்படும். எந்தப் படைப் பகுதியும் ஒரு தனித்தன்மையை, தனி வெற்றியை, தனிப்புகழை விரும்புகிறது. இந்த விருப்பத்தை உடனடியாகக் கலைத்தால் விபரீதம் ஏற்படும். ஆகவே போருக்குச் சற்று முன்பு என் பிரிவையும், அந்தப் பிரிவையும் ஒன்றாகக் கலந்து விடுகிறேன். கங்கர்கள் இருப்பது எதிரிக்குத் தெரியாதவாறு செய்வது எனது பொறுப்பு'' என்றும் கூறிவிட்டு வெளியே சென்றான்.

அன்று முழுவதும் இளவரசன் அடுத்து வரும் போரைப் பற்றிய சிந்தனையிலும் எதிரியை எங்கு தாக்கலாம். என்ன செய்யலாம் என்ற எண்ணத்திலும் காலம் கழித்தான். நீராட்ட நேரம் உணவு நேரம் தவிர மீதி நேரத்தில் புரவியேறி இரண்டு மூன்று முறை படைப்பிரிவு



களையும் அவற்றின் அமைப்பையும், ஆயுதங்களின் நிலையையும் அளவுகளையும் பார்வையிட்டான். இப்படி இரவு வரை படைகளின் ஊடே சென்று பார்வையிட்டுத் திரும்பிய இளவரசன் மனத்தில் திட்டமான சில ஏற்பாடுகள் உறுதிப்பட்டன. சீனன், பல்லவ நாட்டு உபதளதி இவர்களுடன் கங்கர் தலைவனையும் ஓர் உபதளபதியாக்கி, அவன் வீரர்களைத் தனது படை முழுவதிலும் பிரித்துத் திணித்து விட்டால் படை முழுவதும் மூன்று உபதளபதி களையும், ஒரே தளபதியான தன்னையும் கொண்ட பல்லவர் படையாகிவிடும் என்று தீர்மானித்தான். அப்படிச்செய்தால் கங்கர் நடுநிலைமைக் கொள்கைக்கு இடையூறு எதுவும் நேரிடாது என்றும் நினைத்தான். இருப்பினும் கங்க மன்னனுடன் தான் செய்த ஒப்பந்தத்துக்குச் சீனன் சிருஷ்டித்த படை நிலை ஓர் இடையூறு தானென்பதும் அவனுக்குத் தெரிந்தது. தான் செய்வது வெளியில் தெரியாதென்றாலும் தன் மனச்சாட்சிக்குத் தெரியுமாதலால் சத்யசந்தனான அவன் மனம் சிரமப்படவே செய்தது. ''ராமபிரான்கூட மறைந்து நின்று வாலியை அழித்தார். எந்த மனிதன் வாழ்விலும், ஏன், தெய்வ அவதாரங்களிலும்கூடச் சில அதர்மங்கள் நேர்ந்து விடுகின்றன' என்று தன்னைத் தேற்றிக் கொண்டான். 'மனிதனுடைய அதர்மத்துக்குப் புராணங்கள் உபயோகப்படுகின்றன. தனக்கு அனுகூலமான இடங்களை மனிதன் உபயோகப்படுத்திக் கொள்கிறான்' என்று தனக்குள் சொல்லி வெறுத்தும் சிரித்துக் கொண்டான் இளவரசன். இத்தகைய நினைப்புகளில் அன்றிரவைக் கழித்தான்.

மறுநாள் விடியற்காலையிலே வந்த விட்ட இந்திரவர்மன் நேராக இளவரசனின் குடிசைக்கு வந்து அவனைச் சந்தித்தான். பல்லவர்களை முறியடிக்க விநயாதித்தனும் அவன் மகன் விஜயாதித்தனும் புறப்பட்டுவிட்டதாகவும் தாமதமின்றி அறிவித் தான். இளவரசன் அந்தச் செய்தியை அமைதிடன் காதில் வாங்கிக் கொண்டான். விவரமேதும் கேட்கவில்லை அவன் உடனடியாக. ''நீராட்டத்தை முடித்துக் கொண்டு இளைப்பாருங்கள். பிறகு பேசுவோம்'' என்று கூறி இந்திரவர்மனை அனுப்பிவிட்டு போரின் அடுத்த படியைப் பற்றிச் சிந்திக்க முற்படலாயினான். அந்தச் சிந்தனை சிறிதும் குறையாத நிலையில் தானும் நீராடிப் புத்தாடை புனைந்தான். பிறகு பணி மக்கள் கொணர்ந்த காட்டுப் பழங்களையும், மலைப்பகுதியின் நீரோடையிலிருந்து கொண்டு வரப்பட்ட குளிர்ந்த பளிங்கு நீரையும் பருகினான். இப்படிச்சித்தமானதும் இந்திரவர்மன், சீனன், உபதளபதி, கங்க வீரர் தலைவன், நால்வரையும் குடிசைக்கு வரவழைத்தான். ''இந்திர வர்மரே! இப்பொழுது விவரமாகக் கூறுங்கள் எதிரி நிலைபற்றி'' என்றும் வினவினான்.

இந்திரவர்மன் கங்க வீரன்மீது கண்களை ஓட்டினான் சந்தேகத்துடன். ''இதுவரை நான் பார்த்ததில்லை'' என்றும் கூறினான் தான் சொல்வது மற்றவர் காதுகளுக்கு ஏற்பட்டதல்லவென்பதை உணர்த்த.

''இவர் பல்லவ உபதளபதிகளுள் ஒருவர்'' என்று குறிப்பிட்டான் இளவரசன் இந்திரவர்மனை நோக்கி.

''இப்படி ஓர் உபதளபதி பல்லவர் படையிலிருப்பது எனக்குத் தெரியாது'' என்றான் இந்திரவர்மன் சந்தேகக் குரலில்.

''புதிதாகச் சேர்ந்திருக்கிறார்.'' இளவரசன் குரலில் அன்பு சொட்டியது.

''எப்பொழுது?''

''சமீபத்தில்.''

இளவரசன் சொன்னதை மறுக்கும் தோரணையில் ஏதோ சொல்ல முயன்ற கங்கனை இளவரசன் கண்ணால் சமிக்ஞை செய்து நிறுத்தினான். ''சொல்லுங்கள் இந்திரவர்மரே'' என்று உத்தரவிடவும் செய்தான்.

இந்திரவர்மன் இதயத்தில் எந்தச் சந்தேகமிருந்தாலும் மேற்கொண்டு இளவரசனை எதுவும் கேட்பதில் அர்த்தமில்லை என்பதைப் புரிந்து கொண்டதால் தனது செய்தியைச் சொல்ல முற்பட்டான். ''தங்கள் படையின் வரவு, தங்கியிருக்குமிடம் எல்லாம் விக்கிரமாதித்தன் மகனான விநாயாதித்தனுக்கும் விநயாதித்தன் மகன் விஜயாதித்தனுக்கும் முன்பே தெரிந்திருக்கிறது. அவர்கள் இரண்டு படைப் பரிவுகளை அழைத்துக் கொண்டு தங்களைத் தாக்கக் கிளம்பிவிட்டார்கள். ஒவ்வொரு படையிலும் பத்தாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள். படை பலம் அதிகம். விநயாதித்தனும் விஜயாதித்தனும் தளபதிகள்.''

இளவரசன் முகத்தில் இளமுறுவல் வழிந்தது. ''விஜயாதித்தன் சிறுவனல்லவா?'' என்று வினவினான்.

''ஆம் ஆனால் போரில் தந்தையையும் பாட்டனையும் போன்றவன். இளஞ்சிங்கம். ஆகவே பயமும் அறியாதது. பாய்ச்சலிலும் குறைவற்றது'' என்று பதில் கூறினான்.

இளவரசன் உள்ளத்தில் உவகை பூண்டது. ''இளஞ்சிங்கம் பயமறியாது. இந்தப் புதுமொழி நன்றாகவே இருக்கிறது. எனக்குச் சந்துஷ்டியையும் அளிக்கிறது'' என்றான் இளவரசன். சந்துஷ்டிக்குக் காரணத்தையும் கூறினான். காரணத்தைக் கேட்ட மற்ற மூவரும் திகைத்தனர்.

# 97. நகர்ந்தது படை

போரில் வல்லவர்களும் பயமற்றவர்களுமான விநயாதித்தனும் விஜயாதித்தனும் இருபெரும் படைகளுடன் தங்களைச் சந்திக்க வருகிறார்களென்பதை அறிந்தும், அவ்விருவரில் விஜயாதித்தன் சிறுவனென்றாலும் சூரனென்பதை உணர்ந்தும், பல்லவ இளவல் சந்துஷ்டியடைந்தாகக் கூறுவதன் காரணத்தை அறியாத மற்ற நால்வரும் திகைக்கவே செய்தனரென்றாலும், காரணத்தை அவன் கூறியதும் பெரும் அதிர்ச்சியையே அடைந்தனர். ''விஜயாதித்தனை நானே நேரில் போரில் சந்திக்கிறேன். ஆனால் அவன் மீது வேலெறிவதோ அம்பெய்வதோ கூடாதென்று படைவீரருக்கு உத்தரவிட்டு விடுங்கள்'' என்று கூறினான் இளவரசன் மிகச் சந்துஷ்டியுடன்.

இதைக் கேட்ட மற்ற நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டாலும் நால்வர் மனத்திலிருந்ததையும் இந்திரவர்மனே எடுத்துச் சொல்லமுற்பட்டு, ''விஜயாதித்தனைச் சிறுவனென்று குறைத்து மதிப்பிடவேண்டாம்''என்று எச்சரிக்கவும் செய்தான்.

இளவரசன் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. ''இல்லை, குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் அவன் மயிரிழை தொடப் பட்டாலும் என்னால் சகிக்க முடியாது'' என்றும் சொன்னான் புன்முறுவலின் ஊடே.

''என்ன அத்தனை பரிவு அவனிடம் உங்களுக்கு?'' என்று வினவினான் இந்திரவர்மன்.

''சிறுவனொருவன் பெரும் படைத் தலைமை வகித்து அதை நடத்திவருவதே கண்கொள்ளாக் காட்சி. அதுவும் பல்லவ நாட்டு இளவரசனை எதிர்த்து வருகிறானென்றால் அவன் துணிவு எத்தன்மையதாயிருக்க வேண்டும்? அவன் போர்க் கலையைப் பார்க்க என் மனம் துடிக்கிறது. நமது குழந்தைகள் நம்மை அடித்தால் நாம் திருப்பியா அடிக்கிறோம்? மகிழவில்லையா?'' என்று வினவினான் இளவரசன் குதூகலத்துடன்.

இளவரசன் பேச்சு அதுவரை மௌனமாயிருந்த உப தளபதிக்குக்கூட எரிச்சலை விளைவித்தது.

இளவரசனின் பேச்சைக் கேட்டு எரிச்சலடைந்த உபதளபதி ''சிறுபிள்ளை நமது குரல்வளையைப் பிடித்தால் அது ரசிக்கத் தகுந்ததா? அதை அறைந்து புத்தி கற்பிக்க வேண்டாமா?'' என்று வினவினான்.

''உன் கைவிரல் உன் கண்ணைக் குத்தினால் வெட்டி எறிந்து விடுவாயா?'' என்று பதிலுக்குக் கேட்டான் இளவரசன். சுத்த வீரனான அவன் கண் முன்பு அந்த சமயத்தில் திரையனேரி முன் வந்தது. தன்னைப் பார்த்தும் பாராததுபோல் சென்ற விக்கிரமாதித்தனும் கண் முன் தோன்றினான். அத்தகைய மாமன்னன் வழித்தோன்றலைத் தான் கொல்லுவதோ காயப்படுத்துவதோ எப்படிச் சரியாகும் என்று உள்ளூர எண்ணிக் கொண்டான். ஆகவே, திட்டவட்டமாக மீண்டும் சொன்னான், ''விஜயாதித்தனுக்கோ அவன் தந்தை விநயாதித் தனுக்கோ இந்தப் போரில் எந்தவிதத் தீங்கும் ஏற்படக்கூடாது. அவர்கள் முறியடிக்கப்பட்டாலும் உயிருக்குத் தீங்குநேரும்படியான எதையும் செய்யக்கூடாது''என்று.

இதைக் கேட்ட மற்ற நால்வரும் பதில் சொல்லவில்லை சில விநாடிகள். பிறகு இந்திரவர்மனே கேட்டான், ''யாரையும் எதையும் செய்யாமல் எப்படி அவர்கள் அழைத்து வரும் பெரும் படையை முறியடிப்பது?'' என்று.

''நான் படைகளைத் தாக்க வேண்டாமென்றோ, அழிக்க வேண்டாமென்றோ சொல்லவில்லையே?'' என்றான் இளவரசன்.

''படைகளை நாம் தாக்கும்போது படைகளை இயக்குபவர்கள் பாதிக்கப்பட மாட்டார்களோ?'' இந்தக் கேள்வியை அதுவரை வாளாவிருந்த கங்க வீரர் தலைவன் கேட்டான்.

''பாதிக்கப்படாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்'' இதைச் சொன்ன இளவரசன் கங்க வீரனை உற்று நோக்கினான்.

கங்கனும் விடவில்லை. 'யாராவது ஒரு வீரன் உக்கிரத்தில் எறியும் வேலோ எய்யும் அம்போ அவர்கள் மீது பட்டால்?'' என்று வினவினான்.

''அதையும் நாம் தவிர்க்க முடியாது'' என்பதை ஒப்புக்கொண்ட இளவரசன், ''அவர்களை நோக்கி நாமாக வேலெறியவும் வேண்டாம். அம்பெய்யவும் வேண்டாம்''என்று கூறினான். ''இந்த அநாவசியத் தர்க்கத்தை நிறுத்திக்கொண்டுபோர் அணி வகுப்பையும் நாம் எதிரிகளைச் சந்திக்கவேண்டிய முறையையும் இடத்தையும் கவனிப்போம்''என்று அந்தப் பிரச்சினையை முடித்துவிட்ட பல்லவ இளவல் இந்திரவர்மனை நோக்கி, ''இந்திரவர்மரே! விநயாதித்தனும் விஜயாதித்தனும் வாதாபியைவிட்டுக் கிளம்பி எத்தனை நாட்களா கின்றன?'' என்று வினவினான்.

''மூன்று நாட்களுக்குமுன்பே-அதாவது வாதாபியிலிருந்து நான் புறப்பட்ட அன்றே-புறப்பட்டு விட்டார்கள். இப்பொழுது பாதி தூரம் வந்திருப்பார்கள்'' என்றான் இந்திரவர்மன்.



துங்கபத்ரா நதியின் அக்கரையை அடைய எத்தனை நாளாகும்?''

''இன்னும் மூன்று நாட்களாகும். படையை இரண்டாகப் பிரித்து, துங்கபத்ராவின் தலைப்பகுதியில் ஒரு பிரிவும் சற்றுக் கீழே தள்ளி இன்னொரு பிரிவும் வந்து சேரும்படி அழைத்து வருகிறார்கள்.''

''அந்த இரண்டுக்கும் குறுக்கே நமது படை வருமென்று எதிர்பார்க்கிறார்களா?'' இளவரசன் கேள்வியில் எதிரிகளின் திட்டத்தைப் புரிந்துகொண்ட தொனி இருந்தது. முகம்மட்டும் உணர்ச்சி ஏதுமில்லாதிருந்தது.

''ஆம்! இளவரசே! இந்தக் காட்டிலிருந்து நாம் வடகிழக்கில்தான் சென்று துங்கபத்ராவை அடையவேண்டும். அப்படிச்சென்று தாண்டினால் நமது படையின் இருபுறமும் சாளுக்கியர் படை இருக்கும்'' என்று மேலே ஏதோ சொல்லப்போன இந்திரவர்மனை இடைமறித்த இளவரசன், ''அந்த இரு படைகளுக்குமிடையிலே பாக்கு வெட்டியின் இடையில் அகப்பட்ட பாக்குப் போல் நாம் ஆகிவிடுவோம்.'' என்றான்.

இதைக்கேட்ட பிறகு தீர்க்க சிந்தனையில் இறங்கினான் பல்லவ இளவல். விஜயாதித்தனும் விநயாதித்தனும் போர் முறையை நன்றாக அறிந்தவர்கள் என்பது அவனுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. அவர்கள் இரு பிரிவாகப் பிரிந்தாலும் அந்த ஒவ்வொரு பிரிவும் தன் படையின் எண்ணிக்கைக்கு நிகராவென்பதையும் எண்ணிப் பார்த்தான் பல்லவ இளவல். ஆனால் 'எண்ணிக்கை மட்டும் போரை முடிவு செய்வதில்லை' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு மற்ற நால்வரையும் நோக்கி, ''இப்பொழுது நமது படையில் பதினோராயிரம் போர் வீரர் இருப்பதாக யாங்சின் கூறியிருக்கிறான். அதுவும் இரண்டு பிரிவாக இருக்கிறது'' என்று கூறினான்.

''ஆம்'' என்றான் உபதளபதி.

''எதிரிகள் படை, இந்திரவர்மர் கொண்டு வந்துள்ள செய்திப்படி இருபதினாயிரம் பேர் கொண்டது.''

கங்கவீரன் மட்டும் கேட்டான், 'இந்த நிலையில் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று.

''நீதான் ஒரு வழி சொல்லேன்'' என்றான் இளவரசன்.

''எதிரிகள் துங்கபத்திரை தீரத்துக்கு வருவதற்குள் நாம் துங்கபத்திரையைத் தாண்டி விடுவோம்'' என்றான் கங்கன்.

''சரி. அதற்குமேல்?''